உ

கணபதி துணை.

திருத்துறையூர்

சாந்தலிங்கசுவாமிகள்

அருளிச்செய்த

# வைராக்கியசதகம்.

# வைராக்கியதீபம்.

# அவிரோதவுந்தியார்.

---

இம்மூன்றும்

திருப்போரூர்

சிதம்பரசுவாமிகள்

அருளிச்செய்த உரையுடன்

யாழ்ப்பாணத்து நல்லூர்

ஆறுமுகநாவலரவர்கள்

சிதம்பரசைவப்பிரகாசவித்தியாசாலைத் தருமபரிபாலகர்

விசுவநாதபிள்ளையால்

சென்னபட்டணம்

வித்தியாநுபாலனயந்திரசாலையில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டன.

ஏழாம் பதிப்பு.

இரத்தாக்ஷி௵ ஆடி௴.

உ

கணபதி துணை.

# வைராக்கிய சதகம்.

## கணபதிவணக்கம்.

ணிறை தருகரியை முன்னடத்திப் பின்னதன்றாட்
மறைந் தேகுநர்வெம் பாசவிக ஞசமுற
வமர் விளைத்திளையா வீரரெனப் பூரணனூர்ப்
ணையில் பரானந்தப் பூவையையு மேவுவரால்.

## சபாபதி.

அமபல வாண னடியிணை தொழுவார்க்
கின்பமும் வீடு மெளிதினில் வருமே.

## விநாயகர்.

நிம்ப நிழற்களி, றம்பொன் மலர்த்தாள்
நம்புது முத்திந, லின்பம் வரற்கே.

## சுப்பிரமணியர்.

சமர புரிக்குகன், விமல மலர்த்தாள்
எமதுளம் வைக்குது, முமல மறற்கே.

## குருபரம்பரை.

மறைமுடி யதனில் விளங்கிடு மொளியே
மனிதரைப் போல்வந்த தெனுமென்
சிறைதவிர்த் தாண்ட சிவப்பிரகாச
தேசிகன் றன்னைமற் றவன்ற
னறைமல ரடியைப் போற்றிடுஞ் சாந்த
நாயகன் றன்னைமற் றவன்ற
னிறையருள் பெற்ற பழனிமா முனியை
நெஞ்சினு ளிருத்தியே பணிவாம்.

## நூலாசிரியர்.

போந்தெ முயிர்க்குயி - ராந்துணையொத்த
சாந்தையர் தம்பத - மேந்து கருத்தே.

பஞ்சபூத காரியமாகிய உடம்பினையும் ஞானேந்திரிய மேந்திரியங்களையும் நேதி களைந்து அதன்பின்னர் அந்தக்க ங்களையும் நேதி களையத் தொடங்கும்போது அவைகளுக் பிரதானமான மனத்தை எதிரிட்டு நோக்கி நீக்குந்தோறும் மனம் அந்த விவேகத்திற்கு மிகவும் ஒற்றுமையாகலின் நீங்க முன்னைப் பழக்கம்போல் விவேகத்தைத்தன்வயப்படுத்தித் தன க்குப் பற்றுக்களாயுள்ளவற்றில் இழுத்துச செல்ல அஃது அவ் வனம் இழுத்துச் செல்லுதலை விவேகம் அறிந்து தனது வலியி னால் எதிரிட்டுநின்று இஃது எவற்றைப்பற்றி நின்று எழாநின்ற தென்று நோக்கி அதுபற்றிய பற்றுக்களியாவையும் இவை இவையென்று அறிந்து அதற்கு அப்பற்றுக்களையெல்லாம் விடு வித்து அதனைத் தன்வயமாக்குதற்பொருட்டு மனத்தை முன் னிலையாக்கி விவேகங் கூறிற்றென்ற விவேகத்தின்மேல் வைத்து இந்நூல் கூறுகின்றார்.

வாழி நெஞ்சமே சென்றிடே னின்றிதோர்
வார்த்தையெற் குரைசெய்வாய்
கீழி யாமியற் றுயர்தவத் திவ்வுடல்
கிடைத்ததன் றேமற்றீ
ஊழி காலமிங் கிருக்குமோ நீயுமோர்ந்
துணையெனி னுளபோழ்தே
சூழு மேழ்பவந் துடைத்தல்செய் யாயெதென்
றொழுதான் றுணைத்தாளே.

வாழி நெஞ்சமே. எ-து. பகைவனாற் காரியங்கொள்வோன் அவனைத் தனது வயமாக்குதற்பொருட்டு அவனுக்கு இனிமை கூறுதல்போல நீ வாழக்கடவாய் நெஞ்சமே யென்று விவேகங் கூற, அதற்கு எண்ணில் காலம் உடலு முயிரும்போலும் சேறு

நீரும் போலும் உம்மோடும் பிரிவின்றியிருந்த என்னை இப்போது பிரித்து நின்று நீர் தோத்திரம்பண்ணியது என்னையென்று மனங்கேட்ப,—சென்றிடேல் நின்று இதோர் வார்த்தை எற்கு உரை செய்வாய். எ-து. அதற்கு நீ ஒரு கணப்போதாயினும் நில்லாது விஷயங்களிற் செல்லாநின்றனை அங்ஙனஞ் செல்லாது நின்று இஃதோர்சொல் எனக்குச் சொல்லுகவென்று விவேகங்கூற, அதற்கியான் சொல்லவேண்டிய சொல் என்னையுள நீர் சொல்லுக யான் கேட்கின்றேனென்று மனங்கூற,... கீழ் யாம் இயற்று உயர் தவத்து இவ்வுடல் கிடைத்தது அன்றோ. எ-து. அதற்குக் கீழ்ப்போன அனந்த சனனங்களில் யாஞ் செய்திராநின்ற மேலான தபோபலத்தினாலன்றோ இந்த அரிதாகிய மானுடதேகம் கிடைத்ததென்று விவேகங்கூற, அதற்கு ஈதுண்மையா மென்று மனஞ் சம்மதிப்ப, அதற்கு அங்ஙனம் அரிதாககடைத்த தேகத்தைப்பெற்றும் சீக்கிரத்திலே திருவடியை அடைதற்கு ஏது பண்ணுமல் வீணாள் கழிப்பது என்னையென்று விவேகங்கூற, அதற்கு இந்தத் தேகம் பெற்ற நாம் இனித் திருவடியை அடையாது விடுகின்றோமோ நீர் சீக்கிரம் பண்ணியது என்னை? சில நாள்களின் பின்னர் அதை அடைகுதுமென்று மனங்கூற,—மற்றீது ஊழிகாலம்இங்கிருக்குமோ. எ-து. அதற்கு இத்தேகம் கற்பகாலம் இவ்விடத்து இருப்பதோ இதற்கு அளவு கூறிய நூறாண்டுகளுள் இடையிடையே கணந்தோறும் அநித்தியமிருத்தலின் எந்தக்கணம் இருக்குமோ எந்தக்கணம் போமோ தெரியாதென்று விவேகங்கூற, அதற்கு அங்ஙனம் அநித்தியமாமெனின் இதனையொழித்து இனிவருங் காயத்து அத்திருவடியை அடைகுதுமென்று மனங்கூற, அதற்கு இனியோர் காயத்தின்கண் அதனை அடைகுதுமென்னிற் பெறுதற்கரிய பிறவியென்றும் சில நாள்களின் பின்னர் அடைகுதுமென்னின் அறிதற்கரிய அவதியென்றும் விவேகங்கூற, அதற்கு நீர் இங்ஙனங் கூறியது உண்மையென்று மனஞ் சம்மதிப்ப...நீயும் ஓர்ந்தனை எனின். எ-து. அதற்கு இந்தக் காயஞ்

கிடைத்தற்கு அரியதென்பதையும் இதனது நிலையாமையினையும் நீயும் விசாரித்து அறிந்தனையாயின்,—உளபோழ்தே சூழும் ஏழ் பவந்துடைத்தல் செய்யாய் இதென் தொழுது அரன் துணைத்தாளே. எ-து. இக்காயமிருக்கும்போதே சிவனது உபய பாதங்களையும் தொழுது எம்மை வளைந்துகொள்ளாநின்ற எழுவகைப் பிறவிகளையும் நீக்கிக்கொள்ளுதல் செய்யாய் இது என்னை நின்கருத்திருந்ததென்று விவேகங்கூறிற்று. எ - று. மற்றென்பது அசைநிலை.

உயர்தவத் திவ்வுடல் கிடைத்த தென்பதற்கு உதாரணம்: ஞானவாசிட்டம். "எறியுங் கடலி னுகத்துளை யினியாமைக் கழுத்துப் புகுவதுபோற், பொறிவெம் பிறவி யனேகத்தாற் புருடன் விவேகி யெனப் பிறந்து, முறியும் பிறவிப் பயனில விம் மோக மமையுஞ் செய்தொ ழிலாற், செறிவ தென்னே யிவற்றுலே தினங்க ளெல்லாஞ் சென்றிடு மால்." ஊழிகால மிங்கிருக்குமோவென்பதற்கு உதாரணம்: திருவள்ளுவநாயனார். "உறங்குவ் து போலுஞ் சாக்கா டுறங்கி, விழிப்பது போலும் பிறப்பு." பெறுதற்கரிய பிறவிக்கும் அறிதற்கரிய வவதிக்கும் உதாரணம்: ஆனந்தத்திரட்டு.'பெறுதற் கரிய பிறப்பீ திதன்போக்—கறிதற் கரிய வவதி - பிறிதொன்றை—நாடுதற்கு நேரமுண்டோ நன்னெஞ்சே முத்திநெறி—கூடுதற்கல் லாது குறித்து." மற்றும் வருவனவற்றுற் காண்க.

இங்ஙனம் நீர் கூறியது உண்மையாகலின் இனித் திருவடியை அடையக் கடவமென்று மனஞ் சம்மதிப்ப மேற்கூறுகின்றது.

> தாளை யேதர மறிகிலா தெமக்கெளி
> தருசிவப் பிரகாசற்
> காளி யாமெனத் திரிந்தவன் பணிபுரிந்
> தரியவீ டடைகில்லாய்

கேளை யோமனை யாதிய வளற்றிலே
  கிடந்துழைத் தனைநெஞ்சே
நாளை யோலையுங் தூதரும் வரினிவர் .
  துணைகொலோ நவில்வாயே.

தாளையே தரம் அறிகிலாது. எ-து. சுரர் முதலாகத் தாவர மீறாகச் சொல்லப்படாநின்ற எழுவகைப் பிறவித்துன்பங்களையும் துடைத்தல் செய்யும் அரிய திருவடிகளைக் கொடுத்தற்குப் பக்குவனென்றும் அபக்குவனென்றும் பாராது,—எமக்கு எளிதரு சிவப்பிரகாசற்கு. எ-து. அருமைப்படுத்தாது எமக்கு எளிதிலே தந்த சிவப்பிரகாசரென்னு நாமதேயத்தையுடைய ஆசாரியருக்கு,—ஆள் யாம் எனத் திரிந்து அவன் பணிபுரிந்து அரிய வீடு அடைகில்லாய். எ-து. அவரதடிமையாமென்றியாவருங் கூற அவரது திருவுளத்திற்குப் பாங்காக நடந்துகொண்டு அவரது ஏவறபணிவிடைகளைச் செய்து யாவருக்கும் அரிய வீட்டினை அடைந்தாயில்லை,—கேள் ஐயோ. எ-து. ஐயோ நீ கேட்பாயாக,—மனையாதிய அளற்றிலே கிடந்து உழைத்தனை நெஞ்சே. எ-து. பெண்டீர் முதலிய குடும்பச் சேற்றின்கண் வீழ்ந்து உழைத்துக்கொண்டனை நெஞ்சமே நீ என்னகாரியஞ் செய்து கொண்டாய்,—நாளை ஓலையுந் தூதரும் வரின் இவர் துணைகொலோ நவில்வாயே. எ-து. இனி நாளைக்கு இயமனது தூதரும் ஓலையும் வருங்காலத்து இந்தப் பெண்டீராதிய சீவர்கள் துணையாவரோவென்று விவேகங்கூறிற்று. எ - று.

மிகுந்த சேற்றில் விழுந்தோன் கிடந்து உழைத்தல் போல் மிகுந்த செல்வம் பெற்றோனுக்கும் அதின் மூழ்கி மயங்கி மறுமை குறிக்கக் கூடாமையிற் கிடந்துழைத்தனையென்று கூறப்பட்டது.

தாளையே தரமறிகிலாது என்பதற்கு உதாரணம்: ஞானவாசிட்டம். "இயற்கை குணஞ் சோதித்து முன்னே பின்னே யாவையுமாம் பிரமநீ யென்னல் வேண்டும்—வியப்புறவா சையி·

ழுழல்வார்க் கிவ்வா ரேறுதின் மீளாத நிரயகில் வீழ்த்த தாகும்... தியக்குறுபோ கத்தாசை தீர்ந்து புந்தி தெளிந்த வுனைப் போல் வார்க்கே திகழத் தோன்று—மயக்கமற வுணர்த்த வல்ல குரு வைக் கிட்டா வருந்தி யுந்தன் பிறப்பறுக்கு மகனு மாங்கே." பணிபுரிந் தரிய வீடடை கில்லாய் என்பதற்கு உதாரணம்: வீரா கமம். "அடுத்ததின் றன்மை யான்மா வாகுமென் றறிந்து நல் லோர் — நடித்திடுஞ் சமயவாத நற்றவஞ் செபந்தி யானம்... படிற்றுல கியற்கை யாவும் பரகதி விலக்கா மென்றே—விடுத்த ருட் குரவன் பாத மேவிமெய்ப் பணிசெய் வாரே." மனையா திய வளற்றிலே கிடந்துழைத்தனை என்பதற்கு உதாரணம்: ஞானவாசிட்டம். "தாரதன மிகுமென்னிற் றனையாகு மப்பா சந் தளைத்துக் கொண்டா—லாரதனை யறுத்தகலும் விரகுடை யா ரறிவிலா ராசை விஞ்சிக்—கூரிதய மப்போகத் துழன் றுழ க்குங் கொடுந் துயரைக் குறித்த போதே—தீரதையா*மஃதிருக்கு விரத்தியுள தாய்ச்சித்தந் தெளியு மன்றே." மற்றும வருவனவற்றாற் காண்க. (உ)

நீர் கூறியது உண்மை, திருவடியே துணை, மனைவியாதிய சீவர்கள் துணையலர். ஆனல் இவர்களை விடுத்தாற் பரிதபிப்ப ரென்பதும் இவரை வைத்துப் பாதுகாப்பதற்கு ஒரு துணை இன் றென்பதுங் குறித்து இவரோடுங்கூடி நின்றேனென்று மனங் கூற அதற்குமேற் கூறுகின்றது.

நவிலி னிம்மனை மக்களுக் கொருதுணை
நாமலை திலையென்றே
கவலை யுற்றரன் றுண்மறந் தனையுனைக்
காலனுர் கொடுபோயிற்
குவலயத்தடைந் திவரைநா டொறும்புரந்
திடுவையோ குறிக்குங்காற்
சவலை நெஞ்சமே சிவனலா துயிர்க்குயிர்
தானுமோர் துணையாமே.

நவிலின் இம்மனை மக்களுக்கு ஒருதுணை நாம் அலது இலை என்றே கவலையுற்று அரன் தாள் மறந்தனை. எ-து சொல்லுமிடத்துப் பெண்டீர் புத்திரர் முதலியோர்க்கு ஒப்பற்றதுணை நாமன்றி வேறு இன்றென்று சிவனது திருவடியை மறந்தனையாகலின் திருவடியே துணையென்றும் மனைவியாதிய சீவர்கள் துணையலரென்றும் நீ முன் கூறியவற்றிற்கு ஏதுவென்னையென்று விவேகங்கேட்ப, அதற்கு இந்த மனைவியாதிய சீவர்களை யாவர் காப்பரென விடுப்பேனென்று மனங்கூற, — உனைக்காலனார் கொடுபோயின் குவலயத்து அடைந்து இவரை நாடொறும் புரந்திடுவையோ. எ-து. உன்னை யமன் கொண்டு போயிடத்து மீண்டு இப்பூமிக்கண் வந்து இச்சீவர்களை எக்காலத்தும் காப்பையோ அஃதன்றி ஒருகணப்போதாயினும் வந்து இவரை நீர் நன்றிருக்கிறீரோவென்று கேட்கத் தான் கூடுமோவென்று விவேகங்கூற, அதற்கு அவரை யான் இருக்குமளவாயினுங் காக்குவலென்று மனங்கூற, அதற்கு நீயிருக்கும்போதாயினும் நிருபர்முதலாயினோர் உன்னைக் கொண்டுபோயினாராயினும் அன்றி அவரைக்கொண்டுபோயினாராயினும் அப்போது உன்னாற்காக்கப்பட்டார் யாவரென்று விவேகங்கூற, அதற்கு நீர் கூறியது உண்மையென்று மனஞ் சம்மதிப்ப,—குறிக்குங்கால் சவலை நெஞ்சமே சிவன் அலாது உயிர்க்கு உயிர் தானும் ஓர் துணையாமே. எ-து. உண்மையாகப் பார்க்குமிடத்துப் பேதைமையுடைய நெஞ்சமே சீவர்களுக்குச் சிவனே துணையன்றிச் சீவர்களுக்குச் சீவர்கள் துணையாவரோவென்று விவேகங்கூறிற்று. எ-று.

"இயற்பெயர் முன்னராரைக் கிளவி—பலர்க்குரி யெழுத்தின் வினையொடு முடிமே." என்பதனாற் காலனென்னு மியற்பெயர் முன்னர் ஆரென்பது வந்தது.

நவிலினிம்மனை மக்களுக் கொருதுணை யென்பதற்கு உதாரணம்: ஆனந்தத்திரட்டு. "உடலை யொண்பொரு ளினையுலகியல்பினை புயர்குல நெறிதன்னை—யடையு மைந்தர்தாய்தந்தை

நன் மனையென வறைதரு மவர்தம்மை—விடவி கந்திறை கழ லிணை மேவிய விமலர்தங் களையெல்லா—முடைய நன்குறு மொழிமறை முனிவர்க ளுரைப்பராத் தர்களென்றே." சிவ னலா துயிர்க்குயி ரென்பதற்கு உதாரணம்: திருவருட்பயன். "அகர வுயிர்போ லறிவாகி யெங்கு—நிகரிலிறை நிற்கு நிறை ந்து." மற்றும் வருவனவற்றுற்காண்க.

நீர் இங்ஙனங் கூறியது உண்மை. இனித் துணையாவது யாது. பகையாவது யாது. மனைவியாதிய சீவர்கள் வந்தவாறு எங்ஙனம். நீர் கூறுகவென்று மனங்கேட்ப அதற்குமேற் கூறு கின்றது.

துணையதாயெமைத் தொடர்தரு தொடர்பரன்
 றொல்கழ றுணையல்லா
துணைவு செய்தடு மிகலதஞ் ஞானமென்
 றுள்ளவா றுணராய்மற்
றிணையி னெஞ்சமே பகையிவ ருறவிவ
 ரெனவினை வழியேவந்
தணைவ சீவரை யுனிமுனி வாதிய
 வடுத்தெனைக் கெடுத்தாயே.

துணையதாய் எமைத் தொடர்தரு தொடர்பரன் தொல்க ழல் துணை. எ-து. சிருட்டி தொடங்கி வீடடைவிக்கு மளவும் துணையாகி எம்மைவிட்டு நீங்காதிருக்கின்ற உயிர்க்கு உறவாகிய சிவனது தொன்மைப் பதங்களே துணையென்றும்,—அல்லாது உள் ளைவு செய்து அடும் இகலது அஞ்ஞானம் என்று உள்ள வாறு உணராய். எ-து. அஃதன்றி உள்ளத்தை மெலிவுசெய்து நாசம் பண்ணுகின்ற பகையாவது அஞ்ஞானமென்றும் உள்ள படியே யறிந்தனையில்லை,—இணை இல் நெஞ்சமே. எ-து. இழி வினுனக்கு வேறு ஒப்பு இன்றிய நெஞ்சமே,—பகை இவர் உறவு இவர் என வினை வழியே வந்து அணைவ சீவரை உனி. எ-து. இருவினையின் வழியராய் வந்து பொருந்திய சீவர்களை

இவர் பகைவரெனவும் இவர் உறவரெனவுங் கருதி,—முனிவு ஆதிய அடுத்து எனைக் கெடுத்தாயே. எ-று. பகையென்று வெகுளியும் உறவென்று விழைவும் அடைந்து உன்னோடு கூடிய என்னையுங் கெடுத்தாய் நீயென்று விவேகங்கூறிற்று.

ஆணவத்தால் மறைப்புண்டு கிடந்த வுயிரைச் சிவன் தனது காருண்ணியத்தினால் எடுத்து மாயைக்கண்ணே தனுவாதிகளைக் கொடுத்து முன்னர் விடய ஞானத்தை விளக்கிப் பின்னர்ச் சுருதிகுரு சுபானுபவங்களினால் சொரூபஞானத்தை விளக்கி ஆனந்தானுபவத்தைக் கொடுத்தலின் உயிர்க்கு உறவு சிவனென்றும் உயிரினது இரண்டு ஞானத்தையும் அநாதியே மறைத்து வீடடையுமளவும் துன்பத்தைச் செய்தலின் ஆணவம் உயிர்க்குப் பகையென்றும், நல்வினை அனுபவிக்குமிடத்துப் பகைவரும் உறவாகலானும் தீவினை அனுபவிக்குமிடத்து மனைவியாதியுறவரே பகைவராய்த் தேகநாசஞ் செய்தலினாலும் இச்சீவர்கள் வினைவழியராய் வந்தவரன்றிப் பகைவரும் உறவரும் அலரென்று கூறப்பப்பட்டது. மற்றென்பது அசைநிலை.

பகையிவ ருறவிவரென்பதற்கு உதாரணம்: சிவபோகசாரம். "ஆர்பெரிய ரார்சிறிய ருருறவ ரார்பகைவர்—சீர்பெரிய ரானந்த சிற்சொருபர் - பேர்பெரிய—ரெங்கெங்குந் தாமாயிருந்துசட சித்தனைத்து -மங்கங் கியற்று வதனால்." மற்றும் வருவனவற்றுற் காண்க.

கெடுத்தாயே யென்றென்னை நீர் வெறுப்பதென்னை? பயனின்றிய உறவைப்பற்றுதலால் என்னையுள? நீர் கூறியவாறே விடுத்தேனென்று உறவினை விடுத்துப் பொருளினைக் கருதிய மனத்தைப்பார்த்து மேற்கூறுகின்றது.

கெடுவ தாம்பொருள் செல்வமே பல்வகைக்
கிலேசமற் றதுதன்னை

விடுவ தேசுக மெனவுமோர்ந் திலைமுனம்
　விடுத்துளோர்க் குனைப்போலு
நெடிய யூகம தில்லையோ சொல்லுதி
　நெஞ்சமே யினிப்பற்றற்
றடைந்து மேலா னருளையே பொருளென
　வருஞ் செல்வமது தானே.

கெடுவதாம் பொருள் செல்வமே பல்வகைக் கிலேசம். எ-து. அழிந்து போவதாகிய பொருள் செல்வமோ பலவேறு வகைப்பட்ட துன்பமென்று விவேகங்கூற, அதற்கு முன்னர் மனைவியாதிய உறவுகளை நீர் விடுக்கச் சொன்னபடி விடுத்தேன். இப்போது இந்தப்பொருளையாயினும் அருந்தலைக் குறித்து வைத்துக்கொண்டு தவத்தினைப் பண்ணுவமென்றால் இதனையும் நாசமென்றுந் துன்பமென்றுங்கூறினீர் இனி இன்பமாவது யாதென்று மனங்கேட்ப,— அது தன்னை விடுவதே சுகம் எனவும் ஓர்ந்திலை. எ-து. அதற்கு அந்தப்பொருளைக் கைவிடுவதே சுகமெனவும் அதனைப்பிடித்தலே துன்பமெனவும் உண்மையாக அறிந்தாயில்லை நீயென்று விவேகங்கூற, அதற்கு நன்று கூறினீர் இப்பொருளையும் விடுத்து இரக்கச்சொல்லுகிறீரோவென்று மனங்கேட்ப,—முனம் விடுத்துளோர்க்கு உனைப்போலும் நெடிய யூகமது இல்லையோ சொல்லுதி. எ-து. அதற்குமுன்னர்ப் பற்றுக்களாயுள்ளன யாவும் துன்பமென்று அறிந்து துறந்தோர்க்கு உன்னைப்போலுங் கூர்ந்த புத்தியின்றோ நீ சொல்வாயென்று விவேகங்கூற, அதற்குச் சம்மதித்து இங்ஙனஞ் சொல்லப்பட்ட பொருளுக்கு மேலாய பொருள் யாதென்று மனங்கேட்ப,—நெஞ்சமே இனிப் பற்றற்று அடைதும் மேல் அரன் அருளையே பொருள் என அருஞ் செல்வம் அது தானே. எ-து. நெஞ்சமே இனி இப்பொருண்மேல் வைத்த பற்றினீங்கி மேலாய சிவனது அருளையே பொருளென அடைவோம் அதனை அடைந்தால் அவ்வருடானே அரிய செல்வமும் எமக்கென்று விவேகங்கூறிற்று. எ - று.

இப்பொருளால் இவ்வின்பம் வருதல்போல அவ்வருளால் அவ்வின்பம் வருதலின் அருஞ் செல்வமதுதானே யென்று கூறப்பட்டது.

செல்வமே பல்வகைக் கிலேச.மென்பதற்கு உதாரணம்: நீதிவெண்பா. "இன்ன றரும்பொருளை யீட்டுதலுந் துன்பமே— பின்னதனைப் பேணுதலுந் துன்பமே - யன்ன—தழித்தலுந் துன்பமே யக்தோ பிறர்பா—லிழத்தலுந் துன்பமே யாம்." விடுவதே சுகமென்பதற்கு உதாரணம்: திருவள்ளுவநாயனார். "யாதனின் யாதனி னீங்கியா னோத—லதனி னதனி னிலன்." அருஞ்செல்வ மதுதானே என்பதற்கு உதாரணம்: திருக்கடைக்காப்பு. "செல்வ நெடுமாடஞ் சென்றுசே ணோங்கிச்—செல்வ மதிதோயச் செல்வ முயர்கின்ற—செல்வர்வாழ் தில்லைச் சிற்றம் பலமேய—செல்வன் கழலேத்துஞ் செல்வஞ் செல்வமே." மற்றும் வருவனவற்றாற்காண்க. (க)

இங்ஙனம் கூறிய ஏதுவினால், பொருள் துன்பமென்றுவிடுத்துக், கண்டசுகத்தை விழைகின்ற மனத்தைப் பார்த்துமேற் கூறுகின்றது.

தானை சூழமண் ணுலகையாண் டழிபவர்
தங்கள்வாழ் வினிதென்றே
நீநி னைத்தியோ நெஞ்சமே யெஞ்சுறு
நிமலஞா னமதாற்றால்
வானும் வையமும் வந்துதாள் வணங்குமெய்
வாழ்வுகாண் டலும்வீண்முற்
போன நாட்கிரங் கவும்வரு மெனநலோர்
புகன்றதோர்ந் திலைகாணே.

தானை சூழ மண்ணுலகை ஆண்டு அழிபவர் தங்கள் வாழ்வு இனிது என்றே நீ நினைத்தியோ நெஞ்சமே. எ-து. இரதகசதுரகபதாதிகளாகிய நால்வகைச் சேனையும் தம்மைச் சூழ்ந்துவர

இப்பூவுலகரசாண்டு அவ்வாழ்வோடும் அழிந்து போகாநின்ற அரசர்களுடைய பொய்வாழ்வினை இனிது ஈதென்று நீ கருதினைகொல்லோ நெஞ்சமே என்று விவேகங் கேட்ப, அதற்கு நீர் மேற்கூறியவாறே உறவையும் பொருளையும் விடுத்தேன் இப்போது இவ்வரசரது செல்வத்தையும் இவரை யாவரும் வணங்கும் இவரது பெருமையினையுங் கண்டு அதிசயித்த மாத்திரமே யன்றி வேறில்லை அதற்கு நீர் இச்செல்வமும் பெருமையும் பொய்யென்றும் இவற்றை நீ விரும்பாதேயென்றுங் கூறினீர் ஆனல் இச்செல்வ பெருமைகளுக்கு மேலாய் மெய்மையாகிய செல்வமும் பெருமையும் எவையென்று மனங்கேட்ப,—எஞ்சுறு நிமல ஞானமது உற்றால் வானும் வையமும் வந்து தாள் வணங்கும். எ-து. அணுவளவாயினுங் குறைவுபடாத பரிபூரணமாய் நின்மலமாயுள்ள சிவஞானச்செல்வத்தை ஒருவன் அடைந்தால் அவனது பாதத்தை வானகத்தோரும் வையகத்தோரும் வந்து வணங்காநிற்பர்கள் ஆதலின் மெய்ச்செல்வமும் பெருமையும் இவையென்று அறிதி;—மெய்வாழ்வு காண்டலும் வீண்முற்போனநாட் கிரங்கவும் வருமென நலோர் புகன்றது ஓர்ந்திலை காணே. எ-து. இஃதன்றி இந்த மெய்வாழ்வு கண்டவுடனே முன்னர்ப் பொய்வாழ்வில் வீணளாய்க கழிந்த காலங்களை நினைத்து இந்நெடுங்காலம் இவ்வின்பத்தை விட்டு இருந்தோமென்று இரங்குதலும் வருமென்று ஆப்தர் உரைத்தவாக்கியங்களை அறிந்திலைபோலும் நீ அவரது வாக்கியங்களைப் பார்த்து அறிவாயாகவென்று விவேகங்கூறிற்று. எ - று.

தானை சூழமண்ணுலகை யாண்டழிபவரென்பதற்கு உதாரணம்: நாலடியார். "யானை யெருத்தம் பொலியக் குடைநிழற் கீழ்ச்—சேனைத் தலைவராய்ச் சென்றோரு - மேனை—வினையுலப்ப வேறாகி வீழ்வர்தாங் கொண்ட—மனையாளை மாற்றார் கொள." வானும் வையமும் வந்துதாள் வணங்கும் என்பதற்கு உதாரணம். ஞானவாசிட்டம். "மெத்தென்ற சரித்திரத்தினவர்தம்மை யுலகெல்லாம் விரும்புந் தன்மை—கொத்தொன்று

வனமூங்கிற் குழலிசையான் மகிழ்விலங்கின் கூட்டம்போலு—மித்தன்மையா வருக்கும் பொதுமையிரு வியம்பியதா மிதனின் வேருச—சத்தென்ற வழியிரண்டேழ் பவந்தீர்ப்ப வவர்க்கவற்றைச் சாற்றக்கேண்மோ." போனநாட் கிரங்கவும் வரும் என்பதற்கு உதாரணம்: பட்டணத்துப் பிள்ளையார் பாடல். "அண்ணறன் வீதியரசிருப் பாகுமணி படையோர்—நண்ணொரு நாலொன்ப தாமவ ரேவலு நண்ணுமிவவூர்-துண்ணெனன் பசிக்கு மடைப்பள்ளி யான சுகமு மெல்லா - மெண்ணிலி கால மவமே விடுத்தன மெண்ணரிதே." மற்றும் வருவனவற்றாற்காண்க. (சு)

இங்ஙனங் கூறிய எதுவாற் சுகப்பற்றை விடுத்து இடப்பற்றைக் கருதிய மனத்தைப் பார்த்து மேற்கூறுகின்றது.

காணி யீதெம திடமிது வெனமனைக்
கருதிமண் ணுகின்ருய்
நாணி லாய்மட நெஞ்சமே யுடலிது
நமதிட மலவென்ருற்
பேண வும்படு மேயிதற் கிடமதாம்
பிருதிவி தனைநாகப்
பூணி ஞன்றிருச் சரணமே யுயிர்க்கெலாம்
புகலிட மதுதேரே.

காணி ஈது எமது இடம் இது என மனைக்கருதி மண் ஆகின்ருய் நாண் இலாய் மட நெஞ்சமே. எ-து. இது எமது காணியெனவும் இது எமது வீடு எனவும் மண்ணை எனதென்று கருதி மண்ணுய் மடிந்து போகின்ருய் இங்ஙனம் எண்ணில் காலம் யாதொன்றை யாதொன்றை நீ விழைந்து கருதினுய் அந்த அந்த மயமாய் நின்றே இறந்தனை இங்ஙனம் இறந்தும் பிறந்தும் இத்துன்பங்களில் மொத்துண்டு இன்னும் பற்று நின்ருய் நீ வெட்க மில்லாய்போலும் பேதைமைதானே நிறைந்த நெஞ்சமே என்று விவேகங்கூற, அதற்கு நீர் விடல் வேண்டும் என்றவற்றையெல்லாம் விடுத்தேன் இனி ஓரிடமாயினும் பிடித்

துக்கொண்டிருந்து தவத்தைப் பண்ணுவேனென்றால் நீர் இவ்விடமும் ஆகாதென்று கூறினீர் இவ்விடம் வேண்டுமெனப் பிடித்ததனால் குற்றம் என்னையென்று மனங்கேட்ப,—உடல் இது நமது இடம் அல என்றால் பேணவும் படுமே இதற்கு இடம தாம் பிருதிவி தனே. எ-து. வாதபித்த சிலேஷ்மங்களினாலாகிய வியாதிகளுக்கு இடமாயுள்ள உடம்பு சடமாகலின் யாம் அறிவாகலின் இவ்வுடம்பே நமக்கு இடம் அன்றென்றால் இதனுக்கு இடமாயுள்ள மண்ணினை இடமென்று பிடிக்கவும் தகுமோ நீ சொல்லுதியென்று விவேகங்கூற, அதற்கு நீர் கூறியது உண்மையாம் அறிவுருவமாய் எமக்கு இடமாவது யாதென்று மனங்கேட்ப,—நாகப்பூணினன் திருச் சரணமே உயிர்க்கெலாம் புகவிடம் அது தேரே. எ-து. சர்ப்பாபரணனாகிய சிவனது திருவடிகளே உயிர்களுக்கெல்லாம் அடையும் இடமாகலின் அதுவே நமது இடமென்று நீ அறிதி என்று விவேகங் கூறிற்று. ஏ - று.

இதற்கு உதாரணம்: சிவதருமோத்தரம். "மண்ணினுந் தனத்தினு மனைக்கு வாய்த்தநற்-பெண்ணினு மகவினும் பெரிய பேரினுந்—துண்ணென விழைவினைத் துறந்த தூயரே—விண்ணினு மின்புடன் விளங்கி மேவுவார்." திருவள்ளுவநாயனார். "புக்கி லமைந்தின்று கொல்லோ வுடம்பினுட்—டுச்சி லிருந்த வுயிர்க்கு" மற்றும் வருவனவற்றாற் காண்க. (எ)

இங்ஙனங் கூறியவற்றால் இடப்பற்றை விடுத்துப் புகழை விரும்பிய மனத்தினைப் பார்த்து மேற்கூறுகின்றது.

தேர்கி லாயிவண் புகழ்விழைந் தனையினித்
  தேகம்வே றடைந்தாயேற்
சாரு மோவதி லிதிற்புக ழலதுநீ
  தானுணர்க் கிலேயோ
பேரி யாதியா மார்கொன்மூற் பவத்திகழ்
  பெறினுமித் துணைநெஞ்சே

யோரி னேரில்வீ டுறுதலே புகழிக
ழுறல்பிறப் பெனவுன்னே.

தேர்கிலாய் இவண் புகழ்விழைந்தனை இனித் தேகம் வேறு அடைந்தாயேல் சாருமோ அதில் இதில் புகழ் அலது நீ தான் உணர்ந்திடுவாயோ. எ-து. புகழினது உண்மையை நீ நன்றாக விசாரித்து அறிந்தாயில்லை இவ்விடத்துப் புகழை விரும்பா நின்றனை இக்காயத்தை விட்டு இனி வேறோர் காயத்தை யடைந்தாயேல் இதன்கண் வந்த புகழ் அதன்கண்வந்து பொருந்துமோ. அஃதன்றி முற்பவத்து இன்ன புகழையுடையான் இவனென்று பிறராலறிந்து சொல்லத்தான் படுமோ. அஃதன்றி நீதான் முற்பவத்திலே நற்புகழையுடையேன் யானென்று அறிதியோ வென்று விவேகங் கேட்ப, அதற்கு இஃதாயினும் எனக்குத் தெரியாதோவென்று மனங்கூற,—பேரியாது யாம் ஆர் கொல் முற்பவத்து. எ-து. அதற்கு இனிமேல் வரும் பிறப்பு விவகாரம் நினக்குத் தெரியுமாயின் முற்பிறப்பின் விவகாரமும் நினக்குத் தெரியுமாகலின் முற்பிறப்பின்கண் எமக்குப் பேர் யாது யாம் யாவர் எமது விவகாரம் என்னை நீ சொல்லுதியென்று விவேகங்கேட்ப, அதற்கு மாறுத்தரங் கூறுதலின்றி மனஞ் சும்மா விருப்ப, இகழ்பெறினும் இத்துணை நெஞ்சே. எ-து. இதற்கு உனக்கு வெறுப்பாகிய இகழ்ச்சி வருமாயினும் அது இந்தப் புகழ்ச்சிபோலவேயாகும் நெஞ்சமேயென்று விவேகங்கூற, அதற்கு நீர் இங்ஙனங் கூறியவாற்றால் யாவருங் கூறுகின்ற புகழிகழ்வுகள் இல்லையென்பதாயிற்று. ஆகலின் இவைகள் இல்லையோவென்று மனங் கேட்ப,—ஓரின் நேர் இல் வீடு உறுதலே புகழ் இகழ் உறல் பிறப்பு என உன்னே. எ-து. உண்மையாக விசாரிக்கு மிடத்து ஒப்பற்ற வீட்டினை அடைதலே புகழெனவும் பிறப்பினை அடைதலே இகழெனவும் நீ அறிதியென்று விவேகங்கூறிற்று. எ - று.

வீட்டினை யடைந்தோரும் நித்தியம்; ஒன்றனையும் விரும்பாது அவ்வீட்டினையே விரும்பி அடைந்த அவரது புகழும்

நித்தியம்; பிறப்பினை யடைந்தோரும் அநித்தியம்; இவாது புகழும் அநித்தியமாகலின், அது புகழென்றும் இது இகழென்றுங் கூறப்பட்டன.

இதற்கு உதாரணம்: ஒழிவிலொடுக்கம். "நாயேறி வீழ்ந்தென் னடாத்துகிலென் ஞானிக்குப் — பேயாஞ் சகம்பழித்தென் பேணுகிலென்-றேயார்—பெருமை சிறுமையிலை பின்னு முன்னு மில்லை—வரைவற்று வேண்டியசெய் வார்." உறவுமுதல் புகழீறாய ஐந்திற்கும் உதாரணம்: பிரபுலிங்கலீலை. ' ஓடும் பொன்னு முறவும் பகையுமோர் — கேடுஞ் செல்வமுங் கீர்த்தியு நிந்தையும் — வீடுங் கானமும் வேறற நோக்குதல் — கூடுந் தன்மை கொளுமன நன்மனம்." மற்றும் வருவனவற்றுற் காண்க. ()

தாளையே தாமறிகிலா தென்னும் பாட்டுமுதல் இவ்வேழு பாட்டாலும் மனத்திற்குப் புறப்பற்றுக்களாயுள்ள உறவு பொருள் சுகம் இடம் புகழ் என்கிற இவ்வைந்தையும் விடுவித்து, இந்தவுறவு முதலாகிய வைந்துஞ் சிவனது திருவடியேயென்று அறிவித்து, இனி உட்பற்றைநீக்கி அத்திருவடியை அடைதற்கு ஏதுவாய தவத்தைச் செய்யும்படி மனத்தைச் சம்மதிக்கப் பண்ண, அது சம்மதித்துத் தவஞ்செய்யத் தொடங்கும்போது, அத்தவத்தால் தன்னைப் பிறர்பெரியனென்றுகூற அப்பெருமை கருதிய மனத்தைப் பார்த்து மேற்கூறுகின்றது.

உன்னு கின்றனை யுனைமனோர் பெரியனென்
  றுணருமா செயவுன்பான்
மன்னு மீசனே பந்தம்வீ டளிப்பவன்
  மற்றைய ரறிந்தென்னே
மன்னவன்றிருப் பொன்னடி கரியதா
  வருந்தவஞ் செய்நெஞ்சே
பின்னை முன்னவ னுலகறிந் திறைஞ்சுமா
  பெருமைசெய் குவனோ.

உன்னுகின்றனை உனை மனோர் பெரியனென்று உணருமாசெய. எ-து. உன்னை இவ்வுலகத்திலுள்ளார் தவத்தாற் பெரியனென்று அறியுமாறு செய்ய நீ கருதுகின்றனை;—உன்பால் மன்னும் ஈசனை பந்தம் வீடு அளிப்பவனை மற்றையர் அறிந்து என்னும். எ-து. உன்னிடத்து விட்டு நீங்காது நிலைபெற்றிருக்கின்ற பரமசிவனை நீ செய்த அவத்தினையும் தவத்தினையும் அறிந்து அவத்திற்குப் பயனாய பந்தமும் தவத்திற்குப் பயனாய வீடும் தருபவன். அச்சிவனை யன்றி ஒழிந்த சீவர்கள் உன்னைப் பெரியனென்று அறியும்படி அவர் சாக்ஷியாக நீ செய்யுந் தவத்தால் உனக்கு என்ன பயன் உண்டாமென்று விவேகங்கூற, அதற்கு அச்சிவனது திருவுளத்துக்குப் பாங்காக நடக்கின்ற நன்னெறி யாதென்று மனங்கேட்ப,—அன்னவன் திருப்பொன் அடி கரியதா அருந்தவஞ் செய் நெஞ்சே. எ-து. சீவசாக்ஷிகுறியாமலே சிவனது திருவடி சாக்ஷியாக அரிய தவத்தினை நெஞ்சமே நீ செய்தியென்று விவேகங்கூற, அதற்கு அத்திருவடி சாக்ஷியாகச செய்யுந் தவத்தால் வரும் பெருமை யாதென்று மனஙகேட்ப,—பின்னை முன்னவன் உலகு அறிந்து இன்றஞ்சுமா பெருமை செய்குவன் ஓரே. எ-து. அதற்கு இங்ஙனம் நீ தவஞ்செய்த பின்னர் யாவர்க்கும் முதல்வனாகிய சிவன் இவ்வுலகத்திலுள்ளார் யாவரும் நின்னைப் பெரியனென்று அறிந்து வணங்கும்படி பெருமையைச் செய்வான் இதனை நீ அறிதியென்று விவேகங் கூறிற்று. எ - று.

இதற்கு உதாரணம்:—சிவபோகசாரம். "நாம்பெரிய ரென்னுமதை நாடாத டக்குமவர்—தாம்பெரிய ரென்றுமறை சாற்றிவிடு - நாம்பெரிய—ரென்பார் சிறிய ரிவரலா திவ்வுலகிற்—றுன்பார் சுமப்பார்கள் சொல்." மற்றும் வருவனவற்றுற் காண்க. ()

இங்ஙனந் திருவடி சாக்ஷியாகத் தவஞ்செய்கின்ற மனஞ் சுவர்க்கவின்பத்தைக் கருதியவாறு நோக்கி மேற்கூறுகின்றது.

ஓரினுள்ளமே பாரின்மா னுடர்முத
லுளவறு பிறப்பூமேஞ்
சேரு மின்பமொன் றில்லையென் பதுபிரத்
தியக்கமா நீவல்லாய்
போர்க ளாதிதுன் பிமையவ ரடைவதும்
புகலநூ லுணர்ந்தாயே
நேரி லாவரன் கழலலான் மிகுசுக
நிலைபிறி திலையன்றே.

ஓரின் உள்ளமே பாரின் மானுடர் முதல் உள அறு பிறப்பூமேம் சேரும் இன்பம் ஒன்று இல்லை என்பது பிரத்தியக்கமா நீ வல்லாய். எ-து. நெஞ்சமே உண்மையாக விசாரிக்குமிடத்து இப்பூமிக்கண் மக்கண் முதல் தாவரமீறுயுள்ள அறுவகைப் பிறப்பினுள்ளும் பொருந்தா நின்ற சுகம் ஓரணுவளவாயினும் இன்றென்பது காட்சிப்பிரமாணமாக நீயே அறியவல்லாய்,—போர்கள் ஆதி துன்பு இமையவர் அடைவதும் புகல நூல் உணர்ந்தாயே. எ-து. அஃதன்றிச் சத்துருக்களோடு அமர்செய்தல் முதலியவற்றால் வருந் துன்பங்களைத் தேவர்கள் பொருந்துவதும் வேதாகம சாஸ்திரங்கள் கூற அதைச் சத்தப் பிரமாணத்தால் அறிந்தனையென்று விவேகங்கூற, அதற்கு மக்கண்முதலிய அறுவகைப்பிறப்பிற்கும் மேலாய தேவப்பிறப்பின்கண்ணும் இன்பம் இன்றென்றீர் இனித்தான் சுகமாவது யாதென்று மனங்கேட்ப,—நேர் இலா அரன் கழல் அலான் மிகு சுகநிலை பிறிது இல அன்றே. எ-து. அதற்கு ஒருவாற்றானும் உவமை கூறற்கரிய சிவனது திருவடியேயல்லது மிகுந்த பேரின்பநிலை வேறு இன்றென்று விவேகங் கூறிற்று.' எ - று.

பிறப்பும் இறப்பும் காமமும் நோயும், பயமும் முதலிய துன்பங்களைத் தேவர்களடைதலிற் போர்களாதி துன்பென்று கூறப்பட்டது. அன்றென்றது - அசைநிலை.

இதற்கு உதாரணம்: பெருந்திரட்டு. "தீய வசுரர் பகையு ண்டு செற்றமார்வ மிகவுண்டு—நோயுண் டநங்க ஞருண்டு நோய்கட் கெல்லாந் தாயான—காயமுண்டு கைதொழ வேண் டினரு முண்டு கற்பகத்தே—மாயுந் தன்மை யுண்டானல் வா னேர்க் கென்னை வளனுண்டே." ஆனந்தத்திரட்டு. "தேவி ன்மா னுடத்திற் றுன்பந் திகழ்வதிப் பரிசே யென்று—லாவகீழ் விலங்கு பக்கி யாதிதா வரமற் றெல்லா—மோவிய துன்ப வெள்ளத் துழைத்தலோ ரளவுமுண்டோ—பாவமா நிரயந் தன் னிற் படுதுயர் பகரல் வேண்டா." மற்றும் வருவனவற்றுற் காண்க. (க0)

இங்ஙனங் கூறிய உபதேசமொழிகளை அர்த்தாங்கீகார மாக உட்கொண்டு பிரபஞ்சத்தில் மிகவும் உவர்ப்புப் பிறவா மல் நின்றீ மனத்தைப்பார்த்து மேற்கூறுகின்றது.

அன்றெ னக்குநீ யொருதுணை பிறப்பிறப்
  பதிற்றுய ரமுங்கேடுந்
தின்ற லொன்றலால் வியாதியா திகளினுற்
  செறிதுய ரமுமோர்ந்தோர்ந்
தென்று மேழ்பவக் கஞ்சிலை நெஞ்சமே
  யின்பவீ டெதுவென்றே
நின்று நின்றழு திலைதொழு திலைசிவ
  னேசர்தாள் பூசித்தே.

அன்று எனக்கு நீ ஒருதுணை. எ-து பிறப்புத் துன்பமெ ன்றும் வீடு இன்பமென்றும் உனக்கு நானு வுபாயங்களினலும் யான் அறிவித்தும் நீ அப்பிறப்பினை நீக்கி வீட்டினை அடைத ற்கு ஏதுவாய தவத்தினை விரைந்து செய்யாது தாமசம் பண்ணு கின்றனையாகலின் எனக்கு நீ ஒப்பற்ற துணையன்றென்று விவே கங்கூற, அதற்கு நீர் விடுக்கச்சொன்ன பற்றுக்கள் யாவும் விடு த்தேன். தவமுஞ் செய்கின்றேன். நீர் இன்னுங் கூறியவாறுங் கேட்க நிற்கின்றேன். இங்ஙனம் இருந்த என்னை அங்ஙனங்

கூறியது என்னை யென்று மனங்கேட்ப,—பிறப்பிறப்பதில் துயரமும் கேடும் தின்றல் ஒன்றலால் வியாதி ஆதிகளினால் செறிதுயரமும் ஓர்ந்து ஓர்ந்து என்றும் எழ்பவக்கு அஞ்சிலை நெஞ்சமே. எ-து. பிறப்பிற் கருப்பாசயப்பை உறுத்தல் முதலிய வைந்தினால் வருகின்ற துன்பத்தையும் இறப்பில் அத்துன்பத்தினெண்மடங்காகிய துன்பத்தோடு வருகிற நாசத்தையும் இவற்றிற்கு இடையாயுள்ள ஸ்திதிக்கண் அருந்தல் பொருந்தல்களாலும் நோய் முதலியவற்றாலும் அடையாநின்ற துன்பங்களையும் இடைவிடாது எக்காலமும் ஆராய்ந்து அவ்வெழுவகைப் பிறப்பிற்கும் நெஞ்சமே நீ பயந்தாயில்லை,—இன்பவீடு எது என்றே நின்று நின்று அழுதிலை தொழுதிலை சிவன் நேசர்தாள் பூசித்தே. எ-து. அஃதன்றி அப்பிறப்புத் துன்பங்களை நீக்குதல் செய்யுஞ் சிவனது திருவடிக்கு நேயராகிய அடியாரது திருவடிகளை அருச்சித்து வணங்கினையில்லை; இன்பவீடாவது யாதென்று அவர்களைக கேட்டு நின்று நின்று அழுதாயில்லை. ஆகலின் யாம் கூறியவாறு நீ கேட்டது என்னையென்று விவேகங் கூறிற்று. எ-று.

வியாதியாதிகளினாற் செறிதுயரம் என்றமையால் அருந்தல் பொருந்தற்கு எதுவாகிய திரவியந்தேடுதல் அதனைப் பாதுகாத்தல் நரைதிரைமூப்பு முதலியவற்றால் வருந் துன்பமுங்கொள்க. கருப்பாசயப்பை யுறுத்தல் முதலிய வைந்து துன்பமென்றது: கருப்பாசயப்பை யுறுத்தல், அதிற்சலம் பூரித்தல் உதராக்கினியால் வேவுதல், பிரசூதவாயு முரித்துத்தள்ளுதல், யோனித்துவாரத்தில் நெருக்குண்டல் ஆகிய இவ்வைந்து மென்றறிக.

இவற்றிற்கு உதாரணம்: சிவதருமோத்தரம். "என்றென்றெண்ணி யிருக்குமுயி ரிடர்ப்பட் டழியுமெழுவ் வரைக்கீ—ழொன்று மொருவன் றனைப்போலக் கருப்பா சயப்பை யுறுத்துதலான்—மன்ற வுதரி மறிர்தாழ்வான் வருத்தமென்ன வருந்தியிடு—நின்ற கருப்பா சயவுதக வெள்ளங் கொள்ள நிறையழிந்தே." என்றும் "அங்கி யதனிற் "ங்கியிடு மயோமயத்த

கும்பத்திற்—றங்கு மொருவன் றபனம்போற் றபன மெய்துந் தாயுதரத்—தங்கி சுடவே யழலனைய சூசியதனு லாகத்தைப்—பங்கித் திடவே படுமிடறி னிருநாற் குணிதம் பட்டழுங்கும்.' என்றும் "கருப்பா சயமே கட்டமதா மதனி லதிகங் கடுங்காலு—முரிக்க மிகவு மோகமுற முன்னை யுணர்வு மற்றிலையே—மரிக்க வாலைக் கரும்பெனவே யோனி வழியின் வலிதொலைய—நெருக்கப் பட்டு நிலமிசையே தோன்று முயிரு னிலையுடனே.' என்றும், இப்பிறப்பி னெண்மடங்காய துன்பத்தோடுவருநாசத்திற்கு உதாரணம்: பெருந்திரட்டு. "பரண மாகிய பெண்டிருஞ் சுற்றமும் பண்டுதங் கையிற்றந்த—விரண மானவை கொண்டிட விவரைவிட் டியம்பிடா திவனேகு—மரண வேதனை யாவரா லறியலா மயங்கியைம் புலனந்தக்—கரண மியாவையுங் கலங்கிட வருந்துயர் கடவுளே யறிகிற்பான்." என்றும் "வந்திடு மரணத் துன்ப மறித்துரை செய்யப் போமோ—வுந்தி மேலையும் பித்து முணர்வொடு பொறி கலங்கி—நந்திடா விருளேமூடி நாவுலர்ந் தலமந் தென்னே—யிந்தமா விறப்பிற் றுன்பம் பவத்துன்பத் தெண் மடங்கே." என்றும் ஆனந்தத்திரட்டு. "கருவிடை யழுந்துந் துன்பமு நிலத்தின் கண்ணுறிற் கொடிய வெந் நோயான்—மருவுவெந் துயரு நரைதிரை யெய்தி வருந்திடுந் துன்பமுங் கூற்று—லுருவினை யொருவுந் துன்பமு மீட்டுங் கருக்குழி யொன்றுறு துயரும்—வெருவர வெண்ணி யின்பவீ டதனை மேவநன் குணர்தலே வேண்டும்." என்றும்; நின்று நின்றழுதிலை யென்பதற்கு உதாரணம்: திருவாசகம். "ஆடு கின்றிலை கூத்துடை யான்கழற் கன்பிலை யென்புருகிப்—பாடு கின்றிலை பதைப்பதுஞ் செய்கிலை பணிகிலை பாதமலர்—சூடுகின்றிலை சூட்டுகின் றதுமிலை துணையிலி பிணநெஞ்சே—தேடு கின்றிலை தெருவுதோ றலறிலை செய்வதொன் றறியேனே." என்றும் மற்றும் வருவனவற்றுற் காண்க. (கக)

நீர் கூறியவாறே பிறவித்துன்பத்திற்குப் பயமும் இதனை நீக்கிவிட்டு இன்பத்தினை அடைவித்தற்கு ஏதுவாகிய அடியவரி

டத்து அன்பும் எனக்கின்றாயது உண்மை. இனிப் பயபத்திக ளோடுங் கூடி வீட்டினை அடைதற்கு எதுசெய்கின்றேனென்று மனங் கூற அதற்கு நீ என்னே அங்ஙனஞ் செய்கின்றாயென்று பின்னும் அதனை வெறுத்து மேற்கூறுகின்றது.

பூசை செய்துதோத் திரஞ்சொலித் தனைநினை
　புண்ணியர் பாலண்ணாற்
காசை செய்திடு மம்பலக் கூத்தனை
　யடைகிலை யடைந்தாரிற்
பேசு கின்றனை யறவரின் விளங்கினை
　பிறர்மனை நயக்கின்றாய்
சீசி யிங்கிருந் தென்செய்தாய் நெஞ்சமே
　செத்திலாய் கெடுவாயே.

பூசைசெய்து தோத்திரம் சொலித் தனைநினை புண்ணியர் பால் அண்ணற்கு ஆசை செய்திடும் அம்பலக் கூத்தனை அடைகிலை. எ-து. தனது திருவடியைக் காயத்தால் அருச்சித்து வணங்கி வாக்கால் தோத்திரம் பண்ணி மனத்தால் தியானித்து இங்ஙனம் வழிபடும் பத்தி புண்ணியங்களையுடைய அடியாரிடத்து எழுந்தருளுவதற்குத் திருவுளத்து இச்சை செய்யாநின்ற கனக சபைக்கண் நடம் புரிவோனை மனமொழிமெய்களால் வணங்கி அடைந்தாயில்லை,—அடைந்தாரில் பேசுகின்றனை அறவரின் விளங்கினை பிறர்மனை நயக்கின்றாய். எ-து. அவனது திருவடியை யடைந்த அடியார்போல வார்த்தைமாத்திரஞ் சொல்லுகின்றனை பசு புலித்தோல் போர்த்ததுபோல் உள்ளத்தில் வஞ்சம் வைத்துக்கொண்டு புறத்துத் துறவறத்தோர்போல் அவரது வேடத்தால் விளங்காநின்றனை எனக்கு உரிய மனைவியைத் துறந்து தவஞ் செய்கிறேனென்று தொடங்கிப் பிறர்க்குரிய மனைவியை இச்சிக்கின்றாய்,—சீசி இங்கு இருந்து என்செய்தாய் நெஞ்சமே செத்திலாய் கெடுவாயே. எ-து. சீசி முன்னிருந்த இல்லறமு மன்றி அதனைவிட்டுப் பின்னர் அடைந்த துறவறமு

மன்றி இவற்றினவேணின்று கூடாவொழுக்கஞ் செய்கின்றனை நெஞ்சமே நீ இவ்விடத்தில் இருந்து என்னகாரியஞ் செய்து கொண்டனை இனி நீ இருந்தால் இக்கூடாவொழுக்கத்தால் என்னைப் பவத்துன்பத்திலே தள்ளுவாயாகலின் நீ சாவாய் கெடுவாய் என்று விவேகங் கூறிற்று. எ - று.

தனைநினை புண்ணியர் பானண்ணற் காசைசெய்திடும் என்பதற்கு உதாரணம்: திருவாசகம். "முத்தனே முதல்வா முக்கணா முனிவா மொட்டறு மலர்பறித் திறைஞ்சிப்—பத்தியாய் நினைந்து பரவுவார் தமக்குப் பரகதி கொடுத்தருள் செய்யுஞ்—சித்தனே செல்வத் திருப்பெருந்துறையிற் செழுமலர்க் குருந்தமே வியசீ—ரத்தனே யடியே னறிதித் தழைத்தா லதெந்துவே யென்றருளாயே." பிறர்மனை நயக்கின்று மென்பதற்கு உதாரணம்: திருவள்ளுவநாயனார். "வலியி னிலைமையான் வல்லுருவம் பெற்றம்—புலியின்றோல் போர்த்து மேய்ந்தற்று." மற்றும் வருவனவற்றுற் காண்க. (கஉ)

நீர் கூறிய முறையே செய்கின்றதன்றி என்மேலே தவறொன்றும் கண்டிலேன் இங்ஙனமிருப்பச் செத்திலாய் கெடுவாயென்று என்னை வெறுத்துக் கூறினீர் என்பால் தவறுதான் யாதென்று மனங்கேட்ப அதற்கு மேற்கூறுகின்றது.

வாயி னாற்பல நூல்படித் துணர்ந்துநல்
  வழிபிறர்க் குரைசெய்து
நீயு லோகவா சாரமோ ராறுத்துணை
  யானுநீங் கிலைநெஞ்சே
தூய தாமிவண் பிறர்கொளக் குங்குமஞ்
  சுமந்துசெல் கழுமுன்னிற்
காய மானுடத் தின்றதற் கன்றியுட்
  களவுமின் மையினாலே.

வாயினால் பல நூல் படித்து உணர்ந்தும் நல்வழி பிறர்க்கு உரை செய்தும் நீ உலோக ஆசாரம் ஓராறுத்துணையானும் நீங்

கிலை நெஞ்சே. எ-து. பலஞான சாஸ்திரங்களை வாயினற் படித்தும் அவற்றினது பொருள்களை ஆராய்ந்தறிந்தும் பிறர்க்கு நன்னெறியாவும் அவர் சம்மதிப்பச் சொல்லியும் நீ முன்னிருந்த உலோகாசார வழக்கத்தில் ஓரணுவளவாயினும் உள்ளே துறந்தனையில்லை இங்ஙனம் பிறப்பிற்கேதுவாய உலோகாசாரம் துறத்தலின்மையால் வீட்டிற் கேதுவாய ஞானசாரம் பற்றியதின் றென்பது நன்றறிந்தேன் நெஞ்சமே.—தூயதாம் இவண் பிறர்கொளக் குங்குமம் சுமந்து செல் கரம் உன்னில். எ-து. குங்குமப்பொதி சுமந்து செல்கின்ற கர்த்தபம் உன்னிலும் நின் மலமாமென்று விவேகம்கூற, அதற்குப் பலநூல்களைக் கற்றறிந்து பிறர்க்கு உரைக்கச் சிவபூசை தோத்திரம் பண்ண இவற்றுலியாவரும் மதிப்ப விருந்த என்னை மிருகசண்டாளமாகிய கர்த்தபத்திற்குக் கீழ்ப்படுத்திக் கூறினீர் இஃதென்னையென்று மனங்கேட்ப,—காயம் மானுடத்து இன்று அதற்கு அன்றி உட்களவும் இன்மையினுலே. எ-து. அதற்கு நீ மக்களியாக்கையைப் பெற்று நூற்பொருளுணர்ந்தும் அந்நூற்பொருளால் வீட்டின்பமாய பயனைப் பெறாது அப்பயன் பெற்றோன்போல் நெஞ்சில் வஞ்சம் வைத்துக்கொண்டு அந்நூற் பொருளைப் பிறர்பயன்கொளக் கூறுகின்றாய் கர்த்தபத்திற்கு மக்களிடத்தாக்கையுமின்று அஃதன்றியும் யான் சுமந்த குங்குமம் பிறர்பயன்கொளக் கொடுத்தேனென்று வஞ்சமும் உளத்தின்றாகலின் உன்னை அதினினுங் கீழ்ப்படுத்திக் கூறியதால் தோஷம் என்னையென்று விவேகங் கூறிற்று. எ - று.

உலோகாசார நீங்கிலை யென்றமையால் ஞானசாரம் பற்றியதின்றென்பது வருவிக்கப்பட்டது. குங்குமம் ஆகுபெயர்.

வாயினற் பல நூல்படித் தென்பதற்கு உதாரணம்: திருவள்ளுவநாயனார். "ஓதி யுணர்ந்தும் பிறர்க்குரைத்துந் தானடங்காப்—பேதையிற் பேதையா ரில்." பிறர்கொளக் குங்குமஞ் சுமந்து செல்கரம் என்பதற்கு உதாரணம்: அறிவானந்தசித்தி

யார். "விரிந்த நல்வேத புராணங்க ளாகம மிக்ககலை— தெரிந்து படித்துப் பொருள் செப்பித் தாநிலை சேர்ந்து நில்லா—திருந்த சண்டாளரி னேற்றங் கழுதை யெழிற் குங்குமம்—பரிந்து சுமந்தும்பின் வஞ்சம்பண் ணுதபயனெழிலே." மற்றும் வருவன வற்றுற்காண்க. (கரு)

என்னுள்ளத்தின்கண் வஞ்சம் இருந்தமையால் நீர் இகழ்ந்து கூறினீர். பற்றுக்களியாவும் விடுத்த எனக்கு இது விடுதல் அரிதோ இதனையும் விடுத்தேன். இனியொருமார்க்கத்திலே நின்று தவத்தைப்பண்ணி வீட்டை அடைதற்கு அறுவகைச் சமயங்களுள் ஒரு மேலாய சமயம் எனக்கு நீர் கூறுகவென்று மனங்கேட்ப், அதற்குமேற் கூறுகின்றது.

நாலுவேதமு மொருசம நிலைசொல
  நவைசெயீ ரவத்தைப்பாற்
கோலு மூவிரு சமயமா கியபடு
  குழியினூ டிழிகின்றாய்
வேலை யாவுனக் குடறரு விதியுற
  வையுமதை விடுவிக்குங்
கால னுர்தொடர் பையுமினந் தொடருதி
  போலுநீ கடைநெஞ்சே.

நாலுவேதமும் ஒருசம நிலைசொல நவைசெய் ஈரவத்தைப்பால் கோலும் மூவிரு சமயமாகிய படுகுழியினூடு இழிகின்றாய், எ-து. இருக்குமுதலிய நான்குவேதங்களும் சகல கேவலங்களுக்கு மத்தியமாகிய சுத்தாவஸ்தையே வீடடைதற்கு ஏதுவென்று சொல்லக் காமவெகுளிமயக்க மென்னு முக்குற்றங்களையும் உண்டாக்குதல் செய்கிற சகல கேவலங்க ளென்கின்ற இரண்டவஸ்தைகளின் பகுதியாகச் சமயிகள் தங்கள் சித்தவிகற்பத்தாற் கோலிய அறுவகைச் சமயமாகிய பிறவிப் படுகுழியிலே நீ இறங்காநின்றாயென்று விவேககூற, அதற்கு இவ்வறுசமயங்களையும் படுகுழியென்றீர் இது என்னை யென்று மனக்

கேட்ப, அதற்கு இங்ஙனங் கேட்டமையாற் சமயங்களின்மேலே பற்றுக்கள் நீ இன்னம் விடுத்திலையாகலின்,—வேலையா உனக்கு உடல் தரு விதி உறவையும் அதை விடுவிக்கும் காலனார் தொடர்பையும் இனம் தொடருதி போலும் நீ கடை நெஞ்சே. எ-து. இதுவே வேலையாக உனக்கு உடல் கொடுக்கின்ற பிரமனாகிய உறவினையும் அவனாற் கொடுக்கப்பட்ட உடல்களை விடுவித்தலே வேலையாக விடுவிக்கிற கூற்றனாகிய நட்பினையும் எவ்வகைப்பட்ட பற்றுக்களையும் விடுத்துப் பிறப்பிறப்பை நீக்குதற்கு ஏதுவாய் வந்தும் இன்னமும் தொடர்கின்றனை போலும் நீ யாவைக்குங் கீழாய நெஞ்சமே யென்று விவேகங்கூறிற்று. எ - று.

வேதாகமங்கள் கூறியநெறி செல்வோர்க்குப் பிறப்பிறப்பு நீங்குதலேயன்றி மற்றைச சமயநூல்கள் கூறியநெறி செல்வோர்க்கு அவை நீங்காவென்பது இதனாற்காண்க.

நாலுவேதமுமொரு சமநிலை யென்பதற்கு உதாரணம்: பட்டணத்துப்பிள்ளை நாயனார். "சினந்தனை யற்றுப் பிரியமுந் தானற்றுச் செய்கையற்று—நினைந்தது மற்று நினையா ததுமற்று நின்மலமாய்த்—தனந்தனி யேயிருந் தானந்தநித்திரை தங்குகின்ற—வனந்தலி லென்றிருப்பே னத்தனேகயி லாயத்தனே." சமயமாகிய படுகுழியென்பதற்கு உதாரணம்: தேவிகாலோத்தரம். "சமயா சாரசங் கற்ப விகற்பமு—மமையா தாங்குல வாசாரமானது—மிமையா தாரும் விடாதவில் வாழ்க்கையு—மமையார் தோளாய் விடுதலாசாரமே." மற்றும் வருவனவற்றாற் காண்க.()

இனி இந்த வுயிரைக் கொண்டுபோகின்ற காலனுக்குத் தப்பிச்செல்லு நெறி எனக்கு நீர் கூறுகவென்று மனங்கேட்ப அதற்குமேற் கூறுகின்றது.

நெஞ்ச மேயுட லந்தமா நிலைவிடார்
  நிற்கமற் றையர்க்கெல்லாம்,
வெஞ்ச மற்குநிப் பரிநிலைக் கொருமிரு
  கண்டுபுத் திரன்சான்று

லஞ்ச லிவ்வுடற் கிறுதியிப் பொழுதென
  வறிவொணு மையினுளுந்
தஞ்சமென்றரன் சரண்விடே லியாமுமச்
  சமன்வலி தடுப்பாமே.

நெஞ்சமே உடல் அந்தம் ஆதியை விடார் நிற்க மற்றையர்க்கு எல்லாம் வெஞ்சமற்குதிப் பரிது. எ-து. நெஞ்சமே தேகாந்தத்தில் யாவர்க்கு முதல்வனுகிய சிவனது திருவடியை மறவாத பெரியோர்கள் நிற்க மற்றைச் சரியை கிரியைகளைச் செய்கின்ற சீவர்கட்கெல்லாம் கொடிதாகிய கூற்றைக்கடந்து போதல் அரிது என்று விவேகங்கூற, அதற்கு அவ்வடியை மனமொழி மெய்களினுல் வழிபடுவோர்க்கும் கூற்றைக் கடத்தல் அரிது என்று கூறினீர் இதற்கு பிரமாணமுண்டோவென்று மனங் கேட்ப இவைக்கு ஒரு மிருகண்டு புத்திரன் சான்றல். எ-து. அதற்குச் சிவனது திருவடியைத் தேகாந்தத்தின் மறவாதுபிடித்துக கூற்றைக் கடப்பதற்கும் அத்திருவடியை மனமாதியால் வழிபட்டும் அவனைக்கடத்தல் அரிதென்பதற்கும் ஒப்பற்றமிருகண்டு மாமுனி புதல்வராகிய மார்க்கண்டேயரே சாக்ஷியென்று விவேகங்கூற, அது எங்ஙனமென்று மனங்கேட்ப, அதற்கு அவர்மனமாதிகளால் வழிபட்டும் கூற்றன்வந்து பிடித்தான் அங்ஙனம் அவன் பிடித்தபோது பயத்தால் மறவாது சிவனது திருவடியை அவர் பிடித்தமையால் அந்தக் கூற்றனையுங் கடந்தாராதலின் அவரே சாக்ஷியென்பது அறிதியென்று விவேகங்கூற, அதற்குத் திருவடியை வழிபடுதலால் யான் கூற்றைக்கடக்கலாமென்று இருந்தேன். நீர் கூறியவாற்றல் அவனை இவ்வழிபாட்டாற் கடக்கக்கூடாதென்பது அறிந்து அச்சமுற்றேன் இனி அவனைக் கடத்தறகு ஏதுவாகிய திருவடியைப் பிடித்தற்கு உபாயம் நீர் கூறுகவென்று மனங்கேட்ப,—அஞ்சல் இவ்வுடற்கு இறுதி இப்பொழுது என அறிவொணுமையின் நாளும் தஞ்சம் என்று அரன் சரண் விடேல் யாமும் அச்சமன் வலி தடுப்பாமே. எ-து. அதற்கு நீ அஞ்சற்க. இத்தேகத்திற்கு அந்

தம் இந்தக்கணப்போதென்று நம்மால் அறியக்கூடாமையால் எந்நாளும் மற்றை நினைவெல்லா மொழித்துச் சிவனது திருவடி தஞ்சமென்று அதனையே விடாது பற்றுதி. இங்ஙனஞ் செய்தி யெனின் அந்தக் கூற்றன் நம்மைப் பிடிக்கவருஞ் சாமர்த்திய த்தை நாமும் தடுத்துக்கொள்வாமென்று விவேகங்கூறிற்று. எ - று. தஞ்சம் பற்றுக்கோடு.

இதற்கு உதாரணம். பெருந்திரட்டு. "வில்விளங்கிய விண் ணவர் மிகுத்தவாழ் நாளு—மல்ல ரும்பக லென்னுமீர் வாளினு லரிந்து—கொல்லும் வெங்கொடுங் கூற்றையார் குலைவுறுர்கு றுகி—னல்விருந்தென வுவந்தெதிர் கொள்ளுவான்ஞானி." என் றும், திருவள்ளுவர். "வேண்டுதல் வேண்டாமையிலானடி சேர் ந்தார்க்—கியாண்டு மிடும்பை யில." என்றும் மற்றும் வருவன வற்றுற் காண்க. (கசி)

இப்போது பெற்ற இக்காயத்தின்கண் நின்று ஒருதலையா கத் திருவடியை மறவாது பிடிக்கவேண்டுமென்று இன்னும் வற் புறுத்துதல் மேற்கூறுகின்றது.

தடுத்து மேலுமிவ் வுருவமா யினும்பெறல்
சற்றல மறைநாகத்
திடத்தின் மாதவ ரிருவர்கங் கெனவடைந்
திருத்தல்சான் றரிதாகிக்
கிடைத்த தேகமும் விவேகமு மிருக்குநான்
றேகிநீ சனைநெஞ்சே
யடுத்தி லாய்பல கவலைமாய்த் தேர்ருணர்
வர்கிநின் றகலாதே.

தடுத்து மேலும் இவ்வுருவ மாயினும பெறல் சற்றல. எ-து. இத்தேகத்தைவிட்டு இனிமேல் இம்மானுட தேகமாயினும் பெ றல் எளிதன்றென்று விவேகங்கூற, அதற்கு இம்மானுடதேக மாயினும் பெறுதல் அரிதென்று மிகவும் அருமைப்படுத்திக் கூறுகின்றீர். இது கிடைப்பது அரிதென்பதற்கு ஒருகாட்சிப்

பிரமாண முண்டோவென்று மனங்கேட்ப,—மறைநாகத் திடத்தின் மாதவர் இருவர் கங் கெனு அடைந் திருத்தல் சான்று. எ-து. அதற்குச் சம்பரன் சம்பாதியென்னுமிரண்டு முனிவரும் புத்தியை விரும்பி மேலாகிய தவத்தினைப்பண்ண அதனால் சிவன்வந்துதோன்றி உமக்கு என்னை வேண்டியதென்று கேட்ப, அதற்குத் தாம் கருதிய அதனை மறைத்து முத்திவேண்டுமென்று கேட்ப, அதற்கு நீர் கருதியதொன்றும் நம்மைக் கேட்பது மற்றொன்றுயோவென்று திருவுளத்தின் முனிவுசெய்து சாபங் கொடுத்தருள, அதனால் அவ்விருவோரும் வேதகிரியின்கண்ணே கழுகெனக் கிருதயுகமுதல் இந்தக் கலியுகமளவும் இத்தேகங் கிடையாது இங்ஙனம் இருத்தமேல சாக்ஷியென்று விவேகங்கூற, அதற்கு வினைவேறு இன்றி மனஞ் சும்மாவிருப்ப,— அரிதாகிக் கிடைத்த தேகமும் விவேகமும் இருக்கு ஞான்றே கிரீசனை நெஞ்சே அடுத்திலாய் பலகவலைமாய்த்து ஒருணர்வு ஆகிநின்று அகலாதே. எ-து. ஆகலின் மிகவும் அரிதாககிடைத்த இந்த மானுடதேகமும் இதனில் தன்னைத் தலைவனை அறியவருகிற அரிதாகிய விவேகமு மிருக்கிற இக்காலத்திற்றனே தேகபோகங்களைக் கருதுகின்ற பலவேறுவகைப்பட்ட கவலைகளையுங் கெடுத்து ஏகவறிவாய் நின்று கயிலையங்கிரிவாசனுகிய சிவனது திருவடியைவிட்டு நீங்காது நீ அடைந்தாயில்லை. நெஞ்சமேநின் கருத்திருந்தது என்னையென்று விவேகங்கூறிற்று. எ - று. அரிதாகியென்பது விவேகத்தோடும் பிரித்துக் கூட்டப்பட்டது.

தடுத்து மேலு மிவ்வுருவமாயினும் என்பதற்கு உதாரணம்: ஆனந்தத்திரட்டு. "மந்திரவாட் பெற்றும் பகைவெல்லான் மற்றதுகொண்—டந்தோதன் மெய்யை யரிந்தான்போன் - றிந்தவுடல்—கொண்டுமுத்தி செல்லுங் குறிப்பின்றிச் சிற்றின்பங்—கண்டுவினைக் காளாங் கணக்கு." விவேகமுமிருக்கு ஞான்றே என்பதற்கு உதாரணம்: ஞானவாசிட்டம். "கையினு லறையுண்ணும் பந்துபோலக் காலனு லறையுண்டு கணக்கிலாத—மெய்யிலே புகுந்திளைத்து விவேகம் பெற்றும் விரகிலார் சிலர்பிறப்

பின் மீண்டும் வீழ்ந்தார்—மையினுன் மூன்றலகாம் பணதி செய்து வருகிற்கும் போமாகி வளர்ந்து வாளா—பொய்யினுன் மிக விரியும் வேலையூடே பொருதிரையோற் பரபதத்தே புரிந்த மாயை." மற்றும் வருவனவற்ருற்காண்க. (கசு)

இங்ஙனஞ் சத்தப் பிரமாணத்தாலுங் காட்சிப் பிரமாணத்தாலும் இக்காயங்கிடைத்தற்கு அரிதென்று அறிவிக்க அறிந்து மனஞ் சம்மதிப்ப, இனித் திருவடியைத் தாமதம் பண்ணுமல் விரைந்து நினைத்தற்குமேற் கூறுகின்றது.

அகலு மிவ்வுடன் மினின்விரைந் தெனின்விரைந்
 தரற்ளுழீ தலதிங்கே
சகல முஞ்செய நினைகுத றனையினித்
 தடப்புன லிதுவென்றே
பகலி ஞல்விரி கானலை நெஞ்சமே
 கருதிநெற் பயிராதி
யிகலி ஞற்செய நினைபவர் நினைவையொத்
 திடுமென விடுவாயே.

அகலும் இவ்வுடல் மினின் விரைந் தெனின் விரைந்து அரற்ளுழ. எ-து. மேகத்தின்கண் தோன்றி நின்று அழியும் மின்னல்போல மாயையின்கண் தோன்றிக் கணகாலத்து அழியும் இந்த வுடலமென்றல் இஃது உள்ளபோதே அதிசீக்கிரமாகச் சிவனது திருவடியை வணங்குதி,—ஈதலது இங்கே சகலமும் செய நினைகுதறனே. எ-து. இத்திருவடியை இடைவிடாது வணங்குதலன்றிப் பொய்யாகிய பிரபஞ்சத்தை மெய்யாகக் கருதிக்கொண்டு இப்பிரபஞ்சத்துள்ள அறுவகைத்தொழிலையுஞ் செய்யத்தொடங்குவதை,—இனித் தடபுனலது எனவே பகலினுல் விரிகானலை நெஞ்சமே கருதி நெற்பயிர் ஆதி இகலினுற் செய நினைபவர் நினைவை ஒத்திடும் என விடுவாயே. எ-து. சூரியகிரணத்தாற் பொய்யாய் விரிகின்ற கானற்சலத்தை மெய்யான தடாகசலம் ஈதென்று கருதி நெற்பயிர்முதலிய பைங்கூழினைத் தமது சாமர்த்தியத்தால் உண்டாக்குதல்செய்ய அறியா

மையாற் கருதுவாரது கருத்தைப்போலும் என் கருத்துமெண அறிந்து நெஞ்சமே இனி விடுப்பாயாகவென்று விவேகங் கூறிற்று. எ - று.

சூரியகிரணத்தாற் பொய்யாய்த் தோன்றுங் கானற் சலம் போலச் சிவத்தை விட்டு நீங்காத அபின்னசத்தியாற் பின்னசத்தி பொய்யாய்த் தோன்றுதலின் இப்பின்னசத்தி காரியமாகிய பிரபஞ்சம் கானற்சலத்தி னிழல்போலப் பொய்யெனக் கூறப்பட்டது. கானற்சலத்தைப் பொய்யென்று அறிந்தவன் பைங்கூழ் செய்ய நினையாமைபோலப் பிரபஞ்சத்தைப் பொய்யென்று அறிந்தவன் இப்பிரபஞ்சத் தொழில்களின் முயலான். என்பது அறிக.

அகலுமிவ்வுடல் என்பதற்கு உதாரணம்: குறுந்திரட்டு. "காய நீர்க் குமிழி யதினுறு மின்பங் கானலிற் புனலிது தனக்கிங்—காயவித் துயரமளவிலை யிதைநீ யாய்வுறா மையிலழிந்தற்றாய்—நீயினிக் கவலை நினைவெலா மொழித்து நெஞ்சமே வந்தெனக் குடன்பட்——டாயநற் சொருபர்க் கன்பதே யிசைந்தா லரியதே தார்நமக் கெதிரே." பிரபஞ்சம் பொய்யென்பதற்கு உதாரணம்: திருவாசகம். "பூத்தாரும் பொய்கைப் புனலிதுவே யெனக்கருதிப்—பேய்த்தேர் முகக்குறும் பேதைகுண மாகாமே—தீர்த்தாய் திகழ்தில்லை யம்பலத்தே திருநடஞ்செய்—கூத்தாவுன் சேவடி கூடும் வண்ணந் தோணேக்கம்." மற்றும் வருவருவனவற்றாற்காண்க. (௧௭)

பிரபஞ்சம் பொய்யென்பதுந் திருவடி மெய்யென்பதும் இங்ஙனம் நீர் அறிவிக்க ஐயமின்றி நன்றுணர்ந்தேன் உமது கிருபையை என்னென்று உரைப்பேனென்று மனங்கூற, அதற்கு ஞானசமாதி கூடுதற்கு மனத்தை உடன்படுத்தி மேற்கூறுகின்றது.

வாய்மை யீதுணர்ந் திடுதிரன் னெஞ்சமே
வருகணத்தேதேனு

நீநி னைந்திடே லவ்வள வுட லுற
 னிச்சயிப் பரிதத்தாற்
போய தோர்கணச் செயலுனேல் பயனிலை
 புகனிகழ் கணத்தேனுந்
தீமை நன்மைநீ நினைவதென் வினைவழிச்
 சிவன்றரு குதலாலே.

வாய்மை ஈது உணர்ந்திடுதி நல் நெஞ்சமே. எ-து. யான் கூறிய நன்மார்க்க நெறியே சென்று எனக்கு நன்மை தருகின்ற நல்ல நெஞ்சமே உண்மையாகிய இதனையும் நீ அறிவாய்,—வருகணத்து ஏதேனும் நீ நினைந்திடேல் அவ்வளவு உடல் உறல் நிச்சயிப்பரிது அத்தால். எ-து. நீ ஞானநிட்டை கூடுமிடத்து ஒரு கணப்போதாயினும் அந்நிட்டையில் நீங்காது இருக்கவேண்டுமாகலின் வருங்காலங்களிற் கணப்போதாயினும் யாதொன்றனையுங் கருதிச் செல்லற்க. அக்கணப்போதளவும் இவ்வுடல் இருத்தற்கு நிச்சயம்பண்ணக்கூடாது. அதனால்,—போயதோர்கணச் செயல் உனேல் பயன் இலை. எ-து. சென்றகாலத்து ஒரு கணப்போதாயினும் இன்னது செய்யாது விடுத்தேன் என்று கருதற்க. அதனாற்பயன் ஒன்றுமில்லையென்று விவேகங்கூற, அதற்கு வருங்காலஞ் சென்றகாலங்களில் ஒன்றையும் நினையேலென்று கூறினீர். இஃதுண்மை. நிகழ்காலத்து அன்னபானாதிகளைக் குறித்தாயினும் நினைக்கலாகாதோவென்று மனங்கேட்ப,—புகல் நிகழ் கணத்தேனுந் தீமை நன்மை நீ நினைவது என் வினைவழிச் சிவன்றருகுதலாலே. எ-து. அதற்குச் சொல்லப்பட்ட நிகழ்காலத்திற் கணப்போதாயினும் நீ சுகதுக்கங்களை நினைவது என்னை நமது நல்வினை தீவினைகளின்படியே சிவன் அறிந்து சுகதுக்கங்களை நமக்கு அருந்துவித்தலால் என்று விவேகங் கூறிற்று. எ - று.

இதற்கு உதாரணம்: திருவள்ளுவநாயனார். "ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப—கோடியு மல்ல பல." என்றும் ஒளவையார் நல்வழி. "உண்பது நாழி யுடுப்பது நான்குமுழ—

மெண்பது கோடிவினைந் தெண்ணுவன - கண்புதைந்த—மாந் தர் குடிவாழ்க்கை மண்ணின் கலம்போலச்—சாந்துணையுஞ் சஞ் சலமே தான்.'' என்றும் மற்றும் வருவனவற்றாற் காண்க. (கஅ)

பிரிய விடயங்கள் வரவேண்டுமென்று கருதாது இருத் தற்கும் வந்த விடயங்களின்மேல் ஆசைசெல்லாது திருவடியை மறவாது இருத்தற்கும் மேல் உபாயங் கூறுகின்றது.

தருவ தீமையி னன்மையு மூழடுத்
 தவையுயர் கழைமேனின்
றுரைக ளாதிசெய் கூத்தரிற் பிறனைநச்
 சொருமக டவனேவல்
புரித றன்னினைம் பொறிகளாற் பற்றினும்
 புகனிரா சையைநீயுற்
றிரவி னும்பக லினும்விடே னெஞ்சமே
 யின்பவீ டெளிதாமே.

தருவ தீமையின் நன்மையும் ஊழ் அடுத்தவை. எ-து. உனக்கு வெறுப்பாகிய துன்பத்தை நீவிரும்பாதிருக்கவும் பழ வினைதானே கொடுப்பதுபோல் உனக்கு விருப்பமாகிய சுக த்தையும் நீ விரும்பாதிருக்க அவ்வினைதானே கொடுக்கும் உனக்கு எக்காலத்து எவ்வினைப்பயன் அனுபவிக்கப் பொருந் தியது அதனையாகலிற் பழவினைப்படியே வருமென்று அறிந்து எதிர்காலத்து ஒன்றையுங் கருதாது விடுத்து.—உயர்கழைமேல் நின்று உரைகள் ஆதிசெய் கூத்தரிற்பிறனைநச்சு ஒருமகள் தவன் ஏவல் புரிதறன்னின். எ-து. உயர்ந்த கம்பத்தின்கணின்று அர்ந்நிலக்குத் தவறு வாராது அதன்கட் கருத்தை வைத்துத் தியாகியைப் புகழ்தன் முதலிய நோக்கு வித்தைகளைப் பழக்கத் தாற் காயத்திற்காட்டுதல் செய்யுங் கூத்தரைப்போலவும், பர புருஷனை நச்சிய ஒருநாரி அவன்மேற் கருத்தை வைத்துத் தன் புருஷனுக்குப் பழக்கத்தால் இவனது ஏவற்றொழில்களைச் செய் தல்போலவும்,—ஐம்பொறிகளாற் பற்றினும் புகல் நிராசையை

நீ உற்று இரவினும் பகலினும் விடேல் நெஞ்சமே இன்ப வீடு எளிதாமே எ-து. ஐந்திந்திரியங்களினாலும் ஐந்து விஷயங்களைப் பிடித்தாலுஞ் சொல்லாநின்ற அவ்விஷயங்களை இன்பமென்று கருதி அவற்றின்கண் ஆசையுறாது திருவடிக்கண் ஆசையை வைத்து இதனை இராக்காலத்திலும் பகற்காலத்திலும் விட்டு நீங்காதே. யாவர்க்கும் அரிதாகிய வீட்டின்பம் உனக்கு எளிதில் உண்டாமென்று விவேகங் கூறிற்று. எ-று. தவன் புருஷன்.

இதற்கு உதாரணம்: பெருந்திரட்டு. "இல்லின்ப மிகழ்ந்து பேரின்பம் வேண்டி யெழிற்குரு வருடனின் மேலா—நல்லுணர் வதனைப் பெற்றோரே காந்த நண்ணியே சமாதியிற் றெடங்கி - யல்பக ஞெக்க னரவமாட் டிடுவோ னறைதரு பணிக்கன்மீ காமன்—வல்கரிப்பாகன் போலநோக் குவர்க்கு மனையின்மீட் டிச்சையு மெழுமோ." மற்றும் வருவனவற்றுற் காண்க. (௧௧)

எக்காலமும் இடைவிடாது திருவடியை மறவாதிருத்தல் பிரதானம் ஈதன்றி நிராசையுடனும் இருக்கவேண்டுமென்று கூறினீர் இது என்னை என்று மனங்கேட்ப, அதற்குமேற் கூறுகின்றது.

ஆமு னிச்சையே மேலுமே லும்பிறப்
 பளிக்கும்வித் தெனநெஞ்சே
நீம றித்திடா சைக்கடல் சுவறுமே
 நினைவெனுந் திரைமாயும்
போமி றந்தெலா நினைவுமெப் பொழுதிலப்
 பொழுதுபூ ரணமாய
சோம சேகரத் தெந்தைபொற் கழலையுந்
 தொழலைய யிலைநாமே.

ஆம் உன் இச்சையே மேலுமேலும் பிறப்பு அளிக்கும் வித்தென நெஞ்சே நீ மறித்திடு. எ-து. உனது அவாவே மேன்மே

னும் பலபிறப்பினை உண்டாக்கும் ஒரு வித்தென்று நெஞ்சமே நீ கருதி அந்த அவா மனத்தின்கண் முளைக்குந்தோறும் விவேகத்தாலே பார்த்துத் தடுக்குதல் செய்,—ஆசைக்கடல் சுவறுமே நினைவு எனும் திரை மாயும். எ-து, அங்ஙனஞ் செய்தியேற் கண்ட விடயங்களை இச்சிக்கும் ஆசையாகிய கடல் வற்றும். அக்கடல் வற்றவே பிறவிஷயங்களிற் செல்லு நினைவாகிய திரை நாசமாம்,—போம் இறந்து எலா நினைவும். எ-து. அந்நினைவெனுந்திரை நாசமாகவே முன்னர் இந்திரியங்களாற் கண்டு மனத்தின்கண் ஏறியிருந்த விஷயவாசனை நினைவெல்லாம் ஒருங்கே இறந்துபோகும்,—எப்பொழுதில் அப்பொழுது பூரணமாய சோமசேகரத்து எந்தைபொற் கழலையுந் தொழல் ஐயமிலை நாமே. எ-து. அந்நினைவெல்லாம் எப்பொழுது இறந்தது அப்பொழுது தானே சந்திரசூடனாகிய எமது தந்தையினது பரிபூரணமாகிய திருவடியையுந் தொழுதற்கு ஐயமின்றென்று விவேகங்கூறிற்று. எ - று. உடல்விட்டு உயிர் நீங்குங்கால் யாதோர் அவாத்தோன்றிற்று அவ்வவாவின் வழித்தாய்ச் சென்று உயிர் பிறத்தலின் அவாப் பிறப்பிற்கு வித்தெனப்பட்டது.

இதற்கு உதாரணம்: திருவள்ளுவநாயனார். "அவாவென்ப வெல்லா வுயிர்க்குமெய்ஞ் ஞான்றுந்—தவாஅப் பிறப்பீனும் வித்து." ஆசைக்கடல் சுவறுமே நினைவெனுந் திரைமாயும் என்பதற்கு உதாரணம்: ஞானவாசிட்டம். "இச்சையாம் விறகுமாண்டா லெண்ணமாம் வன்னிமாயு—நிச்சயந் தத்துவத்தினுக்கையா நெடுந்தே ரேறி—மெச்சிய வுதாரக் கண்ணால் வேட்கையான் மிகவும் வாடு—கொசசைஞா லத்தை நோக்கிக் குறைவற விருப்பாய்நீரா." மற்றும் வருவனவற்றுற் காண்க. ()

நினைவுகளியாவு மிறந்துபோக வேண்டுமென்ற கூறினீர் சிவபூசை முதலிய சற்கருமங்களாயினுஞ் செய்யவேண்டாவோ வென்று மனங்கேட்பு, அதற்குமேற் கூறுகின்றது.

நாம ரற்கருச் சனைமுத லியகொடு
நலஞ்செய்தே மவையின்றித்
தீமை செய்துளே மெனவுமுன் னிலையொரு
சிறிதசை வடைந்தாலும்
யாமி யற்றப ராதமென் னினைவுமற்
றசைகிலை யெனி னெஞ்சே
யேம மிக்குறச செய்புநன் கிறைகழற்
கெனத் துணிந் திடுநீயே.

நாம் அரற்கு அருச்சனை முதலிய கொடு நலஞ்செய்தேம் அவை இன்றித் தீமைசெய்தனேம் எனவும் உன்னிலை ஒரு சிறிது அசைவு அடைந்தாலும் யாம் இயற்று அபராதம். எ-து. யாம் இன்றைக்குச சிவனது திருவடிக்குத் திருமஞ்சன பத்திர புஷ்பங்களாற் செய்யும் அருச்சனை முதலிய உபசாரங்களைக் கொண்டு நன்மை செய்தேமெனவும் இன்றைக்கு அவை செய்குதல் இன்மையால் தீமைசெய்தே மெனவும் இங்ஙனங் கருதுதலைப்பற்றி உனது நிலை சிறிதோரசைவு பொருந்திற்றாயினும் அத்திருவடிக்குச் செய்யும் அபராதம் அதுவேயாமென்று விவேகங்கூற,—என். எ-து. அதற்குப் பூசைசெய்தேன் செய்கின்றிலேனென்னு நினைவு சிவனுக்கு அபராதஞ் செய்தல் என்னையென்று மனங்கேட்ப, அதற்கு ஈதென்று சுட்டியறியக்கூடாத சிவத்தைச் சுட்டியறிதலே அபராதஞ் செய்தல் என்று விவேகங் கூற, அதற்கு அங்ஙனஞ் சுட்டாமற் சிவத்தையறிதற்கு உபாயம் எங்ஙனமென்று மனங்கேட்ப,—நினைவும் அற்று அசைகிலை எனின் நெஞ்சே ஏமம் மிக்குறசசெய்யும் நன்கிறைகழற்கு எனத் துணிந்திடு நீயே. எ-து. அதற்கு ஓரணுவளவாயினும் ஒன்றைச் சுட்டி யெழுந்து அசையாது நிற்றியெனின் இதுவே திருவடிக்கு இன்பமிகுந் துறச்செய்யும் பூசையென நீ நெஞ்சமே நிச்சயித்து அறிதியென்று விவேகங்கூறிற்று. எ - று. தானுமுருவமாயிருந்துகொண்டு சிவனையும் ஒருருவாகக்கண்டு அருச்சனை பண்ணுதல் கற்பனையாகலின் இது அபராதமென்றும் தான்

அறிவாய்நின்று அறிவிற்கு அறிவாகிய சிவத்தின்கண் அசைவறநிற்றல் உண்மையாகலின் இதுவே பூசையென்றுங் கூறப்பட்டன.

இதற்கு உதாரணம்: ஆனந்தத்திரட்டு. "எப்பொருள்களுந்தா னாகி யிலங்கிடப் பவொனீச —னப்படி விளங்குகின்ற தறிதலே பரன்றனக்கு—மெய்ப்படு பூசை வேறோர் செயலினாலன்று மெய்யே—யிப்படி ஞானந் தன்னா லிறைஞ்சிடப் பவொனீசன்." மற்றும் வருவனவற்றுற் காண்க. (உக)

இங்ஙனம் அசைவற நிற்றல் எனக்குக் கூடாது சிவன் இங்ஙன மிருப்பானென்று தியானஞ்செய்கின்றேன் என்று கூறிய மனத்தைப் பார்த்து மேற்கூறுகின்றது.

நீமெய்ஞ் ஞானநன் னிட்டைசா ருதலரி
 தெனவுநெஞ் சகமேசற்
றோய்வி லாதுசெய் தியானமா திகளெளி
 தெனவுமுன் னாநின்றாய்
சேய்க டம்மினத் தாய்கொல்சும் மாவிருக்
 குதல்செயற் கரிதாகிப்
போயு ழைப்புனக் கெளியதா யிருந்தவிப்
 புதுமையென் புகனின்றே.

நீ மெய்ஞ் ஞானநல் நிட்டைசாருதல் அரிது எனவும் நெஞ்சகம் ஏசற்று ஓய்வு இலாதுசெய் தியானம் ஆதிகள் எளிது எனவும் உன்னா நின்றாய். எ-து. நெஞ்சமே நீ அதுவென்றும் இதுவென்றும் ஒன்றனையுஞ்சுட்டி நினையாது சும்மாவிருக்கின்ற உண்மை ஞானமாகிய நல்ல நிஷ்டைகூடுதல் அரியதெனவும் ஓரணுவளவாயினும் நினைவு ஒழியாது செய்யாநின்ற தியான செப சிவபூசை முதலிய செய்குதல் எளியதெனவும் கருதாநின்றனை,—சேய்க டம்மினத்தாய் கொல். எ-து. ஆகலின் அன்னை நீராட்டல் முதலிய உபசாரங்களைச் செய்து மலரணையில் இருத்தவும் அவ்விடத்திற் சுகத்திற் சும்மாவிராது புறத்து எழுந்து

ஓடி வருந்தஞ் சிறுபிள்ளைகளது கூட்டத்தினை யுடையையோ நீயும்,—சும்மாவிருக்குதல் செயற்கு அரிதாகிப் போய் உழைப்பு உனக்கு [1]எளிதாயிருந்த இப்புதுமை என்புகல் நின்றே. எ-து. தியானமாதிகளை மனமொழி மெய்களினுற் செய்யாது சும்மாவிருநீயென்று யான்கூற அங்ஙனம் இருக்குதல் செய்தற்கு அரிதாய் அவற்றைச் செய்குவலென்று சென்று வருந்தும் வருத்தம் உனக்கு எளியதாயிருந்த இப்புதுமையென்னையோ யாவர்க்குஞ் சும்மாவிருத்தல் எளிது ஓடித்திரிதல் அரிது அவர்களுக்கு அங்ஙனமிருப்ப உனக்கு இங்ஙனம் இருந்த இதனை நீ நின்று எனக்குச் சொல்லுகவென்று விவேகங் கூறிற்று. எ - று. மனமாதி மூக்கரணங்களும் அசையாது நின்றவிடம் மெய்ஞ்ஞான நிஷ்டையென்பதும், அவை யசைந்து செய்யுந் தியானசமாதிகள் அந்நிஷ்டை வருதற்கு ஏதுவென்பதும் அறிக.

மெய்ஞ்ஞான நிஷ்டை யென்பதற்கு உதாரணம்: கந்தரனுபூதி. "செம்மான் மகளைத் திருடுந் திருடன் — பெம்மான் முருகன் பிறவா னிறவான்—சும்மா விருசொல் லறவென் றலுமே—யம்மா பொருளொன்று மறிந்திலனே." செய்கடம்பினைத்தாய் கொல் என்பதற்கு உதாரணம்: ஞானவாசிட்டம். "மிக முயன்று வருந்தாமற் சமமாக நின்ற வேண்டுகோ ளான் முயல்வால் விஞ்ஞைதந் தன்னுற்—பகர்மனமாஞ் சிறுமகவை நிறுத்தல் வேண்டும் பலபிறப்பிற் பரிசயங்க ளகலப்பண்ணி—யகல்சுபவாதனையுதித்தான் முத்திப்பேறு மையுறினுஞ் சுகமடைவை யதுநிதன்று —திகழ்மனம்போய்த் தற்பதத்தைத் தெளியு மட்டுந் தேசிகனுல் சொல்வழியிற் செல்லுவாயே." மற்றும் வருவனவற்றூற்காண்க. (உஉ)

அசைவறநிற்றல் நேரே வீட்டை அடைதற்கு ஏதுவாகலின் அதனையே இன்னும் வற்புறுத்தி மேற்கூறுகின்றது.

நின்று ழுதலை குதல்விருப் புனக்கதை
நீத்திருக் குதனெஞ்சே

யென்றனக்குநல் விருப்புவா ளாவிவ
ணிருத்தறீ துயர்வீடு
சென்று காண்குவ லெனநினைந் தலைதியோ
சிவன்றிரி சயமன்றா
லொன்று நீயுன் றிருப்பதே யதைத்தொடர்
றுபாயமென் றறிகண்டாய்

நின்றாறு அலைகுதல் விருப்பு உனக்கு அதை நீத்திருக்குதல் நெஞ்சே என்றனக்கு நல் விருப்பு. எ-று. அசைவற நில்லாது தியானமாதிகளைக் கருதி அசைகுதல் உனக்கு நல்விருப்பம்; அவ்வசைவைவிட்டுச் சும்மா விருக்குதல் நெஞ்சமே எனக்கு நல்விருப்பமென்று விவேகங்கூற, அதற்கு இங்ஙனஞ் சும்மாவிருந்தால் எங்ஙனம் வீடு அடைகுதுமென்று மனங்கேட்ப,—வாளா இவண் இருத்தல் தீது உயர்வீடு சென்று காண்குவல் என நினைந்து அலைதியோ. எ-று. சும்மாவிவ்விடத்தில் இருக்குதல் குற்றம் மேலாகிய வீட்டினைத் தியானமுதலிய நன்மார்க்கத்திற்சென்று அறிவேனென்றுகருதி அலைகின்றனையோ நீயென்று விவேகங்கேட்ப, அதற்கு யான் அங்ஙனந் தான் கருதுகின்றேனென்று மனங்கூற, அதற்கு நம்மிருவர்க்கும் வீட்டை அடைகுவதே கருத்தாகலின் நீ செல்லு நெறியால் அதனை அடையலாமெனின் நீ கூறியவாறு யான்கேட்கின்றேன. யான் செல்லுநெறியால் அதனை அடையலாமெனின் யான் கூறியவாறு நீ கேட்குதியாவென்று விவேகங்கூற, அதற்கு நன்றுகூறினீரென்று மனஞ்சம்மதிப்ப,—சிவன் திரிசயம் அன்றால். எ-று அதற்கு நீ கருதிய தியானாதிகளால் வீட்டினை அடையலாமெனின் அவ்வீடு மனாதிகளால் அறியுங்காட்சிப் பொருள் அன்றென்று விவேகங்கூற, அதற்கு நீர் இங்ஙனங் கூறியவற்றால் எனது உபாயத்தால் அதனை அடைதற்கு அரிது அதனை அடைதற்கு எனக்கு ஒருபாயம் நீர் கூறுகவென்று மனங்கேட்ப,—ஒன்றும் நீ உன்றிருப்பதே அதைத்தொடர் உபாயம் என்று அறிகண்டாய். எ-று. அதற்கு அணுவளவே

னும் ஒன்றையும் நினையாது அசைவற விருத்தலே அவ்வீட்டை அடைதற்கு நேரே உபாயமாமென்று அறிவாயாகவென்று விவேகங்கூறிற்று. எ - று. சிவமென்பது-வீடு.

இதற்கு உதாரணம்: ஆனந்தத்திரட்டு. "வாங்கி யைம்பொறி நின்ற மனந்தனை — நீங்கி டாவகை நெஞ்சு ளிருத்தியே — தீங்கி யாவையுஞ் சிந்தை செயா வணம் — பாங்கி யாதது வேபயில் வாயரோ." என்றும், தேவிகாலோத்தரம். "மந்திரஞ் செபந்தி யானம் பூசனை வணக்கம் வேண்டா — வந்த மிலாத முத்திக் குபாயமே யறியல் வேண்டுஞ் — சிந்தனை புறனே செல்லிற் றுயரமே திரிய மீட்கிற் — பந்தமாந் துன்ப நீங்கிப் பரமான வின்பஞ் சேர்வார்." என்றும் மற்றும் வருவன வற்றாற் காண்க. (௨௩)

வீட்டை அடைதற்கு உபாயம் அசைவறநிற்றலென்று கூறினீர் இனி அசைவறநிற்றற்கு உபாயமும் அங்ஙனநின்றால் வீடு வருமாறும் எங்ஙனமென்று மனங்கேட்ப மேற்கூறுகின்றது.

கண்ட வைம்புலக் காட்சிபோய்க் காட்சியாற்
 கலந்தவா தனையாவும்
விண்டு மூடமற் றலையிலாக் கடலென
 விளங்கினை யெனினெஞ்சே
யுண்டு கொன்னமக் கொருதுய ராங்குவீ
 டுளங்கையிற் கனியேயாம்
பண்டை மேவிய பயமெலா மறுங்குரு
 பதத்திலும் புகலாமே.

கண்ட ஐம்புலக் காட்சிபோய்க் காட்சியாற் கலந்த வாதனை யாவும் விண்டு மூடு அற்று அலை இலாக் கடலென விளங்கினை எனின் நெஞ்சே. எ-து. ஐம்பொறிகளாற் காணப்பட்ட சத்தாதி விஷயக் காட்சிகளும் போய் அவ்விஷயக்காட்சியாற் காணத்தில் ஏறியிருந்தவாசனைகள் அனைத்தும் விட்டுநீங்கி இவ்வாசனை முடிவில் தோன்று மறைப்பும் அற்று நிர்த்தரங்கசமுத்

திரம்போல விளங்காநின்றனை யானல் நெஞ்சமே,—உண்டு கொல் நமக்கு ஒரு துயர் ஆங்கு வீடு உளங்கையிற் கனியே யாம். எ-து. பிறவித்துன்பங்களுள் ஒருதுன்பமாயினும் நமக்கு உண்டாமோ அவ்விடத்து வீடு உள்ளங்கை நெல்லிப்பழம் போல் வுண்டாம்,—பண்டைமேவிய பயம் எலாம் அறும் குரு பதத்திலும் புகலாமே. எ-து. முன்னர்ப்பொருந்தியிருந்த பிற வித்துன்பத்திற்குப் பயந்த பயமனைத்தும் நீங்கும் குருதுரியத் தையும் யாம் அடையலாமென்று விவேகங்கூறிற்று. எ - று. கேவல சகலங்களினன்றிச் சுத்தநிலையில் துன்பம் இன்மையால் ஒரு துயருண்டுகொன்னமக்கென்றும், அச்சுத்தநிலை பெற் றோர் குருதுரியமும் அடைவராகலிற் குருபதத்திலும் புகலாமே யென்றுங் கூறப்பட்டன.

இதற்கு உதாரணம்:—சிவஞானபோதம். "வினைவிற் பாத் தையறி வுறுதற் கவத்தைபுலன் வினைமாறியே—நனவிற் சுழுத் திநிலை வரினப் பொருட்டிகழு நலனுகவே." மற்றும் வருவன வற்றுற் காண்க. (உ௪)

அசைவற நிற்றற்கு உபாயம் ஐம்புலக் காட்சியுங் கரண வாசனையும் மறைப்பும் நீங்குதலென்று கூறினீர். அக்கரண வாசனையும் மறைப்பும் நீங்குதற்கு முன்னர் ஐம்புலக்காட்சி நீங்கவேண்டுமாகலின் இக்காட்சி நீங்குதற்கு உபாயம் எங்ஙன மென்று மனங்கேட்ப மேற்கூறுகின்றது.

புகலரும்பரப் பிரமமாங் கடறனிற்
  புணர்பரைத் திரையீசன்
சகமொ டாருயி ரோனு நுரை யாதிக
  டந்துமாற் றிடுமென்றே
பகரு நான்மறை யெனினதி லெதையெதைப்
  பற்றுவாம் விலகிற்பாஞ்
சுகசொ ரூபமே யனைத்துமென் றகற்றுதி
  துவிதபா வனைநெஞ்சே.

புகலரும் பரப் பிரமமாம் கடறனிற் புணர்பரைத் திரை ஈசன் சகமொடு ஆருயிர் எனும் நுரை ஆதிகள் தந்து மாற்றிடும் என்றே பகரும் நான்மறை எனின். எ-து. வாக்கு மனோதீதமா யிருக்கின்ற பரப்பிரமமாகிய கடலின்கண் விட்டு நீங்காத பரையாகிய திரையானது ஈசுரனும் நாதத்தத்துவமுதற் பிருதிவிதத்துவம் ஈறாகியசகங்களுஞ் சராசரங்களாயுள்ள உயிர்களுமென்று சொல்லப்பட்ட நுரைதிவலை குமிழிகளைத் தோன்றச்செய்து ஒடுக்குமென்று நான்கு வேதங்களுஞ் சொல்லுமெனின்,—அதில் எதையெதைப் பற்றுவாம் விடுகிற்பாம். எ-து. அக்கடற்றிரையில் தோன்றிய இப்பிரபஞ்சத்திலுள் எதனையெமதென்றுபிடிப்பம். எதனை எமது அன்றென்று விடுப்பம். இங்ஙனம் பற்றுதற்கும் விடுப்பதற்கும் அப்பிரமத்தைவிட வேறின்மையால்,—சுகசொரூபமே அனைத்தும் என்று அகற்றுதி துவிதபாவனை நெஞ்சே. எ-து. எல்லாவற்றையும் ஆனந்தசொரூபமென்று இந்நிச்சயஞானத்தால் நெஞ்சமே அது இதுவென்று பகுக்குந் துவிதபாவனையை நீக்குதியென்று விவேகங் கூறிற்று. எ - று.

பிரமத்திற்கு அபின்னமாயிருக்கின்ற பரையசைவான மாயையிற் பிரபஞ்சந் தோன்றியொடுங்குதலின் அப்பரைதிரையென்று கூறப்பட்டது. உவிரென்பது தானியாகுபெயர். ஆகமநெறி கூறி வேதநெறி கூறுதன் மற்றொன்று விரித்தலென்னுங் குற்றமாகாதோவெனின் இந்நூல் சமரச நெறியாகலானும் ஆகமத்திற் சோகம்பாவனை கூறலானுங் குற்றமாகாதென்பது அறிக.

இதற்கு உதாரணம்: திருவம்மானை. "பார்த்தவிட மெல்லாம் பரமன்கா ணம்மானை—பாராம விந்நாளும் பாழ்பட்டேனம்மானை." என்றும், சிவானந்தமாலை. "எங்குஞ் சிவமொழிய வில்லையவன் றன்னுணை—யங்கந் திரள்கருவி யாணவமாம் - பொங்குமிருண்—மைசெய்த மாமாயை மாயைவினை

மற்றனைத்தும்—பொய்பொய்பொய்பொய்பொய்பொய்பொய்."
என்றும் மற்றும் வருவனவற்றுற் காண்க. (உ௯)

ஐம்புலக்காட்சி நீங்குதற்கு உபாயங் கூறினீர். இனி நினைப்பும் மறப்பும் அற்றுச்சமநிலையினிற்றற்கு நானுவுபாயமும் நீர் கூறல்வேண்டுமென்று மனங்கேட்ப அதற்கு மேற்கூறுகின்றது.

நெஞ்ச மேயினிப் பாவனு தீதமாய்
நின்றிடின் றெனினிற்பா
யெஞ்சு ருதகல் புரணபா வனையையோர்ந்
திலையெனி னுலகெல்லா
மஞ்ச னக்களன் மேனியென் றோர்ந்திலை
யெனினருள் சுரந்தெம்பால்
வஞ்ச மற்றிடும் படிக்கிவ ணடைந்ததோர்
வடிவையோர்ந் துய்வாயே.

நெஞ்சமே இனிப் பாவனுதீதமாய் நின்றிடு. எ-து. நெஞ்சமே இனி ஒன்றையும் சுட்டிப் பாவியாது பாவனுதீதமாகி நிற்குதலைச்செய்,—இன்றெனின் நிற்பாய் எஞ்சுருது அகல் புரண பாவனையை ஓர்ந்து. எ-து. நிற்றற்கு அங்ஙனம் வலியில்லையெனின் அணுதிரணகாஷ்ட முதலியவற்றினுங் குறைவுபடாது விரிந்த பரிபூரண பாவனையாயினுங் கருதிநிற்பாய்,—இலை யெனின் உலகெல்லாம் அஞ்சனக் களன் மேனியென்று ஓர்ந்து. எ-து. அஃதும் இன்றெனின் சடசித்தாய் விளங்காநின்ற இப்பிரபஞ்சமெல்லாம் காளகண்டத்தினையுடைய சிவனது அஷ்டமூர்த்தமென்று ஏகபாவனை பண்ணிநிற்றி, — இலையெனின் அருள் சுரந்து எம்பால் வஞ்சம் அற்றிடும் படிக்கு இவண் அடைந்ததோர்வடிவை ஓர்ந்து உய்வாயே. எ-து. அஃதும் இன்றெனின் அச்சிவன் தானே கிருபைநிரம்பி எம்மிடத்துள்ள மும்மலங்களும் அறும்படிக்கு இந்நிலத்தின்கண் மானுடச்சட்டைசாத்தி எழுந்தருளிவந்த ஒப்பற்ற குருமூர்த்தத்தை இடைவிடாது தியானித்து நிற்றி; பிழைப்பையென்று விவேகங்கூறி

ற்று. எ - று. நிற்பாயென்றதனை மற்றிரண்டிடத்திலுங் கூட்டிக்கொள்க. உய்வா யென்பதனைக் கடைநிலைத் தீபகமாகக் கொண்டு எல்லாவற்றோடுங் கூட்டுக. தன்னைக்காட்டாது உயிரைமறைத்து நின்று வஞ்சித்தலின் ஆணவம் வஞ்சம் எனப்பட்டது.

பாவனாதீதமாய் என்பதற்கு உதாரணம்: ஞானவாசிட்டம். "அறிவெனும் விதைசங் கற்பமா முளையா மனையசங் கற்பமாந் தன்னைப் —பிறிவுறத் தானே செய்துதான் பிறக்கும் பெரிதுற வளர்ந்திடுந் தானே—செறிதுய ரொழிய வின்பமொன்றில்லை யாதலாற் செப்புசங் கற்ப—நெறியுற நினையே னிற்புறு நிலையி னிமிடமும் பாவனை நினையேல்." பூரணபாவனை யென்பதற்கு உதாரணம்: குறுந்திரட்டு. "அண்டமெண் டிக்கெங் கண்ணு மடங்கசூ னியமதாகக்—கண்டுகொண் டிருக்கக் கண்ட கருத்தைய மறவேவிட்டா—லண்டமெண் டிக்கெங் கண்ணு மாய்நின்ற வானந் தத்தைக்—கண்டுகொண் டிருக்கும் வண்ணங் கணத்தில்வந் துதிக்குமன்றே." உலகெல்லா மஞ்சனக் களன்மேனி யென்பதற்கு உதாரணம்: திருவாசகம். "நிலநீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப் பகலோன்—புலனாய மைந்தனோடெண் வகையாய்ப் புணர்ந்து நின்றான்—உலகே ழெனத்திசைபத் தெனத்தா னொருவனுமே—பலவாகி நின்றவா தோணோக்க மாடாமோ." வஞ்சமற் றிடும்படிக்கிவ னடைந்ததோர் வடிவையோர்ந்து என்பதற்கு உதாரணம்: தத்துவராயர். "உள்ளதிருந்து மொளித்தான் பரன்குரவன்—கள்ளந் தனைத்தவிர்த்துக் காட்டினான் - வள்ள—லருவான கோலமோ வக்கோலங் காட்டுங்—குருவான கோலமோ கூறு." மற்றும் வருவனவற்றுற் காண்க. (௨௬)

உன்னுகின்றனை யென்னும் பாட்டுமுதலிய பதினெண் பாட்டாலும் ஞானத்திற்கு விலக்காயுள்ள தூர்க்குணங்களெல்லாம் விடுவித்து மெய்ஞ்ஞானங்கூறி நிஷ்டை கூட்டி மேல் ஞானாசாரங் கூறுகின்றது.

உய்து நெஞ்சமே வாக்கினை மௌனமாக்
 கிலையெனி னுளதேசொன்
மெய்த ருஞ்சொலும் பொய்நயம் பயக்கிலா
 விடத்தின துடைத்தேனும்
பொய்த ருஞ்சொலி யான்செய்தேன் பிறர்செய்தா
 ரெனினவை போனுலு
மெய்த ருஞ்சிவ மனநிதென் றுன்னைநீ
 யிசைத்தல்பொய் யெனத்தேரே.

உய்தும் நெஞ்சமே வாக்கினை மௌனம் ஆக்கு. எ-து, நெஞ்சமே ஞானநிஷ்டையை இடைவிடாது கூடி அஞ்ஞானத்தின் வசப்படாது திருவடியை அடைந்து யாம்பிழைப்போம் நீ ஒருவரையும் கூறுது வாக்கினை மௌனம் பண்ணுதல் செய்,-இலை எனின் உளதே சொல். எ-து. அஃது இன்றெனினும் விநோதத்தாலாயினும் ஒரு பொய்மையுங் கூறுது உண்மையே சொல்லுக,—மெய்தருஞ் சொலும் பொய். எ-து. அங்ஙனம மெய்மையாயுள்ள சொல்லும் பொய்மையென்று விவேகங்கூற, அதற்கு விநோதத்தாலாயினும் ஒரு பொய்மையுங் கூறற்கவென்று முன்னர்க்கூறினீர். இப்போது அம்மெய்மை கூறலும் பொய்மையென்றீர். இது என்னையென்று மனங்கேட்ப,—நயம் பயக்கிலா விடத்தின். எ-து. அதற்கு அம்மெய்ம்மையாற் சிவகருணையாய நன்மை உண்டாகாத விடத்து அது பொய்மையாமென்று விவேகங்கூற, அதற்கு அது உண்மையென்று மனஞ்சம்மதிப்ப,—அது உடைத்தேனும் பொய்தருஞ் சொல். எ-து. அதற்குச் சிவகருணையைக் குறித்துப் பொய்மைபோன்ற மெய்மை கூறுவது உளதாயினும் அம்மெய்மையும் பொய்மையுடைய சொல்லென்று விவேகங்கூற, அதற்கு முன்னே மெய்மை கூறினுஞ் சிவகருணை யின்றியவிடத்துப் பொய்மை யென்றீர்; இப்போது பொய்மைபோன்ற மெய்மை கூறுவது உளதாயினும் இஃதும் பொய்மையென்றீர்; இது என்னையென்று மனக்

கேட்ப,—யான் செய்தேன் பிறர் செய்தார் எனின். எ-து. அத ற்கு இருவினைக் கீடாகத் திருவுள நடத்துதலை மறந்து உன்னால் ஓருயிர்காக்கப்பட்ட விடத்து அதனைப் பிறர்கொலைசெய்ய வந் தார் யான் காத்தேனென்று இங்ஙனம் யான்செய்தேன் பிறர் செய்தாரென்று சொல்லுவாயெனினென்று விவேகங்கூற, அத ற்கு இதுவும் உண்மையென்று மனஞ்சம்மதிப்ப,—அவைபோ லும் மெய்தரும் சிவம் அன்று இது என்று ஒன்றை நீ இசைத் தல்பொய் எனத் தேரே. எ-து. நீ யான்செய்தேன் பிறர்செய் தார் என்று சொல்லும் இப்பொய்மைகள் சொல்லாதொழியி னும் பெறுதற்கரிய சிவமன்று ஈதென்று ஓராலுதிரணங்களையா யினும் வேறுபிரித்துச் சொல்லுதலும் பொய்மையென அறிதி யென்று விவேகங்கூறிற்று. எ - று. மெய்மைகூறுதல் - பாச வைராக்கியம். சீவர்களைப் பாதுகாத்தற்பொருட்டுப் பொய்மை கூறல் - சீவகருணை. யான் செய்தேன் பிறர்செய்தாரென்று சொல்லாதொழிதல் - ஈசுரபத்தி. எல்லாஞ் சிவமெனச் சொல்லு தல் - பிரமஞானம். ஆகிய விந்நான்கும் இதனுட் காண்க.

வாக்கினை மௌனமாக்கு என்பதற்கு உதாரணம்: திருவ ள்ளுவநாயனார். "யாகாவாராயினு நாகாக்க காவாக்காற், சோகா ப்பர் சொல்லிழுக்குப் பட்டு." உளதே சொல்லென்பதற்கு உதாரணம்: ஷை "புறந்தூய்மை நீரா னமையு மகந்தூய்மை, வாய்மையாற் காணப்படும்." மெய்தருஞ்சொலும் பொய்மை யென்பதற்கு உதாரணம்: ஷை "பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த, நன்மை பயக்கு மெனின்." யான்செய்தேன் பிறர் செய்தார் என்பதற்கு உதாரணம்: சிவஞானதீபம். "விரும்பு ற்ற தவம் விரதஞ் சீலமெல்லா மேல்வினையென் றறிந்தெவை யும் விமலன் கூத்தென்—றிரும்புற்ற மனமழலின் மெழுகாயெ ன்று மியான்செய்தேன் பிறர்செய்தாரெனுங்கோ ணீக்கி—யரு ம்புற்றங் கெண்ணுதியா னென்னும் பாசத் தவாமருவும் புறப் பற்றோ டகப்பற்றுன — பெரும்பற்றை யகன்றருளைப் பெறு

யோர் ஞானப் பெருப்பற்றப் புலியூரைப் பிரியார் தாமே." எய்தருஞ்சிவ மன்றிதென் ெறன்றை நீ யென்பதற்கு உதாரணம்: ...ாக்கம். "விருப்பு வெறுப் பென்று வேறுபொருள் ...—புறப்பிற்குறையாதோ·வுணர்வுடையோர் சொல்லுவரோ." மற்றும் வருவனவற்றாற் காண்க. இப்பாட்டான் வாக்காற்றீமை யடையாது அடக்குதற்கு உபாயங் கூறியவாறு காண்க. (உஎ)

தேரி னிவ்வுடல் சமாதியி லசைவறச்
  சித்திர தீபம்போற்
சார ளைவத்திடஃ தில்லையேற் குருபரன்
  றனதரும் பணிமேற்கொண்
ணேரு மூழ்வழி தொழில்பிறி தடையினு
  நெஞ்சமே யுயிர்க்கெல்லாம்
பேரி தஞ்செய்வித் திடுமுடை கெழுமலப்
  பிணக்கிதஞ் செய்யேலே.

தேரின் இவ்வுடல் சமாதியில் அசைவறச் சித்திர தீபம் போல் சாரவைத்திடு. எ-து. செய்தொழிலை விசாரிக்குமிடத்து இவ்வுடம்பினைச் சித்திரத்தில் எழுதிவைக்கப்பட்ட தீபம்போல ஞானசமாதியில் அசைவின்றி ஆதனங்கட்டி யிலக்கணத்தோடும் பொருந்தவைக்குதலைச்செய்,-அஃதில்லையேல் குருபரன் றனது அரும்பணி மேற்கொள். எ-து. அஃது இன்றாயிற் குருவாகிய ஞானபரனது அரியவேவற் பணிவிடைகளைச் சிரசில் வகித்துக் கொள்ளுதி,—நேரும் ஊழ்வழி தொழில் பிறிது அடையினும் நெஞ்சமே உயிர்க்கெல்லாம் பேர் இதஞ்செய்வித்திடு. எ-து. அஃதின்றி வந்து பொருந்துகின்ற பழவினைப்படியே உனக்கு இன்றியமையாத வேறு சற்கருமங்களைச் செய்தி யெனினும் நெஞ்சமே அக்கருமங்களாற் கொலைவாராது சராசரமாயுள்ள உயிர்களுக்கெல்லாம் பெரிதாய இனிமையை இவ்வுடம்பாற் செய்விக்குதலைச்செய்,—முடைகெழு மலப் பிணக்கு இதம்

செய்யேலே. எ-து. அங்ஙனம் செய்தலன்றி முடைநாற்றம் பொருந்திய மலங்கள் நிறைந்துள்ள இவ்வுடம்பாகிய பிணத்திற்கு இனிமை செய்யற்க நீ யென்று விவேகங்கூறிற்று. எ - று. ஏவற்பணிவிடையைச் சிரசிற்கொள்ளுதல் பணிவிடை அருமை தோன்றக் கூறியது. உயிர்க்கெல்லாமென்ற பொதுமையால் அசரவுயிருஞ் சொல்லப்பட்டது. சமாதியில் அசைவற விருக்குதல் - பிரமஞானம். குருபரன் பணிசெய்தல் - ஈசுரபத்தி. சீவர்களுக்கு இதஞ்செய்வித்தல் - சீவகருணை. உடம்பிற்கு இதஞ்செய்யாதொழிதல்-பாசவைராக்கியம். ஆகிய இந்நான்கும் இதனுட்காண்க.

இவ்வுடல் சமாதியிலசைவற என்பதற்கு உதாரணம்: தத்துவராயர். "செவ்வே யுடலுஞ் சிரமுங் கழுத்துமுற—வெவ்வா தனத்திலிருந்தவர்க்கும் - கைவந்தால்—வாத முதனோய்நலியா மதியுடையோ — ராதன மென்ப தது." குருபரன்றனதரும் பணிசெய் என்பதற்கு உதாரணம்: ஒழிவிலொடுக்கம். "உடற்குயிர்போற் கட்கிமைபோ லூசிநூ லொத்து—விடிற்புலிதீ பாம்பினில் வீழ்வார்க்காஞ் - சுடர்ச்சுடினும்—வாழைக்கா காவேதிமட்கலத்துக் காகாவா—றேழைக் காகாத திது." உயிர்க்கெலாம் பேரிதஞ்செய் என்பதற்கு உதாரணம்: திருவள்ளுவநாயனார். "அறிவினா னாகுவ துண்டோ பிறிதினோய்—தந்நோய்போற் போற்றாக் கடை." முடைகெழுமலப் பிணக்கிதஞ் செய்யேல் என்பதற்கு உதாரணம்: திருவாசகம். பொத்தை யூன்சுவர் புழுப்பொதிந் துளுத்தசும் பொழுகிய பொய்க்கூரை—யித்தை மெய்யெனக் கருதிநின் றிடர்க்கடற் சுழித்தலைப் படுவேனை—முத்து மாமணி மாணிக்க வைரத்த பவளத்தின் முழுச்சோதி—யத்த னாண்டுதன் னடியரிற் கூட்டிய வதிசயங் கண்டாமே." மற்றும் வருவனவற்றாற் காண்க. (உஅ)

செய்யு நற்றொழி லைந்தொழி லியாமுமச்
சிவனது வடிவென்றே

ஐயய மற்றுணர் ராதியா னெனுஞ்செருக்
 கடைந்துநா டொறுநெஞ்சே
நைவ தென்னைநீ பஞ்சகோ சங்களு
 நாமல வெனுவுண்மை
கையி லாமல கம்மென வுனக்கியான்
 கழறியுந் தெளியாயே.

செய்யும் நந்தொழில் ஐந்தொழில் எ-து. செய்யாநின்ற நமது தொழில்களியாவும் சிவனது சிருஷ்டி முதலியவைந்து தொழில்களேயாமென்று விவேககூற, அதற்கியாஞ் செய்யுந் தொழில்கள் அவன்செய்யுந் தொழில்கள் எங்ஙனமாமென்று மனங்கேட்ப், — யாமும் அச் சிவனது வடிவு என்றே ஐயம் அற்று உணராது யானெனும் செருக்கு அடைந்து நாடொறும் நெஞ்சே நைவது என்னை நீ. எ-து. அதற்குச் சிவனது அஷ்ட மூர்த்தத்தில் யாம் ஒன்றுகலின் யாமும் அச்சிவனது அங்கந் தானே யென்று ஐயந்திரிவுகளின்றி நிச்சயம் பண்ணிக்கொள்ளாது அச்சிவனைவிட வேறியானென்று உணரு மயக்கத்தை அடைந்து எப்போதும் நெஞ்சமே நீ மெலிவது என்னை,—பஞ்சகோசங்களும் நாமல எனு உண்மை கையில் ஆமலகம் என உனக்குயான் கழறியும் தெளியாயே. எ-து. மாயா காரியமாகிய அன்னமயமுதல் ஆனந்தமயம் ஈறாகச் சொல்லப்பட்ட பஞ்சகோசங்களும் இவற்றைக்கடந்திருந்த அறிவாகிய யாம் அன்றென்று உண்மையாகிய உபதேசமொழிகளால் உள்ளங்கை நெல்லிப்பழம்போலப் பிரத்தியக்ஷமாக உனக்கு யான் தெளியக்கூறியுந் தெளிந்திலாய்; இது என்னையென்று விவேகங்கூறிற்று. எ-று. உயிர் சிவனது வடிவாகலின் இதனது தொழிலுஞ் சிவனது தொழிலென்பது அறிக. பஞ்சகோசங்களாவன அன்னமயகோசம் பிராணமயகோசம் மனோமயகோசம் விஞ்ஞானமயகோசம் ஆனந்தமயகோசம் என்பனவையாமெனக்கொள்க. உண்மையென்பது உண்மையாகக்கூறிய வுபதேச மொழிகண் மேனின்றது.

இதற்கு உதாரணம். அறிவானந்தசித்தியார். "அன்ன மயங்கொண் டெடுத்த வுடல்களு மாயிழையும்—பின்ன முடன்வரு பிள்ளையுஞ் சுற்றமும் பேருலகின்—மன்னு நரைதிரை மூப்பினு நோயினு மாளக்கண்டுந்—தன்னு மறிவில ரான்மா விதுவென்று சொல்லுவரே. எ-ம். ஊசுமுடலி னுழல்கின்ற காற்றை யுணர்வென்பரே—யேசுமுறக்கத் தியங்கியு மிங்கறி வேதுமற்று—வீசும் பிராணனை யான்மா வலவென்று வேதஞ்சொல்லும்—பேசுமனிதர் பொருளறி யாமற் பிதற்றுவரே. எ-ம். தனக்கு மனது சலித்த தென்றே சொல்லித் தானிருந்து—முனக்கு விசாரமுண் டாயிற்சொல் லென்றிங்கு வந்துநின்று—மெனக்கிங் கறியவொண் ணுதென்று சொல்கின்ற வேழைகடா—நினைக்கத் தனக்கறி வில்லா மனத்தை நிலையென்பதே. எ-ம். இணங்கு நவகுண மெய்துமிப் புத்தியை யின்றுபுத்தர்—வணங்கும் விஞ்ஞான மயம்பொரு ளென்ற மதியின்மைபோற்—பிணங்குநிலைவிட்டுக் கேளாய் மறையின்று பின்னமறக்—குணங்குறியின்றி யிருக்குமான் மாவென்று கூறிடுமே. எ-ம். சேருஞ் சுகம்பொரு ளென்றனை துக்கஞ் செறியும்பொழு—தாருஞ் சுகதுக்கி யாகியிந்நிலை யன்றிமறை—தேரு நிரதிச யானந்த மேசிதைவற்றபொருள்—கூருநிலையை யறியா ரறிசுகங் கொள்ளுவதே." எ-ம். மற்றும் வருவனவற்றுற் காண்க. (உக)

தெளிவு யிர்க்கரன் விளக்குதன் மயக்கவன்
  றிரோபவிக் குதறேகம்
விளிவை யுற்றல்சங் காரமிங் கிதாகித
  மேவுத றிதிதோற்ற
முளசி ருட்டியே லம்பை நோதலி
  னுன்னையும்பிற ரையுநாடித்
தளர்வ தும்மகிழ் வதுமடைந் துள்ளமே
  சம்புவை மறந்தாயே.

தெளிவு உயிர்க்கு அரன் விளக்குதல் மயக்கு அவன் திரோபவிக்குதல். எ-து. உயிர்களுக்கி யாதோர்முன்னிலையால் தெளி

வுவருமாயினும் அஃது சிவன் அனுக்கிரகம் பண்ணுதல்; அவை களுக்கு யாதோர் முன்னிலையால் மயக்கம் வருமாயினும் அஃது அவன் திரோபாவஞ் செய்குதல்,—தேகம் விளிவை உற்றல் சங்காரம். எ-து. தேகநாசத்தை யடைதல் யாதோர் முன்னிலை யால் வருமாயினும் அஃது அவனது சங்காரம்,—இங்கு இதாகி தம் மேவுதல்திதி. எ-து. சுகதுக்கங்களைப் பொருந்த இவ்விடத்து யாதோர் முன்னிலையால் வருமாயினும் அஃது அவனது திதி,—தோற்றம் உள சிருட்டியேல். எ-து. உற்பத்தி யாதோர் முன்னிலையால் வருமாயினும் அஃது அவனுக்குள்ள சிருஷ்டி. இங்ஙனங் கூறிய முறையே சடசித்துக்களெல்லாம் இருவினைக் கீடாக நடத்தும் அவனது பஞ்சகிருத்தியத்தின்படியே நடக்குமாகல்,—அம்பை நோதலில் உன்னையும் பிறரையும் நாடித்தளர்வதும் மகிழ்வதும் அடைந்து உள்ளமே சமபுவை மறந்தாயே. எ-து. அவன செய்யும் பஞ்சகிருத்தியங்களை நாடாது எய்தவனிருக்க அம்பை நோவதுபோல் யான் செய்தேன் பிறர் செய்தாரென்று உன்னையும் பிறரையுங் கருதிக்கொண்டு துன்பம் வந்ததென்று வாட்டமுஞ் சுகம்வந்ததென்று பூரிப்பும்அடைந்து நெஞ்சமே சிவனது திருவடியை மறந்தாய் அஃது என்னையென்று விவேகங்கூறிற்று. எ - று. அம்பை நோதலினெனவே எய்தவனென்பது வருவிக்கப்பட்டது. அவன் அவள் அதுவென்னு மூன்றும் பிறர் என்பதனுள் அடங்குமாதலிற் பிறர் எனப் பட்டது. கடற்றிரைபோற் சுகதுக்கம் ஓய்வின்றி வருதலால் அவற்றைச் சமபாவனை பண்ணாது வேறுபிரித்துப் பாவிப்போர்க்கு அவை மயமாதலேயன்றித் திருவடியை நினைக்கக் கூடாமையிற் சம்புவை மறந்தாயே யென்று கூறப்பட்டது. இப்பஞ்ச கிருத்தியங்களுள் உயிரிடத்து அநுக்கிரகமுந் திரோபாவமும், உடம்பினிடத்துச் சங்காரமுந் திதியுஞ் சிருஷ்டியும், வருமாறும், அநுக்கிரகத்திலும்,இதத்திதியிலுஞ் சிருஷ்டியிலும் இன்பமும், திரோபாவத்திலுஞ் சங்காரத்திலும் அகிதத்திதியிலுந் துன்பமும், வருமாறும் காண்க.

இதற்கு உதாரணம்: திருவாசகம் "நாயிற் கடையா நாயேனை நயந்து நீயே யாட்கொண்டாய்—மாயப் பிறவி யுன் வசமே வைத்திட்டிருக்கு மதுவன்றி—யாயக் கடவே னானோதா னென்னதோவிங் கதிகாரங்—காயத்திடுவா யுன்னுடைய கழற்கீழ்வைப்பாய் கண்ணுதலே." மற்றும வருவனவற்றாற் காண்க. இப்பாட்டாற் சிவனது பஞ்சகிருத்தியத்தை நாடி இருவினையும் நீங்குதற்கு உபாயங் கூறியவாறு காண்க. (௯0)

மறைத்த லுந்நினைத் தலுஞ்செயு மாணவ
மாயைநின் றவைதம்மைத்
துறத்த லேயிராப் பகலகல் வீடெனச
சொல்வரத் துறவெய்தக்
குறித்தி டிற்பர பத்திஞா னத்தினாற்
கூடுமேற் றவைநெஞ்சே
நிறத்த பத்திநஞ் செயலறி னுமறி
னின்றமற் றொன்றாமே.

மறைத்தலும் நினைத்தலும் செயும் ஆணவம் மாயை நின்றவை தம்மைத் துறத்தலே இராப்பகல் அகல் வீடு எனச் சொல்வர். எ-து. நமதுள்ளே எக்காலமும் நின்று கேவலமாய் மறைத்தலையுஞ் சகலமாய் நினைத்தலையுஞ் செய்யாநிற்கும் அவைகளுக்குக் காரணமாகிய ஆணவமும் மாயையும்; அவ்விரண்டையும் நீத்தலே இரவும்பகலும் நீங்கிய வீடென்று பெரியோர்கள் சொல்லுவார்களென்று விவேகங்கூற, அதற்கு இவ்வாணவமும் மாயையுந் துறத்தற்கு உபாயம் எங்ஙனமென்று மனங்கேட்ப,—அத்துறவு எய்தக் குறித்திடில் பரபத்தி ஞானத்தினால் கூடும். எ-து. அதற்கு அத்துறவினை நீ அடையக் கருதினையாயிற் பரபத்தி பரஞானத்தினால் அத்துறவு கைகூடும்,—மற்றவை நெஞ்சே நிறத்த பத்தி நம் செயல் அறில் நாம் அறில் நின்ற மற்றொன்று ஆமே. எ-து. நெஞ்சமே அந்தப் பரபத்தி பரஞானங்களியாவையெனின் சிவன் செயலை நாடி நமது செயல் அறுமா

யின் அதுவே விளங்காநின்ற பரபத்தி; இப்பரபத்தியினால் நமது செயலற்றொமென்று கருதும் போதம் அறுமாயின் மேற்சொல்லப்பட்ட பரஞானமாமென்று விவேகங் கூறிற்று. எ - று. தற்செயல் அறுதற்குமேல் பத்தியில்லாமையாலும் தற்போத மறுதற்குமேல் ஞானமில்லாமையாலும் பரபத்தியென்றும் பரஞானமென்றுங் கூறப்பட்டன.

இதற்கு உதாரணம்: கந்தரலங்காரம். "ஆராப்புனே வேணி யன் சேயருள் வேண்டு மவிழ்ந்த வன்பாற்—குராப்புனே தண்டையந் தாடொழல் வேண்டுங் கொடிய வைவர்—பராக்கறல் வேண்டு மனமும் பதைப்பறல் வேண்டு மென்று—விராப்பகலற்ற விடத்தே யிருக்கை யெளி தல்லவே." எ-ம். திருவாசகம். "பத்தி வலையிற் படுவோன் காண்க." எ-ம். திருவம்மானை. "தற்போத மற்றிடந் தற்பர மம்மானை." எ-ம். மற்றும் வருவன வற்றுற காண்க. இப்பாட்டால் ஆணவமும் மாயையும் நீங்குதற்கு உபாயங் கூறியவாறு காண்க. (கக)

ஒன்று நஞ்செய லில்லைநெஞ் சேயவ
  ணேர்மைய லதனாலே
சென்று சென்றுவெம் பவக்கடன் மூழ்கினஞ்
  செறிமய லேதென்ன
நன்று நீவினு வினையிரு வினையையு
  நான்செய்தே னெனுமான
மென்ற நிந்திட தொன்மையு மாற்றினே
  யெனினுனக் கிணையாரே.

ஒன்றும் நஞ்செயல் இல்லை நெஞ்சே. எ-து. நெஞ்சமே உண்மையாகப் பார்க்குமிடத்துச் சிவன் செயலேயன்றி நமது செயலொன்றாயினும் இன்றென்று விவேகங்கூற, அதற்கு நமக்குச் செயலின் றென்பதற்கு ஏதுவென்னையென்று மனங்கேட்ப, நமக்கு ஆணவ மறைப்பாற் சுதந்தரவறிவு இன்மையாலும் கருவிகள் சடமாகையாலும் நம்மையுங் கருவிகளையுங் கூட்டித்

தற்சுதந்தரவறிவினுடைய சிவன் தனது அருளால் இயக்க யாம் இயங்குதலின் எமக்குச் செயலின்றென்று விவேகங்கூற, அதற்கு இங்ஙனஞ் செயலற்றிருப்ப எழுவகைப் பிறவிகளும் எமக்கு வந்தது என்னை என்று மனங்கேட்ப,—இவண் ஓர் மயலதனாலே சென்று சென்று வெம் பவக்கடல் மூழ்கினம். எ-து. அதற்கு இவ்விடத்து ஒரு மயக்கத்தினாலே போய்ப் போய்க் கொடிய பிறவியாகிய துக்கசாகரத்தில் மூழ்கினேம் யாமென று விவேகங்கூற,—செறிமயல் எது என்ன. எ-து. அதற்கு ஒரு மயக்கத்தாலே பிறவிச்சாகரத்தில் மூழ்கினோமென்று கூறினீர். இங்ஙனம் பொருந்திய மயக்கமாவதியாதென்று மனங்கேட்ப,- நன்று நீவினவினை இருவினையையும் நான்செய்தேன் எனும் மானம் என்று அறிந்திடு. எ-து. அதற்கு நீ நன்று வினவினை; நன்று தீதாகிய விருவினைகளையும் நான்செய்தேன் பிறர் செய்தாரென்று கருதும் உனது அபிமானமே அம்மயக்கமென்று அறிந்திடுதியென்று விவேகங்கூற, அதற்கு அந்த அபிமானந் தான் யாதென்று மனங்கேட்ப, அதற்கு நீ பிறர்க்கு நன்று தீது செய்த விடத்தும் பிறருனக்கு அவைகளைச் செய்த விடத்தும் நீ செய்த தீதினையும் பிறர்செய்த நன்கினையுஞ் சிவன்செய்வித்தானென்று கூறி நீ செய்த நன்கினையும் பிறர்செய்த தீதினையும் நான்செய்தேன் பிறர்செய்தாரென்று அபிமானித்து விருப்பு வெறுப்பு அடைந்தனையாகலின் நீ செய்த தீதும் பிறர்செய்த நன்கும் முன்னர்ச் சிவன் செயலென்று கூறியதும் உனது அபிமானமே யாயிற்று,—ஈதொன்றையும் மாற்றினையெனின் உனக்கு இணை யாரே. எ-து. உனது அபுத்தி பூர்வகமாய்வந்த தீதினையும் புத்தி பூர்வகமாய்வந்த நன்கினையும் பிறரால் உனக்குவந்த நன்கு தீதினையுஞ் சிவன்செயலாய் காழ் நான் பிறர் என்று கருதுகிற அபிமானமாகிய இது ஒன்றையும் நீக்கினையானால் உனக்கு உவமை யாவரென்று விவேகங் கூறிற்று. எ - று. நான் செய்தேன் என்பதனாலே பிறர்செய்தாரென்பது வருவிக்கப் பட்டது.

இதற்கு உதாரணம்: குறுந்திரட்டு. "தானலா தொன்று தன்னைத் தானெனக் கருதிக்கொண்டே—யானெலாஞ் செய்தே னென்னு ஞானமஞ் ஞானமத்தா—லீனமாம் வினையிரண்டா மிருவினையாலு டம்பா—மூனமா முடம்பா லூழா மூழினா லாகா துண்டோ." மற்றும் வருவனவற்றாற் காண்க. இப்பாட்டால் நாம் பிறர் என்று கருதும் அபிமானம் ஈதென்று அறிவித்தவாறு காண்க. (௫௨)

அபுத்தி பூர்வகமாய்ச்செய்த தீதினையும் புத்தி பூர்வகமாய்ச் செய்த நன்கினையும் பிறர்செய்த நன்கினையும் சிவன்செயலாகக் காண்கின்றேன்; பிறர் செய்த தீதினை இங்ஙனங்காணக் கூடா தென்ற மனத்தைப்பார்த்து மேற்கூறுகின்றது.

இணையின் ஞானபூ ரணன்முழு துணர்ந்தமைத்
  திட்டவா றலதிங்கே
யணைவு றாதொரு தீதெமக் கவன்றரி
  ஞார்தடுப் பவர்நெஞ்சே
பணைகொ டாவர மானமின் மையினுருப்
  பற்றிநின் றிலகொல்லோ
வுணைவு றாதுடற் காவல்கை விடுதியூ
  ழுள்ளவா விடாதென்றே.

இணையில் ஞானபூரணன்முழு துணர்ந்து அமைத்திட்ட வாறு அலது இங்கே அணைவுறாது ஒரு தீது எமக்கு. எ-து. சமானமின்மையினையும் இயற்கை ஞானத்தினையும் உடைய பரிபூரணனாகிய சிவன் நாஞ்செய்த வினைகளெல்லாவற்றையும் ஒருங்குணர்ந்து அவ்வினைகளுள் இன்னகாலத்தில் இன்னவினையை அனுபவிக்கப் பண்ணுவதெனறு வகுத்துத் தந்தவாறல்லது இவ்விடத்துப் பிறரொருவரால் நமக்கு ஓர் தீது வந்தடையாதென்று விவேகங்கூற, அதற்குச் சிருட்டிமுதலிய செய்யும் பிரமன் முதலிய கடவுளராற்றான் எமக்கு ஒரு தீது உறாதோ வென்று மனங்கேட்ப, அசிவனியாவர்க்கு மிக்காராகலின் அவனை

யன்றி இவரால் ஒருதீது செய்யக்கூடாது அங்ஙனம் மிக்கானாயி னும் அவனறியாது இவரால் தீதுசெய்யக்கூடாதோ வென்னின் இயற்கை ஞானத்தையுடையனாகலின் அச்சிவன் அறியாது இவ ராற்செய்யக்கூடாது அவனறியாது இவராற்செய்யக்கூடாதாயி னும் இவர் தீது செய்யுமிடத்து அவன்வந்து தடுப்பானோ வென் னிற் பரிபூரணனாகலின் அவனைவிட இவரிருத்தற்குஞ் செய்த ற்கும் இடமேயில்லை. ஆனால் அச்சிவனையே யுபாசனைபண்ணித் தீதுறாது தடுத்துக்கொள்வேனெனின் சிருஷ்டிதொடங்கி வீடு அடைவிக்கு மளவும் வினைகளையெல்லாம ஒருங்குணர்ந்து அமைத்ததாகலின் அவனை உபாசித்தாலும் அதனைத்தடுக்கக் கூடாது,—அவன் தரின் ஆர் தடுப்பவர் நெஞ்சே; எ-து. ஆக லின் இணையின் ஞான பூரணனாகிய சிவனே தீவினைக்கீடாக எமக்கு ஒருதீது தருவானெனின் அதனை யாவர் நீக்கிக்கொள் வார் நீ சொல்லுதி நெஞ்சமே யென்று விவேகங்கூற, 'அதற்கு நீர் கூறியது உண்மை; இங்ஙனம் அறிந்தாலும் தேகத்தோடு ஒற்றுமையாயிருத்தலின் இதன்கண் அபிமானத்தை விடுத்தல் எங்ஙனமென்று மனங்கேட்ப,—பணைகொள் தாவரம் மானம் இன்மையின் உருப்பற்றி நின்றிலகொல்லோ. எ-து. கோடுகள் தாங்காநின்ற தாவரவுயிர்கள் தமது உடம்புகள்மேல் அபிமான மின்றி இருக்கவும் பழவினைப்படியே அவ்வுடம்புகளோடும் கூடி நின்றிலவோ,—உள்நைவு உறாது உடற் காவல் கைவிடுதி ஊழ் உள்ளவா விடாது என்றே. எ-து. அதுபோல நீயும் உள்ளம் மெலிவுறாது உள்ளபடியே பழவினை வருதலன்றி விடாதென்று அறிந்து உடம்பினைப் பாதுகாத்தல் கைவிடுவாயென்று விவே கங்கூறிற்று. எ - று. இணையிலென்பதை யாவர்க்கு மிக்கா னென்று கொள்க.

முழுதுணர்ந்தமைத்திட்டவாறென்பதற்கு உதாரணம்: சிவபோகசாரம். "அமைத்த வினைக்கீடா வனுதினமுஞ் செய்வ, திமைப்பொழுதும் வீண்செயலொன் றில்லை—யுமைக்குரியா, னெல்லா மறிந்தே யியற்றுவது தன்னடிமை—வல்லார் தமக்கு

ணர்த்து வான்." உடற்காவல் கைவிட்டிருப்பா யென்பதற்கு உதாரணம்: தேவாரம். "தேனைக் காவல் கொண்டு விண்ட கொன்றைச் செழுந்தாராய்—வானைக் காவல் கொண்டு நின்று ரறியா நெறியானே—யானைக் காவி லரனே பரனே யண்ணு மலையானே—வூனைக் காவல் கைவிட் டென்னை யுகப்பா ருணர் வாரே." மற்றும் வருவனவற்றுற் காண்க. (௩௩)

இன்னும் மனத்தினை யுடன்படுத்தித் தேகாபிமானம்விடல் வேண்டு மென்று மேற்கூறுகின்றது.

என்றும் வீடடைந் தவரிறு மாக்கயா
  னிறப்பைவிட் டகலாம
னின்று தான்றலை சாய்க்கவோ நெஞ்சமே
  நினைத்துணை யாக்கொண்டு
நன்று நீயிதற் கென்செய்கேன் சாவனோ
  நானென விலையானு
லொன்று செய்மலக் குடிலிதி லவாவைநீக்
  குமாபதி தரும்வீடே.

என்றும் வீடு அடைந்தவர் இறுமாக்க யான் இறப்பை விட்டகலாமல் நின்று தான் தலைசாய்க்கவோ நெஞ்சமே நினை த்துணையாக்கொண்டும். எ-து. வீட்டினை அடைந்தவர் எக்கால மும் இறுமாந்து கொண்டிருக்க யான் எக்காலமும் இந்த இறப் பினைவிட்டு நீங்காது நின்று தலைவளைக்கவோ, யாதோர்காரியம் நினைத்தாலும் அதனை எனக்குக் கைவசமாக்குகின்ற நெஞ் சமே நின்னைத் துணையாகப் பெற்றுமென்று விவேகங்கூற, அத ற்கு நின்னைத்துணையாகக் கொண்டும் யான்றலை சாய்க்கவோ வென்று நியாய நிஷ்டூரங்கூறினீர். உமக்கு என்னுலாங்காரியம் யாதென்று உள்வெறுப்போடு மனங்கூற,—நன்று நீ இதற்கு என் செய்கேன் சாவனோ நான் எனல். எ-து. நல்லது நீர் இங்ஙனஞ் சொல்லும் இதற்கு என்னசெய்கேன் யான்றான் சாவனோவென்று நீ சொல்லற்க,—இலை ஆனல் ஒன்றுசெய்.

எ-து. உடம்பின்மேல் அபிமானம் ஒருங்கே கைவிடுதல் கூடா தாயினும் ஒருகாரியம்செய்குதி நீயென்று விவேகங்கூற, அத ற்கு அக்காரியம் யாதென்று மனங்கேட்ப,—மலக்குடிலிதில் அவாவை நீக்கு உமாபதி தரும் வீடே. எ-து. அதற்கு மலநிறை ந்த குடிசையாகிய இவ்வுடம்பின் கண்வைத்த ஆசையை விட்டு நீங்குதி இது செய்தியேல் உமைக்குப் பதியாகிய சிவன் எமக்கு வீட்டினைத் தானே தருவானென்று விவேகங்கூறிற்று. எ - று. வீடு ஊர்த்துவமுகமும் பிறப்பு அதோமுகமும் ஆகலின் இறு மாக்கவென்றும் தலைசாய்க்க வென்றும் கூறப்பட்டன. உடம் பின்மேல் அவா நீங்கின் அறிவு திருவடியை நாடும் அங்ஙனம் நாடும்போது சிவன் வீடுகொடுத்தல் சித்தமாகலின் உமாபதி தரும் வீடென்று கூறப்பட்டது

வீடடைந்தவ ரிறுமாக்க வென்பதற்கு உதாரணம்: திரு நாவுக்கரையர். "இறுமாந் திருப்பன் கொலோ வீசன் பல்க ணத் தெண்ணப்பட்டுச—சிறுமா னேந்திதன் சேவடிக் கீழ்ச் சென்றங் கிறுமாந் திருப்பன் கொலோ." குடிலிதிலவாவை நீக்கென்பதற்கு உதாரணம். திருவள்ளுவநாயனார். "மற்றுந் தொடர்ப்பா டெவன் கொல் பிறப்பறுக்க—லுற்றார்க் குடம்பு மிகை." மற்றும் வருவனவற்றாற் காண்க. (கூ௭)

தேகபோகங்களில் அவாவின்றி யிருத்தற்கு உபாயம் மேற்கூறுகின்றது.

> வீடு கூட்டிவான் குறித்தநி னிமித்தமா
>   விமலனீ தவினம்பாற்
> கூடு மாணயயை யெனதியா னெனவெணிக்
>   கொள்வதென் பயமாசை
> நாடுபோழ்திவை சுழுத்தியிற் புரந்தவ
>   னெவனவ னனவாதி
> யூடு சூழ்வழி புரப்பனென் றுள்ளமே
>   யுடல்கைவிட் டிருப்பாயே.

வீடு கூட்டுவான் குறித்து அதின் நிமித்தமா விமலன் ஈத லின் நம்பாற் கூடும் மாயையை. எ-து. ஆணவத்தான் மறைபட் டிருந்த எம்மை எமக்கு இவ்விருளை நீக்கி வீட்டின்பத்தைத் தர ல்வேண்டு மென்றியாங் கேளாதிருக்கவுந் தனது காருண்ணிய த்தால் எடுத்து வீட்டினை அடைவித்தற்பொருட்டுத் திருவுளத் தடைத்து அவ்வீடு அடைதற்கு ஏதுவாக நிருமலனாகிய சிவன் மாயையில் தனுகரண புவனபோகங்களைக் கொடுத்தலின் அத னால் நம்மிடத்து வந்து பொருந்து மாயாகாரியங்களை, —எனது யான் என எணிக்கொள்வது என் பயம் ஆசை. எ-து. தனுகர ணங்களை யான் எனவும் புவனபோகங்களை எனது எனவுங் கருதிக்கொண்டு இத்தேகபோகங்கள் நீங்குமென்று பயமும் இவையிருக்கவேண்டுமென்று ஆசையும் நீ உட்கொள்வது என் னை,—காடுபோழ்து இவை சுழுத்தியிற் புரந்தவன் எவன் அவன் நினவாதியூடும் ஊழ்வழி புரப்பன் என்று உள்ளமே உடலை விட் டிருப்பாயே. எ-து. உண்மையாக விசாரிக்குங் காலையில் இத்தேகபோகங்களை நீ அபிமானியாதிருக்கவுஞ் சுழுத்திக்கண் இவற்றைப் பாதுகாத்த விறைவனெவன் அவ்விறைவனே யான் எனது என்று உன்னால் அபிமானிக்கப்பட்ட நனவு கனவுகளு ள்ளும் ஊழ்வினைப்படியே பாதுகாப்பனென்று அறிந்து நெஞ் சமே உடலைப்பாதுகாத்தல் கைவிட்டிருத்தியென்று விவேகங் கூறிற்று. எ-று. மாயை என்பது காரணவாகுபெயர். மனம் அபிமானியாத சுழுத்தியில் இறைவன் காத்தல் இயல்பாதலினா லுந் தனுவாதிகளை மாயையிற் காரியப்படுத்தித் தந்ததனாலும், இவை நான்கும் அவ்விறைவனது உடைமையென்று அறிக.

இதற்கு உதாரணம்: திருநாவுக்கரையர். "நன்க டம்ப னைப் பெற்றவள் பங்கினன்—றென்க டம்பைத் திருக்கரக்கோ யிலான்—றன்க டன்னடி யேனையுந் தாங்குத—லென்க டன் பணி செய்து கிடப்பதே." மற்றும் வருவனவற்றுற் காண்க. ()

தேகபோகங்களை இறைவன் காத்தல் இயல்பாதலின் யான் அவற்றை அபிமானியாது இருக்கின்றேனென்று கூறிய மனத்

தைப்பார்த்து நீ இங்ஙனஞ் சொல்லுவதன்றிச் சொன்னபடி யில்லாயென்று மேற்கூறுகின்றது.

இருப்பை நாடொறு நெஞ்சமே சுகாசுக
  மெதுவரு மதுவேயாய்ப்
பொருப்பு வில்லிதாள் விருப்பமெவ் வினையினைப்
  புசிக்குஞான் றடைவாயோ
கருப்பை யுற்றுதித் தறற்குமி ழியினழி
  காயமீ துளபோழ்தே
குருப்பி ரான்றிருக் கழற்கு மெய்யன்புநீ
  கொள்ளறெள் ளிமையாமே.

இருப்பை நாடொறும் நெஞ்சமே சுகாசுகம் எதுவரும் அதுவேயாய் பொருப்பு வில்லிதாள் விருப்பம் எவ்வினையினைப் புசிக்கு ஞான்று அடைவாயோ. எ-து. எக்காலமும் நெஞ்சமே நீ சுகதுக்கங்களுள் எதுவொன்று வந்தடுக்குமோ அதுதானே வடிவாகி யிருக்கின்றாய். இத்தேகம் இருக்குமளவும் அவ்விரு வினைகளும் வாராத நாள் இன்றாகலின் இவ்வினைகளை அருந்து நாளின்றி இனி எந்தவினையை அருந்துநாளிற் குன்றவில்லியாகிய சிவனது திருவடிக்கண் விருப்பத்தை அடைவாயோ,— கருப்பை உற்று உதித்து அறற் குமிழியின் அழி காயம் ஈது உள போழ்தே குருப்பிரான் திருக்கழற்கு மெய்யன்பு நீ கொள்ளல் தெள்ளிமையாமே. எ-து. மாதாவினது கருப்பாசயத்தின்கண் வினைக்கீடாய் வந்து பொருந்தி அதன்கட் பத்துத்திங்களிருந்து பூமிக்கண்ணே தோன்றி நீர்க்குமிழி போன்று விரைவில் அழியும் இந்தக்காயம் இருக்கும்போதுதானே மிக விரைந்து நமது ஆசாரியனாகிய கருத்தனது திருவடிக்கு மெய்ப்பத்தி மனதுட் கொள்ளுதல் மயக்கமறத் தெளிந்த தன்மையாமென்று விவேகங் கூறிற்று. எ - று.

சமுத்திரஸ்நானம் பண்ணத்தொடங்கினேன் அலைகளை நாடாது மூழ்கித் தனது விரதமுடித்தல் போலத் திருவடியை

அடையத்தொடங்கினேன் இருவினைகளை நாடாது அத்திருவடியை அடைதலையே விரதமாகக்கொள்ளல் வேண்டுமென்றற்கு எவ்வினையைப் புசிக்கும் ஞான்றடைவாயோ வென்றும், குரு பத்தியுடையோர்க்கு வீடு எளிதிற் கூடுமாகலின் மெய்யன்பு கொள்ள றெள்ளிமை யென்றும் கூறப்பட்டன.

இதற்கு உதாரணம்: பொன்வண்ணத்தந்தாதி. "தொடங்கிய வாழ்க்கையை வாளா துறப்பர் துறந்தவரே—யடங்கிய வேட்கை யரன்பா லலராறு காற்பறவை—முடங்கிய செஞ்சடை முக்கண ஞர்க்கன்றி யிங்குமன்றிக்—கிடங்கினுட் பட்ட கராவனை யார்பல கேவலரே." மற்றும் வருவனவற்றுற்காண்க. ()

ஆமை யாருறுப் பைந்தையு மோர்மெயு
 ளடக்கலிற் புலனைந்துந்
தீமை சேர்விட யங்களிற் செலாதமைத்
 துள்ளமே சிவைபாக
சோம சேகரன் சரணமே சரணெனத்
 தொழுதுநின் றழுதன்றே
ஞமை நாவினுற் செபித்திலை யவத்திலே
 நாளெலாங் கழித்தாயே.

ஆமை ஆர் உறுப்பு ஐந்தையும் ஓர் மெயுள் அடக்கலின் புலன் ஐந்தும் தீமை சேர் விடயங்களிற் செலாது அமைத்து. எ-து. ஆமையானது தனது அரிய ஐந்து அங்கத்தினையும் தீமை வருமிடத்துத் தனது ஒருடம்பின்கண் அடக்கிக்கொள்ளுதல் போலப் பஞ்சேந்திரியங்களையும் பாவங்களுக்கு ஏதுவாய் வருகின்ற விஷயங்களிற் போகவொட்டாது விவேகத்தால் உள்ளடக்கி,—உள்ளமே சிவைபாக சோமசேகரன் சரணமே சரண் எனத் தொழுதுநின்று அழுது அன்றேன் நாமம் நாவினுற் செபித்திலை அவத்திலே நாளெலாங் கழித்தாயே. எ-து. நெஞ்சமே கௌரியைப் பாகத்திலே வைத்த சந்திர சூடனுகிய சிவனது திருவடிகளே அடைக்கலமெனவணங்கி நின்று அத்திருவ

டிகளை அன்பால் நினைந்து உருகி அழுது அவனது திருநாமமாகிய ஐந்தெழுத்தினையும் நாவினால் இடைவிடாது செபித்தாயில்லை; மித்தையாகிய தேகபோகங்களைக் கருதி அவத்தொழிலாலே வாழ்நாளெல்லாம் வீணாளாகக் கழித்தனை இது என்னையென்று விவேகங்கூறிற்று. எ - று. அவமென்பது தொழிலின்மேல் நின்றது.

ஆமையாருறுப்பைந்தையு மென்பதற்கு உதாரணம்; திருவருட்பயன். "புலனடக்கித் தம்முதற்கட் புக்குறுவார் போதார்—தலனடக்கு மாமை தக." நாவினாற் செபித்திலை என்பதற்கு உதாரணம்: அருணகிரியந்தாதி. "பரகதிக்கு வித்தாமுன் பஞ்சாக் கரத்தைப்—பரபரப்ப வெண்ணாத பாவ - நரகப்—பிறப்பிற்கு மீடாப் பிறந்தருணை யீசா—விறப்பிற்கு மீடாயினேன்." மற்றும் வருவனவற்றாற் காண்க. (கூஎ)

தாயு மாகியென் றந்தையாய் வந்துதா
டருசிவப் பிரகாசன்
றூய பொன்னருள் வேண்டிலை யீண்டுநின்
றுணிவிருந் தமையென்னோ
காய மாயமென் றறிந்துமாதர் கடரு
கலவிவேண் டினையென்றாற்
றீமை நீமிக நெஞ்சமே யிதற்கியான்
செய்வதொன் றறியேனே.

தாயும் ஆகி என் தந்தையாய் வந்து தாள் தரு சிவப்பிரகாசன் தூய பொன் அருள் வேண்டிலை ஈண்டு நின் துணிவு இருந்தமை என்னோ. எ-று. மாதாவுமாகிப் பிதாவுமாகி எழுந்தருளி வந்து திருவடிகளை எளிதிலே தந்த சிவப்பிரகாசனென்னும் நாமதேயத்தையுடைய ஆசாரியனது நிர்மலமாகிய பொன்போன்ற கிருபையை விரும்புகின்றிலை; இவ்விடத்து நின்கருத்து இருந்த தன்மை யென்கொலோ யான் அறிகிலேன்,—காயம் மாயம் என்று அறிந்து மாதர்கள் தருகலவி வேண்டினை என்

ரூல் தீயை நீ மிக நெஞ்சமே இதற்கு யான் செய்வ தொன்று அறியேனே. எ-து. தேகம் அநித்தியமென்று அறிந்தும் மாதர்களால் உண்டாகிய கூட்டுறவினை விரும்பினையென்றால் நெஞ்சமே நீ மிகவும் பாவியாயினை; யான் என்ன கூறினுங் கேட்டிலையாகலின் இதற்கியான் செய்வது ஒருபாயமும் அறியேனென்று விவேகங்கூறிற்று. எ - று. தாட்ருதல் - திருவடி தீக்ஷை.

தாயுமாகி யென்பதற்கு உதாரணம்: தத்துவராயர். "தந்தைதா யாவானுஞ் சார்கதியிங் காவானு—மந்தமிலா வின்பமக் காவானு - மெந்தமுயிர் — தானாகு வானுஞ் சரணாகு வானுமருட்—கோனாகு வானுங் குரு." செய்வதொன்றறியேனே யென்பதற்கு உதாரணம்: திருவாசகம். "ஆடுகின்றிலை கூத்துடை யான்கழற் கன்பிலை யென்புருகிப்—பாடு கின்றிலை பதைப்புதுஞ் செய்கிலை பணிகிலை பாதமலர்—சூடுகின்றிலை சூட்டுகின்றதுமிலை துணையிலி பிணநெஞ்சே—தேடுகின்றிலை தெருவுதோறலறிலை செய்வதொன் றறியேனே." மற்றும் வருவனவற்றூற் காண்க. (கூ௬)

ஏனை நூல்பல வோதினை யோதவற்
றிறையரு ளடையாதார்க்
கூன வெம்பவ மொழிப்பதற் குள்ளமே
யுபாயம்வே றிலையானு
லானை யீருரி போர்த்தவென் றம்பிரா
னருள்விரைந் தடையாதே
தானி நாண்மினூர் போகநீ வியந்தது
தப்பலாற் சதுரன்றே.

ஏனை நூல் பல ஓதினை. எ-து. ஞானசாத்திரங்களன்றிப் பலசமய சாத்திரங்களையும் கற்றுணர்ந்தாய்,—ஓது அவற்று இறை அருள் அடையாதார்க்கு ஊன வெம் பவம் ஒழிப்பதற்கு உள்ளமே உபாயம் வேறு இலை ஆனால். எ-து. நீ கற்றறிந்த அந்நூல்களின் கருத்தெல்லாம் இறைவனது திருவருளைப் பெறு

தார்க்கு இழிவுபொருந்திய கொடிய பிறவியை நீக்குதற்கு உபாயம் வேறொன்றும் இல்லையென நெஞ்சமே ஓதுமானால்,—ஆனைஈர் உரி போர்த்த என் தம்பிரான் அருள் விரைந்து அடையாதேதான் இநாள் மினர் போகம் நீ வியந்தது தப்பலால் சதுர் அன்றே. எ-து. யானையினது குளிர்ச்சிபொருந்திய உரியைப் போர்த்த எனது கருத்தனாகிய சிவனது திருவருளைச் சீக்கிரத்தில் அடைதற்கு ஏதுவாயவற்றைச் செய்து அடையாது இங்ஙெங்காலமும் மின்போலும் இடையினையுடையார் போகத்தை நீ இன்பமென்று அதிசயித்தது தவறேயன்றி நன்மையன்றென்று விவேகங் கூறிற்று. எ-று. இலையென்பதனோடு ஓதென்பதனைக் கூட்டி முடிக்க. எனவென்பது எஞ்சிநின்றது. தான் என்பது அசைநிலை.

இதற்கு உதாரணம்: கந்தரனுபூதி. "ஆதா ரமிலே னருளைப் பெறவே—நீதா னொருசற்று நினைந் திலையே—வேதாகமஞா னவினோ தமனோ—சீதா சுரலோ கசிகா மணியே." என்றும், திருவள்ளுவநாயனார். "பிறவிப்பெருங்கட னீந்துவர் நீந்தா—ரிறைவ னடிசேரா தார்." என்றும் மற்றும் வருவனவற்றாற் காண்க. (௩௧)

சதுர் மறைப்பொரு ளாகிய வொருசிவ
  சங்கரற் றொழுதன்பாய்
விதிர்வி திர்த்துமெய் பொடித்திலை நடித்திலை
  விரைந்துசென் றவனாடும்
பொதுவை யுற்றிலை நிற்றிலை மாதர்பாற்
  போகுத றவிர்ந்தவா
வெதுப டக்கட வாய்மட நெஞ்சமே
  யினியுட லகன்றாலே.

சதுர்மறைப் பொருளாகிய ஒருசிவ சங்கரற் றொழுது அன்பாய் விதிர்விதிர்த்து மெய் பொடித்திலை நடித்திலை விரைந்துசென்று அவன் ஆடும் பொதுவை உற்றிலை. எ-து. இருக்கு

முதலிய நான்குவேதங்களினது முடிக்க ணிருக்கு மெய்ப்பொரு ளாகிய சிவசங்கரனது திருவடியை வணங்கி அதற்கு அன்பா கித் தேக நடுநடுங்கிலை; உரோமஞ் சிலிர்ப்புற்றிலை; ஆனந்த நடனம் புரிந்தாயில்லை; அதிசீக்கிரமாய்ச் சென்று அவன் நடனம் புரியாநின்ற கனகசபையை அடைந்தாயில்லை;—நிற்றிலை மாதர் பாற் போகுதல் தவிர்ந்து அவா எதுபடக் கடவாய் மடநெஞ்சமே இனி உடல் அகன்றாலே எ-து. மகளிரை விழைந்து அவர் பாற் செல்லுதலைத் தவிர்ந்து நின்றாயில்லை; ஆவா! நெஞ்சமே இனி இந்தத் தேகம் நீங்கினால் என்ன பாடுபடக் கடவையோ! யான் அறிகிலே னென்று விவேகங்கூறிற்று எ-று. ஆவா வென்பது இரக்கக் குறிப்பின்கண் வந்தது. பொதுவையுற்றிலை யென்பது எல்லாவுயிர்க்கும் பொதுவாய் நடிக்கும் அவனது பஞ்சகிருத்தியங்களைப் பார்த்திலை யென்றுமாம்.

இதற்கு உதாரணம்: திருவாசகம். "மெய்தா னரும்பி விதிர்விதிர்த் துன்விரை யார்கழற்கென் —கைதான் றலைவைத் துக் கண்ணீர் ததும்பி வெதும்பி யுள்ளம்—பொய்தான் றவிர்ந் துன்னைப் போற்றி சயசய போற்றி யென்னுங்—கைதா னெகிழவிடே னுடையா யென்னைக் கண்டு கொள்ளே." மற்றும் வருவனவற்றாற் காண்க. (சo)

ஆல நீழலி லன்றொரு நால்வருக்
அருநெறி யுரைத்தானைக்
கால காலனைச் சிவப்பிர காசவென்
கண்மணி தனையுன்றி
தேல வார்குழ லார்மயல் கொண்டுநீ
யிங்குழ லுவதெல்லாஞ்
சால வேபிழை யாகுநெஞ் சேசொனேன்
றவறிலை யென்மேலே.

ஆல நீழலில் அன்று ஒரு நால்வருக்கு அருநெறி உரைத் தானை. எ-து. கல்லால நிழற்கண் எழுந்தருளியிருந்த காலத்

தில் ஒப்பற்ற சனகர் முதலிய நான்குமுனிவருக்கு யாவர்க்கும் அரிய ஞானமார்க்கத்தினை உபதேசித்தருளிய அநுக்கிரக கர்த்தனை,— காலகாலனை. எ-து. எல்லாவுயிர்களையும் நாசம்பண்ணுகின்ற காலனுக்குக் காலனாகி அவனை நாசம்பண்ணிய நிக்கிரக கர்த்தனை,—சிவப்பிரகாச என்கண்மணிதனை உன்னாது. எ-து. அக்கருத்தன்றானே அருளே திருமேனியாகக் கொண்டு எழுந்தருளிவந்து சிவப்பிரகாச னென்னும் நாமதேயத்தைக் கொண்ட என்கண்ணின்கண் மணியாடு பாவைபோன்ற ஆசாரியனை வீட்டின்பத்தை அடையும்பொருட்டு இடையறாது அன்போடுங்கூடி நினையாது,— எலவார் குழலார்மயல் கொண்டு நீ இங்கு உழலுவது எல்லாம் சாலவே பிழையாகும் நெஞ்சே சொனேன் தவறிலை என் மேலே. எ-து. தகரமூட்டிய நீண்ட அளகபாரத்தினையுடைய மகளிர்மேல் மயக்கம் பூண்டு நீ இப்பிரபஞ்சத்திற் சுழலுவதெல்லாம் மிகவுங் குற்றமாகும் நெஞ்சமே யான் நானாவுபாயங்களாலும் இதனைத் துன்பமென்று அறிவித்தும் அறிந்தாயில்லையாதலின் உன்மேற் குற்றமேயன்றி என்மேற் குற்றமின்றென்று விவேகங்கூறிற்று. எ - று. கண்மணி தீது இது நன்று இது என்று அறிவித்தல்போலப் பிறப்புத் துன்பமென்றும் வீடு இன்பமென்றும் அறிவித்தலிற் கண்மணியென்று கூறப்பட்டது.

இதற்கு உதாரணம்: திருவாசகம். "வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே வல்வினைப்பட்—டாழ்கின்றாய் யாழாமற் காப்பானையேத்தாதே—சூழ்கின்றாய் கேடுனக்குச் சொல்கின்றேன் பல்காலும்—வீழ்கின்றாய் நீயவலக் கடலாய வெள்ளத்தே." என்றும், சிவானந்தமாலை."வீடொழியப் பேறில்லையென்றென்றும்வேதங்க — ளாடியமறையும் பொருளை ஞானகுரு - நீடுமருட் — கண்ணாலே சொன்ன கருணைப் பிரான்றனைநா — னெண்ணாதேயுண்டிருப்பதென்." என்றும், மற்றும் வருவனவற்றாற்காண்க.

என்னை கண்டுநீ மாதரார் வடிவமீ
திச்சைவைத் தழல்கின்றாய்

பொன்னை யுந்துகி லேயும்பிரித் திடின்வெறும்
புழுமலக் கூடல்லாற்
பின்னை யுண்டுகொல் கண்டுநீ மயங்குதல்
பிராந்திசங் கரன்பாதந்
தன்னை நாடுதி நெஞ்சமே பரசுகோ
ததியுறப் பெறலாமே.

என்னை கண்டு நீ மாதரார் வடிவமீது இச்சைவைத்து உழ ல்கின்றாய். எ-து. யாது சுத்தமிருக்கிறதென்று குறித்து மகளிர் உடலின்கண் ஆசைவைத்து மயங்கிச் சுழலாநின்றனை,—பொன் னையுந் துகிலையும் பிரித்திடின் வெறும்புழு மலக்கூடு அல்லாற் பின்னை உண்டுகொல் கண்டு நீ மயங்குதல் பிராந்தி. எ-து. செயற்கையால் மினுக்கியபொன்னாலாகிய அணியினையுங் கூறை யினையும் வேறுபிரித்து அதனது இயற்கையைப் பார்க்குமிடத்து வெறுங்கிருமிகளும் மலம் சலம் குடர் மூளை உதிரம் தசை கோ ழை முதலிய மலங்களும் நிறைந்துள்ள ஒருடம்பல்லது பின்னை அதன்கண்ணே யாதாயினும் ஒருசுத்தவஸ்து உளதோ அதனது இயற்கைவடிவம் அங்ஙனமிருப்பச் செயற்கைவடிவத்தைப் பார் த்து நீ மயக்கமுறுதல் உனது மனப்பிரமையாகும், — சங்கரன் பாதந் தன்னை நாடுதி நெஞ்சமே பர சுகோததி உறப்பெற லாமே. எ-து. இனி அதன்மேலாசையை விட்டுநீங்கிச் சங்கர னது திருவடியை மறவாது நினைப்பாய் நெஞ்சமே மேலாகிய இன்பசாகரத்தை மிகவும் யாம் அடையலாமென்று விவேகங்கூ றிற்று. எ - று. பொன் என்பது ஆகுபெயர்.

இதற்கு உதாரணம்; நாலடியார். "குடருங் கொழுவுங் குருதியு மென்புந்—தொடரு நரம்பொடு தோலு - மிடையிடை யே—வைத்த தடியும் வழும்புமா மற்றிவற்று — ளெத்திறத்தா ளீர்ங்கோதை யாள்." மற்றும் வருவனவற்றுற் காண்க. (சஉ)

பெறுவ தென்னைகொல் சுக்கிலங் கலித்தலாற்
பெருந்தவ வலிகுன்று

முறுவ தவ்வள வோபினை நீவிரும்
 புடற்குமா ணியதுண்டா
லறிவி யாம்றி யாமைதோய்ந் துடற்றின
 வதைச்சுக மெனுகின்றாய்
செறிது நெஞ்சமே நமதுசிற் சுகமினிச்
 சிவனையா தரிப்பாயே.

பெறுவது என்னைகொல் சுக்கிலம் கலித்தலால் பெரும் தவவலி குன்றும். எ-து. மகளிர் கூட்டுறவாற் பயன் அடைவது யாது இந்திரியம் கழிந்து போதலால் வீட்டையடையும் பொருட்டு நீ நெடுநாள் வருந்திச்செய்த தபோபலமெல்லாங் குறையும்,—உறுவது அவ்வளவோ பினை நீ விரும்பு உடற்கும் ஆணியது உண்டால். எ-து. அதனால் உனக்குக் கேடுவருவது அவ்வளவுதானோ பின்னர் நீ யானென்று விழைந்துள்ள உடம்பிற்கும் அடங்கியிருந்த நோய்கண் மேலிட்டு அதனால் நாசமுளதாமென்று விவேகங்கூற, அதற்கு யாந்தாம் யாவர் எமது சுகமாவது யாதென்று மனங்கேட்ப,—அறிவு யாம் அறியாமை தோய்ந்து உடல் தினவதைச் சுகம் எனுகின்றாய். எ-து. இவ்வுடம்பு சடமாகலின் இதன்கணின்ற சைதன்னியம் யாம்; நீ இதனை அறியாது அஞ்ஞானத்தோடுங்கூடி உடம்பினது தினவைச் சுகமென்று கருதாநின்றனை. இவை சுகமல்லவென்று விவேகங்கூற, மேற்சுகமாவதுதான் யாதென்று மனங்கேட்ப, — செறிதும் நெஞ்சமே நமது சிற்சுகம் இனிச் சிவனை ஆதரிப்பாயே. எ-து. இவ்வின்பத்தினியற்கை யீதென்று அறிந்து விடுத்து நமது அறிவிற்கு அறிவாய்நின்ற சிவனது திருவடியை ஆதரிப்பாய் நெஞ்சமே நமது ஞானனந்தத்தைப் பெறுவாமென்று விவேகங்கூறிற்று. எ - று. ஆல் என்பது அசைநிலை.

இதற்கு உதாரணம்: திருக்கடைக்காப்பு. "அருப்புப் போன்முலை யாரல்லல் வாழ்க்கைமேல்—விருப்புச் சேர்நிலை விட்டு நல் விட்டமாய்த்—திருப்புத் தூரனைச் சிந்தை செயச்செயக்—

கருப்புச் சாற்றினு மண்ணிக்குங் காண்மினே." மற்றும் வருவனவற்றாற் காண்க.

தாயுமாகியென்னும் பாட்டுமுதல் இவ்வாறு பாட்டாலும் பொருந்தலை விழைதலாகாதென்று மறுத்தவாறுகாண்க. (சஈ)

ஆத ரித்தனை குளகிரு தாதிய
 வடிசிலைக் கூழ்காடி
யேது பெற்றிடி னும்புசித் தாற்பசி
 யேகலுஞ் சமித்தற்றாற்
பேத மற்றெலா மலமதா தலுஞ்சரி
 யென்றிடிற் பினைநெஞ்சே
நீத ரித்திலா தவைவிழைந் துழல்வதென்
 னிமலனை நினையாதே.

ஆதரித்தனை குளகிருது ஆதிய அடிசிலை. எ-து. கிருதகுளபாயச முதலிய அறுசுவை யடிசில்களையும் நீ விரும்பினை; இதனால் என்னபயனை அடைந்தி,—கூழ் காடி ஏது பெற்றிடினும் புசித்தால் பசி ஏகலும் சமித்து அற்றால் பேதம் அற்று எலாம் மலமதாதலும் சரி என்றிடின். எ-து. சோறு காடி புற்கை முதலியாதுவந்ததாயினும் அருந்தினாற் பசிபோதலும் அவைசீரணித் தடங்கினால் நானாவேறு பாடெல்லாம் அற்றுத் தூர்க்கந்த மலமாதலுஞ் சரியென்றால், — பினை நெஞ்சே நீ தரித்திலாது அவை விழைந்து உழல்வது என் நிமலனை நினையாதே. எ-து. இங்ஙனம் அறிந்து பின்னரும் நெஞ்சமே நீ தரித்து நில்லாது அச்சுவை யடிசில்களை விரும்பிச் சுழலுவதென்னை நிர்மலனாகிய சிவனை இடைவிடாது கருதலின்றியென்று விவேகங்கூறிற்று. எ - று. மலமதாதலுமென்பதில் அதுவென்பது பகுதிப்பொருள் விகுதி. சரியென்பது விசேடமின்றென்ப தறிவித்தது.

இதற்கு உதாரணம்: சிவானந்தமாலை. "நல்ல வறுசுவையுங் காவினுனி மாத்திரமே — மெல்ல விருவிரலாம் வேறில்லை -

மெல்ல—விருவிரலைத் தான்கடக்க மாட்டாத நெஞ்சே—பொருகடலைத் தான்கடப்பாய் போய்." மற்றும் வருவனவற்றாற் காண்க. இதனுள் அருந்தலுட் சுவைவிழைத லாகாதென்று மறுத்தவாறு காண்க. (சச)

நினைப்பி னுங்குறி காட்டிடுங் கோசநா
விவற்றுணே ரிழையாரை
யினிப்பை நல்குமுக் கனிமுத லியவுண
வினையெனி னிவைபோலு
முனைப்பல் வாதைசெய் பகைபிறி திலையுணர்ந்
துள்ளமே யொழித்தாயேற்
பினைப்ப ராபரன் றிருவடி நீழல்யாம்
பெறற்கிடை யூறின்றே.

நினைப்பினும் குறி காட்டிடும் கோசம் நா இவற்றுள நேரிழையாரை இனிப்பை நல்கும் முக்கனி முதலிய உணவினை எனின். எ-து. விஷயங்களாகிய வெல்லாவற்றுள்ளும் மகளிரையும் சுவையினைத்தருகின்ற முப்பழமுதலிய புசிப்பினையும் மனத்தால் நினைப்பினும், ஆண்குறியும் நாவும் இலேபனமும் நீருறலும் ஆகிய அடையாளங்களைக் காட்டுமாதலால்,—இவை போலும் உனைப் பல் வாதைசெய் பகை பிறிது இலை உணர்ந்து உள்ளமே ஒழித்தாயேல். எ-து. இவற்றைப்போலும் உனக்குப் பல பிறவித்துன்பங்களைத் தருகின்ற சத்துரு வேறொன்றில்லையாகவின் இப்பொருந்தல் அருந்தல்களைச் சத்துருவென்று அறிந்து நெஞ்சமே விடுத்தனையானால்,—பினைப் பராபரன் திருவடி நீழல் யாம் பெறற்கு இடையூறு இன்றே. எ-து. பின்னர் யாவருக்கும் மேலாகிய பரமசிவனது திருவடியாகிய நிழலை யாம் அடைதற்கு விக்கினம் வேறின்றென்று விவேகங் கூறிற்று. எ - று. நினைப்பினு மெனவே கேட்பினும் பரிசிப்பினும் பார்க்கினும் என்று இந்திரியங்களுக்குக் கொள்க. அருந்தல் பொருந்தல்களில் மனமுதலிய ஆறு இந்திரியங்களும் பிரவிருத்தியாக

வின் திருவடியை அடைதற்கு இவை நிவர்த்தியாகல் வேண்டு மாகலின், பகை பிறிதில்லையென்று கூறப்பட்டது.

இதற்கு உதாரணம்: சிவானந்தமாலை. "ஊனுமுரையு நமன் றூதுவர்காணுள்ளமே—வானுதலார் நேரே மறலிகாண்-பேணி யிவ—ருற்றூர்போல் வந்திடுவர் வந்தாலு மோட்டியர—னற்று மரைப்பதமே நாடு." மற்றும் வருவனவற்றுற் காண்க. (சஞ)

இன்று சூழ்தரு வனிதைய ராதிபல்
போகமு மித்தேகத்
தொன்று நோயெனிற் றோடமாய் நீங்குமாங்
குயிர்பெய ரினுநீற்றை
நன்றெ னுவணிந் துறவின ரிறைபெயர்
நவிலுவ ரெனினெஞ்சே
பொன்று நாட்டுணை யாகநீ றாதிய
போற்றவை போற்றேலே.

இன்று சூழ்தரு வனிதையர் ஆதிபல் போகமும் இத்தேக த்து ஒன்று நோய் எனில் தோடமாய் நீங்கும். எ-து. இந்தக்காய த்திற்கு ஒரு வியாதிவந்து பொருந்துமாயின் இதனால் அனுபவி த்தற்குக் கருத்தில்வைத்த மனைவியாதிய பலபோகங்களும் இக் காலத்துத்தானே புசித்தற்கு அன்னியமாய்ப் போகுமாகலின்,— ஆங்கு உயிர் பெயரினும் நீற்றை நன்றெனு அணிந்து உறவினர் இறைபெயர் நவிலுவர் எனின். எ-து. இவ்வுடம்பினை விட்டு உயிர்நீங்கிய காலத்தும் சுற்றத்தாராயுள்ளார் திருவெண்ணீற்றை அவ்வுயிர்க்கு நன்றென்று கருதித்தரித்து நீங்குந் தருணத்திற் சிவனது திருநாமமாகிய „பஞ்சாக்ஷரத்தையும் உபதேசிப்பார்க ளானல்,—நெஞ்சேபொன்றுநாள் துணையாக நீறு ஆதியபோற்று அவை போற்றேலே. எ-து. இனி நெஞ்சமே உயிர் நீங்குங் கால த்துத் துணையாகலின் அத்திருவெண்ணீறு முதலிய எண்வகை யினையும் அது நீங்காமுன்னரே பேணிக்கொள்ளுதி. மனைவி முதலிய எண்வகைப் பொருள்களும் இருக்கும்போதும் புசித்

தற்கு அன்னியமாகலின் நீ அவைகளைப் பேணுதொழிதி யென்று விவேகங்கூறிற்று. எ - று.

உயிர்பெயரினுமென்ற இழிவுசிறப்பும்மையால் அது பெயராமுன்னரே அணிவது உயிர்க்கு மிகவும் பயனென்பதாயிற்று. வனிதையராதியெனவே வனிதை பஞ்சணை சௌக்கியபோசனம் கந்தம் வஸ்திரம் ஆபரணம் தைலம் தாம்பூலம் ஆக எண்வகையுமென அறிந்துகொள்க. நீறுதியெனவே விபூதி ருத்திராக்ஷம் பஞ்சாக்ஷரம் தீர்த்தம் பிரசாதம் குரு லிங்கம் சங்கமம் எனவறிக. இதற்கு உதாரணம்: சித்தாந்தசிகாமணியுட் காண்க. தவத்தோர்க்கு அவ்வெண்வகையும் நீங்கி இவ்வெண்வகையும் அங்கீகரிக்க வேண்டுமென்பது இதனுட் காண்க. (சஃ)

போற்றி நீறணிந் துருத்திர சாதனம்
  பூண்டிடைந் தெழுத்துள்ளே
சாற்று நீகுரு வாதிமூ வுருவையுந்
  தாழ்ந்திறைஞ் சிவைசெய்தான்
மாற்ற லாம்பிறப் பிறப்பினை நெஞ்சமே
  மன்றுளா டியதாளுந்
தோற்று முள்ளொளிக் குள்ளொளி யாயதைத்
  தொழுது வாழ்தலுமாமே.

போற்றி நீறு அணிந்து உருத்திரசாதனம் பூண்டிடு ஐந்தெழுத்து உள்ளே சாற்று நீ குரு ஆதி மூவுருவையும் தாழ்ந்து இறைஞ்சு இவைசெய்தால், எ-து. மெய்ப்பொருளாகப்பேணி விபூதியை நிறையப் புனைந்து உருத்திராக்ஷங்களைச் சிரசாதிஸ்தானங்களில் தரித்துப் பஞ்சாக்ஷரத்தை மானதமா யுச்சரி; குருலிங்க சங்கமமாகிய மூன்று வடிவையும் தாழ்ந்து வணங்கு; இங்ஙனம் இவற்றை நாடோறும் நீ மறவாதுசெய்தியானால்,— மாற்றலாம் பிறப்பிறப்பினை நெஞ்சமே. எ-து. நெஞ்சமே பிறப்பினையும் இறப்பினையும் மாற்றிக்கொள்ளலாம்,—மன்றுள் ஆடியதாளும் தோற்றும் உள்ளொளிக்கு உள்ளொளியாய்

அதைத் தொழுது வாழ்தலும் ஆமே. எ-து. அஃதன்றிக் கனக சபைக்கண் நடிக்கின்ற சிவனது திருவடியும் உயிராகிய உள் ளொளிக்கு உள்ளொளியாய்த் தோன்றும்; அத்திருவடியைத் தொழுது அவ்விடத்து] எக்காலமும். அழிவின்றி வாழவுங்கூடும் எமக்கென்று விவேகங்கூறிற்று. எ - று.

உயிர்களினது மும்மலங்களையும் நீக்கும் பொருட்டுச் சிவன் தனது அருளால் குருலிங்கசங்கமமாய் வடிவுகொள்ளு தலின் மூவுருவையும் தாழ்ந்து இறைஞ்சென்று கூறப்பட்டது. தாழ்ந்திறைஞ்சுதல் மனத்திலன்பும் வாக்கில் இன்சொல்லுமா கக் காயத்தால் வணங்குதல். வீடடைவோர்க்குச் சிவமுன்னாக அருளே நாவாகப் பஞ்சாக்ஷரத்தைச் செபியாமற் செபிக்க வேண்டுமாகலின் ஐந்தெழுத்துள்ளே சாற்றென்று கூறப்பட் டது. இங்ஙனம் பஞ்சாக்ஷரம் உச்சரித்தால் சகலகேவலம் அறு மாகலிற் பிறப்பிறப்பினை மாற்றலாமென்றும், சகல கேவலங்கள் அறவே புடம்போட்ட பொன்போல உயிர் ஒளி விடுமாகலின் உயிரை யுள்ளொளியென்றும், இவ்வுயிர்க்கும் உள்ளொளியாய்த் திருவருள் தோன்றலின் மன்றுளாடிய தாளும் உள்ளொளிக் குள் ளொளியாய்த் தோன்றுமென்றுங் கூறப்பட்டன. அதை த்தொழுதலாவது தற்போதஞ் சீவியாதுநிற்றல். அங்ஙனம் நிற்கவே பேரின்பந் தோன்றுமாகலின் வாழ்தலுமாமென்று கூறப்பட்டது. (௭௭)

பு லாமரன் புகழின மலர்கவி
மாலைசெய் தவன்றுளில்
பூ மாறுபொன் னிதழிசேர் தோள்களின்
மீதணிந் தினிநெஞ்சே
தாழு வாயரி தேடுபொற் சரணமே
சரணமென் றிதுவன்றிப்
பாழி லேகருங் காக்கைபோற் கதறிநாள்
பலகழித் தொழியேலே.

வாழலாம் அரன் புகழ் இனமலர் கவிமாலைசெய்து அவன் தாளில் வீழுமாறு பொன் இதழிசேர் தோள்களின்மீது அணிந்து இனி நெஞ்சே தாழுவாய் அரிதேடுபொற் சரணமேசரணம் என்று. எ-து. நெஞ்சமே அத்திருவடியை அடைந்துவாழலாம்; சிவனது புகழினமாகிய மலர்களாலே பாவாகிய மாலைகளை வனைந்து திருவடிமீதிற் பொருந்துமாறு பொன்போன்ற கொன்றை மாலைபொருந்திய புயங்களின்மீது தரித்து வணங்குவாய் அரியாலுந்தேடப்பட்ட பொன்போன்ற திருவடியே புகலென்று,— இதுவன்றிப் பாழிலே கருங்காக்கை போல்கதறி நாள்பல கழித்தொழியேலே. எ-து. இங்ஙனஞ் செய்வதன்றிப் பாழிலே கருங்காக்கைபோல் உலகநூல்களைக் கற்றுக் கதறிப் பல நாள்களை வீணிலே கழித்து நாசமாகாதேயென்று விவேகங் கூறிற்று. எ - று.

புகழ்பலவாகலிற் புகழினமென்றும் அதனைப்பாவிற் சேர்த்துக் கூறுதலின் மலரென்றுங் கூறப்பட்டது. துஷ்டநிக்கிரகம் பண்ணுகின்ற புயத்தையும் சிஷ்டபரிபாலனம் பண்ணுகின்ற பாதத்தையும் புகழ்தலின், தாளின்வீழுமாறு பொன்னிதழிசேர் தோள்களின் மீதணிந்தென்று கூறப்பட்டது. மலசங்காரம் பண்ணுகின்ற வெற்றியையும் இன்பத்தைக் கொடுக்கின்ற கிருபையையு மென்றுமாம்.

பொன்னிதழிசேர் தோள்களின்மீது அணிந்து என்பதற்கு உதாரணம்: கந்தரனுபூதி. "இல்லை யெனுமாயையி லிட்டனை நீ—பொல்லா னறியாமை பொறுத்திலையே—மல்லேபுரிபன்னிருவா குவிலென்—சொல்லே புனையுஞ் சுடர்வே லவனே." மற்றும் வருவனவற்றுற் காண்க. (சஅ)

ஒழித்தி டும்பவப் பகைவிரைந் துள்ளமே
யோதுமூ துணர்வோர்முற்
பழிச்சு பாடலை யரற்கவை விடர்க்கிளம்
பாவைய ருரைபோலுங்

கழித்தி டேலுப சாரமென் றிதனைநீ
 கட்டுரை யெனக்கொள்வாய்
விழித்து மாரனை யெரித்ததே வருள்பெறும்
 விருப்பினர் விருப்பீதே.

ஒழித்திடும் பவப்பகை விரைந்து உள்ளமே ஓது மூதுணர்வோர்முற் பழிசசுபாடலை. எ-து. பிறவியாகிய பகை அதிக சீக்கிரமாக வொழிந்துபோம்; மூவர் மாணிக்கவாசகர் முதலிய பேரறிவினையுடையோர் முன்னாளிலே தோத்திரம் பண்ணிய பாடலை நெஞ்சமே நீ தோத்திரம்பண்ணுறி.—அரற்கு அவை விடர்க்கு இளம் பாவையர் உரைபோலும் எ-து. காமுகர்க்கு இளமைத்தன்மையினையுடைய பாவைபோல்வார் கொஞ்சிக்கூறும் வசனம்போல அத்தோத்திரங்கள் சிவனுக்குப் பிரீதியாயிருக்கும்,—கழித்திடேல் உபசாரம் என்று இதனை நீ கட்டுரை எனக் கொள்வாய். எ-து. இங்ஙனம் கூறியமொழியை உபசார மொழியென்று கருதி நீவிடாதே உறுதிமொழியென்று அறிந்து கொள்வாய்—விழித்து மாரனை எரித்த தே அருள் பெறும் விருப்பினர் விருப்பு ஈதே. எ-து. நெற்றிக்கண் விழித்து மன்மதனை யெரித்த கடவுளது திருவருளைப்பெறும் விருப்பத்தினையுடைய மெய்யடியாரது விருப்பமும் இத்தோத்திரங்களேயென்று விவேகங்கூறிற்று. எ - று. ஒழிந்திடுமென்பது ஒழித்திடுமென்று வந்தது. பவத்திற்குக் காரணமாகிய இருவினைகளையும் பவமென்று காரணத்தைக் காரியமாக உபசரித்துக்கூறினர்.

இதற்கு உதாரணம்: திருவள்ளுவநாயனர். "இருள்சேரிருவினையுஞ் சேரா விறைவன் — பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு." மற்றும் வருவனவற்றுற் காண்க. (சகூ)

விருப்ப மாயிது கேட்டிநன் னெஞ்சமே
 விமலனுக் காளல்லார்
பொருப்பை நேர்தனஞ் சொரியினு மவர்களோர்
 புன்னுனித் துணையன்புக்

திருப்பி டேலரன் றொழும்பர்தந் தொழும்பனுய்த்
திரிந்தவர் பணிசெய்தீண்
டிருப்பை யேன்மிக நல்லையிச் சொல்லைநம்
பில்லையேற் பொல்லாயே.

விருப்பமாய் இது கேட்டிநல் நெஞ்சமே. எ-து. நல்லநெஞ்மே இந்த வார்த்தையைச் சந்தோஷமாகக் கேட்பாயாக,—விமலனுக்கு ஆள் அல்லார் பொருப்பை நேர்தனம் சொரியினும் அவர் கண் ஓர் புன்னுனித் துணை அன்பும் திருப்பிடேல். எ-து. நிர்மலனுகிய சிவனுக்கு அடிமையல்லாதவர் பொன்மேருவைப் போலுந் தனங்களைச் சொரிந்தாராயினும் அவர்களிடத்துப் புல்லினது நுனிமாத்திரமாயினும் அன்புவைத்திடேல்,—அரன் தொழும்பர்தந் தொழும்பனுய்த் திரிந்து அவர் பணிசெய்து ஈண்டு இருப்பையேல் மிகநல்லை. எ-து. சிவனது அடியாருக்கு அடியானுகித் திரிந்து அவரது பணிவிடைகளைச் செய்து இவ்விடத்து இருப்பாயாகில் எமக்கு மிகவு நன்மையினையுடையை நீ,—இச் சொல்லை நம்பு இல்லையேல் பொல்லாயே. எ-து. யான் இங்ஙனங்கூறிய சொற்களை உண்மையாக நம்பு இவைகளை நம்பாது ஒழிதியேல் எனக்கு நீ பொல்லாயென்று விவேகங்கூறிற்று. எ-று.

இதற்கு உதாரணம்: திருநாவுக்கரையர். "சங்கநிதி பதுமநிதி யிரண்டுந் தந்து தரணியொடு வானாளத் தருவரேனு—மங்குவா ரவர்செல்வ மதிப்போ மல்லே மாதேவர்க் கேகாந்த ரல்லாராகி—லங்கமெலாங் குறைந்தழுகு தொழுநோயரா யாவுரித்துத் தின்றுழலும் புலையரேனுங்—கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராகி லவர்கண்டீர் நாம்வணங்குங் கடவுளாரே." மற்றும் வருவனவற்றாற் காண்க. (௫0)

வைராக்கியசதகத்தின் முற்பாதியாகிய சாத்திரமுற்றிற்று.

---

மனம் தானுமன்று தன்வயமுமன்று என்று அறிந்து அதனைவிடுத்துத் தன்னையும் அதனையும் கூட்டவும் பிரிக்கவும் வல்ல சிவத்தை நோக்கி மேல் விவேகம் கூறுகின்றது.

உ

கணபதி துணை.

# வைராக்கிய சதகம்.

## ஸ்தோத்திரம்.

### மூலபாடம்.

பொல்லாதவெனெஞ்சமோரைந்துபுலன்கடம்பா
லல்லாதரைமாத்திரையுஞ்சின்னடிக்கணன்பாய்
நில்லாதிதற்கென்னைசெய்கேனிதைநின்றிடென்றே
சொல்லாய்திருத்தில்லையுண்மேவியசோதிநீயே. (க)

நீயேயருள்செய்யினல்லாதுபொய்நெஞ்சவஞ்சத்
தீயேனுனைவந்தடைதற்கொருசெய்கைகாணேன்
பேயேனுமுனைத்தொடரும்படிபேசுதில்லைத்
தூயோவொருபாயம்விடாதினிச்சூழ்ந்துநின்றே. (உ)

நின்றாய்திருத்தில்லையுளாயென்றனெஞ்சினுள்ளே
யென்றாலுமெனக்கதிதூரமதாயிருந்தா
யொன்றாலுமுனைத்தொடர்கிற்குமுபாயங்காணேன்
மின்றாழ்சடையாய்தமியேற்குவிளங்கிடாயே. (௩)

விளங்கும்மெழிற்பேதையர்காதல்விடாதயானக்
களங்கம்மறுவோர்தொழுநின்கழல்காணுமாறென்
றுளங்கும்மொளித்தூமதிசூடியதோன்றலேயென்
னுளங்கொண்டிடுநீயினிக்கோயிலதாவுவந்தே. (௪)

வந்தித்திடுவார்பவநோய்க்குமருந்தனையைச்
சந்தித்திடுவான்மறித்தான்மனந்தப்பியப்பா
விந்தப்புவியுங்கடலுங்கடந்தேகுமென்று
லெந்தப்படியுய்வதியான்றில்லையெம்பிரானே. (ரு)

பிரானேதிருத்தில்லையுளாயன்றிப்பேதையேன்மு
னொரானேறிவர்ந்தம்பிகையோடெளிதோடிவந்தாய்
வரானோவினமெம்பிறையென்றுனைநாடிவாடி
யிரானாயடியேற்கெதிர்தோன்றிலையின்றிதென்னே. (சு)

என்னாயகனேயிமையோர்தொழுமீசனேசெம்
பொன்னார்திருவம்பலத்தாடியபூதநாதா
வுன்னாருளாலினிவீட்டிடையுய்த்தியின்றேற்
பின்னாருயக்கொள்ளவலாரெம்பிழைகளர்த்தே. (எ)

தீராதவோரைம்புலச்சேட்டையுந்தீர்ந்துபோய்வெங்
கூரார்மழுவாளிநின்பாதங்குழைந்துபோற்றி
நீராயுருகித்தொழுதுன்னைநிற்கும்வண்ண
மோர்நாளுளதோதமியேற்குமுரைத்திடாயே. (அ)

உரையேனனிவாய்திறந்துன்புகழ்தன்னைநாளும்
விரையார்மலரிட்டருச்சிக்கவிருப்புமில்லேன்
கரையேனுளநின்னினைந்தெத்திறத்தாற்கடப்பேன்
றிரையார்வினையார்பிறவிக்கடறில்லையானே. (கூ)

ஆனேறிவர்ந்தென்னெதிரேவிரைந்தன்றுவந்தோய்க்
கேனோவெறுப்பிப்பொழுதோர்சற்றிரங்குகில்லாய்
நானோவறிவேனுன்பெருமையைநம்பனேநீ
தானேபொறுத்தாளுகண்டாயென்றவ்வுறலாமே. (க0)

எல்லாமறிவோயறிந்தேவகுத்திட்டவாறே
யல்லாற்றமியேனும்புரிவதொன்றில்லையானாற்
பொல்லாமைசெய்வித்தவனீபொறுப்பானுநீகல்
வில்லாயிளைத்தேனைப்பவத்தினிவிட்டிடேலே. (கக)

ஏலக்குழலாரநுராகமதென்னுமாயா
சாலக்குணைந்தேற்குனதின்னருடந்துகாப்பாய்
நீலக்களமாலயனோடுமுன்னேடிவாடு
மூலக்கனலேகனலேந்துகைம்முக்கணானே. (கஉ)

கண்ணார் நுதலோய்கடையேனையுமொன்றதாயே
யெண்ணாவருளன்றுசுரந்துளைக்கின்றிலாதென்
விண்ணோரிறையோய்க்குமுண்டோசொல்வெறுப்பினோடு
தண்ணார்விருப்புங்கரிப்போர்வையசாற்றிடாயே. (கங)

சாற்றாய்திருத்தில்லையுள்ளாய்சிவசங்கராவெண்
ணீற்றாய்கடையேனுயுமாறென்றனெஞ்சுளஞ்சிப்
போற்றாதிருந்தேன்வருந்தாமலென்புத்திதன்னைத்
தேற்றாயொருநீயினியன்பினைச்செய்யுமாறே. (கச)

ஆறாயைவ்வாரைந்துபுலன்வலிமாய்த்துநெஞ்சை
நீறார்திருமேனியவுன்கணிறுத்தமாட்டே
னேறாதபவக்கடலேறவுமெண்ணிலநந்தேன்
கூறாயெனதெண்ணமெவ்வண்ணங்கைகூடுமன்றே. (கரு)

அன்றேதமியேற்கெளிமானுடனாகிநீவந்
தன்றாள்களளித்தனைபெற்றுமொன்றும்பெறாரி
னின்றேனலைதம்புலனென்வசநின்றதில்லை
யின்றேதவற்றைக்கொலுபாயமொன்றீசவெற்கே. (கசு)

எற்கோவுனதன்புமனத்திலையென்றனெஞ்சங்
கற்கேநிகராயதிக்கல்லைநீகல்லைவில்லா
முற்கால்வளைத்தாங்குவளைத்தன்பின்மூழ்குவிப்பாய்
சிற்கோலசிதம்பரநாயகதேவதேவே. (கஎ)

தேவேயுனையன்பினிற்பூசைசெய்தேனுமல்லே
னாவான்மிகப்பாடிநின்றாடிநயக்குகில்லே
னோவாதுழநீமனத்தோடிவனுற்றுளேன்மற்
றாவாவினியென்வருமென்பதறிந்திலேனே. (கஅ)

அறியாமையிற்கீழவர்பல்பிழையாற்றினுங்
குறியாதருள்செய்வதுமேலவர்கொள்கையன்றோ
மறியார்கரத்தோய்சிறியேன்வினைமாற்றியாளப்
பொறியேனுனக்கென்முகமன்சொலப்பொய்யனேனே. (௧௯)

பொய்யற்றவர்வந்தடையும்பரிபூரணாவிம்
மெய்யற்றவெற்குனினலாளிலைவேறுமுண்டோ
தையற்கிடமேயிடமாவருடாணுவேயென்
மையற்றவிர்ப்பானுன்கடாக்ஷம்வழங்கிடாயே. (௨௰)

வழங்கெற்கிவணேதுசெய்தாலெதுவாகுமென்றென்
றெழுங்கற்பனையாவுமிறந்துணர்வேகமேயா
யொழுங்கிற்புலனாதியுபாதியொழித்தொருன்னைச்
செழுங்கைக்கனியொத்துணரும்படிதில்லையானே. (௨௧)

தில்லைப்பதிமேயசிவப்பிரகாசனேயோ
தொல்லைப்பிறவாநெறிமேவியதோன்றலேயோ
வல்லற்பிறவிக்கிளைத்தேன்றனையஞ்சலென்றோர்
சொல்லைப்பகராய்விடைமீதினந்தோன்றிநின்றே. (௨௨)

தோன்றாத்துணையேபுணையேபவத்தொல்கடற்கென்
போன்றார்க்குமிரங்குமருட்பெரும்போதமேயிங்
கீன்றார்மனையாதியமோகமெலாம்விடுத்துட்
சான்றாமுனையேவினையேனினிச்சாரவெண்ணே. (௨௩)

சார்ந்தாய்குருவாதியவாய்விடைதன்னில்வந்தாய்
கூர்ந்தாயருளிற்பிறவாநெறிகூட்டுவித்தா
யோர்ந்தேன்குறையின்றெனினுங்குறையுண்டுகண்டாய்
பேர்ந்தோடுமெனெஞ்சனுன்னன்புபிறக்குமட்டே. (௨௪)

பிறவாநெறியாகியதோர்திருப்பேரையாவெம்
முறவேயறவேதவிர்த்தென்மனமோடிவாடிப்
புறவாதனைபற்றிவளர்த்திடுபுன்மையாலின்
றிறவேயதனைப்புரிவானுளத்தெண்ணுவாயே. (௨௫)

எண்ணும்வடிவேதினிநீபுனைந்தெய்தினாலுந்
திண்ணம்மெனவாவகலாவச்சிதம்பரத்தே
நண்ணும்முனதுண்மையைக்காணநயந்துளேனென்
னுண்ணின்றதைக்காட்டுதற்கீசசற்றுன்னுவாயே. (உசு)

உன்னும்முணர்வுக்குணர்வாயெனக்குண்மைதந்தாய்
மன்னுஞ்சுருதிப்பொருளாய்வழிகாட்டிநின்றாய்
பின்னுங்குருவாயடைந்தின்னருள்பேணவைத்தா
யென்னென்றுரைப்பேனின்கருணையிருந்தவாறே. (உஎ)

இருந்தோருமிடத்துணர்வில்லைமாயைக்கிதன்பாற்
பொருந்தாவிடத்தில்லையுயிர்க்கொருபோதமேனுந்
திருந்தாவிவைகொண்டிறையைந்தொழில்செய்தியென்றே
வருந்தாவருண்முன்னிலைதன்னைமதித்தியானே. (உஅ)

மதிதஆதனபருவத்தளவிற்குருவாதியாகி
யுதித்துள்ளறிவோங்கும்வகைக்குபாயஞ்செய்தோயை
யெதிர்த்திங்ஙனஞ்சற்குருசற்குருவென்றுனைந்துந்
துதித்துந்திரியாவெனக்கின்னருடந்துதோன்றே. (உகூ)

தோன்றாமன்முனிந்தொருதாய்வயிற்றோன்றுபால
ரீன்றாடனைத்தம்மின்வேறாக்கொடிகழ்ந்தவாபோற்
பூன்றாவொருநீயருளாற்புனைமேனியெல்லாம்
யான்றான்பலதெய்வமெனக்கொடிகழ்ந்தவாறே. (ஙo)

இகழும்பொருளொன்றிலைமண்முதலெட்டுமெந்தாய்
நிகழுன்வடிவேயெனத்தேர்ந்துளநெக்குநின்றாட்
புகழும்படியேயினியீசவென்புத்திதன்னைத்
திகழும்படிசெய்திதிரோபவஞ்செய்திடேலே. (ஙக)

செய்யாய்கரியான்றொழும்வெள்ளிளஞ்சேவையூர்வோய்
வையார்மழுவோய்திருவுள்ளமிவ்வஞ்சனேனு
மையாவிழிபெய்வுறநீர்பெரிதன்பினோடு
கையாற்றொழுதேத்திநின்கூத்தினைக்காணுமாறே. (ஙஉ)

காணாதபவக்கடலின்கரைகாணவெற்குக்
கோணாகணிமார்பமெய்யன்புகொடுத்தியென்றே
நாணாதிசைத்தேன்றிருக்காளத்திநாதயுன்றாட்
பேணாதவலக்கடன்மூழ்கியபேதையேனே. (௯௩)

பேதைக்கொருபாகமளித்திடுபேரையாவெங்
கோதைக்குநின்றேனாறுகோதைகொடென்றுநின்பா
லோதற்கெனுளத்தைவிடுத்தனனோடிமாதர்
காதற்களையுண்டமையாலுனைக்கண்டதின்றே. (௯௪)

கண்டேன்களிகூர்ந்துசிவப்பிரகாசநாமங்
கொண்டோங்குருவோடிவனுற்றெனையாண்டகோவே
பண்டேயொருநீவகுத்திட்டபடிக்கியானுன்
றொண்டாகிவந்தின்றுனைப்பாடத்தொடங்கினேனே. (௯௫)

தொடக்காயெனைச்சூழ்ந்துளவைம்புலத்தோற்றமெல்லாங்
கெடக்கூறுதிநீயொருசூட்சிகிளக்கிலாயே
லடக்காவவையென்றனகத்துளடங்குகாறுங்
கடக்கேன்பவவேலையெவ்வண்ணமுங்கண்ணினேனே, (௯௬)

கண்ணான்மதனைப்பொடியாம்வகைகண்டவெண்டோ
ளண்ணாவுயிர்யாவுமளித்திடுமப்பனேயோ
தண்ணார்பொழிற்றில்லையுளாயெனக்கீதுதாராய்
மண்ணாதியவாசைகளற்றனைவாழ்த்துமாறே. (௯௭)

வாழ்த்தேனுனைநாடொறும்வாழ்த்தவல்லோர்கடாளிற்
றாழ்த்தேன்றலையாங்கவரேவறலைக்கொள்கில்லேன்
வீழ்த்தேனெடுங்காலமவத்திலொண்மேருவில்லோய்
பாழ்த்தேன்கிளிபோற்பலநூல்கள்படித்துமியானே. (௯௮)

யானாருடற்கின்பதுன்பங்களையெண்ணவெண்ணித்
தானேசிறுபாலரினென்மனஞ்சஞ்சலிக்கு
மீனாயினன்பாலலதென்கண்விடுத்திசொல்லோ
வானேறுடையாய்திதியாமதிகாரநீயே. (௯௯)

காரார்மிடற்றாயளிசூழ்தருபொற்கடுக்கைத்
தாரார்புயனேசிவகாமசவுந்தரிக்கோர்
சீரார்மணவாளவென்றன்குலதெய்வமேநீ
பாராய்கடைக்கண்ணெனதெண்ணம்பலிக்கவின்றே. (௪0)

இன்றென்னைசெய்கேனெனநாடியிருந்தநீயேற்
கொன்றெய்தினெவ்வண்ணமறும்மதையோதுவேனோ
வன்றன்னமுமேனமுமோர்வருமையநின்றா
ளொன்றன்பர்குழாத்துறவீதருளாயுவந்தே. (௪௧)

உவந்தாயெனதைம்புலனும்பிரிந்தோடவோர்நாட்
டவந்தான்சிறிதும்பிலிபால்விடைதன்னின்மின்னோ
டிவர்ந்தேவரநாளும்விளங்கிலையென்னைகொல்லோ
வவந்தான்மிகுபாவியுன்லீலையறிந்திலேனே. (௪௨)

அறியாமையிற்கட்டுணலுற்றதென்னுண்மையத்தைப்
பிறியாதுவிட்டேனனலெந்தைபிரானுனுண்மை
குறியீதிருவர்க்குமென்றாலெனைக்கோபியேலே
செறிவாய்மலமேயிறையோடிகல்செய்ததன்றே. (௪௩)

செய்விப்பன்வினைத்தொகைவெம்பவஞ்சேர்ப்பனுன்னை
யுய்விப்பனலச்சிவனுண்மையுயோர்வனென்றோ
ரைவர்க்கெதிரேயெனைநோக்கியறைந்ததையா
மைவெற்பனவாணவநீயதைமாற்றிடாயே. (௪௪)

மாற்றாயெனக்காணவமாயையில்வந்துவந்தே
தோற்றாவுளகேவலமாதியசுத்தமொன்றா
டேற்றாயவணேற்றியிரண்டறுத்தெங்குமாகிக்
கூற்றாவிகொள்பதத்தென்னாவியுங்கொள்ளுவாயே. (௪௫)

கொள்ளேனெனினுமெழுத்தைந்துமுட்கோதியாதுந்
தள்ளேனெனினுமுனைச்சார்தவஞ்சார்ந்திலாரை
விள்ளேனெனினுமெனைநீகைவிடேல்விடேல்கா
ணள்ளாறுடையாயவிநாசிநயந்துளானே. (௪௬)

கயவாது தில்லாபுரியோயுனை நாடிநாளும்
வியவாதுடலோடுறவென்றும்விடாதென்னுள்ளங்
கயவாதுறுபோகமெலாமிவைகண்டுவீடும்
பயவாதிதென்றேபயந்தேன்மிகப்பாவியேனே. (௩௭)

பாவார்பெரியோர்புகழ்சிற்றம்பலத்துளோயை
நாவாற்சிறியேன்றுதிசெய்யுமிந்நன்கில்சொல்லு
மோவாதிரையோருழைதாவியவுன்செவிக்கே
மேவாதலவென்றுதுணிந்துவிளம்பினேனே. (௩௮)

விளம்பற்கருஞ்சோதியென்கோவிடையோனென்கோவென்
னுளம்புக்கசிவப்பிரகாசனென்கோவென்னங்கைத்
தளம்பற்றியசார்தனென்கோநின்றனதுநாமம்
வளம்பெற்றதிருக்கைலாயசொல்வாயெனக்கே. (௩௯)

எனக்கீந்தினியாண்டிடல்வேண்டுமெம்மீசனேமற்
றுனக்கேசரணஞ்சரணம்புலனேனுமென்றன்
மனக்கோதனைத்துமிறந்தோங்கறிவாகியாங்கே
பினைக்காண்பவன்காட்சியுமற்றவபேதவாழ்வே. (௪௦)

திருச்சிற்றம்பலம்.

சாத்திரம் - ௪௦, தோத்திரம் - ௪௦. ஆக பாடல் ௧௦௦.

வைராக்கியசதகமுற்றிற்று.

உ

கணபதி துணை.

# வைராக்கியதீபம்

## மூலமும் உரையும்.

### பாயிரம்.

**கணபதி வணக்கம்.**

*ஆரணமுகம்புகழ் - வாரணந்துதிசெயக்*
*காரணசுகபரி - பூரணம்வருமே.*

**சுப்பிரமணியர் வணக்கம்.**

*போரூரிறைவன் - சீரூர்தாளை*
*யேரூர்தரநினை - நேரூர்நெஞ்சே.*

**நூலாசிரியர் வணக்கம்.**

*ஆய்ந்தவின்பம் - வாய்ந்துளநிறையச்*
*சார்ந்தையன்பதம் - யாந்தொழுவோமே.*

**குரு வணக்கம்.**

*தாயினு மிரங்கியென் றனைவந் தாண்டரு*
*ளேயவன் சரணமே சுமக்க வென்றலை*
*வாய்துதி செயக்கர மலர்க ளேய்த்தொழ*
*நேயமோ டறுதின நினைக நெஞ்சமே.*

**கடவுள் வணக்கம்.**

*திருவளர் கமலத் தயன்செயிப் புவிமுன் றிகழ்தரு மூல மெலாந் தன்பான், மருவுசிற் சத்தி யெனுங் கிரணத்தால் வந் தெழு கானனீ ராக, விருமையா மதிமாய்த் தறிஞராங் காந்தத் திடையருட் சுட *ருமிழ்ந் திலங்கு, மொருசிவா தித்தன் றனை நம திருள்போ யொழியநா டொறுமிறைஞ் சிடுவாம்.*

---

* உமிழ்ந்து - பிறவினைப்பொருளில் வந்தது.

எ - து. அழகு வளரா நின்ற தாமரைமலரின்கண் எழுந்தருளியிருக்கின்ற பிரமனாலே சிருட்டிக்கப்பட்ட இந்தப் பிருதிவி தத்துவமுதலாக நாததத்துவமீறாக விளங்காநின்ற பிரபஞ்சமெல்லாம் தன்கட்பொருந்திய சிற்சத்தியாகிய கிரணத்தினாலே வந்துதோன்றின கானற்சலமாக அறிஞர்களது துவிதபுத்தியாகிய சந்திரனொளியை மறைத்து அவர்களாகிய காந்தக்கற்களிடத்துக் கிருபையாகிய அக்கினியைத் தோன்றச்செய்து விளங்காநின்ற ஒப்பற்ற சிவசூரியனை நமது அஞ்ஞானமாகிய விருள் போய் நீங்கும்படி எக்காலமும் வணங்குவாம். எ - று.

சூரியனை விட்டுநீங்காத கிரணமும் அக்கிரணத்தை விட்டு நீங்காது பொய்யாய்த் தோன்றுகின்ற கானற்சலமும் அசசூரியனது மிகுந்த பிரகாசத்தினாலே சந்திரப் பிரகாசமறைதலும் காந்தக்கல்லினிடத்து அக்கினிதோன்றுதலும் அவனது சன்னிதியி லியல்பாயுண்டாவதுபோல் சிவனைவிட்டு நீங்காத அபின்னாசத்தியும் அசசத்தியைவிட்டு நீங்காது பொய்யாய்த்தோன்றுகின்ற பின்னாசத்தியும் அசசிவனது ஞானத்தினாலே அறிஞரது துவிதபுத்தி மறைதலும் அவரிடத்து அருள்தோன்றுதலும் இவனது சன்னிதியி லியல்பாயுண்டாமென்பதும், சீவனுமீசுவரனும் பின்னாசத்தியி லிருத்தலினாலும் அப்பின்னாசத்தி பொய்யாய்த் தோன்றுதலினாலும் அபின்னாசத்தி சிவனது பிரகாசமாதலினாலும் இச்சிவனாகிய சத்திமானைவிட அச்சத்திகள் வேறல்லாமையாலும் பொருளொன்றென்பதும், கண்டுகொள்க. சூரியனைக் கண்டபேர்க்குப் பூதவிருள் நீங்குதல்போற் சிவனை யெக்காலமும் வணங்குவோர்க்கு அஞ்ஞானம் நீங்குமாதலின் நமதிருள்போயொழிய நாடொறு மிறைஞ்சிடுவாமென்றார். (க)

துன்னியா ணவப்பாம் பெமதறி வெனுமோர் சுடர்கெழு
பூரண மதியை, முன்னமே தீண்டிற் றொளிவெளிப் படலான்
மோசன காலமெய் தியதாற், றன்னிடத் தீசன் முதற்புவி முடி
வெண் டருநரை யாதிவர் தொடுக்கப், பின்னைய பினையார்த்தி
ரைகள்வீ சிடுமோர் பிரமவேலையிலினிப் படிவாம்.

எ - து. ஆணவமாகிய பாம்பு செறிந்து எமது அறிவாகிய ஒப்பற்ற ஞானப்பிரகாசம் பொருந்திய பரிபூரணசந்திரனை அநாதியே மறைத்தது. இப்போது ஞானப்பிரகாசம் விளங்குதலின் விடுதலைக்காலம் வந்துபொருந்திய தாகையால் தனதிடத்து நாததத்துவமுதலும் பிருதிவிதத்துவ மீறுமாக வெண்ணப்பட்ட நுரைதிவலைகுமிழிகள் தோன்றி ஒடுங்கும்படி பின்னுசத்தி அபின்னுசத்திகளாகிய விரண்டலைகளை வீசாநின்ற ஒப்பற்ற பிரமசாகரத்திலே இனி மூழ்குவாம். எ - று.

உயிரினது இச்சாஞானக்கிரியையாகிய சந்திரனை அநாதியிலே மறைத்த ஆணவமாகிய பாம்பு இப்போது விடுதலையாக ஞானப்பிரகாசம் விளங்குதலின் இனிப்பிரமத்தை அடையலாமென்பது துணிந்து பிரமவேலையிலினிப்படிவா மென்றார். பின்னுசத்தியால் அனேகமாகக் காண்குதல் - அபின்னுசத்தியால் ஏகமாகக் காண்குதல். இங்ஙனம் ஏகமாகக் காண்குதலும் ஓரசைவாகலின் இச்சத்தியையும் அலையாகக் கூறினரென்க. நுரை திவலை குமிழிகளென்றது தத்துவங்களையும், நானாவாகிய தேகங்களையும், அண்டங்களையும் எனக்கொள்க. (௨)

அருளிறை வணக்கம்.

எப்பொருள் களுமா யொப்புயர் வின்றி யிருந்ததன் னுருவிறை குறையா, தப்படி யிருக்க வாலியா நீரி னருளிறை யாயெமக் கேம, வைப்பென வன்னை யெனப்பிதா வெனக்கண் மணியெனத் தவப்பய னெனவுட், செப்புயி ரெனவந் தாண்ட காளத்தி தேசிகன் றிருவடி பணிவாம்.

எ - து. எவ்வேறு வகைப்பட்ட பொருள்களெல்லாம் தானாய்ச் சமானாதிகமின்றியிருந்த தனது சொரூபத்திலே சிறிது மாத்திரமாயினும் குறைவுபடாமல் இருந்தபடியே யிருக்க, நீர் ஆலாங்கட்டியாய்த் தடித்ததுபோற் பூரணமாகிய தான் தடித்துக் கிருபா மூர்த்தியாகி எம்போல்வார்க்கு இன்பம்பொருந்திய நிக்ஷேபம்போலவும், தாய்போலவும், தந்தைபோலவும், கண்

ணின் மணிபோலவும், தபோபலம்போலவும், உடலுக்குள் உயிர் போலவும், வந்து ஆட்கொண்டருளிய காளத்திதேவனென்னு நாமதேயத்தைடையுடைய ஆசாரியனது அழகிய பாதங்களை வணங்குவாம். எ - று.

நிக்ஷேபத்தை நினைக்குந்தோறும் மனப்பூரிப்பு வருதல் போல் ஆசாரியனை நினைக்குந்தோறும் மனப்பூரிப்பு வருதலின் வைப்பென்றும், தாய் அமுதூட்டி உடம்பை வளர்த்தல்போல் உபதேசமொழிகளை அனுக்கிரகித்து அறிவைவளர்த்தலின் அன்னையென்றும், தந்தை தவிர்காரியத்திற் செல்லுதலைத் தடுத்துச செய்காரியத்திற் செலுத்துதல்போல் அசாஸ்திரப்பிரபஞ்சத்தின்வழி செல்லாது தடுத்துச் சாஸ்திரப் பிரபஞ்சத்தின்வழி செலுத்துதலிற் பிதாவென்றும், கண்மணியானது நன்று இது தீது இது என்று அறிவித்தல்போற் பந்தந் துன்பமென்றும், மோக்ஷம் இன்பமென்றும் அறிவித்தலிற் கண்மணியென்றும், தவப்பயன் எங்கேயிருந்தாலும் அங்கேவந்து உதவி யின்பத்தைக் கொடுத்தல்போல் எங்கேயிருந்தாலும் தமதுபூரண சொரூபத்தை விளக்கி யின்பத்தைக் கொடுத்தலின் தவப்பயனென்றும், உடலுக்கு ளுயிர் அந்தவுடலை அபிமானித்து அதன்கண்வருந் துன்பத்தைத் துடைத்தல்போல் உயிருக்குயிராயிருந்து அவ்வுயிருக்குத் துன்பந் தருகிற மும்மலங்களைத் துடைத்தலின் உடலுட் செப்புயிரென்றும், கூறினரெனக்கொள்க. (கூ)

அருந்திய காலத் தற்பமாப் பிற்பே ரௌடத முடலினின் றுடலை, * வருந்தல்செய் பிணியெல் லாமகற் றுதலின் வஞ்சனை னெஞ்சின்மாற் றரிதா, யிருந்தவெப் பற்றும் பிற்றைநாள் களின்விட் டேகவன் றேகடைக் கணித்தல், புரிந்தநங் குரவ னருளிருந்தமை யெப்பொழுது முண்ணி னைந்து வாழ்த்திடுவோம்.

எ-து. ஒரு வியாதிக்குக் கொடுக்கப்பட்ட பெரியமருந்தை உட்கொண்டகாலத்தில் அம்மருந்து முன்னர் வியாதியைச்

---

* வருந்தல் தொடைநோகி மெலிந்தது.

சிறிதாகநீக்கிப் பின்னர்த் தனதுசாரம் உடலிலே நின்றூறி அந்தவுடலை வருத்துதல் செய்கிற வியாதிகளையெல்லாம் ஒருங்கே நீக்குதல்போல், வஞ்சகனாகிய வெனது மனத்தின்கண் நீங்குதற்கு அரிதாயிருந்துள்ள எவ்வகைப்பட்ட பற்றுக்களும் பின்பு சிலநாள்களிலேவிட்டு நீங்கத் திருவடியை அடைந்த வன்றே கிருபாநோக்கஞ் செய்த நமது ஆசாரியனது கிருபை யிருந்ததன்மையை எக்காலத்தும் மனத்தினாலே நினைத்து வாக்கினாலே தோத்திரம் பண்ணுவாம். எ - று.

வைத்தியன் கொடுத்த மருந்தை ஒருவன் உட்கொண்ட காலத்தில் அம்மருந்து முன்பு சிறிது வியாதியைப்போக்கி அவன் சொன்ன பத்தியபாகப்படியே நிற்க அஃது உடலிலேநின்று ஊறிப் பின்பு மற்றைவியாதிகளை யெல்லாம் ஒருங்கே நீக்குதல் போல், ஆசாரியர் கிருபாநோக்கம் வைத்த காலத்தில் அக்கிருபா நோக்கம் முன்பு சிலபற்றுக்களைநீக்கி அவர் அருளிச்செய்த நன்மார்க்கத்தின்படியே நிற்க அக்கிருபை மனத்தின்கண் மாறாது நின்று மற்றைப்பற்றுக்களையும் போக்கிற்றென்பது கண்டுகொள்க. (௫)

## வேதாகமச்சிறப்பு.

அரையன்வா யுரைகள் வரைதரு முடங்க லதுவரக்காணின்மற் றவனு, டரையின்வாழ் பவருண் ணடுங்கியோர்ந் ததன்வாய்ச் சாற்றிய முறைசெய்வா ரென்றாற், கரையில்பே ரின்பந் தரவெமக் கிறைசொல் கட்டுரை யென்னின்வே றென்னை, புரையுள வேதா கமமவ னெனக்கண் டுரைத்தவா புரிகுவ தல்லால்.

எ-து. இராசாவினது வாய்மொழிகள் எழுதப்பட்ட திருமுகமானது வரக்கண்டபோது அந்த இராசாவினால் ஆளப்பட்ட பூமியின்கண் வாழாநின்றோர் மனநடுக்குற்று அந்தத் திருமுகவாசகத்தை யெல்லாம் விசாரித்து அதன்கண் சொன்ன ரபிகாரமே செய்து முடிப்பாரானால் மட்டில்லாத பேரானந்

தத்தைத் தருதற்பொருட்டு எமக்கு இறைவனாற் கூறப்பட்ட உறுதிமொழிகளாலல் வேறேயும் வார்த்தைகள் என்னையுள்ளன; வேதாகமங்களை அவ்விறைவனெனவே கண்டு அவற்றின்கண்ணே சொல்லப்பட்ட முறையே செய்து முடிப்பதல்லாமல். எ - று.

இராசாவினது திருமுகத்திற் சொன்னபடியே செய்தோர்க்கு இன்பமும் அதற்கு மாறுபாடாகச் செய்தோர்க்குத் துன்பமும் இம்மைக்கண் வருதல்போல் இறைவனது வேதாகமங்களிலே சொன்னபடியே செய்தோர்க்கு வீட்டின்பமும் அதற்கு மாறுபாடாகச் செய்தோர்க்குப் பிறவித்துன்பமும் மறுமைக்கண் வருமென்பது கண்டுகொள்க. இராசாவைக் காணாதவிடத்தும் அவன் வாய்மொழிவரைந்த திருமுகத்தை அவனெனக் காணுதல்போல் இறைவனைக் காணாதவிடத்தும் அவன் வாய்மொழிகளாகிய வேதாகமங்களை அவ்விறைவனெனக் காணல் வேண்டுமென்று வேதாகமமவனெனக் கண்டென்றார். (௫)

முதனூல்.

கற்பழ மாகப் புரிதலிற் பெரிதென் கருத்தினைத் திருத்திவந் தாண்ட, சிற்பர னருளாற் சொற்பொரு ளறியாதேனும் வேதாகம வழியீண், டிற்பவ மாதித் துயரைமுற் றவத்தா னுணர்ந்தவர் துறவெனும் வாளா, லிற்பொருந் துத*லைமுதலவா வறுத்தோரின்பவீ டுறல்சொலற்கியைந்தேன்.

எ-து. கல்லைக் கனியாகச் செய்ததுபோல் மிகவும் எனது மனத்தினைச் செப்பஞ் செய்து வலியவந்து ஆட்கொண்டருளிய ஞானாசாரியனது கிருபையினாலே சொல்லியல்பு பொருளியல்புகளை அறியாத யானும் வேதாகமங்களிற் கூறப்பட்ட மார்க்கத்தின்படியே இந்நூலின்கண் உற்பத்தி திதி லயங்களினால் வருந் துன்பங்களை முற்பிறவிகளிலே செய்யப்பட்ட நிட்காமிய தவத்தினாலே இப்பிறவியிலே அறிந்தோர்கள் துறவாகிய வாளினாலே

* ஐ—சாரியை.

இல்வாழ்க்கையைப் பொருந்துதல் முதலிய அவாக்களைச் சேதித்து ஒப்பற்ற ஆனந்தமோக்ஷத்தை அடைதலைச் சொல்லுதற்குச் சம்மதித்தேன். எ - று.

சொற்பொருளிலக்கணந் தெரியாதிருந்தாலும் குருவினது கிருபையினாலே எல்லாம் விளங்குமாகலிற் சிற்பரனருளாலென்றும், இந்நூலைக் கற்பித்துச் சொல்லாமல் வேதாகமத்திற்சொன்ன மார்க்கத்தின்படியே சொல்லுகையினால் வேதாகமவழியென்றும், முற்சனனங்களிலே தவம் புரிந்தவர்க்கல்லது பிறவி துன்பமென்று தோன்றாது ஆகையால் உற்பவமாதித் துயரை முற்றவத்தானுணர்ந்தவரென்றும், முன்பெரியோர்கள் வீடடைந்த மார்க்கத்தின்படியே இனிமேல் அடைவாரும் செல்லவேண்டுதலின் அவாது நடையை இவர்களுக்கு அறிவிக்கவேண்டி முற்றவத்தா லுணர்ந்தவரின்பவீடுறல் சொலற்கியைந்தேனென்றும் கூறினார். (கூ)

## அவையடக்கம்.

துணையில்பே ராசைக் கடலுளோர் கரையாந் துறவுவந் துறவுநதற்கோர், புணையெனப் பெரியோர் வகுத்தநூல்களின்முற் போதமி லேனுமீ துரைத்த, லுணையமெய் வருந்த வயனெடு மாலன் றுயர்ந்துதாழ்ந் தோடியுங்காணு, விணையிலி நடித்தல் செயமருங் கலகை யினமமைசந் திடுதலி னன்றே.

எ-து. உவமை சொல்லக்கூடாத பெரிய ஆசையாகிய கடலின்கண் ஆழ்ந்துளோர்க்கு அதற்குக் கரையாகிய துறவு வந்து பொருந்தும்படி விருப்பமுற்று அக்கடலை நீந்துதற்கு ஒரு தெப்பமாகப் பெரியோர்கள் வகுத்துச் சொல்லிய நூல்களின் முன்னர் அறிவிலாத யானும் இந்நூலைச்சொல்லுதல் உள்ளம் நைய உடலம் வருந்த நான்முகனும், திருமாலும், அக்காலத்தில் அன்னரூபமாய் ஆகாசத்திலே பறந்து உயர்ந்தோடியும், பன்றிரூபமாய்ப் பூமியைக்கீண்டுதாழ்ந்தோடியும், காணாத ஒப்பற்ற

சிவன் நடனம் பண்ணுதல்செய்ய அவனது பக்கங்களில் நின்று பேய்க்கணங்கள் கூத்தாடுதல்போலும். எ - று.

ஆசையாகிய கடற்குக் கரை துறவென்பதும், அக்கடலை நீந்தி இக்கரையில் ஏறுதற்குத் தெப்பம பெரியோர் வாக்கிய மென்பதுங் காண்க. பேய்க்கணங்கள் கூத்தாடுதல் சிவன் அனுஞ்ஞைகொண்'டாகையாலும் அவனுக்குத் திருவுளப் பாங்காகை யாலும மாறுபாடாகாமைபோல், இந்நூல் சொல்லியது பெரியோர் அனுஞ்ஞை கொண்டாகையாலும் அவர்க்குத் திருவுளப் பாங்காகையாலும் இது மாறுபாடாகாதெனக் கொள்க. அன்று ஏ இரண்டும் அசைநிலைகள். (எ)

கயல்விழி மனைவி யனைமுத லியவாங் கட்டது தனையென தெனவு, மியல்பதா மசுத்த மாதியா ருடற்கட் டிதனையா னென வும்வைத் தெனுமோர், மயலதா மிருளைத் துறவெனு மொளி யான் மாற்றிநெஞ் சகத்தினை விளக்கஞ், செயலினிந் நூற்குப் பெயர்வயி ராக தீபமென றுரைத்திடப் படுமால்.

எ-து. பெண்டிர் தாய் முதலிய போகபந்தத்தினை என்ன தெனவும், அசுத்த துக்காதித்தியங்களே சகசமாயுள்ள தேக பந்தத்தினை யானெனவும், மனத்தின்கண் வைத்துக் கருதும் ஒப்பற்ற மயக்கமாகிய விருளைத் துறவாகிய ஒளியினாலே நீக்கி மனமாகிய வீட்டினை விளக்கஞ் செய்தலினால் இந்தச சாத்திரத் துக்குப் பெயர் வைராக்கிய தீபமென்று சொல்லப்படும். எ-று.

போகதேகங்களாகிய இருவகைப் பற்றையும் என்னது யான் என்று கருதவைக்கும் மயக்கமாகிய விருளைத் துறவாகிய ஒளியினாலே மாற்றி மனமாகிய வீட்டினை விளக்கஞ்செய்தலின், இந்நூற்குக் காரணப்பெயராக வைராக்கியதீபமென்று சொல் லப்பட்ட தெனக்கொள்க. (அ)

## நூலாசிரியர்பெயர்.

உருட்கறங் கூசன் மனமொடுங் கிடவென் னுணர்வுநேத் திரக்கியா னெனதா, யிருட்கெடுத் தெலாமாம் பொருட்டிகழ்த்

திடுமோ ரெழில்வயி ராகதீபத்தை, மருட்கொடும் பாசக் குழிக்கண்யாம் வீழா வகையரு ளினன்மறை முடிவின், றெருட்கமை வீரசைவனெஞ் சாந்த லிங்கதே சிகன்றெருட்சுடரே.

எ-து. தேருருளும் காற்றாடியும் ஊசலும்போல் உழல்கின்ற மனது ஒடுங்கும்படி எனது உணர்வாகிய கண்ணுக்கு யானென்னும் அகங்காரமும், எனதென்னு மமகாரமும் ஆகிய மயக்கவிருளைக் கெடுத்துச் சகசீவபர மூன்றுந்தானாய் விளங்காநின்ற பரமசிவமாகிய பொருளை விளக்காநின்ற ஒப்பற்ற வைராக்கிய தீபத்தை யாங்கள் மருட்சியினாலே கொடிய பாசமாகிய குழியினுள்ளே வீழாமல் உய்யும்படிக்குத் தந்தருளினான், வேத முடிவாகிய •தத்துவஞானத்துக்கு அமைந்த வீரசைவ மாகேசுவரனாகிய எம்முடைய சாந்தலிங்கதேசிகனென்னு ஞானசூரியன். ஏ று.

வயிராக தீபமென்னு நூற்பெயர்க்கியைய உணர்வை நேத்திரமாகவும், அகங்கார மமகார மயக்கத்தை இருளாகவும், பாசத்தைக் குழியாகவும், பரமசிவத்தைப் பொருளாகவும், நூலாசிரியரை ஞானசூரியனாகவுஞ் சொல்லலாயிற்று. சூரியன் தனதொளியைத் தீபத்தி னிடத்திலே வைத்து விளக்கஞ் செய்கின்றானென்பது நூல்வழக்க மாதலால், இந்தஞானசூரியன் வைராக்கதீபத்தைத் தந்தானென்றற்குப் பொருத்தமுடைமை யறிக. நேத்திரத்துக்கெனற்பாலது நேத்திரக்கெனவிகாரமாயிற்று. ()

பாயிரமுற்றிற்று.

## நூல்.

தோன்றிநின் றழியப் படுங்கொடும் பிறப்பிற் றுன்பமே
யன்றியெட் டுணையு, மூன்றிநெஞ் சகத்தோர்ந் திடிற்பிறி திலையா
லுண்டு போற் றிரித்துயிர்க் கெல்லாந், தான்றிகழ்த் திடுமோர்
வகற்றிரு ளிருளுந் தவிர்ந்துமற் றதுமுள படியே, யான்றவீ
டுறமுற் பவந்தவம் புரிந்தோ ரகத்தினுட் டெரிதரு மன்றே.

எ-து. உற்பத்தி திதிலயங்களை உடைய கொடிய பிறப் பின்கண்ணே துன்பமே யல்லாமல் எள்ளி னளவாயினும் மன த்தின்கண் அறிவை ஊன்றி விசாரணை பண்ணுமிடத்துச் சுகமே இல்லை. அங்ஙனம் சுகமில்லாதிருந்தும் உண்டுபோல் மாறுபடுத்தி உயிர்களுக்கெல்லாம் விளக்கும்—விசாரணையை மாற்றுகின்ற அஞ்ஞான விருள். அந்தவிருளும் நீங்கி அப்பி றப்புத் துன்பமென்பதும் உள்ளமுறையே மாட்சிமைப்பட்ட மோ[illegible]த்தை அடைதற்கு முற்சனனங்களிலே தவம்பண்ணின பெரியோர்களது மனத்தின்கண்ணே தோன்றும். எ - று.

அஞ்ஞானவிருள் நீங்கினோர்க்குப் பிறப்புத் துன்பமாகத் தோன்றுதலின் அவ்விருளுடையோர்க்கு அத்துன்பத்தை இன் பமாக மாறுபடுத்தி விளக்குகின்றதெனக் கொள்க. (௧௦)

உடலிதுற் பவத்தோ ரைம்பெருந் துயர்மாய்ந் துறுகணத்
துயரினெண் மடங்கா, விடையுள திதிக்கட் டெயரமூப்பறிவோங்
கிளமையிற்பிணியுறு மிடத்தும், விடலரும் பசிநோய் காமநோய்
தணிப்பான் மிகு பொருட்டேடுத றுயரீண், டடையினு மதனைக்
காக்குத றுயர்வேந்தாயினு மிகுகராற் றுயரே.

எ-து. இந்த உடலானது மாதாவினது கருப்பத்தின் கண் உற்பவியாநின்ற காலத்தில் ஐந்து பெரியதுன்பங்கள். அது லயமாகின்ற காலத்தில் அவ்வுற்பத்தித் துன்பத்துக்கு எட்டுப் பங்கதிகம். அவ்வுற்பத்தி காலத்தும் லயகாலத்தும் துன்பமா னால் அவற்றிற்கு இடையாயுள்ள திதி காலத்திலேதான் இன்ப

யில்லையோவெனின் அக்காலத்தும் நரைதிரை மூப்புக்களினூற் றுன்பம். அம்மூப்பின்றிய பாலப்பருவத்தின்கண் இன்பமில்லை யோவெனின் அப்பருவத்திலும் அறியாமையினூற் றுன்பம். அறி வுதயமாகிய குமாரப்பருவத்திற்றான் இன்பமில்லையோவெனின் அப்பருவத்தின்கண்ணும் வாதபித்த சிலேஷ்மங்களின் நானு வியாதிகளினூற் றுன்பம். அவ்வியாதியின்றிய விடத்துத்தான் இன்பமில்லையோவெனின் விட்டு நீங்காது மாறிமாறி வருகின்ற பசிவியாதி காமவியாதிகளினூற் றுன்பம். அவ்வியாதிகள் வருந் தோறும்அருந்தல் பொருந்தலாகிய மருந்தினைப் புசித்துத் தணி த்துக்கொண்டாற்றான் இன்பமில்லையோவெனின் அம்மருந்தி னுல் அவ்வியாதியைத் தணித்தற்பொருட்டு அதற்கு ஏதுவாகிய மிகுந்த திரவியந்தேடுதலினூற் றுன்பம். அத்திரவியம் வந்து பொருந்திய காலத்துத்தான் இன்பமில்லையோவெனின் அதனை இராச மசாராக்கினிகளினூற் சேதம் வாராதபடி பாதுகாத்தலி னூற் றுன்பம். அதனைப் பாதுகாக்க வல்லமையுடைய இராசாவு க்குத்தான் இன்பமில்லையோவெனின் அவனுக்கு மேலாகிய மகாராசாவினூற் றுன்பமாம். எ - று.

உற்பவத்தில் ஐம்பெருந்துயரென்றது - கருப்பாசயப்பை உறுத்தலினூலும், அதிற்சலம் பூரித்தலினூலும், உதராக்கினி சுடு தலினூலும், பிரசூதவாயு முரித்துத் தள்ளுதலினூலும், யோனித் துவார நெருக்கத்தினூலும் மலையிருத்திக் கொண்டது போல வும், கடலின்கண் வீழ்த்தி மிதித்தல் போலவும், இருப்புக்கட த்தி லடைத்து நெருப்பாற் சுடுதல் போலவும், மலைமேல் நின்று னைத் தலைகீழாகத் தள்ளுதல்போலவும், ஆலையிலிட்ட கரும்பு நெருக்குண்டல்போலவும், வருந்துன்பங்களை. லயகாலத்தின் கண் வருந்துன்பங்களைக் கடவுளே அறிய வல்லவனுகையால் உவமை கூறப்படாமையின், அத்துன்பத்தில் எண்மடங்கென்று ஓரளவைகூறினுர். அவற்றிற்கு இடையாயுள்ள திதிகாலத்தின் கண்வரும் பாலகுமாரவிருத்தமாகிய மூவகையிடத்தும் அறியா மையினூலும் வியாதிகளினூலும் பசிநோய் காமநோய்களினூலும்

அந்நோய் தணித்தற்கு ஏதுவாகத் திரவியந்தேடுதலினாலும் அதனைப் பாதுகாத்தலினாலும், நரைதிரை மூப்புக்களினாலும் துன்பங்கள் உளவாகையால் உற்பத்தி திதி லயமென்று கூறிய காலத்திரயங்களிலும் துன்பமேயன்றி இன்பமில்லையென்பது கண்டு கொள்க. கருப்பாசயமுதல் யோனித்துவார மீறாகியவைந்தும் பஞ்சபூதகாரியமாதலின் அவ்வைந்தினாலும் வருந்துன்பங்களென்றுமாம். அறிவோங்கிளமையெனவே அறிவின்றிய பாலப்பருவம் வருவிக்கப்பட்டது. பசிவியாதி காமவியாதிகள் மற்றை வியாதிகள் போல் மருந்துண்டால் ஒருங்கே நீங்காது குன்மவியாதிக்கு உவர்மண்ணீர் குடித்தால் அப்போது அடங்கிநின்று மீண்டுந் தோன்றுதல்போல் அருந்தல் பொருந்தலாகிய மருந்தினைப் புசித்தால் அப்போது அடங்கிநின்று மீண்டும் தோன்றுதலால் விடலருமென்றும், பசியும் காமமும் உதரவெரியும் குய்யத்தினவும் ஆகலின் நோயென்றும், கூறினார்.

உற்பவத் தைம்பெருந் துயரென்றதற்குதாரணம்: சிவதருமோத்தரம். "என்றென் றெண்ணி யிருக்குமுயி ரிடர்ப்பட்டழியு மெழில்வரைக்கீ—ழொன்று மொருவன் றனைப்போலக் கருப்பாசயப்பை யுறுத்துதலான்—மன்றவுததி மறிந்தாழ்வான் வருத்தமென்ன வருந்தியிடு—நின்றகருப்பா சயவுதக வெள்ளங் கொள்ள நிறையழிந்தே. எ-ம். அங்கியதனிற் றங்கியிடு மயோமயத்த கும்பத்திற்—றங்குமொருவன் றபனம்போற் றபனமெய்துந் தாயுதரத்—தங்கிசுடவே யழலனைய சூசியதனா லாகத்தைப்—பங்கித்திடவே படுமிடரி னிருநாற்குணிதம் பட்டழுங்கும். எ-ம். கருப்பாசயமே கட்டமதா மதனினதிகங் கடுங்காலு—முரிக்க மிகவு மோகமுற முன்னையுணர்வு மந்நிலையே—மரிக்கவாலைக் கரும்பெனவே யோனிவழியின் வலிதொலைய—நெருக்கப்பட்டு நிலமிசையே தோன்றுமுயிரு னிலையுடனே." எ-ம். வரும். மற்றும் வருவனவற்றுட்காண்க. மாய்ந்துறுகணத்துயரினெண்மடங் கென்றதற்கு உதாரணம்: குறுந்திரட்டு. "பரணமாகிய பெண்டிருஞ் சுற்றமும் பண்டுதங் கையிற்றந்த—

விரணமானவை கொண்டிட விவரைவிட்டியம் பிடாதிவ ணைகு—மரணவேதனை யாவராலறியலா மயங்கியைம் புலனக் தக்—கரணம் யாவையுங் கலங்கிட வருந்துயர் கடவுளே யறிகிற் பான்." எ-ம். சிவதருமோத்தரம். "தனத்தினை மனைதனைத் தாணியந்தனை—கினைத்தினி யெவரனு பவிப்பர் நீங்கு நா—ளெ னக்கிவை யன்னிய மாகு மேயெனு—மனத்துயர் மலியவே மாயு மாவியே."எ-ம். மெய்ஞ்ஞான விளக்கம், "வந்திடுமரணத் துன் பமறித்துரை செய்யப் போமோ—வுந்திமேலை யும்பித்து முணர் வொடு பொறிகலங்கி—நந்திடா விருளே மூடி நாவுலர்ந் தலமந் தென்னே—யிந்தமா விறப்பிற் றுன்பம் பவத்துன்பத் தெண்ம டங்கே." எ-ம். திருக்கடைக்காப்பு. "புலனைந்தும் பொறிகல ங்கி நெறிமயங்கி யறிவழிந்திட்டைம் மேலுந்தி—யலமந்த போ தாக வஞ்சேலென் றருள்செய்வா னமருங்கோயில்—வலம்வந்த மடவாரக ணடமாட முழவதிர மழையென் றஞ்சிச்—சிலமந்தி யலமந்து மரமேறி முகில்பார்க்குந் திருவையாறே." எ-ம். திதிக் கட்டுயரமென்றதற் குதாரணம்: மெய்ஞ்ஞானவிளக்கம். "நல மிலா மூப்புத்துன்ப நடைதளர்ந் துரைதழுத்துச்—சலமதே மிக வுந்தோன்றித் தண்டுகொண் டூகிச்சித்தக்—கலனமே பிறந்துகண் டார் கார்ச்சித்தங் குமிழும் வண்ண—மலைவெலாஞ் செய்யு மூப்பின் வருந்துய ரந்தோபாராய். எ-ம். பிணியினால் வலியுங் கேடாம் பிணியினலழுகும்போகுந்—துணிவெலாம் பிணியாற்கு ன்றுந் தொலைவில்வே தனையைச் செய்யுந்—தணிவிலா துள்ளே நின்று சாலவு மொறுக்கும் பொல்லாப்—பிணியதே யொக்குந் துன்பம் பேசிடிற் பிறிதுமுண்டோ. எ-ம். மற்றும் வருவனவற் றுற் காண்க. (கக)

இளமையிற் பிணியற் றொருகுடை நிழற்கீ ழிருநில முழு வதும் புரக்கும், வளமைபெற் றுடைய மகற்குமெய் பொழுது வருங்கொல்கூற் றெனும்பயத் தானு, முளமிகப் பறைநின் றறையுமேற் புவிமீ துடையரோ மற்றைய ரின்பங்—களிமிகுத் திருப்பர் தெளிவிலா மையின்மேற் காரியங் கருதுறு நரரே.

எ-து. அறிவு உதயமாகிய குமாரப்பருவத்தின்கண் வியாதியின்றித் திடகாத்திரனாய்த் தனது ஒருவெண்கொற்றக்குடை நிழற்கண்ணே பெருமைபொருந்திய இராச்சியபாரத்தை யெல்லாம் காக்கின்ற செல்வத்தினை அடைந்ததனால் மனுஷானந்தத்தினை உடைய மகாராஜாவுக்குத்தான் இன்பமில்லையோவெனின் அவனுக்கும் எந்தக் கணப்போதிலே யமன்வந்து தேக நாசம் பண்ணுவனோவென்னும் பயத்தினாலும் சனங்கள் செய்த பாவம் இராசாவைவந்துசாரும் அப்பாவமிகுதியால் மறுமைக்கண் நிரயத்துன்பம் வருமென்று மேல்வருங் காரியவிசாரணையினால் வரும் பயத்தினாலும் மிகவும் உள்ளந் திடுக்குத் திடுக்கென்று மாறாது நின்று பறையறையுமானால் அவனொழிந்த மற்றையர் பூமியின்கண் இன்பமுமுளரோ இலர். அற்பசெல்வத்தினையுடையோரும் மனக்களிப்பு மிகுந்திருப்பராகலின் மகா செல்வத்தினையுடைய அந்த ராஜாவுக்கு அப்பயங்களும் அவற்றால் வருந்துன்பங்களும் இல்லை மகாபோகங்களை அனுபவித்துக் கொண்டு மனக்களிப்பு மிகுந்திருப்பனென்று நீ சொல்வாயானால், விவேகம் இன்மையால் மேல்வருங் காரியவிசாரணை பண்ணாத மானுடர்க்கு மனக்களிப்பல்லது விவேகமும் விசாரணையுமுடையோர்க்குத் துன்பமேயன்றி இன்பம் 'இன்றென்று அறிவாயாக. எ - று.

கூற்றெனும் பயத்தானுமென்ற வும்மையால் விசாரணையினால் வரும்பயம் வருவிக்கப்பட்டது. உள்ளம் பறையறைதல் மிகுந்த பயமெனக்கொள்க. யாவர்க்காயினும் விவேகமுள்ள பொழுது தேகபோகந் துன்பமாய்த்தோன்று மென்பதும், அஃது இல்லாதபோது அவையின்பமாய்த் தோன்றுமென்பதுங் கண்டுகொள்க.

உளமிகப்பறைநின் றறையுமென்றதற்கு உதாரணம்: குறுந்திரட்டு. "பிறந்தவ ரிறத்தல் பிழையாதென வறிந்தா—ருறந்துய ரொழிந்தினிய வுண்ண நினைவாரோ—மறந்து விடயத்துமய லுற்றிடுதல் வான்மீ—திறந்த வரையுச்சி விழுவோனிடை

கொளின்பம்.'' எ-ம். திருவள்ளுவநாயனார், "நன்றறிவாரிற் கயவர் திருவுடையர்—நெஞ்சத் தவல மிலர்.'' எ-ம். வரும். மற்றும் வருவனவற்றாற் காண்க. (௧௨)

இம்மானுடப்பிறப்பின்கண் இன்பமில்லையானால் இப்பிறப்பிற்கு மேலாய தேவப்பிறப்பிற்றான் இன்பமில்லையோவென்ற சீடனை நோக்கிக் கூறுகின்றார்.

பிறப்பிறப் புடைய ராயிடை யினும்பல் பிணிபயந் தணி
வில்காமாதி, யுறப்படு தலின்வா னவர்க்குமற் றென்னை யுளசுகந்
தேவின்மா னுடத்திற், சிறப்பிலை யென்றாற் குறுக்கியோ
னிகளின் றீமையும் கொடியர்வீழ் நிரயத், தறப்பெருந் துயரு
முரைப்பதென் பிறப்பு டாதலாற் றீதலா தில்லையே.

எ-து இந்தமானுடர்போல் உற்பத்தி லயங்களை உடையோராய் அவற்றுக்கு இடையாகிய திதிக்கண்ணும் பலவியாதிகளையும் கர்த்திரு சத்துருக்களாற் பயங்களையும் அடங்காத காமக்குரோதாதிகளையும் அடையப்படுதலின் தேவர்களுக்கும் இன்பமென்னையுள ஊர்த்தயோனிகளாகிய தேவகதி மானுடகதிக்கண்வருஞ் சிறப்பு இவைகளானால் குறுக்கி யோனிகளாகிய மிருககதியினது துன்பங்களையும் மகாபாவிகள் வீழலுற்ற நரககதியினது மிகுந்த பெரியதுன்பங்களையும் சொல்வதென்னை! ஆகையால் பிறப்பின்கண் துன்பமேயல்லது இல்லை. எ - று.

நாற்கதியுள்ளும் அதிகமாயுள்ள தேவகதிக்கண்ணும் இங்ஙனந்துன்பமே வருமாகலின் வீடொன்றுமே இன்பமென்பதுங் கண்டுகொள்க. குறுக்கியோனி யென்றமையால ஊர்த்தயோனி வருவிக்கப்பட்டது. எல்லாத் துன்பங்களினு நிரயத்துன்பம் அதிகமாதலின் அறப்பெருந்துயரென்றார்.

வானவர்க்கு மற்றென்னையுள சுகமென்றதற்கு உதாரணம்: பெருந்திரட்டு. "தீயவசுரர் பகையுண்டு செற்றமார்வ மிகவுண்டு—நோயுண்டனங்க ளுருண்டு நோய்கட்கெல்லாந் தாயான-

காயமுண்டு கைதொழுவேண் டுநருமுண்டு கற்பத்தே—மாயுந்த ன்மை யுண்டானால் வானோர்க்கென்னை வளனுண்டே. எ-ம்,
குருடன் புகரா மார்த்தாண்டன் குட்டரோகி யாமென்ற—புரு டன்றலைநோய் புரந்தரற்குப் புயத்திவ்வாதந் தக்கற்குச்—சுர நோயுண்டு கயரோகஞ் சோமனுக்கு நீரிழிவு — வருணற்கிவ்வா றமரர்க்கு நோயுண்டுண்டே மருத்துவரும்.'' எ-ம். மற்றும் வருவனவற்றுற் காண்க. (கடு)

அரிதுபெற் றிடினும் பெற்றதின் விருப்ப மறப்பெறு தன விரும்புயிர்க, டெரியகிற் கிலமீ தென்னமுன மடையாச் செல்வ யாய்ச் சொல்பவித் திரமா, யுரியசிற் சுகமாய் நித்தமா யொருவீ ளெதெனக் கேட்டமெற் றதனிற், பிரியமற் றினமு முனமுறும் பொல்லாப் பிறவியே பெறவிரும் புதலே.

எ-து. யாவர்க்குங் கிடைத்தற்கரிய பொருளைப் பெற்றகாலத்தும் தாம் பெற்ற அப்பொருளை எளிதாகக்கருதி அதன்கண் விருப்பமற்றுப் பெறுதனவாகிய பொருள்கள் எளியவாயினும் அவற்றை அரியவாகக்கருதி விரும்பாநின்ற உயிர்கள்; இது என்னையோ யாமறிகிலேம்? தாம் முன்னர் அடையாத செல்வமாகச் சொல்லப்பட்ட நின்மலமாய்த் தமக்கு உரிய ஞானனந்தமாய் அழியாததாய் ஒப்பற்ற மோக்ஷம் உண்டென்று கேட்டிருந்தும் அதன்கண் விருப்பமற்று முன்னர்த் தாம் அடைந்ததாய் அசுத்தமாய்த் துக்கமாய் அநித்தமாயுள்ள பொல்லாத பிறவியையே இன்னமும் அடையவிரும்புதல். எ - று.

பெற்றதைச் சிறிதாக்கிப் பெறுததின்மேல் இச்சையை விரிப்பது உயிர்களுக்கு இயற்கைக் குணமாயிருக்கவும் தாம் அடைந்த பிறப்பு அசுத்தம் துக்கம் அநித்தியமென்பது கண்டிருந்தும், தாம் அடையாத வீடு சுத்தம் சுகம் நித்தியமென்பது கேட்டிருந்தும், அதனை நீக்கி இதனை அடைய விரும்புதலின்றி அதனையே உயிர்கள் விரும்புதலின், தெரியகிற்கிலமீதெனையென்றார். வீட்டின்பமுயிர்க்கு அநன்னியமாகலின் உரியசிற்சுகமென்றார்.

முனமடையாச் செல்வமாயென்றதற்கு உதாரணம்: தேவி காலோத்தரம். "ஒருபொருளெக்காலத்து முளதாகிச் சிறப்புடைத்தா—யிருவினை யின்றிமேலா மின்பத்தை யளிப்பதாகும்—பொருவிலா விதன்மேலன்பு பொருந்திடா தாருமுண்டே—திருவுலா வகன்றகல்விச் சிறந்தசான் றோர்கடாமே." எ-ம். மற்றும் வருவனவற்றுற் காண்க. (கசு)

துன்பவெம் பிறப்பி னிழிவையு மழியாச் சுகபர வீட்டுயர் வினையும், பின்பவை தொலைத்தெய் தருங்கரு வியதாப் பெற்ற யிப் பிறப்பையு மிதனின், மின்புரைநிலையா மையையுமோர்ந் தனனோர் விவேகியு மெனிற்பினும் விடயத், தன்புறுவீடு புகமிக விரையா தன்ரக்கணந் தரைக்கணுற் றிடுமே.

எ-க. அநித்தியமாய்த் துக்கமாயுள்ள வெவ்விய பிறப்பினது தாழச்சியினையும், நித்தியமாய் ஆனந்தமாயுள்ள மேலாகிய வீட்டினது உயர்ச்சியினையும், நெடுங்காலத்தின் பின்பு அந்த இழிந்த பிறப்பினை நீக்கி உயர்ந்த வீட்டினை அடைதற்கு அரிய எதுவாகப்பெற்ற பெறுதற்கரிய இந்த மானுடப்பிறப்பினையும், அங்ஙனம் பெறுதற்கரிய பிறவியாயினும் மின்போலுந் தோன்றி அழிகின்ற இக்காயத்தினது அறிதற்கரிய அவதியினையும், விசாரணைபண்ணினுன் ஒரு விவேகியுமானுற் பின்னரும் பிறப்பிற்கு எதுவாய விஷயசுகத்தின்மேல் அன்புவைத்து வீடு அடைதற்கு எதுவாய துறவினை அடைந்து தவநெறிக்கண் அதிசீக்கிரமாய்ச் செல்லாது அரைக்கணப்போதாயினும் உலகவாழ்க்கையைப் பொருந்திநிற்பனே. எ-று. பின்பவைதொலைத்தெய்த வென்றதைப் பிறப்பை நீக்கி வீடடையவென்று பிரித்துக்கூட்டுக. ()

வினைப்பிறப் பொருவன் றுயரமென் றுணரின் விடய போகங்கணச் சுதலுந், தனக்குட லனிய முணர்தரின் மரணஞ் சார் குறிக் குளநடுங்குதலு, நினைத்திடி னிதன்பேற் றருமைமா தவங் க ணீங்கிநாள் கழித்தலுந் துணிவி, லனித்தமோர்ந் திடினோர் கணமெதிர்காலத் தவதிகூறிடுதலு மிலையே.

எ - து. இருவினைக்கு ஈடாய்வரும் பிறப்பினை ஒருவன் துன்பமென்று அறிந்தானேயானால் அத்துன்பத்துக்கு ஏதுவாய விஷயபோகங்களை இச்சித்தலும் இல்லை. தனக்குக்காயம் வேறென்பது அறிந்தால் மரணக்குறி கண்டகாலத்தில் காயநீங்குமென்னும் பயத்தினால் மனநடுங்குதலும் இல்லை. இம்மானுடப்பிறவி பெறுதற்கு அருமையென்று அறிந்தால் இப்பிறவிக்குப்பயனாகிய மோக்ஷத்தை அடைதற்கு ஏதுவாய மகத்தாகிய தவங்களைச்செய்தல் ஒழிந்து வாழ்நாள்களை வீணாளாகப் போக்குதலும் இல்லை. எந்தக்கணம் இருக்குமோ எந்தக்கணம் போகுமோவென்று தெளியக்கூடாத தேக அநித்தியத்துவத்தை அறிந்தால் ஒருகணப்போதாயினும் இன்னகாலத்தில் இன்னது செய்வோமென்னு மளவுசொல்லுதலும் இல்லை. எ - று. இல்லையென்னும் வினைக்குறிப்பு மொழியைக் கடைநிலைத் தீபகமாக்கி எல்லாவற்றோடுங் கூட்டிக்கொள்க.

மரணஞ் சார்குறிகள் நடுங்குதலுமில்லை யென்றதற்கு உதாரணம்: பெருந்திரட்டு. "வில்விளங்கிய விண்ணவர் மிகுத்தவாழ்நாளு—மல்லரும்பக லென்னுமீர் வாளினு லரிந்து—கொல்லும் வெங்கொடுங் கூற்றையார் குலைவுறார்குறுகி—னல்விருந் தென வுவந்தெதிர் கொள்ளுவான் ஞானி." மற்றும் வருவனவற்றாற் காண்க. (ககூ)

கருமமொன் றியற்றப் பிறர்கையிற் கருவி கவர்ந்துளோன் பினுமவர் கொளுமுன், விரைவினெண் ணியசெய் யாதுமற்றதையே மிகச்சிறப் பித்துநோக் குதல்போற், புரையில்வீட் டின்ப மடைகுவா னதற்குப் பொருந்திய வருந்தவம் புரியா, தொருகண மேனு நிலையிலிவ் வுடல்வைத் தொப்பனை செய்துநோக் குதலே.

எ - து. தனக்கான ஒருதொழிலைச்செய்து முடிக்க அதனைச்செய்து முடித்தற்குரிய கருவியை அயலார்கையில் இரவல் வாங்கிவந்தவன் அக்கருவியைப் பின்னருங் கொடுத்தோர் வாங்

கிக்கொள்ளுமுன்னர்த் தான்கருதிய தொழிலைச் சீக்கிரத்திற் செய்துமுடியாது வைத்து அதனைத் தனதாகப் பாவித்து மிகவுஞ் சிறப்பித்துப் பார்த்துக்கொண்டிருத்தல்போலும்; குற்றமற்ற மோக்ஷானந்தத்தை அடையும்பொருட்டு அதற்குப் பொருந்திய அரியதவத்தினைச் செய்யாமல் ஒரு கணப்போதாயினும் நிலையில்லாத இக்காயத்தைத் தனதாகப்பாவித்து வைத்துச் செப்பஞ்செய்து பார்த்துக்கொண்டிருத்தல். எ - று.

தனக்குரிய தொழிலைச் செய்தற்குப் பிறர்கையிற்கருவி வாங்கினோன்போல், தனக்குரிய தவத்தினைச் செய்தற்குக் கருவியாக இக்காயத்தைச் சிவன்கையில் வாங்கிக்கொண்டதெனவறிக.

இல்வாழ்க்கையிலிருந்து தானங்களைக் கொடுத்துப் பிறப்பினை நீக்கக்கூடாதோவென்ற சீடனை நோக்கிக் கூறுகின்றார். ()

பவத்தனிப் பரவைக் குரவையைத் தானப் படுவையைக் கொடுகடப் பரிதா, லுவப்பொடு தவப்பாதை யினிவர்ந் தன்றி யுண்மையித் தகவிகந் துலகோ, ரவப்பொழு தகல விருப்பதென் விருப்போ வகன்றவர்க் கருத்தலா திகளாற், றவத்தினை மறந் தார் கொல்லெனுஞ் சொல்லைத் தமதுளத் துணர்கலார் போலும்.

எ - து. பிறவியாகிய ஒப்பற்ற விசாலம் பொருந்திய கடலினை இல்வாழ்க்கையிலிருந்து கொடுக்கப்பட்ட தானமாகிய தெப்பத்தினாலே கடத்தற்கரிதாம்; விருப்பத்துடனே துறவின்கணின்று செய்யப்பட்ட தவமாகிய கப்பலின்மேலேறினாலல்லது இது சத்தியம். இந்தத் தகைமையை விட்டுநீங்கி இவ்வுலகத்தார் வீணிலே பொழுதுபோக இருப்பது என்னவிருப்பமோ! துறந்தோர்க்குப் பசி நோய் குளிர் முதலியவற்றிற்கு உண்டி மருந்து உறையுள் முதலியவுதவி அவர்தவத்திற்கு விக்கினம் வராதபடி பாதுகாத்தற்பொருட்டுத் தமக்கு உரிய தவத்தினை மறந்தார் கொல்லோ இல்லறத்தாரென்று திருவள்ளுவநாயனார்

கூறியசொல்லைத் தமது உள்ளத்தின்கண்ணே விசாரணை பண்ணுதவர்போலும். எ - று.

இல்லறமுற்றும் வழுவாது நடக்கவே குடும்பக் குற்றமாய்த் தோன்றும்; இதனுற் புறத்துறவுவரும்; இத்துறவினுல் தவத்தைப் பண்ணவரும்; இத்தவத்தால் உட்டுறவு வரும்; இவ்வுட்டுறவால் மெய்யுணர்வு பிறக்கும்; இம்மெய்யுணர்வால் பிறப்புநீங்கும்; ஆகலின் தானப்படுவையைக் கொடுகடப்பரிதென்றுர். ()

இல்வாழ்க்கையே "அறனெனப்பட்ட"தென்றுந் துறவினை "அஃதும் பிறன்பழிப்ப தில்லாயினன்" றென்றுந் திருவள்ளுவநாயனுர் இல்வாழ்க்கையை அதிகமாகக் கூறியிருக்க, நீர் அதனை மறுத்துத் துறவினை அதிகமென்றும் இதன்கணின்று வீட்டை அடையவேண்டுமென்றுங் கூறிய தென்னையென்று கேட்ட சீடனை நோக்கிக் கூறுகின்றுர்.

ஈதலே யறமு மநித்தமா மனைத்து மிகழ்ந்துகை விடுதலே வீடு, மாதலாற் றானக் குரியவில் வாழ்க்கை யதனையே யறமெனக் கூறிக், கோதிலாவீட்டி னிலக்கண மிருத்தல் குறித்துமெய் புணர்வையுந் துறவு, டோதினுர் வேதந் தனைத்தமி ழுருவத் தொளித்தெமக் களித்தவள் ளுவரே.

எ - து. யாவர்க்குங் கொடுக்குதலே தருமமும் அநித்திய மாகிய வெல்லாவற்றினையுந் துன்பமென்றிகழ்ந்து கைவிட்டு நீங்குதலே வீடும் ஆகலின் தானங்கொடுத்தற்குரிய இல்வாழ்க்கையையே அறமெனக் கூறித் துறவின்கட் குற்றமற்ற மோக்ஷலக்ஷணம்இருத்தலைநோக்கி மெய்ப்பொருளையறிதற்கு ஏதுவாய ஞானங்கூறிய மெய்யுணர்வென்னும் அதிகாரத்தையும் துறவதிகாரத்தோடு சேர்த்துக் கூறினுர்; வேதார்த்தங்களைத் தமிழ்மொழி ரூபத்திலே மறைத்து எமக்கருளிச்செய்த திருவள்ளுவநாயனுர். எ - று.

மொழிகளுள் அருத்தமிருத்தலின் ஒளித்தென்றும், சத்தத்திற்கு உயிர் அருத்தமாகலின் உருவத்தென்றும், கூறினுர்.

வேதமென்பதும் தமிழென்பதும் ஆகுபெயர். வேதந்தனைத்தமி ழுருவத்தொளித்தென்றதற்கு உதாரணம்: திருவள்ளுவமாலை. "[illegible]ரியமுஞ் செந்தமிழு மாராய்ந் திதனினிது,சீரியதென் றொன்றைச் செப்பரிதா - லாரியம்—வேதமுடைத்துத் தமிழ்திரு வள்ளுவனா—ரோது குறட்பா வுடைத்து. எ-ம். செய்யா மொழிக்குந் திருவள்ளுவர் மொழிந்த—பொய்யா மொழிக்கும் பொருளொன்றே-செய்யா—வதற்குரிய ரந்தணரே யாராயி னேனை—யிதற்குரிய ரல்லாதாரில்." எ-ம். மற்றும் வருவனவற்றாற் காண்க. (கக)

நிறந்தருந் தெய்வப் புலமைவள் ளுவனார் நீத்தவர் பெருமை நூன்முகப்பாற், சிறந்திட வமைத்தாங் கதுகொடில் வாழ்க்கைச் சிறுமை தூற் றினாது தெரியார்க், கறந்தவா றியற்றி னவனினுங் கோடி யதிகமா மெனமன மறாது, துறந்துளோ னையும் பட்டணத்தடிக டொகுத்தகட் டுரைநிகழ்த் திடுமே.

எ - து. அறிஞராற் புகழப்படுகின்ற தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார் துறந்தோரது பெருமையைச் சாத்திரமுகத்திற்கு அணியாக வைத்து அவரது பெருமையைப் பொருளாகக் கொண்டு, அதன்பின்னர் இல்வாழ்க்கைச் சிறுமையைப் புகழ்ந்ததுபோன்று இகழ்ந்தார். அந்த நுட்பம் தெரியாதார்க்கு முப்பத்திரண்டறமும் வழுவாது செய்யும் இல்வாழ்க்கையுடையோனிலும் கோடிபங்கு அதிகமாமென உட்டுறவு இல்லாத புறத்துறவோனையும் பட்டணத்துப் பிள்ளையாகிய எமது சுவாமிகள் தொகுத்துக்கூறிய உறுதிமொழி தானே விளக்கும். எ - று.

துறந்தோர் பெருமையெனவே துறவாதார்க்குச் சிறுமையென்பதும் அவ்வதிகாரத்தினுலுங் காண்க. கட்டுரையாற் சிறுமைபெருமை அறியப்படுதலிற் கட்டுரை நிகழ்த்துமென்றார். ()

ஆனால் நீர்கூறிய துறவிலக்கணம் என்னையென்ற சீடனை நோக்கிக் கூறுகின்றார்.

பிறப்பெனு முவரிச சுழியதா மெழிலார் பெண்டிராதிய வுயிர்ச சார்வுஞ், சிறப்புறு புவியா தியபொருட் சார்வுந் தீரநீக் குதமுற வவற்றர், டுறப்படு மெவைநீப் பினுமறி வுடையோ ரொருதம தனைபிதா வினையுந், துறப்பரேற் றுறப்போர்க கரு நரகெனநீ சொற்றசொல் சததியமாமால்.

எ - து. பிறவியாகிய கடலுக்குச் சுழியாகிய அழகுபொருந்திய பெண்டீர் முதலிய உயிர்ச்சார்வினையும், சிறப்பினையுடைய காணிமுதலிய பொருட்சார்வினையும், ஒருங்கேவிட்டு நீங்குதல் துறவு, ஆனல் நீர் கூறிய இருவகைச்சார்வான அவற்றுட் பொருந்தியிருக்கிற எவற்றினைத்துறந்தாலும் அறிவினையுடையோர் ஒப்பற்ற தமது மாதாவினையும் பிதாவினையும் துறப்பரோ துறந்தால் என்னேயோவெனின் துறந்தோர்க்கு அரிய நரகமென்று நீ சொன்னய் நீ சொன்னசொல் உண்மையேயாம். எ - று.

மாதாப்பிதாக்களை நீ இன்னரென்று அறியாயென்று கூறி மேல் மாதாப்பிதாக்களாவார் இன்னரென்று கூறுகின்றார். பெண்டீராதியவெனவே மாதாப் பிதாப் புத்திரா சகோதரர் முதலிய பந்துக்களையும், புவியாதியவெனவே தனம் தானியம் வஸ்திரம் ஆபரணம் மாடு ஆடு அடிமைமுதலியவற்றையும் வருவித்துக்கொள்க. (உக)

விடையது ரிறையே தாதைமற் றவன்பான் மின்னெம தன்னையன் னவரைக், கடையரே மறந்து துறந்துதா னன்றோ கடும்பவ விடும்பையுற் றனமிவ், வடைவுணர்ந் திலபோன் றுடவிதற் கேது வாய்வரத் தாய்பிதா வெனநெஞ், சுடைவுறு நின்றுய் பவந்தொறிவ் வணமுற் றுளவுயிக்க் களவியா துரையே

எ - து. இடபத்திலேறி நடத்துகின்ற கடவுளே எமது பிதா அவனது பாகம் பிரியாதிருந்த மின்போல்வாளே எமது மாதா அந்தப்பிதாவையும் மாதாவையும் கடையராகிய யாம் மறந்து துறந்தல்லவோ அளவில் காலங் கடிய பிறவித்துன்பத்தை

அடைந்தனம். இந்தமுறைமையை அறியாய்போன்று உடம்பு தோன்றற்கு ஏதுவாய் வருகின்ற பேர்களை மாதாபிதாக்களென்று மனங்கலங்குறுகின்றாய். சனனந்தோறும் இந்த முறையே மாதாபிதாக்களென்று வந்த சீவர்களுக்கு மட்டு யாது நீ சொல்வாயாக. எ - று.

உயிர்க்கு மாதாவும் பிதாவும் சத்தியும் சிவனுமென்பதும் உயிரும் நித்தியம் அவரும் நித்தியமென்பதும் அவரை மறந்து நீங்கினோர்க்குப் பிறவித்துன்பம் வருமென்பதும், சோணிதசுக்கிலங்களினால் தேகம் உண்டாகையால் இவ்வுடம்பிற்கே மாதாபிதாக்கள் இவரென்பதும், இவ்வுடம்பும் அநித்தியம் இதற்கு ஏதுவாய் வந்தோரும் அநித்தியமென்பதும், இவர் சனனந்தோறும் வேறுவேறாய் மாறிவருதலின் இவரைத்துறந்து தவம்புரிவோர்க்கு நிரயத்துன்பமில்லையென்பதுங் கண்டுகொள்க.

உடலிதற்கேதுவாய் வரத் தாய்பிதா வென்றதற்கு உதாரணம். "அத்தனொடன்னைக் கன்பு செய்கின்றாளவில் பிறப்புற்றவை யவைதோறு மெத்தனை தாயுந்தந்தையுமுற்றாரித்தனையன்றோ விவர்களு மிங்கே." மற்றும் வருவனவற்றாற் காண்க.()

உயிர்க்குத் தாய்தந்தை வேறேயிருத்தலின் உடற்குத் தாய்தந்தைகளைத் துறந்தாலும் தன்னை நம்பியிருந்த மனைவி புத்திரரைத் துறக்கலாமோவென்ற சீடனைநோக்கிக் கூறுகின்றார்.

தனதகத் தகலா திருந்துபே ரின்பந் தருதலான் மனைவியுந்
தன்பா, லினிதுதித் தொருதன் வினையொழித் தசையா திருத்
திவீட் டமுதருத் துதலா, லுனலருஞ் சுதனு மொருவனுக் கவ
னூ டுதயமா யெழுந்த மெய் யுணர்வே, பினையிவ் தன்றி மனை
சுதரெனயாம் பேணிநாட் கழிப்பதும் பிழையே.

எ - து. தனது மனமாகிய வீட்டின்கண் இறையளவாயினும் விட்டுநீங்காமலிருந்து பேரின்பத்தைத் தருதலினாற் பெண்டிரும், தனனிடத்தில் இனிதாய்த் தோன்றி ஒப்பற்ற தனது தொழில்களை மாற்றி முத்தியாகிய வீட்டின்கண் அசைவற

வைத்து அம்முத்தியின்பமாகிய அமுதினைப் புசிப்பித்தலின்நினை த்தற்கரிய புத்திரனும், ஒருபுருடனுக்கு அவனுள்ளே உதயமா ய்த்தோன்றிய மெய்ஞ்ஞானமே. பின்னர் இந்த மெய்ஞ்ஞானத் தைஅன்றிப் பெண்டிர் புத்திரரென்று அபிமானித்துக்கொண்டு வீணிலே வாழ்நாள்களைப் போக்குதலும் குற்றமாம். எ - று.

மனைசுதரால்வரும் இன்பம் அநித்தியமும் அற்பமு மாகலா லும் மெய்யுணர்வால் வரும் இன்பம் நித்தியமும் பூரணமுமாக லாலும் இதற்கு அஃது ஒப்பன்றாயினும் ஒருபுடை ஒப்பாகக் கூறினாரென்றறிக.

ஆனால் இந்த இளமைப்பருவத்திலே இல்வாழ்க்கையோடி ருந்து இம்மையின்பத்தை அநுபவித்து முதிர்ந்த பருவத்தில் துறந்து தவத்தைப்பண்ணி வீட்டினபத்தை மறுமைக்கண் அடையக் கூடாதோவென்ற சீடனைநோக்கிக் கூறுகின்றார். ()

வேண்டினுண் டாகத் துறக்கவென் றமையால் விருத்தனா
ய்க் கருத் தழிந் துருவங், காண்டல்செய் விழிபஞ் சடைந்துட
னடுக்குங் காலம்வந் தடைவதன் முன்னர், மாண்டகற் பதனாற்
சாலியைப் போலு மனைவியா தியசமா தியினுற், நீண்டமொ னந்
தம் பலவடைந் திடுதற் கெண்ணித் திடுவாபுண் ணியரே.

எ - து. முத்தியின்பம் வேண்டிற் காலமுண்டாகத் துற க்கவேண்டுமென்று திருவள்ளுவநாயனார் அருளிச்செய்தமை யால், வார்த்திகனாகி மனந்தடுமாறி உருவங்களைக் காணுதல் செய்யாநின்ற கண்கள் பஞ்சடைந்து உடல் நடுக்குறும் அக்கா லம்வந்து பொருந்துமுன்னரே, மாட்சிமைப்பட்ட கற்பினால் அருந்ததியைப்போன்ற பெண்டிர் முதலாகிய சார்வுகளைச் சமாதி நிஷ்டையைப் பொருந்தி இக்காயத்தின்கட் பலவின்பங் களை அடைதற்குக் கருதித் துறப்பார் புண்ணியர். எ - று.

முதுமைக்காலத்தில் உள்ளம் தடுமாறுதலின் ஆசாரியன் உபதேசித்த மொழிகளை விசாரணை பண்ணக்கூடாது. விழி

பஞ்சடைதலின் ஞானசாத்திரங்களைப் பார்க்கக்கூடாது. உடல் நடுக்குறுதலின் அசைவற நிஷ்டையில் இருக்கக்கூடாது. ஆகையால் நடுக்குங்காலம் வந்தடைவதன் முன்னமென்றார். நிஷ்டைகூடி அவத்தைகள் நீங்குந்தோறும் இன்பம் வருதலின் ஈண்டு மானந்தம் பலவடைந்திடுதற்கென்றார் உடல்பொருளாவி மூன்றனையும் ஆசாரியன்கையில் சத்தியமாகக் கொடுத்தலிற் புண்ணியரென்றார். இம்மூன்றனையும் கொடுத்தலாவது உடல் தானென்று அபிமானித்தலின்மையும், விட்ட பொருள்களின் மேற் பற்றுதலின்மையும், சிவமன்றி ஒன்றைச் சுட்டுதலின்மையும், எனக்கொள்க.

விருத்தனாய்க் கருத்தழிந் தென்றதற்கு உதாரணம்: திவ்வியப்பிரபந்தம். "முதுகு பற்றிக் கைத்தலத்தான் முன்னொரு கோலூன்றி—விதிர் விதிர்த்துக் கண்சுழன்று மேற்கிளைகொண் டிருமி—யிதுவென் னப்பர் மூத்த வாறென் றிளையவ ரேசா முன்—மதுவுண் வண்டுபாடுஞ் சோலைவதிரி வணங்குதுமே. எ-ம். பண்டு காமரான வாறும் பாவையர் வாயமுத—முண்ட வாறும் வாழ்ந்தவாறு மொக்க வுரைத்திருமித்—தண்டுகாலா வூன்றிமெள்ளத்தள்ளி நடவாமுன்--வண்டுபாடுஞ்சோலைசூழ்ந்த வதிரி வணங்குதுமே." எ-ம். மற்றும் வருவனவற்றாற் காண்க.

நீர் துறக்க வேண்டுமென்று கூறிய மனைவியை முதிர்ந்த வயதில் துறப்பதன்றி இளமைவயதில் துறந்தால் பாவமென்ற சிஷனை நோக்கிக் கூறுகின்றார்.

இளமையின் மனையைத் துறத்தறீ தெனிற்றா னிறத்தலிற்
றுறத்த லீடலவா, லளவிறீ தஃதாங் குயிர்ச்செய லன்றேலா
பற்சன் னியாசந்தீ ததுமெய், விளிதலாற் பழுதின் றேற்பினு
மிருப்பார் விடுதறீ தடுபிணி குறித்தே, லுலையுநோ யிலரு
மிறப்பதென் பிறப்போர்ந் தொழித்திடிற் பழித்திடா தலகே.

எ - து. இளமை வயதினையுடைய மனைவியைத் துறக்குதல் பாவமென்பையானால், தான் அவளை அவ்விளமைக்கண்

விட்டு இறந்துபோகின்ற பாவத்தோடு துறந்து போகின்ற பாவம் சமானமன்று. ஆகையால், அங்ஙனம் விட்டு இறந்து போதல் அளவில்லாதபாவம். இறந்துபோதல் சிவச்செயலேயன்றிச் சீவச்செயலன்றாகையால் பாவம் இன்றென்னையானால், ஆபற்சன்னியாசம் சீவச்செயலாகலின் அதற்குப் பாவம் உண்டாகவேண்டும். அச்சன்னியாசம் பண்ணிக்கொண்டவுடனே தேகநாசமாகலின் அது பாவம் இன்றென்னையாகில்; அச்சன்னியாசம் பண்ணிக்கொண்ட பின்பும் தேகநாசமின்றி யிருப்பார் விட்டுத்துறந்திருத்தல் பாவம். அத்தேகநாசம் பண்ணுகின்ற வியாதியைக்குறித்துத் துறந்தமையால் பாவம் இன்றென்னையாகில், உடலை வருத்துதல் செய்யும் நோயில்லாதாரும் இறந்து போவதென்னை, ஆகையால் பிறப்பினது அநித்தியத்துவத்தை விசாரித்துத் துறந்தால் உயர்ந்தோர் பழியார் எ-று.

விட்டிறந்தோன் மனைவிக்கு மங்களகாலத்துப் பந்திபாவாடைக்கு வரக்கூடாமையினாலும், நல்ல வஸ்திராபரணங் கந்த புட்பமுதலியவை தரிக்கக் கூடாமையினாலும், மங்கலத்தின்கண் அவளைக் கண்டபோது மங்கலியப்பெண்கள் இகழ்தலினாலும், துன்பம் வருதலின், விட்டுத் துறந்தோன்மனைவிக்கு அம்மங்கலத்திற் சிறப்புச் செய்கையாலும், நற்புடைவை முதலியவை தரித்துக்கொள்கையாலும், அவள் புருஷனைப் புகழுந்தோறும் அவளையும் புகழ்தலினாலும், இன்பம் வருதலின் இறத்தலிற் றுறத்த லீடலவென்றார். அநித்திய விவேகந் தோன்றித் துறந்தோனை இம்மைக்கண் உயர்ந்தோர் பழியாமையின் அவனுக்கு மறுமைக்கண் பிறவித்துன்பம் இன்றென்பதும், உயர்ந்தோர் பழியாரெனவே இழிந்தோர் பழிப்பாராயினும் அதனால் அவனுக்கு ஒரு குற்றம் இன்றென்பதும், 'காண்க. உலகமென்றது உயர்ந்தோரை. (௨௫)

புதல்வரைக் குடும்பந் தாங்கும்' பருவம் வந்த காலத்தில் அதற்குத் துணையாகவைத்துத் துறத்தல் நன்று; அவர்க்கு அதனைத் தாங்கும் பருவம் வருதற்கு இடையே கனவியாதி வந்த

காலத்தில் ஆபற்சன்னியாசம் பண்ணிக்கொள்ளுதல் நன்று; அங்ஙனம் துறத்தலன்றிச் சும்மாவிட்டுத் துறத்தல் தீதென்ற சீடனை நோக்கிக் கூறுகின்றார்.

இக்கணத் திருந்த தினிவருங் கணத்து டிருக்குமோ மரிக்குமோ வுடலென், றக்கண மனையா திகட்கரன் றுணையா மன்றென வெணித்துற வறஞ்சார், மிக்கவ னாபற் சன்னியா சியுஞ் சார்வினுக்குரஞ் சேர்த்திவிட் டவனுந், துக்கமே வலிற்பின் பவரிவன் போலுந் துறவரன் றென்பதுந் துணிவே.

எ - து. இந்தக்கணப் பொழுது இருந்தவுடல் இனிமேல் வரும் கணப்பொழுதிலே இருக்குமோ நாசமாமோ வென்று அநித்தியவிவேகம் தோன்றிய அந்தக்கணப்போதிலே தானே பெண்டிராகிய சார்வினுக்குச் சிவனே துணை நாம் துணை அன்றென்று கருதித் துறவறத்தை அடைந்த உயர்ந்தோனே ஆபற்சன்னியாசம் பண்ணிக்கொண்டவனும், மனைவியாதிய சார்வினுக்கு வலிய துணை சேர்த்தினேனும், ஆவன். இவனல்லாமல் வியாதியைக்குறித்து அநித்தியம் தோன்றி ஆபற்சன்னியாசம் பண்ணிக்கொண்டவனும், மனைவியாதிய சார்வினுக்குப் புதல்வராதி சிவர்களைத் துணையாகச் சேர்த்தினேனும், பின்பு துன்பத்தை அடைதலினால் அவர்களை இவன்போலும் துறவரென்று சொல்லுவது தெளிவன்று. எ - று.

இவ்வநித்திய விவேகம் கணப்போதாயினுமாறாது உடையனாகையாலும், சார்வினுக்கு அழிவிலாத சிவனே துணையாகச் சேர்த்தினனாகையாலும், இவனே ஆபற்சந்நியாசியென்றும், சார்வினுக்கு உரஞ்சேர்த்தி விட்டவனென்றும், வியாதியைக்குறித்து ஆபற்சன்னியாசம் பண்ணிக்கொண்டவன் தேகநாசமின்றி இருந்தகாலத்து மனைவி முதலியோரை விடுத்தேனேயென்று பின்பு துன்பம் அடைதலினாலும், சார்வினுக்குச் சிவரைத் துணையாகச் சேர்த்தினேன் அச்சிவர்கட்கு இடையூறு வந்தகாலத்தில் அங்ஙனம் வரலாமோவென்று பின்பு துன்பம் அடைத

லினலும், அவர்களை இவன்போலும் துறவரன்றென்பது துணி வேயென்றுங் கூறினர். அநித்திய விவேகந் தோன்றித் துறக்கி ன்ற துறவே சிறப்பென்பதும், சீவர்களுக்குச் சிவனே துணைய ன்றிச் சீவர்கள் துணையன்றென்பதும், கண்டுகொள்க. (உகூ)

வேதம் எழுபத்தைந்து வயதுக்குமேல் சன்னியாசம் பண் ணிக்கொள்ள வேண்டுமென்றுகூற, நீர் அதனை மறுத்து இள மைவயதிலே துறக்கலாமென்று கூறியது என்னையென்ற சீடனை நோக்கிக் கூறுகின்றார்.

பிறந்தவப் பொழுதே யினியொரு தலையாப் பிறப்பறுத் திடுவமென்றெணியே, யுறைந்தனை வயிற்றிற் பிளையதற் பவ த்து டுறுபெருந் துயரின லுயிர்கண், மறந்துறு முறையுஞ் சுக ரகன்றமையு மதித்துநெஞ் சழிவினம் போல்வார்க், கறைந்திடு மலது பிறப்புணர்ந் தகல்வார்க் கவதியு மறையுமோ மறையே.

எ - து. கருப்பத்தின் நீங்கிப் பூமியின்கட்பிறந்த அந்தக் கணப்போதிலே முன்னெடுங்காலம் ழித்துன்பத்தை மறந்து மறந்து மோசம் போனேம், அங்ஙனம் மோசம் போகாதபடி இனியொரு நியமமாகத் துறந்து ஞானசாரியனை அடைந்து வேதாகமங்களைத் தேர்ந்து தவத்தினைச்செய்து பிறப்பினை மா ற்றிக் கொள்வோமென்று மாதாவினது கருப்பத்தின்கண் நினை த்துக் கொண்டிருந்து பின்னர் அந்த விவேகத்தை உற்பவிக்குங் காலத்து வரும்மிகுந்த பெரியதுன்பங்களினல் சீவர்கள் மறந்தி ருக்கின்ற முறைமையினையும், பிண்டஞானம் அண்டத்தின்க ண்ணும் மறவாதுவந்த சுகரானவர் பிதா முதலிய சார்பினைத்து றந்து தவத்தினைப் பண்ணிப் பிறப்பைமாற்றிய முறைமையினை யும், சுருதியும் குருவும் கூறக்கேட்டு அறிந்திருந்தும் மனத்தின் கண் விசாரமில்லாத எம்போலிகளுக்கு இன்னவயதிலே துறக் கவேண்டுமென்று மட்டுக்கூறுமல்லது பிறப்பினது அநித்தியத் துவத்தை விசாரித்துத் துறப்போர்க்கு மட்டும் கூறுமோ வேதம். எ - று.

உற்பவத்து பெறுந்துயரென்றது பிரசூதவாயுமுரித்து த்தள்ளுதலினாலும் யோனித்துவார நெருக்கத்தினாலும் வருந் துன்பங்களை.

பிறந்தவப்பொழுதே யினியொருதலையா வென்றதற்கு உதாரணம்: சிவதருமோத்தரம். "இறந்தேமுனமே யினிப்பிறப் போமென்று மிந்தமுறை யினியாம்—பிறந்தபொழுதே பிற வாத பெருமையுடைய பிஞ்ஞகனை —யறிந்தே யவலப் பிறப்பி றப்பை யறுத்துவிடுவோ மவனருளாற்—செறிந்தேகுரவன் றிரு வடியைத் திகழ்ந்தவேதாகமந் தெருண்டே." எ-ம். கூர்மபுரா ணம். "ஈங்கிவை பிறழ்ந்துவரு மியாவை யவையென்னிற்— கோங்கமுலை மாதரொடு கூடுவதன்முன்ன—மோங்கிய சன்னசி யென வுற்றிடலுமாகுந்—தீங்கெறி மெய்ஞ்ஞானநெறி சிந்தை நிலைபெற்றால். எ-ம். இல்லற முயன்றுகடன் மூன்றுமினி தீர்ந்தா—லல்லலற மேவுமெதி யாகி யமர் கிற்பார்—முல்லை நகை மாதர்கடி முற்றிய தினத்தி—னெல்லையெதி யாகியுணர் வுற்றி டலு மாமால்." எ-ம். வரும் மற்றும் வருவனவற்றைற் காண்க.()

கருப்பமா ருயிரத்துயர்பெயர்த் திடுதல் காரண பூரண ஞானம், விருப்பமா யடையக் கடவமென் றிருக்கும் வியாசர்சே யடைந்தது மதுவே, திருப்பியீண் டதனைத் துறவின்மீ தேற் றிச் செப்பலென் னெனிற்றுற வினைவிட், டிருப்பதோர் ஞான மெவன்கொனீத் தவரென் றிசைப்பதென் பெயர்மெய்ஞ் ஞானி கட்கே.

எ - து. மாதாவினது கருப்பத்தின் கண் உறைந்துள்ள உயிர்கள் அந்தத்துன்பத்தை இனிமேல் அடையாதபடி நீக்கிக் கொள்ளுதற்கு ஏதுவாகிய பரிபூரண ஞானத்தைச் சந்தோஷ மாகி அடையக்கடவோமென்றிருக்கும் வியாசபுத்திரராகிய சுகர் பிண்டத்தின்கண் நினைத்துக்கொண்டிருந்து அண்டத்தின்கண் வந்து அடைந்ததும் அந்த ஞானமே. நீர் அந்த ஞானத்தைத் திருப்பி இங்கே துறவின்மேல் வைத்துச் சொல்வதென்னை

யென்று கேட்பாயானால், துறவினைவிட வேறாயிருப்பதொரு ஞானம் யாது? மெய்ஞ்ஞானிகளுக்குத் துறந்தோரென்று பேர் சொல்வது என்னை? நீ சொல்வாயாக. எ - று.

உட்பற்றுப் புறப்பற்றெல்லாம் துறந்த விடத்தின் ஞானமாகலின் துறவினைவிட்டிருப்பதோர் ஞானமெவன் கொலென்றார். (உஅ)

ஞானியஞ் ஞானங் கெடுத்தலாற் றுறவோ னெனப்படு நவிற்றினஞ் ஞானந், தானுட வினைநா னெனுமக விருளென் றனையிஃ தெமக்குமொத் ததுவா, லூனமின் மறைதேர்ந் தொருசிவ நானென் றுளத்துணிச் சயித்தவக் கணமே, யானென றவிர்ந்தவ் விருளுமாய்ந் திடுமென் றிசைத்தனை யிது பழு தன்றே.

எ - ஶ. ஞானியானவன் அஞ்ஞானநாசம் பண்ணுதலால் அவன் துறவோனென்று சொல்லப்படுவன். சொல்லுமிடத்தில் அஞ்ஞானத்தின் இலக்கணந்தான் எங்ஙனமெனின், தானல்லாத உடம்பைத் தானெனக் கருதப்பண்ணும் உள்ளிருளென்றாய் இஃது எமக்குஞ் சம்மதமாயது. குற்றமற்ற சுருதி விசாரணைபண்ணிச் சர்வமும் மித்தை; ஒப்பற்ற சிவமொன்றுமே சத்தியம்; அந்தச் சிவம் நானென்று உள்ளத்தின்கண் நிச்சயம் பண்ணின அந்தக் கணப்போதிலே உடம்பினை யானென்று கருதும் அகங்காரமும் நீங்கி அவ்வகங்காரம் கருதற்கு ஏதுவாய அஞ்ஞானவிருளும் நாசமாமென்று கூறினை. இங்ஙனம் கூறியது குற்றம். எ - று.

அஞ்ஞானவிருள் தானல்லாத உடலைத் தானெனக்கருதச் செய்தல் சுபாவமாகையால் எமக்கும் ஒத்ததுவென்றார்; நிச்சய ஞானத்தால் அவ்விருள் போகாதாகலின் இது பழுதென்றார். ( )

திரிவித வுலகத் தரிதொரு ஞானி தோர்விடத் தென் றுமோ ரொன்றை, யுரைசெயிற் பிரம வித்தையொத் தரிதோ வென்று மிவ்வுலகுரைப்பதனை, லரிசொல்கீ தையிலும் பிரமசா

தகரினோர்க்குள வருத்த மென்பதனாற், பெரியதோர் வருத்த மெனை மறை துணிந்தப் பிரமநா னெனவிருத் தலினே.

எ - து சொர்க்க மத்திய பாதாளமென்று மூன்றுவிதமாயுள்ள உலகத்தின்கண்ணும் விசாரிக்குமிடத்தில் ஒரு ஞானி கிடைத்தல் அரிதென்றும், ஓரோர் அரிய வித்தையினைப் பார்த்துச சொல்லுமிடத்து ப்பிரமவித்தைபோல் ஈதரிதோவென்றும், இவவுலகத்தார் வழக்கமாகச சொல்வதனாலும், அரி கூறிய பகவற்கீதையின் கண்ணும் பிரமசாதகரினும் யாவருக்கு உள்ளன வருத்தங்களென்பதனாலும் அவ்வித்தைபோல் அரிதும்பெரியதோர் வருத்தமுமுமன்னையுள. வேதத்தை ஆராய்ந்து இரண்டென்பது இலை ந பிரமம் ஒன்றேயென்று நிசசயம்பண்ணி அந்தப்பிரமம நானென்று இருத்தலினால். எ - று.

எவவகைப்பட்ட அரியவித்தைகளும் மாயாகாரியங்களுள் அடக்கம் பிரமவித்தையொன்றுமே மாயாகாரிய காரணங்களையெல்லாம் கடந்த வித்தையாகலின் இதனது பெருமையினையும் இதனையடைந்த ஞானியினது பெருமையினையும் வேதாகமங்கள் கூறுதலன்றி உலகத்தாரும் வழக்கமாவெடுத்துக் கூறுதலின் உலகுரைப்பதனாலென்றார். முன்னர் வேதாகம நிச்சயார்த்தம் பண்ணிக்கொண்டு பின்னர்ச சமாதி நிட்டைகூடிப் பெரிய வருத்தத்துடனே மாயாகாரிய காரணங்களையெல்லாம் நீத்து அரிதாகிய பிரமவித்தையை அடைந்தவனே மூவுலகத்தும் அரியன்; அவனே பரஞானி யென்பதும், வேதநிச்சயார்த்தம் பண்ணிக்கொண்டு பிரமநானென்று இருத்தற்குப் பெரியவருத்தம் இன்மையானும் அங்ஙனம் இருத்தல் யாவர்க்கும் எளிதிற் கூடுமாகலானும் இந்நிசசயம் மாயாகாரியமாகிய மனத்தைக் கொண்டாகையாலும் இது பிரமவித்தை அன்றெறன்பதும், இந்நிச்சயமுடையார் அபரஞானிகளென்பதும் கண்டுகொள்க.

திரிவிதவுலகத்தரிதொரு ஞானியென்றதற்கு உதாரணம்: பரமார்த்ததரிசனம், "காரண மிறந்தொன் றிற்குங் காட்சியிற்

படாத வொன்றைச்—சேர்பவர் வருத்தம் வேறு செப்பிட லாவ தன்று—லோர்வரி திதுதான் வாழு முயிர்களா லாவ தொன் றோ — வாரவர் பெருமை தன்னை யளவறுப் பவர்க ளையா."
மற்றும் வருவனவற்றாற் காண்க. (௩0)

வருத்தமொன் றின்றிச் சாரலாம் பிரமமென்றயன் வகுத் தகீதையினூ,லுரைத்த தெற்றினுக்கா யெனிற் பரஞான முணர் பவர்க் குன்னுத லுரைத்த, னிரைத்திடு தொழில்க ளொன்றும் வேண்டாது நீத்துவா ளாவிருத் தலினு, லருத்தமற் றதனுக் கோர்ந்துநா றெளிதலாகநீ துணிந்தனை போலும்.

எ - து. ஒருவருத்தமும் இன்றிப் பிரமத்தைத் அடையலா மென்று பிரமன் வகுத்துக் கூறிய பிரமகீதையின்கட் சொல்லி யது என்னத்துக்காகவென்று கேட்பாயாகில், பஞ்ஞானத்ஸ்த அறிவோர்க்கு மனத்தால் நினைத்தலும் வாக்காற் சொல்லுதலும் முறை வழுவாது காயத்தாற் செய்யுந்தொழில்களுமாகிய இவற் றுள் ஒன்றாயினும் விரும்பாது விட்டுச் சும்மாவிருத் தலினுல். அங்ஙனம் அருத்தமிருக்க அதனை அறியாது நீ இச்செப்புளுக்கு அருத்தம் வேதத்தை ஆராய்ந்து நிச்சயம் பண்ணிக்கொள்ளுத லாக இங்ஙனம் அறிந்தாய்போலும். எ - று.

மனத்தால் நினைத்தல் கிரியாயோகம். வாக்காற் சொல்லுதல் வேதாகமங்களை யோதி நிச்சயம்பண்ணப்பட்ட அபரஞானம். காயத்தால் செய்தல் சரியை கிரியைகள். இச்சரியைகிரியையோ கங்களையும் அபரஞானத்தினையும் கடந்தது பரஞானமாகலின் அப்பரஞானமுணர்வோர்க்கு அம்முக்கரணங்களும் அசைவி ன்றி யிருக்கவேண்டுமாகலின் ஒன்றும் வேண்டாது வாளாவிரு த்தலினுலென்றார். வாக்குமனம் மாயாகாரியம் இவற்றால் நிச்ச யம்பண்ணின ஞானம் ஞானமன்றாகலின் இப்பாட்டிற்கு அரு த்தம் ஈதன்றென்று கூறவேண்டி நீ துணிந்தனை போலுமென் றார். முக்கரணங்களும் அசைந்தவிடத்து வருத்தமென்பதும்,

அவை அசையாது நின்றவிடத்து வருத்தம் இன்றென்பதும், கண்டுகொள்க.

வருத்தமொன்றின்றிச் சாரலாமென்றதற்கு உதாரணம்: சொரூபானந்தசித்தியார் "ஆதலா லறியு மறிவெலாங் கைவிட் டறிவினுக் கறிவதாய் நின்ற—பேதமில் பிரம மொன்றமே காண்பான் பெறும்பெறி னின்பமாய்ப் பிறத்தல்—சாதலற் றிருக்கு மதனையோர் வருத்த மின்றியே சாரலா யிருக்க— வாதரித்தறியா ரற்பமே விரும்பி யனந்த துக்கத்திலே யமைவார்." (௩௧)

சிறியவர் மணற்சோ றுண்டுதேக் கிடல்போற் றேர்ந்துநூ றெளிந்தமாத் திரத்தி, னறிதரிற் சிவமும் விடயமா மெனநீத்த கத்திரு ளுறு வைத் தந்தோ, வுறுமகம் பிரம மெனவுரைத் திறுமாந் தனை ததலோ ஞானமஞ் ஞானந், துறவினை யுறாது மாயு மேவாயாற் சுடரெனி னிருடெயிந் திடுமே.

எ - து. சிற்றிலிழைக்கின்ற சிறுபெண்கள் மணலாகிய சோற்றினை வயிறு நிறையவுண்டதுபோலுண்டு ஏப்பமிடுகின்றதுபோல் வேதத்தினை ஆராய்ந்து நிச்சயம் பண்ணிக்கொண்ட மாத்திரத்திலே அறிவினால் அறியப்படுவனவெல்லாம் விடயமாகலிற் சிவத்தினை அறியத்தொடங்கில் இதுவும் விடயமாமென்று இதனை அறியும் அறிவை விட்டு உள்ளிருளாகிய அவித்தையை நீங்காது வைத்துக்கொண்டு அந்தோ அவ்விடத்துப் பொருந்தாநின்ற நான் பிரமமென்று சொல்லி இறுமாந்துகொண்டிருக்குதலோ ஞானம். அஞ்ஞானமானது துறவினை அடைந்தாலன்றி நாசமாமோ. இருள்வீட்டினிடத்து இருந்துகொண்டு வாயினால் விளக்கென்றால் அவ்விருள் நாசமாமோ நீ சொல்வாயாக. எ - று.

சிறியவர் சோறல்லாத மணலைச் சோறுகப்பாவித்துத் தாம் உண்ணாதிருந்தும் உண்டதுபோல் பாவித்துப் பிறர்காண ஏப்பமிடுகின்றதுபோல் இவரும் அபரஞானத்தைப் பரஞானமாகப் பாவித்துப் பிரமானந்தம் லபியாதிருந்தும் லபித்ததுபோல் பா

வித்துப் பிறர்க்குச் சொல்கின்றாரெனக்கொள்க. மாயாகாரியங்களாகிய எல்லாவற்றையும் துறந்து அஞ்ஞானத்தைக் கெடுக்க வேண்டுதலின் துறவினையுறாது மாயுமேயென்றார். (௩௨)

ஞானத்தால் அஞ்ஞானத்தைக் கெடுப்பதன்றித் துறவினால் அஞ்ஞானத்தைக் கெடுக்கலாமோ வென்றசீடனை நோக்கித் துறவுதானே ஞானமென்று மேற்கூறுகின்றார்.

ஞானியே யெவரும் வணங்குதற் குரியோ னவினுமாசௌசயில் பெரியோன், மாநிலத் தவன்றா னுடல்விடிற் குகைப்பால் வைக்க வென் மறைப்படி புரிதற் றனும்வே தாந்தப் பொருடுணிந் திடினுஞ் சாற்றினில் வாழுமந் தணர்க்கின், றனதாற் றுறவு பெற்றநற்றவரே யமலவீ டடையுஞா னிகளே.

எ - து. துறவியாகிய ஞானியே யாவராலும் வணங்குதற்கு உரியோன் அவனே அசுத்தமில்லாத பெரியோன். அவன் பூமியின்கண் காயத்தைவிட்டு நீங்கியகாலத்தில் அதனைக் குகைக்கண் வைக்கவேண்டுமென்று வேதஞ்சொன்னபடியே செய்குதலும்; வேதமுடிவிலே விளங்காநின்ற மெய்ப்பொருளை உணர்ந்த பரஞானிகளாயினும் இல்வாழ்க்கையினை உடைய அந்தணருக்கு இல்லையானபடியினாலே, துறவினை அடைந்த நல்லதவத்தினை உடையோரே நின்மலமாகிய வீட்டினை அடையும் ஞானிகள். எ - று.

துறவிஞான் ஞானியல்லனாயினும் இல்வாழ்க்கை யுடையோன் ஞானியாயினும் இவன் அவனை வணங்கவேண்டுதலின் எவரும் வணங்குதற்குரியோனென்றும், அவன் இறந்தகாலத்தில் அவனது காயத்தைக் குகைக்கண் வைத்து அதனது தலையில் தேங்காய் உடைத்துப் புசித்துப் பின்பு மூழ்காமல் வீடுபுகுதலின் ஆசௌசயில் பெரியோனென்றும், கூறினார். இல்வாழ்க்கையில் ஞானம் வருதல் ஏகதேசமாகையாலும், துறவின்கண் ஞானம் வருதல் வெகுவாகையாலும், துறவினை ஞானமென்றார்.

ஞானியேயெவரும் வணங்குதற் குரியோ னென்றதற்கு உதாரணம்: சமாதி. "ஒழுக்கமே புரிந்தோனுத லதனைவிட் டொழிந்தோனுத— விழுக்கஞ்செய் மூர்க்கனுதல் பண்டித னுத லெண்ணில்—பழிப்பரு ஞானந்தன்னில் முயல்பவன் பணியத் தக்கோன்—றொழுதகு ஞானியென்று சொல்லவேண்டுவது முண்டோ." பெரியோனென்றதற்குதாரணம். "பலன்கள் வேண்டிய பரிசெலாம் பலித்திடும் பரமதத்துவஞானி—நலங்கொ ளுமமா மந்திரஞ் செபித்திட நயந்தவனீராடுஞ்—சலங்கொடீர்த்தமா மவன்றிரு மேனியே சகலதெய்வமுஞ் செவ்வாய்—மலர்ந்தவாசக மறுபிறப்பென வருமயற்பிணி மருந்தாகும்." குகைப்பால் வைக்கவென்றதற்குதாரணம்: மெய்ஞ்ஞானவிளக்கம். "பிறிவிலாத பிரமமீ சனுட—லிறுதியாவனற் றீண்டிடி லெங்கணு—மறுகி விற்கிடை கோடியனலதாய்ச்—செறவுசெய் யுமமீதச[illegible]ன்றோதினர். எ-ம். முன்னமே பாகமா மூரல் செய்யுநாட்—பின்னது வேவவேண் டுமோ பேசிடா—யன் னதே யிவ்வுட லறிவா லட்டது—பின்னினிச் சுடுவது பிழையே யாகுமால்." என வரும். மற்றும் வருவனவற்றுற்காண்க. (நரு)

ஞானத்திலக்கணம் யாதென்றுகேட்ட சீடனை நோக்கிக் கூறுகின்றார்

தேர்ந்திடி னபரம் பரமென விரண்டாய்த் திகழ்தரு ஞான மாங் கவற்றா, டோர்ந்திடு மறையா தியகலை யபர முயிர்பர னொடுவிர வயிக்கங், கூர்ந்துண ருணர்வே பரமதைத் தெளியக் கூறன்மாத் திரங்கலை ஞானஞ், சார்ந்துணர் வரிதப் பரனை யோர்ந் தன்றிச் சாற்றினவ் வயிக்கமாந் தலமே.

எ - து. விசாரிக்கு மிடத்தில் ஞானந்தான், அபரஞான மென்றும் பரஞானமென்றும் இரண்டுபிரகாரமாய் விளங்காநிற் கும். அந்த அபரஞான பரஞானங்களின் இலக்கணம் யாதெ ன்னின், அவ்விரண்டினுள்ளும் ஆராயப்பட்ட வேதாகமமுத லிய கலைகளையோதியுணர்ந்து பொருணிச்சயம் பண்ணுதல்அபர ஞானம்; உயிரானது பரனுடனே கலந்து ஐக்கங்கூடுதலை துண்

ணியதாக அறியுவுறிவே பரஞானம். ஆனால் அபரஞானத்திற் பயனில்லையோவென்னின் பரஞானத்தைத் தெளிவுபடச்சொல் லுதன் மாத்திரமே யாம். ஆனால் அவ்வைக்கியத்தை அறியும் நெறி யாதென்னின்,பொருந்தி அறிதற்கரிது மேற்கூறிய பரனை அறிந்தாலன்றிச் சொல்லுமிடத்தில் அந்த ஐக்கியமாகிய தலம். று. ஆங்கென்பது அசைநிலை. (௩௪)

ஆனால் அந்தப்பரனை அறியுநெறிதான் எங்ஙனமென்ற சீடனை நோக்கிக் கூறுகின்றார்.

அடுத்தவிச் சீவன் றன்மையோர்ந் தன்றி யறியொணாப் பரனையஞ் ஞானங், கெடுத்தலாற் சீவன் றனையுமோர்ந் தொரு வர் கிட்டொணா நனவினிற் சுழுத்தி, யுடைத்துமற் றெவனுக் கவன வஞ்ஞான முடைக்குமுட் கரணவா தனைக, டுடைத்திடி னபாவ மெனப்படு நனவிற் சுழுத்தியு மெளிவந்து தோன்றும்.

எ - து. இந்தவுடம்பின் கண்ணே பொருந்தியிருக்கின்ற இச்சீவனது இயல்பை அறிந்தாலன்றி அப்பரனை அறியக் கூடாது. ஆனால் அச்சீவனை அறியுமுறைமை எங்ஙனமென் னின், அஞ்ஞானத்தைக் கெடுத்தாலன்றிச் சீவனையும் அறிந் தொருவரும் கிட்டக்கூடாது. ஆனால் இந்த அஞ்ஞானதலதக் கெடுக்கு முறைமை எங்ஙனமென்னின், நனவிற்சுழுத்தி எவனு க்கு உடையது அவன் அவ்வஞ்ஞானத்தைக் கெடுப்பன். ஆனால் அந்நனவிற் சுழுத்திவருநெறி எங்ஙனமென்னின், அந்தக்கரண வாதனைகளை ஒழித்தால் அபாவமென்று சொல்லப்படும் நனவிற் சுழுத்தியும் எளிதில் வந்து உதயமாம். எ - று. (௩௫)

ஆனால் அந்தக்கரணவாதனை யொழிக்குநெறி எங்ஙனமெ னற சீடனை நோக்கிக் கூறுகின்றார்.

யோக சாதனையால் வாதனை கரணக் கொழியுமவ் வியோ கமு மிருமைத், தாகுமே கிரியை ஞானமென் பேதத் தாதனு தியதொழில் யோக, மேகமாம் பொருடோர்ந் ததுவிது வெனுஞ்

சுட் டிறத்தன்மற் றையதிருவகைக்கும், போகவேண் டுமெைம் புலன்களு மிறந்தப் புலனவா வொழித்தலார் போமே.

எ - து. யோகசாதனையினால் அந்தக்கரணங்களுக்கு வாதனையொழியும். ஆனால் அவ்வியோகத்தின் இலக்கணம் யாதென்னின் அந்த யோகமும் கிரியை ஞானமென்னும் இரண்டு பேதத்தால் கிரியாயோகமென்றும் ஞானயோகமென்றும் இரண்டு பிரகாரமாயிருக்கும். அந்தக்கிரியாயோக ஞானயோக விலக்கணங்க ளியாவையெனின் கிரியாயோகம் இயமம் நியமம் ஆதனம் பிராணாயாமம் பிரத்தியாகாரம் தாரணை தியானம் சமாதி என எண்வகையாய் இருக்கும். ஞானயோகம் ஏகமாயுள்ள மெய்ப்பொருளை வேதாகமங்களை ஆராய்ந்து நிச்சயம் பண்ணிக்கொண்டு பின்னர் ஞானநிட்டை கூடி அதுவென்றும் இதுவென்றும் சுட்டி அறியும் சுட்டறிவெல்லாம் இறந்து கரணம் அசைவறநிற்றல். ஆனால் இவ்வியோகத்தை அடையுமாறு எங்ஙனமென்னின், அந்த இருவகை யோகத்தினை அடைதற்கும் ஐம்புலன்களும் இறந்து போகவேண்டும். ஆனால் இவ்வைம்புலன்களும் இறந்துபோம்படி செய்தற்கு உபாயம் எங்ஙனமென்னின், ஐந்தவாவினையும் ஒழித்தலினால் அப்புலன்களைந்தும் இறந்து போம் எ - று.

ஆதனாதியவெனவே இயமாதி வருவிக்கப்பட்டது. புலன்கள் ஐந்தாகையால் அவற்றின்கட்செல்லும் அவாவும் ஐந்தாயிற்று. யோகசாதனையால் வாதனைகரணக் கொழியு மென்றதற்கு உதாரணம்: குறுந்திரட்டு. "அண்ட மெண்டிக் கெங்கண்ணு மடங்கசரு ளியமதாகக்—கண்டுகொண் டிருக்கக் கண்ட கருத்தையு மறவே விட்டா—லண்டமெண் டிக்கெங் கண்ணு மாய்நின்ற வானந் ததைக்—கண்டுகொண் டிருக்கும் கண்ணங் கணத்தில் வந்து திக்குமன்றே." மற்றும் வருவன வற்றாற்காண்க.

அந்தவவாவினை அறுக்குமாறு எங்ஙனமென்ற சீடனை நோக்கிக் கூறுகின்றார்.

ஐம்புல னடல்வேண்டும் விடல்வேண்டு மொருங்குவேண்
டியவனைத் தையுமென், றும்பருர் பரவு மொருதமிழ் வேதமு
ரைத்தலா னிருவகையா, நற்புறச சார்பை வெறுத்தவா
வறுத்தைம் புலனொழித்.தொழுங்கினொ டருமச், செம்பொருள்
காண்ப தறிவறி யாமை சிதைத்தல்வீ டெனத்திகழ் தருமால்.

எ - து. வீடடையக் கருதினோன் ஐம்புலன்களையும் அடல் வேண்டுமென்றும அவவைந்தினையும் அடுதற்கு அவற்றால் அனுபவிக்க விரும்பி வைத்த பொருள்கள் அனைத்தினையும் ஒருங்கே விடல்வேண்டுமென்றும, தேவர்களும தோததிரம்பண்ணுகின்ற ஒப்பற்ற தமிழவேதமாகிய திருவள்ளுவப் பயன் கூறுதலின் உயிரசசார்பு பொருட்சார்பு என்றிருவகையாயுள்ள நமது புறச சார்பினை முன்னா வெறுத்துத் துறந்து பின்பு அதன்கண் வைத்த அவாவினை அறுத்துப் பின்பு பஞ்சேந்திரியங்களையும் விடயங்களைக் காணுந்தோறும் எழுந்துசெல்லவொட்டாது உள்ளடக்கி இந்தமுறையே ஒவவொன்றாக நீந்துசசென்று யாவராலும் அறிதற்கரிய அந்தச செவவிய மெய்ப்பொருளை அறிவது ஞானமெனவும் அந்த ஞானத்தால் அஞ்ஞானத்தைக் கெடுப்பது வீடெனவும் விளங்காநிற்குமாகலின் ஞானமும் வீடும் இவைகளென்று அறிவாயாக. எ - று.

முன்பிருவகைச சார்பாகிய புறப்பற்றினை ஒழித்து, அதற்குமேல் அதன்கண்வைத்த அவாவினை அறுத்து, அதற்குமேல் காணப்பட்ட விடயங்களில் எழாமல் இந்திரிய நிக்கிரகம் பண்ணி, அதற்குமேல் முன்னர் எறியிருந்த கரணவாதனையை ஒழித்து, அதறகுமேல் நனவிற்சுழுத்தியைப்பெற்று, அதற்குமேல் அஞ்ஞான நிவிருத்திபண்ணி, அதற்குமேல் சீவ தரிசனம் பண்ணி, அதற்குமேல் பரைதரிசனம் பண்ணி, அதற்குமேல் சிவதரிசனம்பண்ணி, அதற்குமேல் ஐக்கியம் கூடவேண்டுதலின், ஒழுங்கினொடருமச செம்பொருள் காண்பதறிவென்றார்.

விடல்வேண்டு மொருங்கு வேண்டியதனைத்து மென்றதற்கு உதாரணம்: தேவிகாலோத்தரம். "தூக்கசுகமாசை வெறுப்

பென்று கூட்டுந் துவந்துவங்க ளிரண்டவைபோற் சொல்லப் பட்ட—மிக்கதெய்வ மடவார்க டன்மாதன்ம மெய்ப்பலன்கள் வேறு வேறுளவா மன்றே—தொக்கவுள மதுவாக்கும் பிறப்பை யாக்குந் தொடர்பெனவே துணிந்தந்தத் தொடர்பை யாக்குந்—தக்க பொருட்சார் புயிர்ச் சார்படையநீக்குந் தவத்தார்பாற் சிவம்வந்து சாருங்காணே." மற்றும் வருவனவற்றுற் காண்க. ()

அரம்பையுள் ளுறுதண் டெடுத்தலி னொருவ னனுபவ மாஞ்சிவ முணர்த,னிரம்புமெய் யுணர்வத் தண்டின்மீ தொன்றி நின்றநா ரனைத்துநீக் குதல்போல், விரும்பிரு வகைப்பற்றை யுந்துறந் திருளை வீட்டல்வீடிவற்றையே யன்றி, 'வரும்பர வுரனும் வீடும்வே றறியேம் வார்த்தை மாத் திரத்தியாம் பெறவே.

எ - து. வாழையினது மட்டைகட்கெல்லாம் உள்ளே சேஷமாயிருக்கின் தண்டினை எடுத்தல்போல் ஒருவன் அனுபவமாய் மாயாகாரிய காரணங்கட்கெல்லாம் சேஷமாய் உள்ளீடாய் விளங்காநின்ற சிவத்தினை அறிதலே எங்கும் பரிபூரணமாகிய பரஞானம். அந்த வாழைத்தண்டின்மேலே பொருந்திநின்ற மட்டைகள் அனைத்தினையும் ஒவ்வொன்றாக நீக்குதல்போலத் தம்மால் விரும்பப்பட்ட உட்பற்றுப் புறப்பற்றாகிய இருவகைப் பற்றினையும் துறந்து அஞ்ஞானவிருளைக் கெடுத்தலே மோக்ஷம். இந்தப்பரஞானத்தையும் மோக்ஷத்தையும் அன்றி வார்த்தை மாத்திரத்தாற் பெறவரும பரஞானத்தினையும் மோக்ஷத்தினையும் வேறெனாம் அறிகிலேம். எ - று.

வார்த்தை மாத்திரத்தாற் பெறவரும் ஞானம் மோக்ஷமென்றது சர்வத்தையும் பிரமமென்று அறியாதிருந்ததே அஞ்ஞானமென்றும், சர்வத்தையும் பிரமமென்று அறிந்ததே ஞானமென்றும், இங்ஙனம் அறிந்தபோதே அஞ்ஞானங்கெடுமென்றும், கூறிக்கொண்டிருத்தலை. (கூஅ

இருவகைச் சார்பா மொருபுறப் பற்று மிடையதாங் கடையுடற்பற்றும், விரிகர ணங்க ளாகுமுட் பற்று மெனத்திரி விதம்

விளங் கிடுமித், திரிவிதத் தினையுங் காத்திரங் கரணஞ் சேர்த்தி யொன் ருக்கொடுட்பற்றும், வருபுறப்பற்று மென்விரண்டாக மதிப்பரவ் வணைந்துறவையுமே.

எ - து. உயிர்ச்சார்பு பொருட்சார்பு என்னும் இருவகைச் சார்பாகிய ஒரு புறப்பற்றெனவும், இடைப்பற்ருகிய கடையாகிய உடற்பற்றெனவும், விரிந்த கரணங்களாகிய உட்பற்றெனவும், இங்ஙனம் பற்றுக்கள் மூன்றுவிதமாய் விளங்காநிற்கும். இம்மூவகைப் பற்றினையும் காயத்துடனே கரணத்தைச சேர்த்து ஒன்ருகக்கொண்டு உட்பற்றெனவும் இங்ஙனம் புறப்பற்றெனவும் அந்தமுறைமையே துறவினையும் உட்டுறவெனவும் புறத்துறவெனவும் இரண்டாகக் கருதிச் சொல்வர் பெரியோர். எ - று. காயத்தோடு கரணம் ஒற்றுமையாகலிற் காத்திரங்கரணஞ்சேர்த்தியென்ருர். இரண்டாக மதிப்பரென்றதை இருதலையுங் கூட்டுக.

பற்றுக்கள் திரிவிதமாய் விளங்குமென்றதற்கு உதாரணம்: சமயாசாரம். "புத்திரர் மனையாளாதிப் புறசுற்றப் பற்று நீக்கி—யித்திரண் மலவுடம்பா மிடைச்சுற்றப்பற்றும் விட்டே—யொத்துயிர் விடாதபாச கரணவுட் சுற்று மோய்த்துத்—தத்துவ மாயிருத்த றவத்தவர் சரிதை யையா." மற்றும் வருவன வற்ருற் காண்க. (கஉகூ)

இருவகைப் பற்றி லொருவனே ஞானி யெனப்படிற் புறபபற்றதேனு, மொருவுதலிலரு மெவணமப் பெயருக் குரியர்வேறொன் றுமில்கொடியுக், தருமிலை மலர்கா யெனினகப் பற்றி றவர்புறப் பற்றையுர்தணவார், மருவினு மஃதோ ரொருவர் வேரன் றீர் மலர்க்கொடி வாடுருவகையே.

எ - து. உட்பற்றுப் புறப்பற்ருகிய இருவகைப் பற்றுக்களும் இல்லாத ஒருபுருஷனை ஞானியென்று சொல்லப்படுமோனல், புறப்பற்ருயினும் நீங்குதல் இல்லாதாரும் எந்தமுறைமையால் அந்த ஞானியென்னும் பெயருக்கு உரியராவார். ஆனல்

புறப்பற்றிருக்க அகப்பற்றை யொழித்தோர் ஞானிகள் அல ரோவென்னின், ஒரு வேராயினும் இல்லாத கொடியும் இலை மலர்காய்களைத் தருமானால் அகப்பற்றில்லாத தவத்தோர் புறப் பற்றினையும் விட்டுநீங்கார். ஆனால் புறபபற்றிருக்க அகப்பற் றொழித்தோர் இல்லையோவென்னில், புறப்பற்றிருக்க அகப்பற் றொழிதலை ஒவ்வொருவர் அடைந்தாராயினும் வேரினை அன்று அறுக்கப்பட்ட மலர்க்கொடி சிறிதுபோது வாடாதிருக்குமு றைமைபோல் அகப்பற்றொழித்தோர்க்கும் புறப்பற்றுச் சில நாள் இருக்கும். எ - று.

வேரொன்று மில்கொடி இலைமலர் காய்களைக்கொடாதது போல் காரணமாகிய அகப்பற்றொழிந்தால் அதனது காரிய மாகிய புறப்பற்று இராதென்று குறிப்பாற் கூறி வேரொன்று மிலகொடியுங்காயிலை மலர்காயெனி னகப்பற்றிறவர் புறப்பற் றையுந் தணவாரென்று அவரைப்பரிகாசம் பண்ணினர். வேர ன்றீர் மலர்க்கொடி அறுத்த தருணத்திற் பச்சென்று சிறிது போது வாடாததுபோல் தோன்றிப் பின்பு உலர்ந்துபோகின்ற துபோல், அகப்பற்றொழித்த தருணத்திற் புறப்பற்றுச் சிலநாள் இருத்தல்போலத் தோன்றி நீங்குமென்பதறிக. அகப்பற்றொ ழித்தோர்க்குப் புறப்பற்றின்மேல் பிரவிருத்தி இல்லாமையால் அவர்க்கு அஃதின்றெனக்கொள்க. (௪O)

வேரறக் கொடிவாடுதெலினுட் பற்றை விடுக்கின்மற் றைய பற்றுநேரே, சோருத லியல்பா மதனையே முன்னர்த் தொலைக்க வேண் டுவதெனிற் கடுமுட், சாருமோர் கொடியின் கிளையினைத் தையுமுன் றறித்தொழித் தலதத னிடையா, ரோர்தனி வேர் கொள் ளரிதரி தகப்பற்றொழித்தலும் புறப்பற்ற துறவே.

எ - து. காரணமாகிய வேரற அதன் காரியமாகிய கொடி உலர்ந்து போதல்போல் காரணமாகிய அகப்பற்றினை முன்பொ ழித்தால் அதனது காரியமாகிய புறப்பற்றும் உடனே நீங்குதல் சுபாவமாகலின், அந்த உட்பற்றினையே முன்பு ஒழிக்கவேண்டு

மென்மையானுல், கடிய முட்கள்பொருந்திய ஒரு கொடியினது கிளைகளனைத்தையும் முன்னர் வெட்டி நீக்கினுலன்றி அதனடுவே பொருந்திய ஒப்பற்ற முதல் வேரினைப் பிடுங்கிக்கொள்ளுதல் அரிது; அதுபோல் முன்பு புறப்பற்றை ஒழித்து அகப்பற்றை ஒழிப்பதன்றிப் புறப்பற்றிருக்க அகப்பற்றினை முன்பு ஒழித்தலும் அரிது. எ - று. (சக)

ஆனுல் நீர் முட்கொடியைத் திருட்டாந்தம் கூறியது என்னை அஃது இல்லாத கொடியினது வேரினை முன்பு பிடுங்கிக் கொள்ளுதல்போல் புறப்பற்றிருக்க அகப்பற்றை ஒழிக்கக் கூடாதோ வென்ற சீடனை நோக்கிக் கூறுகின்றார்

முள்ளில்சில் கொடிவேர் கொளலின்முற் சனகன் முதலவோ ரொருவர்மற் றொருதம், முள்ளமா சனுகா லியல்பினு னகப்பற் றொழிப்பினு முனமெனை யுறமூங், கள்ளநெஞ் சினர்பற் பலரும்வீ டடையுங் கதியதன் மையிற்றுற வமைந்த, தெள்ளியோர் புறப்பற் றொழித்தலே முதற்கட் செப்பின ரவர்க்கு மொப்புறவே.

எ - து. முள்ளில்லாத சில கொடியினது வேரினை முன்னர்க் கொடி தறித்தொழியாது பிடுங்கிக் கொள்ளுதல்போல், சனகராஜா முதலிய ஒரொருவர் ஒப்பற்ற தமது உள்ளத்தின்கட் காமம் வெகுளி மயக்கமென்னு முக்குற்றங்களும் பொருந்தாத இயல்பினுல் புறப்பற்றிருக்க அகப்பற்றினை முன்னர் ஒழித்தாராயினும், என்னைப்போலும் முக்குற்றங்களையுமுடைய மனத்தினர் பலரும் வீட்டினை அடையுமார்க்கம் அஃதன்றுகலின், துறவினது இலக்கணங்களையெல்லாம் அறிந்து அளவிட்ட தெளிந்த அறிவினையுடைய திருவள்ளுவநாயனுர் புறப்பற்றொழித்தே அகப்பற்றொழிக்க வேண்டுமென்று புறப்பற்றொழித்தலை அகப்பற்றொழித்தற்கு முதற்கட் கூறினுர், யாவருக்கும் சம்மதமாக. எ - று.

உள்ளமாசனுகாவென்றதனுல் நின்மலசித்தரென்றும் கள்ளநெஞ்சினரென்ற தன்மையால் மலின சித்தரென்றும் அறிந்து

கொள்க. நின்மலசித்தர்கள் ஏகதேசிகளாய் எவ்வகைப்பட்ட பற்றுக்களிருந்தாலும் அவற்றின்கண் அவாவின்றித் தெய்வகதியாய் வீடடைதலினாலும், மலினசித்தர்கள் அனேகராகலாலும், விட்டபற்றுக்களின்மேலும் ஓரோர் காலே அவாவுதலினாலும், அவர் வீடடையும் மார்க்கம் யாவர்க்கும் மார்க்கமன்றென்றார். அறம்பொருளின்பம் வீடென்னும் நான்கினையும் தெளிந்தவராகலின் தெள்ளியோரென்றார். புறப்பற்றிருக்க அகப்பற்றொழிந்தோர்க்கும் சம்மதமாகலின் எவர்க்கு மொப்புறவென்றார். மற்றென்பதசைநிலை.

உள்ளமாசனுகாவியல்பினனென்றதற்கும், கள்ளநெஞ்சினரென்றதற்கும் உதாரணம்: வாசிட்டம். "வெம்புதல்போய்த்தண் ணென்றவுன் மனதுக்கிவ் வுலகவியா பாரங்கள், செம்புனர் வேழத்தி...க் கான்குளப்படி போறன்றோன்று மாற்றினநெஞ்சுக், கம்புவி யிறவொழில் சிறிதேயாயினு நீந்தரிதாகு மாவின்பாதப், பைம்புனலுங் கிழக்கொதுக்குக் கெல்லைகரை காணாத பரவையன்றே." எனவரும். மற்றும் வருவனவற்றாற் காண்க. ()

விடத்தகு மகப்பற் றினைமுனம் புறப்பற் றொழிப்பதெற்றினுக்கென விளம்பல், படிற்றொழுக் கினர்சம் மதமும்வா னவரும் பயிலில் வாழ்க் கையும்விடுக் குதலென், றெடுத்துமைக் கறிவா சாரமோ தியசொற் கிழுக்குமா குதலின் மாசியல்பாத், துடைத்தசிந் தையர்க்கு சிந்தையி லொழுக்காச் சொல்வர்முன் புறல்புறத் துறவே.

எ - து முன்னரகப்பற்றினை ஒழிக்கத்தகும் புறப்பற்றினை ஒழிப்பது யாதுக்கென்று சொல்லுதல் கூடாவொழுக்கத்தார்க்குச் சம்மதமும், வானவராயினும் தாம் முன்பழகிய இல்வாழ்க்கையையும் விடுத்தல் செய்யவேண்டுமென்று எடுத்து மகாதேவர் மகாதேவிக்கு ஞானசாரங் கூறியசொல்லுக்குங் குற்றமுமாதலின், முக்குற்றங்களையுஞ் சுபாவமாக நீத்த நின்மலசித்தர்க்கு முன்னர்ப் புறத்துறவடைதலை இகழ்ச்சியில்லா நெறியாகச்

சொல்வர் பெரியோர். எ - று ஒழுக்கமுடையாருக்குச் சம்மதமாதலாலும், ஈசுர வாக்கியத்திற்கு மாறுபாடின்மையாலும், நின்மலசித்தர்க்கு மொழுக்காதலாலும், முன்னர்ப் புறப்பற்றொழிதலே நன்னெறியென்பது காண்க.

புறப்பற்றொழிப்ப தெற்றினுக் கென்றதற் குதாரணம்: தேவிகாலோத்தரம். "சமயாசார சங்கற்ப விகற்பமு—மமையாதாங் குலவாசார மானது—மிமையா தாரும் விடாத வில்வாழ்க்கையு—மமையார் தோளாய் விடுத லாசாரமே." மற்றும் வருவனவற்றுற் காண்க. (௬௩)

ஒன்றிய பாச விருடீரந் திடுதற் குபாயமைம் புலனொடுக்கிடுத, லொன்றல திலையென் றதுசெய்வோ னவைவேண் டனைத்துமுன் விடாதுவைத் துறுத, லென்றுமெவ் விடத்து மெனைமுத லுயிர்க ளெவற்றையுங் கொலைசெயேன் வெருட்டே, னென்றுசொல் விரதி யொருவனு டொறுங்கை யிடையினேர் படைகொளு மியல்பே.

எ - து. உயிரோடு பொருந்திய அஞ்ஞானவிருளைப் போக்குதற்கு உபாயம் பஞ்சேந்திரியங்களை நிக்கிரகம் பண்ணுதலொன்றுமே அன்றி வேறே உபாயமில்லையென்று அவ்வைந்தினையு நிக்கிரகம் பண்ணுவோன் அந்தப் பஞ்சேந்திரியங்களால் விரும்பப்பட்ட பொருள்களனைத்தினையும் முன்விட்டு நீங்காது வைத்துக்கொண்டிருத்தல், எக்காலத்தும் எவ்விடத்தும் என்னைமுதலாகிய வுயிர்கள் எவற்றினையும் கொல்லுதல் செய்யேன் பயப்படச்செய்யேனென்று 'சொல்லாநின்ற கொல்லாவிரதி யொருவன் எக்காலமும் கையின்கண் இடைவிடாது ஒப்பற்ற வாளாயுதம் பிடித்துக்கொள்ளு முறைமையாம். எ - று.

உயிர்களைக் கொலைசெய்யேன் வெருட்டேனென்று சொல்லாநின்ற கொல்லாவிரதி அவைசெய்தற்கு ஏதுவாகிய வாளினை விடாது கையிற்கொள்ளுதலின், அவன் அவை செய்வானென்றும், அவன் கொல்லாவிரதியல்லனென்றும், அறிகுதல்போல்,

பஞ்சேந்திரியங்களை நிக்கிரகம்பண்ணத்தொடங்கினேன் அவற்றால் அனுபவித்தற்கு ஏதுவாகிய விடயங்களைக் கைவிடாது வைத்துக்கொண்டிருத்தலின் இவன், அவைகளை விரும்புவானென்றும் இந்திரிய நிக்கிரகியல்லனென்றும் அறிந்துகொள்க.

விடயங்களை அனுபவியாது வைத்துக்கொண்டு ஞானசாதகம் பண்ணக்கூடாதோ வென்ற சீடனைநோக்கிக் கூறுகின்றார்.

சாதக தசைக்கண் விடயமே தடையாஞ் சாத்தியமானபின் புசித்தற், காதல்வைத் திடினப் பிரமவானந்தத் ததிகமோ விடயவா னந்தங், கோதில்வீட் டின்பம் பெறுகலா விடினுங் கூடுதற் கெளிற்கரி பிழைக்கிற், றீதிலோர் சிங்க மதனையே யன்றித் தேடுமோ தேரையூன் றினவே.

எ - து. ஞானசாதக தசையின்கண் விடயங்களே அதற்குத் தடையாமாகலின் அவற்றினை வைத்துக்கொண்டு சாதகம் பண்ணக்கூடாது: ஆனால் அவ்விடயங்களைச் சாதகதசைக்கண் அனுபவியாது சாத்தியமான பின்பேனும் அனுபவித்தற்கு வைத்துக்கொள்வையானால், அச்சாத்திய தசைக்கண்ணே உதயமான அந்தப் பிரமானந்தத்திலும் இந்த விடயானந்தம் அதிகமாக வேண்டுமாதலின், இந்த விடயானந்தமே போதும்; அந்தப் பிரமானந்தத்தை அடைய ஞானசாதகம் பண்ணவேண்டுவதேயில்லை: ஆனால் சாதகம்பண்ணிக்கொண்டு வருமிடத்துச் சாத்தியம் கைகூடிக் குற்றமற்ற வீட்டின்பம் வந்து லபியாதகாலத்தானும் பொருந்தி அனுபவித்தற்கு அவைகளை வைத்துக்கொள்வேனென்பையானால், யானையினை இரையாகத் தேடிச் சென்ற குற்றமில்லாத ஒப்பற்ற சிங்கம் அந்த யானை தப்பிப்போயிற்றென்றால் அதனையே தேடுதலன்றி அற்பமாயுள்ள தேரையினது மாமிசத்தைத் தின்னத் தேடுமோ. எ - று.

மேலான யானையை இரையாகத் தேடிச்சென்ற சிங்கம் அந்தயானை கிடையாது போயிற்றாயினும் அதனையே தேடுதலன்றிக் கீழான தேரையூனைத் தின்னத் தேடாததுபோல், மேலான

பேரின்பத்தை அனுபவிக்கத் தொடங்கினேன் அவ்வின்பம் தனக்கு லபியாது போயிற்றாயினும் அதனையே விரும்புதலன்றிக்கீழான விடயசுகத்தை விரும்பானென்பதுங் கண்டுகொள்க.

பிரமவானந்தத்ததிகமோ விடயவானந்தமென்றதற்குஉதாரணம்: தத்துவராத்தினாகரம். "வாக்கொடு மனமு மிறந்ததி மதுர வாரியா யொழிவற நிறைந்து — போக்கொடு வரவு தின்றிய வமுதைப் பூரண மாகவுண் டவர்தாம் — வீக்கிய கானனீரெனும் விடய மேவுற முயல்வரோ முயலி—னேக்குறு மந்த ஞானியு நாயு மொத்திடும் வாசியொன் றிலதே." எ-ம். குறுந்திரட்டு. "தூமங் காட்டுஞ் சுடுதழலுண் டென்பது துய்ப்பார்க்—காமங் காட்டு மயினி யுவர்ப்பப் படியே நல்—லேமங் காட்டு ஞானிக ளென்றா லிவர் நெஞ்சிற் —காமங் காட்டும் பெற்றிலர் கற்றோர் கலையன்றே." எ-ம். சிங்கமதனையே யன்றி, தேடுமோர் தேரையூனறின வென்றதற்கு உதாரணம்: குறுந்திரட்டு. "பாய்ந்துமா வேழமொற்றிப் பறக்குமத் தறுகண் யாளி—தேய்ந்தழிவுறினுந் தேரை யிரையெனச் செல்லா தாற்போ—லாய்ந்துநன் முத்தி யின்ப மருந்திட வுற்ற நீரார்—சாந்துயர் வரினு மொன்றித் தளர்ந்தெழா தாகி விட்டார்." எ-ம். மற்றும் வருவனவற்றாற் காண்க. (ச௰)

படையெடுத் தமர்க்கட் சாருமோர் வீரன் பகைஞரைச் சயங்கொளா விடினும், விடையெனப் பொருதாங் கிறத்தலேயன்றி வெந்நிட வுன்னிடா னதுபோற், கடையென விடயமிகழ்ந்துபே ரின்பங் கருதினோன் பெறுகலா விடினு, மிடையறா தனைநா டொறு மடைதலான் மறந்து மெண்ணுமோ மண்ணின் வாழ்க்கையையே.

எ - து. ஆயுதமெடுத்துக்கொண்டு யுத்தகளத்திலே செல்லாநின்ற ஒப்பற்ற வீரனானவன் சத்துருக்களைச் செயங்கொள்ளாதவிடத்தும், இடம்போல் அச்சத்துருக்களோடு யுத்தம்பண்ணி அந்த ரணகளத்திலே இறந்துபோதலேயன்றிப் பயந்து

முதுகுகொடுக்க நினையான். அதுபோல் இழிவென்று அறிந்து அற்பமாயுள்ள விடயானந்தத்தை இகழ்ந்து கைவிட்டுப் பேரானந்தத்தை அடையக்கருதி ஞானசாதகந் தொடங்கினேன் சாத்தியம் கைகூடி அவ்வின்பத்தைப் பெறாதிருந்தானாயினும், க்ஷணமாயினும் இடைவிடாது அந்த இன்பத்தை எப்பொழுது அடைவேனென்று கருதுவதேயன்றி, மறந்தாயினும் தான் முன்பு இகழ்ந்து கைவிட்ட இல்வாழ்க்கையை மீண்டும் நினைப்பானோ. எ - று.

சுத்தவீரன் சத்துருக்களைச் சயங்கொள்ளாதவிடத்தும் அவர்களோடு யுத்தம்பண்ணி இறந்துபோதலேயன்றி முதுகு கொடுத்தற்கு நினையான். அதுபோல் சுத்தவிரத்தன் ஞானசாதகம் பண்ணுமிடத்தும் அஞ்ஞானநாசம் பண்ணிப் பேரின்பத்தை அடையாதிருந்தானாயினும், அந்தச் சுத்தவாதனையோடு நின்று இறந்துபோதலேயன்றி விடயங்களை இச்சித்து இல்வாழ்க்கையில் திரும்பானென்பதும், யுத்தகளத்திலே வெந்நிடாதிறந்தோனுக்கு மறுமைக்கண் வீரசொர்க்கவின்பம் வருவது போல் சுத்த வாதனையோடு இறந்தோனுக்கும் மறுமைச சன்னத்திலே வீட்டின்பம் வருமென்பதும், காண்க. (சசு)

இந்திர சாலத் தொருநகர் காண்போ ரெனத்தனு முதற்பிரபஞ்ச, நந்திணுங் கெடினும் பூரியா வாடா நன்மனச் சனக ஞுதியரு, மந்திரி முதலோர் மீதுபூபாரம் வைத்தொரே காந்தத்துள் வதியாத், தந்தொழி லொருக்கிச் சமாதியுற் றன்றே தவிர்ந்தனர் காணவா தனையே.

எ - து. இந்திரசால வித்தையிலே தேர் திருவிழா முதலிய மங்கலமும் அக்கினிபட்டு வேவுதல் முதலிய அமங்கலமுமாய் விளங்காநின்ற ஒருபட்டணத்தினைப் பொய்யென்று அறிந்து விநோதமாகக் காண்போர்போல், தேகாதிப் பிரபஞ்சமெல்லாம் மாயா காரியமாகிய பொய்யென்று அறிந்து அவைகள் ஆக்கமாய் விளங்கு மிடத்தும் அவற்றிற்கு நாசம் வந்தவிடத்தும் பூரிப்பு வாட்டமில்லாத நின்மலசித்தத்தினையுடைய சனக

ராசா முதலோர்களும் மந்திரிமுதலாகிய பேர்களிடத்து இராச்சியபாரத்தையெல்லாம் ஒப்பித்து ஓரேகாந்தத்தானத்தில் இருந்து கொண்டு தமது இராசரீகத் தொழில்களையெல்லாம் ஒழித்து ஞானசமாதி அடைந்தல்லவோ அந்தக்கரணவாதனையை ஒழித்தார்கள். எ - று.

சனகனுதியருமென்ற சிறப்பும்மையால் பிரபஞ்சத்தை மெய்யாகக்கருதி அதன்கண்வரும் சுகதுக்கங்களினுல் பூரிப்பு வாட்டங்களையுடைய மலின சித்தர்க்கு அப்பிரபஞ்சத்தோடும் கூடியிருந்து கரணவாதனையை ஒழித்தல் கூடாதென்பதாயிற்று.

இந்திரசாலத்தொருநகர் காண்போரென வென்றதற்கு உதாரணம்: ஞானவாசிட்டம். "வெங்காதற் பெரும்பாம்பு நெளிபுற்றுங் குடும்பபரம் வெறும்பொய் யென்றே—யிங்காசை யறநீக்கி யெல்லையிலாப் பரமபதத் திருந்துவாழ்வாய்—சிங்கார கந்தர்ப்ப நகரிருந்தென் சிதைவுற்றென் றீதேன்றோ—பங்கான மனைமக்கள் வாழ்ந்தாலென் கெட்டாலென் பாசமாயை." மற்றும் வருவனவற்றுற் காண்க. (௪எ)

சொற்றிடின் மயக்க மற்றுதித் துளவச் சுகருமொண்டாதையைத்துறவா, வுற்றிருஞ் சமாதி யுற்றகப் பற்று மொருவி வீடடைந்தனர் சனகர், முற்றவ முனிவர் நால்வரு மொருநான் முகப்பிதா விடத்தவன் வளத்தோர், பற்றுமற் றகப்பற்றையுமுயர் சமாதி பணியொழித் தெணியவீ டடைந்தார்.

எ - ள். சொல்லுமிடத்துப் பிண்டஞானத்தை மறைக்கு மயக்கவிருளின்றி உதயமாகிய அந்தச்சுகரும் ஒள்ளிய பிதாவினைத்துறந்து பெருமைபொருந்திய ஞான சமாதியை அடைந்து மற்றை அகப்பற்றினையும் நீங்கி வீட்டினை அடைந்தார். சனகர்முதலிய தவமுனிவர் நால்வரும் ஒப்பற்ற நான்கு முகங்களையுடைய தமது பிதாவிடத்தும் அவனது செல்வத்தினிடத்தும் ஒருபற்றுமினுமின்றித் துறந்து உயர்ந்த ஞானசமாதி கூடி அகப்பற்றினையும் ஒழித்துத் தாம் கருதிய வீட்டினையும் அடைந்தார்கள். எ - று.

சுகரும் சனகர் முதலிய நால்வரும் வேதாகமகலைகளையும் ஞானத்தினையும் அறிவிக்கும் வல்லமையுடைய உத்தம பிதாக்களையும் அவரது செல்வத்தினையும் விட்டுத்துறந்து ஏகாந்த ஸ்தானத்திலிருந்து அகப்பற்றை யொழித்தார் என்றதனால் அகப்பற் றொழிப்பார்க்குச் சங்கமாகா தென்பது அறிந்து கொள்க. (௬௫)

தத்துவ முணர வேண்டினோன் மனைமுதற் சகலமும் விடுத்துமெய்ஞ் ஞான, முத்திரை திகழச சமாதியுற் றல்லான் முடியுமோ வெனவுமை முதலா, வைத்ததற் குழாத்தை யொருவிநீள் கல்லான் மரத்தி னீழலிற்சமா தியையுற், றத்தனே யுணர்த்தினானெனிற் பினும்வே றறைதனம் மிகுமட னன்றே.

எ - து. பரதத்துவத்தை அறியவிரும்பினோன் மனைவிமுதலிய சகல்பற்றுக்களையும் விட்டுத்துறந்து மெய்ஞ்ஞானமுத்திரைவிளங்க ஞானசமாதியை அடைந்தாலன்றி அதனை அறியக்கூடுமோவென்று மகாதேவிமுதலாயுள்ள தனது கூட்டங்களை யெல்லாம் நீங்கி, உயர்ந்த கல்லாலமரத்தினிழற்கண் எழுந்தருளி, ஞானசமாதியை அடைந்து, மகாதேவனே அறிவித்தானென்றால், பின்னரும் வேறே சனகராசாமுதலிய பேர்களைத் திருட்டாந்தமாக எடுத்துக்கூறுதல் நமது மிகுந்த அறியாமையல்லவோ. எ - று. மெய்ஞ்ஞானமுத்திரை மனோமௌனம். மகாதேவரினும் அறிவிப்பாரின்மையின் பினும்வேறறைதனம் மிகு மடனென்றார்.

மனைமுதற் சகலமும் விடுத்தென்றதற்கு உதாரணம்: திருமந்திரம். "விரைந்தன்று நால்வர்க்கு மெய்ப்பதி சூழ்ந்து—புரந்தகல்லா னிழற் புண்ணியன் சொன்ன—பரந்தன்னை யோராப் பழமொழி யாள—ருரந்தன் மையாக வொருங்கு கின்றாரே." எ-ம். திருக்கடைக்காப்பு. "தந்தைதாய் புத்திரர் தன்னுடன் றோன்றினார் தாரமென்னும்—பந்தநீங் காதவர்க் குய்ந்துபோக் கில்லெனப் பற்றினாயே—வெந்தநீ றாடியா ராதியார் சோதியார்

வேதகீத—ரெங்கையா னூர்தொழு தய்யலா மையல்கொண் டஞ் சனெஞ்சே." எ-ம். தேவாரம். பழகி னல்வரும் பண்டுள சுற்ற மும்— விழவிடா விடின் வேண்டிய தெய்தொணு—திகழ் கொ ன்சேறையிற் செங்நெறி மேவிய—வழக னருள ரஞ்சுவ தென் னுக்கே." எ-ம். மற்றும் வருவனவற்றுற் காண்க. (சக)

எடுத்துள குடும்பச் சுமையொடீண் டொருவ னெங்ஙன ஞானவாசானை, யடுத்தவ னேவ லெடுத்தருள் சுரக்கு மளவுநின் றுளமகிழ்ந் தன்னேன், கொடுத்தநாள் வாங்கிக் கொளும்பர மார்த்தங் கூடினுங் காலமா திகளாற், றடுத்துரை தொழிலை விடுத்தலாற் சமாதி சார்ந்தவோ துணரவும் படுமே.

எ - து. இவ்விடத்து ஒருவன் தான் சுமந்துள்ள குடும்ப பாரத்துடனே எப்படி ஞானசாரியனை அடைந்து அவனுக்குப் பூரணகிருபை வருமளவும் அவனது ஏவற்பணிவிடை தொடங் கிச்செய்து நின்று அந்தஞானசாரியன் திருவுளமகிழ்ந்து ஞா னேபதேசத்தை அனுக்கிரகம்பண்ணின காலத்துத் தான்பெறு வான்; கால தேச வர்த்தமானங்களினுல் அந்த ஞானசாரியனை அடைந்து அநுக்கிரகம் பெறக்கூடுமாயினும் வாக்காற் சொல் லும வசனங்களையும் காயத்தாற்செய்யுந் தொழில்களையும் பண் ணுது விடுத்தாலன்றி ஞானசமாதி கூடி அந்த ஞானத்தை அறி யவுங்கூடுமோ. எ - று.

ஞானசாரியரைத் தேடிச்செல்வோன் குடும்பத்தோடுஞ் செல்லக்கூடாமையின் குடும்பசுமையோடு எங்ஙன ஞானவா சானையடுத்தென்றூர். சீடன் பக்குவாபக்குவங்களை அறியவே ண்டி ஒருவருடமுதல் பன்னிருவருடமளவும் பரீக்ஷை பார்க் குதலின் அருள் சுரக்குமளவுமென்றும், குடும்பிக்கு அவ்வளவு நிற்கக்கூடாமையின் ஏவலெடுத்து நின்றென்றும், கூறினூர். காலதேசவர்த்தமான மென்றது அற்பகாலம், இராஜ கலகங்க ளினது சரித்திரம். அவற்றுல் அவரிருக்குமிடத்தில் இவன் சென்றுனுயினும் இவனிருக்குமிடத்தில் அவர் வந்தாராயினும்

தெய்வகதியாகக் கூடுதலிற் கூடினுமென்றார். குடும்பிக்கு வாக்குக்காயங்களடங்காமையின் மனோலயம் பண்ணக்கூடாது; மனோலயம் இன்மையால் அஞ்ஞானம் நிவிருத்தியாகாது; அஞ்ஞானநிவிருத்தி இன்மையால் ஞானோதயமாகாது;ஆகலின் தடுத்துறைமனைதொழிலை விடுத்தலாற் சமாதிசார்ந் தலைதுணரவும் படுமே யென்றார். இதனாற் குடும்பிக்கு ஞானாசாரியரை அடைந்து அநுக்கிரகம்பெற்ற காலத்தும் சமாதி கூடிப் பரஞானமுணரக் கூடாதென்பதுங் கண்டுகொள்க. (௬௦)

தனித்திருந் தொருதம் மனத்தையும் பொறிவாய்த் தடுத்தகப்படுத்திலை தெத்தை, நினைத்தெழா நின்ற தென்றுநோக்குநரே நீக்குவர் வாக்கொடு தொழிலைப், பினைத்தடை யாம்போக்குவரில்வாழ்க் கையையும பேசசைநா டொறுமபழகுநர், தனைத்தினொன் றேனும் விடாபிறர் காண்ப தன்மையா னகப்பற்றே விடுப்பார்.

எ - து. ஏகாந்தஸ்தானத்தைப் பொருந்தியிருந்து ஒப்பற்ற தமது மனத்தினைப் பஞ்சப்பொறிவழியே சகமுகமாய்ச் செல்லாது உள்வாங்கி அகமுகப்படுத்தி இந்தமனம் என்னத்தை நினைத்துக்கொண்டு எழுகின்றதென்று அறிவினாற் பார்க்குமவரே வாக்குக்காயங்களினது தொழில்களை நினைத்துக்கொண்டு எழுகின்றதென்று அறிந்து அவ்வாக்காற் சொல்லுந் தொழில்களையும், காயத்தாற் செய்யுந் தொழில்களையும், விட்டு நீக்குவார். அவ்வாக்குக் காயங்கள் நிவிருத்தியாகலின் இல்வாழ்க்கையைப் பாதுகாத்தற்குத் தடைவருமாகலிற் பின்னர் அந்த இல்வாழ்க்கையையும் விட்டு நீக்குவார். வாசக ஞானமாகிய வார்த்தைகளோடு எக்காலமும் பழக்கமுடையார் விடவேண்டுமென்று கூறிய ஈதனைத்தினுள்ளும் ஒன்றாயினும் விடார் பிறர் காண்ப தன்மையால் அகப்பற்றொன்றையுமே யொழிப்பார். எ - று.

வாக்குக்காயங்கள் நிவிருத்தியான விடத்துப் புறப்பற்றைப்பாதுகாத்தற்குத் தடைவருதலாலும், அவை பிரவிருத்தி

யானவிடத்து அகப்பற்றை ஒழித்தற்குத் தடை வருதலாலும், தடையாமென்றார். புறப்பற்றேடிருந்து அகப்பற்றை ஒழிக்கத் தொடங்குதல் அவ்விருவகைக்கும் பழுதென்பதும், அகப்ப ற்றை ஒழிக்கத் தொடங்கினேன் புறப்பற்றை முன்னர் விடவே ண்டுமென்பதும், பிறர் காண்பதன்மையான் அகப்பற்றே விடுப் பாரென்றமையால் தமக்கென அவர்க்கு அகப்பற்றுப் போயதி ன்றென்பதும், காண்க. (கக)

தந்தைதாய் முதலாம் பந்தநீங் கிலர்க டாமுயு நெறியதின் றெனுஞ்சம், பந்தனு ருரையும் வேண்டியதெய்தப் படாதுசுற்ற மும்விடாவிடினெ, னெந்தைவாக் கரைய ருரையுமா தியவாக் கியம்பிர மாணமாமெனக்கொள், புந்தியார் புறப்பற் றறலகப் பற்றைப் போக்கவாய்ப் போக்குத விலரே.

எ - து. தந்தை தாய் முதலிய பந்தங்களை நீங்காதாரைகு உய்ந்து போநெறி இன்றென்று கூறிய திருஞான சம்பந்தமூர்த் திநாயனர் வாக்கியத்தையும், தாம் வேண்டியது எய்தொணுது மாதர் முதலிய சுற்றமும் விடாவிடினென்று கூறிய எந்தையா கிய திருநாவுக்கரையர் வாக்கியத்தையும், இவைமுதலிய ஆப்த வாக்கியங்களையும் பிரமாணமாகக் கொள்ளுகின்ற நன்மதியுடை யோர் புறப்பற்றிருக்க அகப்பற்றை ஒழிப்போமென்று வாய்ப் போக்கார். எ - று.

அவற்றிற்கு எதிர்மறையான ஆப்த வாக்கியங்களைப் பிரமா ணமாகக் கொள்ளாதார் அங்ஙனம் கூறுவரென்பது காண்க. வாய்ப்போக்குதல் செய்யாதிருந்தும் செய்தேனென்று சொல் லும் விருதாச்சொல்லென்றறிக. (கஉ)

இருவகைச் சார்புள்ளும் உயிர்ச்சார்பை விடுத்துப் பொரு ட்சார்போடிருந்து அகப்பற்றை ஒழிக்கக்கூடாதோவென்ற சீட னைநோக்கிக் கூறுகின்றார்.

விடுக்குநர் புறப்பற் றதினுயிர்ச் சார்பை விடுத்துமற் றைய பொருட்சார்பைப், பிடிக்குத லொழுங்கன் றெனினுறை யிட

மும் பேணுருதொழித்தறீ தெனவே, படிக்கணீ புரைக்கக் கே ட்டன முனைப்போற் பற்றிநோக் காமையி னன்றோ, விடுக்க ணென் றனைத்தும் விடுத்தனருலக மேத்துப்பத் திரகிரி முத லோர்.

எ - து. அகப்பற்றை ஒழிப்போர்க்கு இருவகைச் சார்பா கிய புறப்பற்றினுள் உயிர்ச்சார்பை விடுத்து மற்றைப் பொருட் சார்பைப் பிடிக்குதலும் மார்க்கமன்றென்றால் நீர் சொன்னவை யெல்லாம் விடப்பினும் இருத்தற்கு ஓரிடமாயினும் பிடியாது விடுக்குதல் குற்றமெனவே பூமியின்கண் நீ ஒருவனே சொல்லக் கேட்டு அறிந்தனம். உன்னைப்போலக் கூர்ந்து விசாரியாமையா லன்றோ பற்றுக்களியாவும் துக்கமென்று அறிந்து எல்லாப்பற் றுக்களையும் உயர்ந்தோர் தோத்திரம் பண்ணுகின்ற பத்திரகிரி ராசா முதலாயினோர் விடுத்தார்கள். எ - று.

உனைபம்பாறபற்றி நோக்காமையினன்றோ வென்றமை யால், குறிப்பால் நீ அறியாமையினாலே கூறுகின்றாயென்பது காண்க. பத்திரகிரி முதலாயினோரெனவே பட்டணத்துப் பிள்ளை முதலாயினோரையும் வருவித்துக் காண்க. (கூ)

பொருட்சார்பால்வரும் குற்றம் மேல்வருஞ் செய்யுளுட் கூறுகின்றார்.

துறந்தவன் பொருட்சார் புறவறி விலர்க்குத் தூயஞா னநூ சாத்திரங்க, ளறைந்திதம் பேசிப் பொருள் கவர்ந் ததனு னச் சமு மிச்சையாதிகளுஞ், செறிந்துற வகத்துண் டினியவூ ணிரு க்குஞ் செய்தியா னெய்சொரி தழல்போ, லிறந்திடா மனவா தனைபினைத் தனதோ ரெணத்தையெவ் வணத்தினுன் முடிப் பான்.

எ - து. பொருட்சார்பு இருக்க உயிர்ச்சார்பைத் துறந்த வன் அறிவில்லாத பேர்களுக்கு ஞானசாத்திரமுதலாயவற்றைச் சொல்லி அவர்க்கு இதமான வார்த்தைகளைப் பேசிப் பொருளை வாங்கிப் புதைத்து அதனால் பயமாசை முதலியனவும் மனத்தின்

கட்பொருந்த இனிமையாகிய ஊன்களைப் புசித்திருக்கு முறைமையால் நெய்யினைச்சொரிந்த அக்கினிபோல் மனத்தினது வாதனைகள் இறந்துபோகாலாகலிற் பின்னர்த்தான் அகப்பற்றினை ஒழிக்கவேண்டுமென்று எண்ணிய எண்ணத்தினை எந்த முறைமையால் முடித்துக்கொள்வான். எ - று.

அறிவில்லார்க்கு ஞானசாத்திரமுதலிய கூறுதலினாலும், பொருள் கவர்தலினாலும், அதனாற் பயமாசை குரோதமுதலிய வருதலாலும், சௌக்கிய போசனங்களைப் புசித்தலாலும், மனத்தின்கண் வாதனை நெய்சொரி தழல்போல் மேன்மேல் எறுதலிற் பொருட்சார்பு இருக்கத் துறந்தோனுக்கும் அகப்பற்றொழித்தல் கூடாதென்பது இதனாற்காண்க. (கச)

பொருட்சார்பினுள் எல்லாவற்றையும் விட்டு ஓரிடம் பற்றியிருந்து தவம்பண்ணலாகாதோவென்ற சீடனைநோக்கி அவ்விடத்தால் வருங்குற்றம் கூறுகின்றார்.

பொருளறத் துறந்து பயிக்கமேற் றருந்திப் பொருந்தினுமோரிடம் பிடித்துள், வெருளறப் பனியா தியினுடற் பழகவேண்டுமின் றுகுதறுனு, மிருளறத்தீப மேற்றன்முன் றொழில்களென் றும்வேண் டிடுதலா னிடரு, மருளறச் சிதலே முதலுயிர்க்குறுக ணற்றனு மதன்பொருட் டாமால்.

எ - து. பொருட்சார்பினையும் விட்டுத் துறந்து பிச்சையேற்றுண்டு ஓரிடத்தைப் பற்றிக்கொண்டிருந்தா னுயினும் மனோபய நீங்கவும் பனிமுதலியவற்றுள் தேகம் பழகவும் வேண்டும் பழக்கம் இன்மையாகுதலானும், இருள் நீங்கத் தீபமேற்றுகை முதலிய தொழில்கள் எக்காலத்தும் வேண்டுதலால் துன்பமுஞ், சீவகாருண்ணியம் இன்றிச் செல்லுமுதலிய உயிர்களுக்குத் துன்பம் செய்குதலும், அவ்விடம் பிடித்தற் பொருட்டாக வரும். எ - று.

ஒரோர்காலத்து அவ்விடத்தினை நீங்கி இருள்காடு முதலிய இடத்துச்செல்லுங்கால் மனோபயம் தோன்றலிற் பூரணபாவனை

மறக்கும்; பனி மழை வெய்யில் காற்று முதலியவற்றாற் காயத்திற்கு வருத்தந் தோன்றலிற் சமபாவனை மறக்கும்; விளக்கிடல் அலகிடல் மெழுகல் முதலிய தொழில்கள் எக்காலமும் வேண்டுதலின் இராகத்துவேஷம் பிறக்கும்; அதனால் மனோலயம் பண்ணக்கூடாது; செல்லு கொசுகு மூடு எறும்பு தேள் முதலிய உயிர்களுக்குச் சீவகாருண்ணியத்தை விடுத்துத் துன்பஞ்செய்தலின் மனத்தின்கண் அழுக்கேறும்; இவையெல்லாந் துறவறத்திற்குப் பங்கமாகலின் தனக்கென வோரிடம் பிடித்தலும் ஆகாதென்றார். அவ்விடம் ஆகாதெனவே பொதுச்சாவடி புறந்திண்ணை பாழ்ங்கோயில் மலைமுழை மாநிழல் முதலிய இடத்தில் இருக்கவேண்டுமென்பதாயிற்று. (ருசு)

பிறிது நோய் தன்னோய் போன்றுபோற் றானேற் பெரிநூலறிஞரோர்ந் துணர்ந்த, வறிவினா லுண்டோ வாவதென் றமையா னறைதருசராசர மெவைக்குஞ், சிறிதுமோர் துயர மறவியுற் றேனுஞ் செய்யுமே மெய்யுணர் வடைவான், மறுவறு துறவைப் பொன்செய்வா ணிகர்போல் வருந்திநா டொறும்வளர்ப்பவனே.

எ - து. பிறிதோருயிர்க்கு வந்த துன்பத்தினைத் தனக்கு வந்த துன்பத்தைப்போன்று போற்றிக்கொள்ளானாகில் பெரியதாகிய சாத்திரங்களை அரிதினாற் கற்றறிந்த அறிவினால் ஒருபயனுவதுண்டோவென்று திருவள்ளுவநாயனார் கூறினமையால் சொல்லப்பட்ட சராசரமாயுள்ள எல்லாவுயிர்கட்கும் சிறிதாயினும் ஒரு துன்பத்தினை மறந்தாயினும் செய்வனோ மெய்ஞ்ஞானத்தைப் பெறும்பொருட்டுக் குற்றமற்ற துறவறத்தினைப் பொன்தேடுதல் செய்யாநின்ற வாணிகர்போல் திரிகரணங்களினாலும் வருந்தித் தினந்தோறும் வளர்ப்பவன். எ - று.

கல்வியறிவிற்குப் பயன் சீவகாருண்ணியமாகலின் அறிவினாலுண்டோவாவதென்றார். பொன்செய்வாணிகர், கொள்ளுதல் விற்றல் உரைத்தல் முதலியவற்றாற் பொருளை வளர்த்தல்

போல், நிற்றல் இருத்தல் கிடத்தல் நடத்தல் ஓடல் முதலியவிட த்தும் உயிர்க்கொலை புரியாது அறவறத்தினை வளர்க்கவேண்டு மென்பது காண்க.

பெரிது நூலறிதிறனோர்ந்துணர்ந்த வறிவினனுண்டோ லீவ தென்றதற்கு உதாரணம்: ஞானசாரம். "மருளுறு மெவையு மறி மயக்கறத் தெளிந்த ளோர்க்கு—மருளறத் துறக்க லாகா வயலொரு பொருளு மில்லாத்—தெருளினை யறிதலானுஞ் சிவ மெவ ருளமுமன்னு— மருளினை யறிதலானு மவர்செய லருள றந்தான்." எ-ம். அருட்பிரகாசம். "உயிர்நித்த மென்றறிந்தாலு நல்லோர்பல் லுயிர்களுற்ற—துயருக்கிரங்கல்புதுமைகொல்லோ வருட்டோன்றன் முன்னாட்—செயிருற்ற தேவர் குறைகேட்டி ரங்கித் திருவுளத்து — டயர்வுற் றருத்தகண்ணீ ரக்கமாமணி யாய்த்தெளிலே." எ-ம். வரும். மற்றும் வருவனவற்றுற்காண்க.

தனக்கினி யவனும் வகைசரா சரங்க ளினைகவென் றமை க்குரைத்ததுவும், வினைக்கடல் கடந்த பரதர்முற் சிவிகை சுமந் துசென் றதுவுமோர் மேலோர், பினைக்கொல்பாம் பாதியுறு தலஞ் செலுங்காற் பேணலிற் றமைநடந் திடும்போ, தினக்கறை யாறு தியமரி யாதங் குரமுரி யாதியங் கிடுவார்.

எ-து. ஒருவன் தனக்குத் தான் இனியவனாய்த் தன் னைப் பாதுகாக்கு முறைமைபோல் சராசரங்களாயுள்ள உயிர்க ளைக் கருதுகவென மகாதேவிக்கு மகாதேவர் அறிவாசாரங் கூறியவதனையும், சரியை கிரியை யோகங்களுக்கு ஏதுவாகச் செய்யுந் தொழிலாகிய கடலைக் கடந்து நின்ற பரதர் முன்னர்ச் சிவிகை சுமந்துகொண்டும் உயிர்க்கொலை வாராது நடந்துசென் றவதனையும், விசாரித்து அறிந்த மேல்ாயினோர் பின்னர்க்கொல் லுகின்ற பாம்புமுதலிய துட்டப்பிராணிகள் உறையுமிடத்தில் போம்பொழுது தம்மைப் போற்றிக்கொள்ளுதல்போல், நடக் கும்பொழுது கூட்டமாயுள்ள செல்லுமுதலிய சரவுயிர்கள் இற வாமலும், மூலைமுதலிய அசரவுயிர்கள் நாசமாகாமலும், நடப்

பார். எ - று. ஈசுவரவாக்கியத்தையும் அவர் வாக்கியத்தின்படி நடந்துகொண்ட பெரியோர்கள் சரித்திரத்தையும் அறிந்த மேலோர்களுக்கு அந்த நடை வருமென்பதறிக.

தனக்கினி யவனும் வகைசராசரங்கணினைக வென்றதற்கு உதாரணம் தேவிகாலோத்தரம். தனக்கினிய னும்வகையே சராசரங்க ளனைத்தினையு—நினைத்திகழ்வார் புகழ்வார்பா லொத் திருக்கு நீர்மையினை —மனத்துடைய னுணவவ னுமுரைத்த வாசார—மனைத்துடைய னுகவறி வெறிகமழு மைம்பாலாய். எ-ம். நடுங்காம லெவ்வுயிரு நறுக்காது தரும்பனைத்தும்—பிடு ங்காது முதலெலவையும் பிரசமலர் கொய்யாது—விடுங்காலா லூழ்த்துதிர்ந்த விரைமலர்க ளவையேந்தி—யடுகயகாலன் றனைய ட்ட வம்புயங்க ளருசசிப்பான்.” எ-ம். வரும். மற்றும் வருவன வற்றுமற்காண்க. (௯௭)

தமயிடத் தேனுந் தமக்கினி யவர்பா லேனு மோரிடர் வந் துசாரி, னமமனூழ் முறையென் றறிந்துமேழ் கடலோ ரனுவெனை யுருகுமென் போல்வா, ரிம்முறை துயர்வே றுயிருறி னிர்க்க மின்றிய தன்றியுந்தம்மால், வெம்மைய கொலையொன் றடை யினு மதனூ ழென்பதென் மிகமுக மலர்ந்தே.

எ - து. தம்மிடத்தாயினும் தமக்கினியராயுள்ள சுற்றத்தார் முதலியோரிடத்தாயினும் ஒருதுன்பம்வந்து பொருந்திற்றாயின் அதனை ஊழ்வினைப் பயனென்று அறிந்திருந்தும் சத்தசாகர மும் ஓரணுவெனறுசொல்ல நெஞ்சமெலாம் நெக்கு நெக்குரு கும் எம்போலிகள் இந்தமுறையே வேறொருஉயிர் துன்பத்தினை அடையின் இரக்கமின்றி யிருப்பதல்லாமலும் தம்மால் ஒருயிர் வெவ்விதாகிய கொலையொன்று அடைந்தவிடத்து அதனூழ்வி னையென்று சொல்வது என்னை மிகவு முகமலர்ந்து. எ - று

துறவறமுடையார்க்கு ஒருயிரால் ஒருயிர்க்குத் துன்பம்வந் ததாயினும் அதற்குத் தம்மை அறியாமல் தம்மால் ஒரு துன்பம்

வந்ததாயினும் இரங்கவேண்டுமேயன்றி, இரக்கமின்றியிருத்தல் பழுதென்பது காண்க. (கூ அ)

இம்மையி னிகழ்ச்சி மறுமையிற் சிறுமை யெய்துமென் றுயிர்க்கொலை புரியாச், செம்மையைங் கனக மாதிகைப் பற்றாத் துறவினைச் சிலரடைந்திடினுந், தம்மையொத் துயிர்க ளனைத் தையுங்காணுந் தயவுயிர் தபனிய முதல, மும்மையு மோட்டிற் காட்டி லன்னையிற் காண்டுற வொரோர் தவர்க்கலான் முடியா.

எ - து. இம்மைக்கட் சீவர்களாற் பழிப்பும், மறுமைக்கட் பிறவித்துன்பமும், வருமென்று கருதி உயிர்களைக் கொலைசெய் யாத செம்மையினையும், பொன் மண் பெண்ணென்னு மூவகை யையும் பற்றாத துறவினையும், இந்த முறையே சிலர் அடைந்தா ராயினும் தம்மைப்போல் உயிர்களெல்லாவற்றினையும் காணும் தயவும் உயர்ந்த பொன்னாதி மூவகையினையும் ஓட்டினைப்போ லவும், காட்டினைப்போலவும், அன்னையைப்போலவும், காணுந் துறவும் ஓரோர் தவருக்கல்லது கூடாது. எ - று.

இம்மை மறுமைகளைக் குறித்துக் கொலைசெய்யாது பொன் னாதி மூவகையையும் ஓடாதிகளாகக் காண்போர் துறவுசாதகரெ ன்றும், அவ்விருவகையையும் குறியாது சுபாவமாகத் தம்மைப் போலுயிர்களைக் கண்டு பொன்னாதிகளை ஓடாதிகளாகக் காண் போர் துறவுசாத்தியரென்றும் அறிக. அசசாத்தியர் அரியராக லின் ஓரோர் தவர்க்கலான் முடியாவென்றார். (கூகூ)

அறைதலிற் கொல்லா நலத்தது நோன்மை யெனவரு டுறவு சாரகத்து, டுறுமஃ துறவே சினமழுக் காறங் குறாமையாற் கொடுஞ்சொல் கூறாமை, புறமுறை யாமை மருவிய விரண்டாற் பொருவின்மெய் யுறுதியோர்க் குரைத்த, னிறைபெருந் தவத் தோர் வாக்கினீர் நான்கு நிகழுமென் றியம்புவர் நெடியோர்.

எ - து. உயிர்களைக் கொல்லாத நலத்தினையுடையது தவ மென்று திருவள்ளுவநாயனார் கூறுதலின் ஒன்றினும் பற்றற்ற

துறவுபொருந்திய உள்ளத்தின்கட் சீவகாருண்ணிய நிலைபெற்றிருக்கும். அந் நிலைபெற்றிருக்கவே அவ்வுள்ளத்தின்கண் உயிர்களிடத்துக் கோபமும பொறாமையும் பொருந்தாமையாற் கோபமின்மையாற் கொடுஞ்சொற் கூறாமையும்பொறாமையின்மையாற் புறங்கூறாமையும் உளவாகும். பொருந்தாநின்ற இவை யிரண்டினாலும் கொடுஞ்சொல் கூறாமையால் ஒப்பற்ற மெய்ம்மை கூறலும், புறங்கூறாமையால் உயிர்களுக்கு உறுதிமொழிகளை ஆராய்ந்து கூறுதலும், உளவாகுமாகலின் இவைநான்கும நிறைந்த பெரிய தவத்தினையுடையார்வாக்கினகண் விளங்காநிற்குமென்று சொல்லுவர் பெரியோர், எ - று.

உள்ளத் துறவில்லாதார்க்கு அருளின்மையாற் கோபமும் பொறாமையும் உடையாராகலிற் கொடுஞ்சொல் கூறுதலும், புறங்கூறுதலும், பொய்மை கூறுதலும், பயனில்சொல் கூறுதலும், ஆகிய இந்நான்கும் இவரதுவாக்கின்கண் விளங்குமென்பது காண்க. இதனால் உள்ளத்துறவுடையோரே மனம் வாக்குக் காயங்களினாலும நன்மையுடையோரென்பதறிக. புறங்கூறல் பிறரைக் காணாதவிடத்து இகழ்ந்துகூறுதல். உறுதிமொழி வீட்டினை அடைதற்கு ஏதுவானமொழி. (கூ0)

கான்றசோ றதனிற் கண்டுபொய்ப் போக மனைத்தையுங் கைவிடுத்திடினுந், தோன்றுல கினைமெய் யெனக்கொடு மீக்கூற் றுறவிருப் படையினத் துறவோன்,சான்றதா யுள தன் னுளமிலை யெனவுந் தற்பரா னந்தமுற் றவனைப், போன்றிரு விழிமேற் செருகியீண் டுரைகரும் பொய்ம்மையெவ விதத்தினுற்போக்கும்.

எ - து. கக்கினசோறுபோல் மாயாகாரியமாகிய பொய்ப் போகங்களனைத்தினையும் கண்டு துறந்தானாயினும், கானற்சலம் போற் பொய்யாய்த்தோன்றுகின்ற பிரபஞ்சத்தினை மெய்யாகக் கருதிக்கொண்டு கீர்த்தியை அடைய விருப்பமுற்றானாயின், அந்தத் துறவியானவன தனக்குள்ளே சாக்ஷியாயிருந்துள்ள தனதுள்ளமானது தற்பரானந்தம் பெற்றது இல்லை இல்லை யென்று

தனக்குக் கூறவும், தான் பிறருக்கு அந்தத் தற்பானந்தத் தைப் பெற்றவன்போலும் இரண்டுகண்களையு மேலே செருகி இவ்விடத்துக் கட்குறிப்பாற் கூறும் பொய்யால் வரும் பாவத் தினை எந்தமுறைமையாற் போக்குவான். எ - று. ஐயன்காளி சன்னிதிமுன் பொய்யுரைத்த பாவம் தீர்க்கக்கூடாமல் இம்மைக் கண்ணே துன்பம் வருமாகலின் தேவர்க்கெல்லா மேலாய சிவ சன்னிதியில் அசத்தியங்கூறிய பாவம் தீராதென்பது அறிவிக்க எவ்விதத்தினாற் போக்குமென்றார்.

சான்றதாயுள தன்னுளமிலையெனவு மென்றதற்கு உதார ணம்: பெருந்திரட்டு. "தன்னெஞ்சந் தனக்குச்சான்றது வாகத் தத்துவ நன்குணராதே, வன்னெஞ்ச னாகிக் கூடமே புரிவோன் வஞ்சகக் கூற்றினுங் கொடியோன், பன்னுங் காலவன் றன் றெரி சனம் பரிசம் பழுதற நிரயமே துவுமாம், புன்னெஞ்சா லவ னும் போய்நர கெய்திப் பூமியுள் ளளவுமே ழுறல்." மற்றும் வருவனவற்றாற் காண்க. சுக)

இத்திற னருள்கைப் பிடித்தெலாம் விடுத்தோ னேவலை னொருவனோ டிறினுஞ், சித்தசஞ் சலமுண் டவனொரோர் காலை செயுஞ்செயல் பிழைக்கினுட் சீற்றம்,வைத்திடப் படுத லாற்றன துடற்பால் வந்தொரு பிணியுறிற் றுணிவோ, டத்தனே யுள னென் றிருந்தலி னிருத்த லரிதனென் றனையுறி னதனால்.

எ - து. இந்தமுறைமையேசிவகாருணியமொன்றுமேகைப் பிடித்துப் பற்றுக்களாயுள்ளனவெல்லாவற்றினையும் துறந்த வன் ஏவலாளனாகிய வொருவனுடனே கூடியிருந்தானாயினும் அவன் ஒரோர்காலத்துச் செய்யும் ஏவற்பணிவிடைகளுள் ஒவ் வொன்று தப்பச்செய்தானாயின் உள்ளத்திற் கோபம் வைக்கப்ப டுதலாலும், தனது தேகத்தின்கண்ணே ஒரு வியாதிவந்தடைந் தால் அவ்வியாதியைப் போக்குதற்குச் சிவனே உளனென்று தான் துணிவோடிருத்தல்போல் அவனுக்கு ஒரு வியாதிவந்து

அடையின் அங்ஙனம் இருத்தல் கூடாது அதனாலும், சித்தசஞ்சலம் தோன்றும். எ - று.

சிவகாருணியத்தினாலும், பிறர் பழிப்பரென்பதனாலும், அன்னுக்குச் சிவனே உளனென்று இருத்தல் கூடாமையால் விவகாரப்படியேவைத்தியனைத் தேடுதல் மருந்துதேடுதல் முதலியவற்றால் மனோவிசாரந் தோன்றுதலிற் சித்தசஞ்சலமுண்டென்றார். சித்தசஞ்சலம் மனோலயம் பண்ணுதற்குத் தடையாதலின் அச்சஞ்சலம் பிறத்தற்கு ஏதுவாகிய ஏவலாளனும் ஆகாதென்பது அறிக. (கூஉ)

யாதியா தொருவ னீங்கியா னோத லதனினா லதனினா லிலனென்,றோதலா லனைத்துந் துயர்தரு மெனநீத் துயர்பரம் பொருளினைக் காட்டுந், தீதிலோர் குரவனெங்குள னெனவே தேடுமீ லலைகடல் சூழும், பூதல மிசையோர் துறவினோ னறவு பொலிமலர் தேடும்வண் டினைப்போல்.

எ - து. யாதொன்றினை யாதொன்றினை ஒருவன் நீங்கியான் அவன அதனால் அதனால் வருந்துன்பங்கள் இலனென்று திருவள்ளுவநாயனார் கூறுதலின் பற்றுக்களாயுள்ளன எவையும் துன்பங்களைத் தருமென்று அறிந்து துறந்து எப்பொருள்களுக்கும் மேலாயுயர்ந்த மெய்ப்பொருளினை அறிவிக்குங் குற்றமில்லாத ஒப்பற்ற ஞானாசாரியன் எவ்விடத்தில் இருக்கின்றானென்று தேன் செறிந்த மலரினைத் தேடும் வண்டினைப்போல் அலைகடல் சூழ்ந்த பூமியின்கண்ணே ஒரு துறவியானவன் தேடுவான். எ - று.

தேனிரம்பிய மலரைத் தேடும் வண்டினைப்போலச் சிவகாருணியம் ஈசுரபத்தி பாசவைராக்கியம் பிரமஞானம் என்னும் நான்கும் நிறைந்த ஞானாசாரியனைத் தேடுகின்றானென்பதறிக. ஆல் அசை. நறவுபொலி மலர்தேடு வண்டினைப்போலென்றதற்கு உதாரணம்: அறிவானந்தசித்தியார். "அளிமலர் விட்டு விட்டாய்ந்து மதுவுண் டகிரப்பிக்—களிவர் திருந்த கருத்தின்

குறகின் கவலை யென்னும்—விளிவினை விட்டுவிட் டாய்ந்து வியன்குரு மேவிநின்று — தெளிவந் துனைக் கண்டிடு மளவுங் குருத் தேடிடுமே." (௬௩)

சமரமுற் றிடாது புறந்திரி யொருவன் றனதெதி ரண்ட தரு படைக்கைக், குமரரை நோக்கி மிகுபராக் கிரமங் கூறினுந் தேறல ரதுபோ, லமர்தாத் துறவு சமாதியோதிடினு மவற்றி னுக் கயனடை யினரேற், றமரெனத் துணிவுற் றவரொடும் பழகார் தத்துவ நிலைதலைப் படுவோர்.

எ - து. யுத்தகளத்தைச சாராது அதற்குப் புறம்பாய்த் திரிகின்ற ஒருவன் களத்தினைச சார்ந்து தனக்கெதிரே ஆயுத பாணிகளாய் வந்துநின்ற வீரரைப்பார்த்து மிகுந்த பராக்கிரம ங்களைச் சொன்னானாயினும் அக்களத்திற் சென்று யுத்தம்பண் ணாது புறத்துநின்று கூறுதலால் அவனை வீரனென்று தெளிவு றார். அதுபோல் மனத்திற்குச் சம்மதமாய்ப் பொருந்தும்படி துறவு சமாதிகளைக் கூறினாராயினும் அவற்றிற்கு உரிய நடக்கை யின்றிப் புறநடக்கையராயின் அவரை வீட்டினை அடைவித்த ற்கு ஏதுவாகிய தமரென்று தெளிந்து அவர்களுடனே கூடிப்ப ழகார் பரத்துவநிலைமையை அடையும் நன்னெறிக்கண் விரை ந்து செல்வோர். எ - று.

புறந்திரியொருவன் சமர்க்களத்துஞ் செல்லாது அதனைச் சார்வாரோடுங் கூடாது இடையே நின்று பராக்கிரமங் கூறுத லின் அவனை வீரனல்லனென்றும் பேடியென்றும் அறிகின்றது போல் அயனடையினர் துறவுசமாதிகட்கு உரிய நன்னெறியும் செல்லாது அந்நெறி செல்வாரோடுங் கூடாது இடையே நின்று அவற்றிற்கு உரிய நெறிமாத்திரங் கூறுதலின் அவரைத் துறவு சமாதியுடையரலரென்றும் கூடாவொழுக்கமுடையவரென்றும் அறிந்துகொள்க.

அமர்தரத்துறவு சமாதி யோதிடினு மவற்றினுக் கயனடை யினரேல் என்றதற்கு உதாரணம்: அனுபவசித்தி. "மறைக

ளாகம முதற்கலை முழுதையு மயலற மிகவோதிக் — குறைவிலாவகைப் பொருடனை மதுரமாக் கூறவல் லவரேனு — நிறைவதாகிய பொருளினுக் குத்தகு நிலையவ ரலராகி—லறைவ தாகிய வவ்மொழி யாத்த வாக்கியமென வறையேமே. எ-ம். இறைகணன்பினை யுரைசெய்து தாமிறைக் கன்பகத் திலரேனுங்— துறவு நன்றென வுரைசெய்து துறவினி னிலைமைய திலரேனுங்—சறைக ளொன்றுள செயல்களின் மூளுறுங் கருத்தறிகிலரேனு—மறையி னன்குறு மவர்மொழி யாத்த வாக்கியமென வறையாதே. எ-ம். தெய்வ வாணிநற் செந்தமி ழியலிசை தெரிந்து பாடலுளும் பொய் —மெய்ய தாகவே பொருள்களும் விளங்கிட விளம்பவல் லவரேனு— மையிலா வகை மொழிவ தொன்றவர்செயன் மருவலொன் றெனி லத்தை — மைய மூவரின் முதல்வரே மொழியினு மாத்தவாக் கியமென்னார்." எ-ம். மற்றும் வருவனவற்றாற் காண்க. (கூச)

நீரிடத் தன்றி யந்தரத் திடையே நிகழுமோர் மரைகொள விரும்பார், பாரிடத் தெவரும் விஞ்ஞானிகள் சாலம்பண்ணலென் றெண்ணிமற் றதுபோற், சீருடைத் துறவு சமாதிபெற்றுலகிற் றிகழினு முயிர்க் கெலாந் தயவுஞ், சாரருட் குருபத்தியுமிலார் தமையுந் தமரெனப் பழகவுந் தகுமே.

எ - து. பாரின்கணுள்ளோர் யாவரும் நீரின்கணெழுகின்ற தாமரைப்பூவைக் கொய்துகொள்ள விரும்புதலேயன்றி ஆகாயத்தின்கண் விளங்காநின்ற தாமரைப்பூவைக் கொய்துகொள்ள விரும்பார்கள்; விஞ்ஞானவித்தையினையுடையார் இந்திரசாலம் பண்ணுதலென்று அறிந்து அதுபோலச் சிறப்பினையுடைய துறவு சமாதிகளை யடைந்து உலகத்தின்கண் விளங்காநின்றாராயினும் எல்லாவுயிர்களிடத்தும் காருணியமும் தாம் அடைந்த கிருபாமூர்த்தியாகிய ஞானாசாரியரிடத்துப் பத்தியும் இல்லாதாரையும் தமரென்றுகருதி அவருடன் கூடிப் பழகவுந் தகுமோ. எ - று.

தாமரைப்பூத் தோன்றுதற்கு இடம் நீரேயன்றி அந்தரம் இடமாகாமையால் இதன்கண் தோன்றிய பூ * பூப்போலத் தோன்றுவதேயன்றிப் பூவன்றென்றும் விவேகிகள் சாலம்ப ண்ணுதலென்றும் விரும்பாது உலகர் விடுத்தல்போல், துறவு சமாதிகளுக்கு ஏதுவாகிய சிவகாருணியம் ஈசுரபத்திகளில்லாத துறவுசமாதிகள் அவைபோலத் தோன்றுவனவன்றித் துறவு சமாதிகளல்லவென்றும், அவர் அவைபோலக் காட்டுகிறாரென்றும், அறிந்து அவரோடும் பழகாது நீங்கவேண்டுமென்பது கண்டுகொள்க. (௯௬)

இதுநெறி யெனவோ ரூர்க்கு மற்றொருவ ரேகினு மாத் தன்வாய்க் குறிக, ளாதுதனிற் காணு விடத்துல கருமோ ரடி பெயர்த் திடுகலாதுபோ, லெதிரறு சமாதி யாதிபெற் றுடை யோரென்னினு முன்னவ னுரைத்த, சதுர்மறை யாக மூந்தவிர் தகரேற் றமரென லவரையுந் தகுமே.

எ - து. ஒருவன் ஓரூர்க்கு வழி ஈதென்று அழைத்துச் சென்றானாயினும் தமக்கு ஆப்தனுயுள்ளவன் வாயாற்கூறிய அடையாளங்கள் அந்நெறியிலே காணாதவிடத்து அதனை மாறு நெறியென்று கருதி உலகத்தாரும் ஓரடியாயினும் பெயர்த்து வைத்திடார்கள். அதுபோல ஒப்பில்லாத சமாதி துறவு குருப த்தி சிவகாருணியம் ஆகிய நான்கினையும் அடைந்தார்களாயினும் கடவுள் கூறிய நான்குவேதமும் இருபத்தெட்டுத் திவ்வியாகமு மாகிய இவற்றின் முடிவாயுள்ள வாக்கியங்களை இகழ்ந்து கூறி னாராயின் அவரையும் தமரென்று சொல்லலும் தகுமோ தகாது. எ - று.

ஒருவன் ஓரூர்க்கு வழி ஈதென்று அழைத்துச் சென்றானா யினும் தமக்கு ஆப்தன் கூறிய அடையாளங்கள் அந்நெறியிலே காணாத விடத்து அதனை மாறுநெறியென்று ஓரடியாயினும் பெயர்த்திடாத உலகர்போல் சமாதியாதியுடையோர் வீடடை யும் நெறி கூறுங்கால் கடவுள்கூறிய வேதாகமமுடிவுவாக்கியத்

தின்படி கூறாது அதனை மறுத்துக் கூறினாராயின் இந்நெறி மாறுநெறியென்று கருதி இவரோடும் பழகலாகாதென்பது கண்டுகொள்க. சதுர்மறையாக மாந்தமெனவே ஞானங் கூறிய வாக்கியமென்பதும், ஞானங் கூறுதற்பொருட்டுச் சரியை கிரியையோகங்களை மறுத்துக் கூறினும் ஞானங் கூறியவாக்கியங் களை மறுத்துக் கூறுதல் நெறியன்றென்பதுங்காண்க. நிந்தகர் புறச்சமயத்தோர்கள். (கக)

ஈங்கறை முறையிற் றேர்ந்துபா ரிதன்மீ தெங்கணுந் தேடி யோரிடத்தி, லோங்கருண் முதல நான்குமோர் வடிவா யுள தென மறையினீற் றுரைக, டாங்குநா வொடுஞ்செங் குவளைமார் பொடும்பொற் சரணொடுஞ் சரணென வடைந்தோர், தீங்கொ ழித் தருள்வான் றிகழுமோர் குரவற் கண்டுளங் குளிர்ந்தனன் றெளிஞன்.

எ - று. இவ்விடத்துக் கூறிய முறையே ஞானசாரியனது இலக்கணமெல்லாம் உடையோன் எங்குளனென்று ஆராய்ந்து பூமியின்கண்ணே எவ்விடத்தும் தேடி ஓரிடத்தின்கண் உயர்ந்த சிவகாருணியம் ஈசுரபத்தி பாசவைராக்கியம் பிரமஞானம் என்னு நான்கும் ஒருவடிவங்கொண்டதுபோல் வேதத்தினது முடிவாயுள்ள மகாவாக்கியமே முதலியவாக்கியங்களைத் தரிக்கின்ற நாவுடனும் செங்கழுநீர்மாலை விளங்காநின்ற மார்பகத்துடனும் பொன்போன்ற திருவடிகளுடனும் அத்திருவடிகளில் அடைக்கலமாய் வந்து அடைந்த பக்குவரது அஞ்ஞானமாகிய பொல்லாங்கை நீக்கும்பொருட்டு விளங்காநின்ற ஞானசாரியனைக்கண்டு தெரிசித்து இதயமெல்லாம் குளிர்ந்தனன் அந்தவறிவுடையோன். எ - று. ஓங்கருண்முதல நான்குமோர் வடிவா யென்றதனாலும், மறையினீற்றுரைக டாங்கு நாவொடு மென்றதனாலும், ஆசாரியனது இலக்கணமெல்லாமுடையனென்பது காண்க.

சரணெனவடைந்தோர் தீங்கொழித்தருள்வா னென்றதற்கு உதாரணம்: தத்துவராயர் நான்மணிமாலை அகவல். "ஒளித்

தகு மறிவுமரக் கலனமைத்துத் துறவி—னுமக்கூம்பு நாட்டி யேம—வருளாங் கயிற்றிற் பிறழ்வறக் கட்டிப்—பத்தி யென் னும் பாய் பூரித்து—முத்தியூரிற் றம்மை யுய்த்தருள்—சொருப னென்னு மொரு மீகாம—னருந்தவர்க் கரசின் பாதந்—திருந் தலைக் கிலர்தஞ் சென்னியின் மிசையே.” மற்றும் வருவனவற் றூற்காண்க.

காரிய மாக லாற்சகம் படைக்குங் காரணன் குலாலனி லுள னென், ஞேரியல் பெனவேழ் கடலுமொன் றாக்கி யொப்பிடுங் கருணைய னேனும், பேரியை பிறப்புத் தனைய டைந்தவர்க்குப் பினையுறா வகைகெடப் பார்க்குங், கூரிய விழியோ னாதலி னற வுங் கொடியனு மாகுமக் குரிசில்.

எ - து. பிரபஞ்சம் மாயாகாரியமாகலின் அதற்குக் காரணமாயுள்ள மாயை சடமாகலின் இதனைக் காரியப்படுத்தும் நிமித்தகாரணனாகிய கடவுள், கடகலச முதலாயுள்ள பாண்டங்கள் மண்ணினது காரியம் அவைக்குக் காரணமாகிய மண் சடமாகலின் இதனைக் காரியப்படுத்தும் நிமித்தகாரணனாகிய குலாலன்போல் இருக்கின்றானென்று மேலாகிய கடவுளுக்குக் கீழாகிய குலாலனை உவமைகூறுகின்ற ஒரு முறைமைபோல் உவமை கூறப்படாதாயினும் சத்தசாகரங்களையும் ஒன்றாகக் கூட்டி உவமை கூறுகின்ற கிருபாசமுத்திரமா யிருந்தானாயினும் தன்னை வந்து அடைந்த பக்குவர்க்குப் பேரும் பொருந்திய பிறப்பும் இவையேயன்றிப் பின்னர் அந்தப்பேரும் பிறப்பும் வாராதபடி நாசமாகப் பார்க்கின்ற நுண்ணியவிழிகளையுடையோனாகலின் மிகவுங் கொடிய தன்மையினை உடையவனுமாவன் அந்த ஆசாரியன். எ - று.

கிருபாசமுத்திரத்திற்கு உவமையின்மையால் கடவுளுக்குக் குலாலனை யுவமைகூறுதல்போல் எழ்கடலும் ஒன்றாக்கி ஒப்பிடுங் கருணையனேனுமென்றார்; கூரியவிழியோ னென்றதனாலும், பேரியை பிறப்புத்தனை யடைந்தவர்க்குப் பினையுறாவகை

கெடப்பார்க்கு மென்றதனாலும், மாயாகாரிய காரணமெல்லாங் கடந்த நோக்கமென்பதும், அந்நோக்கம் பெற்றோர்க்கும் அவைகள் நீங்குமென்பதுங் காண்க. அறவுங் கொடியனுமாமென்றது தூஷணபூஷணமாகத் துதித்ததென்க. இதனுட் சிவகாருணியமுடையனென்பதறிக. (கஅ)

செப்பிருங் கைலைக் குருமுறை மையிற்றன் சிரமிசைச் சரணம்வைத் துளவோர், மெய்ப்பர னருளை நினைதொறு முளந்தீ மெழுகுகல் லெனவுரு கிடினு, மைப்பவந் துடைத்தன் பினர்க்குவீ டளிக்கும் வல்லப முடையமற் றொருதா, ஒப்புமிக் கிலியா கலினிறை பத்தி யுளனுமன் றொருமவ் வும்பன்.

எ - து: யாவரும் புகழாநின்ற பெருமை பொருந்திய கைலாச குருபரம்பரையின் வந்து தனது சிரசின்மீதே திருவடிகளைச் சூட்டிய ஒப்பற்ற ஞானாசாரியனது கிருபையை நினைக்குந்தோறும் அக்கினியிற்பட்ட மெழுகும் கல்லென்று சொல்ல அதனினும் அதிகமாக உள்ளமெல்லாம் உருகா நின்றோனாயினும் தன்னை அடைந்த பக்குவர்க்குக் களங்கமாயுள்ள பிறவித்துன்பத்தைமாற்றி வீட்டினைக்கொடுக்கும் சாமர்த்தியத்தினை உடைய ஒருதான் சமானாதிகமின்மையனாதலின் ஈசுரபத்தியுடையனுமன்றொருவன் அந்த ஞானாசாரியன். எ - று. இதன்கண் ஈசுரபத்தியுடையனென்பது காண்க. (கக)

கருடனை நினைவோர் பார்வையாற் பிறர்பாற் கடுவொழித் தலிற்றனை நினைவோ, ரொருவரை நோக்கி னவர்களும் பாசமொழித்தல் செய் துறவொடேய்ந் துறினு, மருண்மகட் புணர்ந்து ஞான சந்ததிபெற் றவரொடு மகிழ்ந்திருத் தலினக், குருபரன் றன்னைப் பின்னோரே ரில்லாக் குடும்பியென் றுரைக் கவும் படுமால்.

எ - து. கருடனைத் தியானம் பண்ணுவோர் பார்வையாற் பிறர்மேலேறிய விடநீக்குதல்போல் தன்னைத் தியானம் பண்ணுவோர் பிறரொருவரை நோக்கின அவரிடத்தும் பாசங்களை

நீக்குதல் செய்யுந் துறவுடனே கூடியிருந்தானாயினும் சிவகாருணியமாகிய பெண்ணினைக்கூடி ஞானமாகிய புத்திரனைப்பெற்று அவரோடும் எக்காலமும் மகிழ்ந்திருத்தலின் அந்த ஞானாசாரியனைப் பின்னர் ஒப்பற்றகுடும்பியென்றும் சொல்லப்படும். எ-று. இதனுட் பாசவைராக்கிய முடையனென்பது காண்க. (எ0)

குலவுசெங் கதிரோ னிருளினை யுணராக் கொள்கைபோற் றொருகாலுஞ், சொலுமறி யாமை யறிகிலாஞானத் தோன்றலே யெனினுமத் தூயோ, னிலகுமானந்த வுருவினை யனுக் கட் கீந்ததற் கிணையொரு துணையின், மலவுட லவர்பாற் கவர்தலி னிஃதோர் மடமைபெற் றுடையனு மாமால்.

எ - து. யாவராலும் கொண்டாடப்படுகின்ற செய்ய கதிரையுடைய சூரியன் இருளை அறியாத முறைமைபோல் பிரமாகிகளாலும் புகழப்படுகின்ற தான் அவ்விருளுக்கு ஒப்பென்று சொல்லப்படுகிற அஞ்ஞானத்தை ஒருகாலும் அறியாத ஞானத்தினையுடைய புருஷனாயினும் அந்த நின்மலனாகிய ஞானாசாரியன் தனது விளங்காநின்ற ஆனந்தசொரூபத்தினைச் சீவர்களுக்குக் கொடுத்து அதற்கு ஈடாக இழிவால் தனக்கு ஒரொப்பில்லாத மலவுடலை அவர்கையில் வாங்கிக்கொள்ளுதலின் இஃதோரறியாமையை அடைந்துடையனுமாகும். எ - று.

சூரியன் தனது பிரகாசத்தினால் தனக்கு இருளின்றிப் பிறர்க்கு இருளைப்போக்குதல் போல், ஞானாசாரியன் தனது ஞானத்தினால் தனக்கு அஞ்ஞானமின்றிப் பிறர்க்கு அஞ்ஞானத்தைப் போக்குவனென்பது காண்க. இதனாற் பிரமஞானமுடையனென்பதறிக. (எக)

வதுவை நாண் மறையோர் வழங்கியாத் திரையின் மற்றருந்ததியை நோக்குதலி, னிதுவமொன் றெனத்தம் முடல்பொருளாதி யீயுமெம்போலிக டமக்குக், குதிரைகொண் டிடவன் றடைந்துட லாதி கொடுத்தவன் போற்கொடுப் பவர்க்கும்,

பொதுமையுற் றிவனோர் மானுடன் ரூனாய்த் திகழுமப் பூரண புராணன்.

௭ - து. கல்யாணகாலத்தில் மறையோர் தஞ்சீரியாசாரவழக்கமாய்ச் செல்கின்ற யாத்திரைபோலவும், அக்காலத்தில் கல்யாணப்பெண் அருந்ததியைப் பார்க்குதல்போலவும், இதுவும் ஒருலகாசார வழக்கமெனத் தமது உடல்பொருளாவி மூன்றினையும் கொடுக்கும் என்போல்வார்க்கும், பாண்டியனுக்குக் குதிரை கொள்ளும்பொருட்டு அந்நாளிற் சென்று திருப்பெருந்துறையில் ஞானாசாரியரை அடைந்து உடலாதி மூன்றினையும் உண்மையாகக் கொடுத்த மாணிக்கவாசகசுவாமிகள் போல் உடலாதிகளை உண்மையாகக் கொடுப்போர்க்கும், பொதுமையுற்று இவ்விடத்து ஒருமனிதனாகியும், மானை இடக்கரத்தேந்திய சிவனாகியும் விளங்காநிற்பன் அந்தப் பரிபூரணனாகிய பழையோன். ௭ - று.

வதுவைநாள் யாத்திரைசெல்லு மறையோரும் அக்காலத்தில் அருந்ததியை நோக்குங் கல்யாணப்பெண்ணும் யாத்திரை போவதுபோலவும் அருந்ததியைநோக்குதல் போலவும் காட்டினமாத்திரமேயன்றி யாத்திரைபோனதும், அருந்ததியைக் கண்டதும் அவர் மனத்திற்கு இல்லை; அதுபோல் உலகாசார வழக்கமாக உடலாதிகளைக் கொடுப்போரும் கொடுத்ததுபோல் காட்டினமாத்திரமேயன்றிக் கொடுத்தது இவர் மனத்திற்கு இல்லையென்பதறிக. (௭உ)

பாரினட் டாங்கா திகளொடக் குரவற் பலதரம் வலம்வந்து பணிந்து, சீரிய துதிசெய் தனுதின மவற்றூற் றிருவுளத் தடைக்கவும் பட்டுத், தாரமோ௳டணிமை யறவிறை கருணை சுரக்குநாளளவு நின்றேவ, லாரிவன் றனக்கொப் பெனச் செய்தொண் சாண்பெற் றறியவேண்டுமுழு தறிந்தான்.

௭ - து. பூமியின்கண் அட்டாங்கமுதலிய அங்கங்களுடனே அந்த ஞானாசாரியனைப் பலகாலும் வலமாகவந்து வணங்கி எக்

காலமும் தோத்திரம்பண்ணி அவ்வணக்கத் தோத்திரங்களினால் இவன் பக்குவனாமென்று அறிந்து ஆசாரியனது திருவுளத்தில் அடைக்கவும் அன்புடையனாகி அவ்வாசாரியன் கோபித்தானென்று தூரத்திலும் செல்லாமற் சந்தோஷித்தானென்று சமீபத்திலும் சாராமற் சேய்மை அணிமைகளுக்கு நடுவாய் அவ்வருளிறைவன் கிருபை வைக்குநாளளவும் நின்று ஏவற்பணிவிடைகளைச்செய்து ஒள்ளிய திருவடி தீக்ஷைபெற்று வீடடைதற்கு அறியவேண்டும் உபதேசமொழிகளெல்லாவற்றினையும் அறிந்தான். எ - று. அட்டாங்காதியெனவே பஞ்சாங்க சிட்டாங்கசிராங்கமுங்கொள்க.

தூரமோடணிமையற வென்றதற்கு உதாரணம்: திருவள்ளுவநாயனார். "அகலா தணுகாது தீக்காய் வார்போல்க—விகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்." அட்டாங்காதிகளோடக் குரவற்பலதரம் வலம்வந்தென்றதற்கு உதாரணம்: சிவதருமோத்தரம். "வலஞ்செய்து தண்டதனை மானவிதி முறைதழுவத்—தலந்தன்னிற் பணிந்தெழுக தலைகரமற் றிருகன்னந்—துலங்குமுகவாய்புயங்க ளேனுமெட்டுந் தோயமயி—ரிலங்குசிரங் கரமுழந்தா ளேனுமைந்து மிலங்குறவே" மற்றும் வருவனவற்றாற் காண்க. (எரு)

சற்குரு வருளா லையமுந் திரிவுந் தானற மறைமுடி வுணர்ந்த, பிற்குரு பாரண்ணன் முச்சரண் புகுந்த பெரியவ ரினமரீஇ யிருந்தொண், சொற்களி னரிய பொருள்கடேந் தவனைத் தொலைத்தொரு சிறிதுநாட் 'பின்னர்க், கற்குதலாதி யனைத்துநீத் தென்று ஞானசா தகத்தினுள் கழிப்பான்.

எ - து. சற்குரு கடாக்ஷத்தினாலே ஐயமுந்திரிவு நீங்கி வேதத்தின் முடிவாகியமகா வாக்கியத்தினால் அறிகின்ற மெய்ப்பொருளை நிச்சயித்து அறிந்தபின் அந்த ஞானாசாரியனது திருவடிகளைத் தனக்கு முன்னர் அடைக்கலமாகப் புகுந்த பெரியோர் கூட்டத்தினை அடைந்திருந்து ஒள்ளிய சாத்திரத்தின் மொழிக

ளினது அரியபொருள்களை அவரால் ஆராய்ந்து அறிந்து அம்முறையே சிறிதுகாலங்கழித்தபின்னர்ச் சிரவணமனனங்கள் முதலிய அனைத்தினையும் விட்டுநீங்கி எக்காலத்தும் ஏகாந்தஸ்தானத்திலிருந்து நிஷ்டைகூடி ஞானசாதகத்தினாலே நாள்களைப் போக்காநிற்பான். எ - று.

ஐயந்திரிவென்றவற்றுள் ஒன்றோ இரண்டோவென்பது ஐயம். முன்னர் ஒன்றென்று துணிந்து இரண்டென்பதும், முன்னர் இரண்டென்று துணிந்து ஒன்றென்பதும், திரிவென்றறிக.

ஒண்சொற்களினரிய பொருள்கடேர்ந்தென்றதற்கு உதாரணம்: பெருந்திரட்டு. "ஒப்பிலமல னோதிவைத்த வுரையை யோத லோதுவித்தல்—செப்பும் பொருளைத் திரிவுமறத் தெளிகை பிறரைத் தெளிவிக்கை—தப்பா ததனை மனத்தகத்தே தரிக்கை யெனவுந் தானைந்தாம்— வைப்பா யருந்தா மருந்தாகிச சிறந்தஞான மகவினையே" மற்றும் வருவனவற்றாற்கொள்க. ()

அரும்பொறி யின்மை பழியன்றி யார்க்கு மறிவறிந் தாள்
வினையின்மை, பெரும்பழி யெனலா னொருவன்வீட் டின்பம்
பெறாமைகொடிகழ்கலர் பெரியோர், விரும்பஃ தடையும் வகை
யருட் குருவான் விளங்கியு முங்கையிற் கனிபோல் வரும்படி
நாளு முயன்றுறா வென்போன் மதியிலார் தமையிகழ்வதலால்.

எ - து. யாவர்க்கும் அரிதாகிய செல்வம் இல்லாமை பழிப்பன்று அசசெல்வத்தினை அடையும் உபாயம் அறிந்திருந்தும் அவவுபாய நெறிக்கண் முயற்சியின்மையே பெரிய பழிப்பென்று திருவள்ளுவநாயனார் கூறுதலின், ஒருவன் ஞானநிஷ்டை இடையறாது கூடுமிடத்தும் அவ்வீட்டின்பத்தினை அடையாதிருத்தலைக் குறித்து இகழார் பெரியோர். விரும்பாநின்ற அந்த ஆனந்தத்தை அடையுநெறி ஞானாசாரியனால் அறிந்திருந்தும் உள்ளங்கை நெல்லிப்பழம்போல் அது வரும்படிக்கு எந்நாளும் ஞானசாதகத்தின்கண் முயற்சிப்படாத என்போலும் புத்தியில்லாரை இகழ்வதே அன்றி. எ - று.

எக்காலமுமாறாது ஞானசாதகத்தின்கண் முயலல் வேண்டு மென்பது இதனுட்காண்க. (எ௫)

பகர்தரு தொழில்க ளனைத்துமோர் சிறிது பண்ணவேண் டுவபணி விடுத்துப், புகலுரை யடக்கித் தனியிடத் திருந்து போற்றிசெய் தருட்குரு பதம்பின், மிகமுயன் றிதய வருத்த மெய் தாமன் மெலிந்துகை விடுதல்செய் யாம, லகமுக மாக்கி மனத்தைநா டொறுமோ ரைம்புல னொழித்தசை வறுப்பான்.

எ - து. சொல்லாநின்ற நித்தியகருமங்கள் அனைத்தினுள் ளும் இன்றியமையாது செய்யவேண்டுங் கன்மங்களில் ஒரோர் சிறிது சீக்கிரத்திலே செய்துவிடுத்துப் புகல்கின்ற வாக்கினை மௌனமாக்கி ஏகாந்தஸ்தானத்திலிருந்துகொண்டு கிருபாசாரி யரது திருவடிகளைத் தோத்திரம்பண்ணிப் பின்னர் அவர் கூறிய உபாயத்தின்படியே மனோலயம் பண்ணத்தொடங்கும்போது அந்த உபாயநெறிக்கண் மிகவும் முயற்சிப்பட்டு மனவருத்தமும் அடையாமல் எவ்விதத்தால் அடக்கினும் இது அடங்குவதில்லை யென்று உள்ளம் வருந்தி அவ்வுபாய நெறியை விட்டு நீங்குதல் செய்யாமல் பையப்பைய அம்மனத்தினைச் சகமுகமாய்ச் செல்ல வொட்டாமல் அகமுகமாக்கி எக்காலமும் ஒப்பற்ற பஞ்சேந்திரி யங்களையும் நிக்கிரகம்பண்ணி மனத்தினது சங்கற்பத்தை நாசம் பண்ணுவான். எ - று.

தனித்திருந் தொருதம் மனத்தையும் பொறிவாய்த் தடுத் தென்ற செய்யுளுள் வாக்குக் காயங்களை அடக்கினால் அன்றி மனமடக்கக் கூடாதென்ற முறையே இச்செய்யுட்கண்ணும் மனமடக்குதற்கு அவை அடக்கவேண்டுமென்று கூறியவாறு காண்க. கீழ்ப்போன செய்யுள்களுட்கூறிய முறையே புறப்பற் றுக்களாயுள்ளனவெல்லாம் துறந்து அநாசாரியரை விட்டு நீங்கி ஆசாரியரை வந்து அடைந்து திருவடி தீக்ஷைபெற்று அவரது உபதேசமொழிகளைக் கேட்டு அவரது திருவடியை அடைந்த பெரியோரை அடைந்து நிஷ்டைகூடி ஞானசாதகம் பண்ணு

வோனுக்கு மேல் வருஞ் செய்யுள்களுள் ஞானசாரம் கூறு கின்றார்.

மிகமுயன்றிதய வருத்த மெய்தாமல் என்றதற்கு உதாரணம்: ஞானவாசிட்டம். "மிகமுயன்று வருந்தாமற் சமமாகின்ற வேண்டுகோளான் முயல்வால் விஞோதந் தன்ஞற்—பகர்மனமாஞ் சிறுமகவை நிறுத்தல்வேண்டும் பலபிறப்பிற் பரிசயங்களகலப் பண்ணி—யகல்சுபவா தனையுதித்தான் முயற்சிபேறுமையுறினுஞ் சுகமடைவை யதுநீதன்று—திகழ்மனம் போய்த் தற்பதத்தைத் தெளியுமட்டுந் தேசிகனால் சொல்வழியிற் செல்லுவாயே." எ-ம். திருமந்திரம். "உடலாங் குகையி லுணர்வாகும் பீடத்—தடலார் சமாதி யிதயத்த தாக—நடமா டியகுண்டநாடிய யோகி—மிடையாகா வண்ணமே சாதிக்கு மெல்லவே" எ-ம். மற்றும் வருவனவற்றுற் காண்க. (எசு)

உச்சியம போதின் மீதரும் பசிக்கவ் வூர்வல மாயிலந் தோறும், பிச்சைகை யிடையிற் காடி கூழேனும் பெற்றது பற்றியுள் வெறுப்போ, டிச்சையற் றருந்திப் பொருந்தவே,காந் தத் திடையினுந் தாகம்வந் தடையி, னச்சி நீருரிற் புகுந்துறு தேரியாதியி னருந்துத னன்றே.

எ - து. உச்சிக்காலத்திலே மிகுந்த அரியபசிக்கு அந்தவூரினை வலமாகச்சென்று வீடுதோறும் பிச்சையாகக் கையின்கண்ணே காடியாயினுங் கூழாயினும் கொடுத்ததைவாங்கி உள்ளத் தின்கண் அவற்றில் வெறுப்பும் விருப்புமின்றிப் புசித்து மீண்டும்போய்த் தனது ஏகாந்த ஸ்தானத்தில் இருக்கவேண்டும். பின்னரும் தண்ணாத்தாகம் வந்ததாயின் நீரினை விரும்பி யூர்க் கட்புகாது ஏரிமுதலியவற்றுள் நீர் அருந்துதல் நன்மையாம். எ - று.

பிச்சைக்கேயன்றி நீரைக்குறித்து ஊர்க்குப் போகவேண்டாமையின் ஏரியாதியினருந்துதனன்றென்றார். ஏரியாதியெனவே நதி மடு வாவி சுனைமுதலியவுங்கொள்க.

இலந்தோறும் பிச்சைகை யிடையிலென்றதற்கு உதாரணம்: திருமந்திரம். "பரந்துல கேழும் படைத்த பிரானை— யிரந்துணி யென்பர்க ளெற்றுக் கிரக்கு—நிரந்தர மாக நினையு மடியா—ரிரந்துண்டு தன்னடி யெட்டச் செய்தானே. எ-ம். பிறப்பறி யார்பல பிச்சைசெய் மாந்தர் சிறப்பொடு வேண்டிய செல்வம் பெறுவர்—மறப்பில ராகிய மாதவஞ் செய்வர்—பிறப்பினை நீக்கும் பெருமை பெற்றாரே. எ-ம். அச்சினா ணின்ற பொரு டன்னை யுள்ளுவோ—ருச்சியம் போதாக வுள்ளமாக் கோயிற்குப்—பிச்சை பிடித்துண்டு பேத மறநினைந்—திச்சை விட் டேகாந்த மேறி யிருப்பரே." எ-ம். வரும். மற்றும் வருவனவற்றாற் காண்க. (எஎ)

ஞானசா தகன்மற் றுதயமா தியினா ணயக்கொணா மயக்க மாதலினா, மீனமார் விந்து மிகுமெனா வகன்றோ ரிகழ்ந்துகை விடுத்தவா தலினுந், தானிரந் தொருபோழ் தருந்திடு முணவுஞ் சமமலாற் றாழினு மிகினு, மூனதா ருடற்க ணோயுறு மற்றைக் குறக்கமு மிருந்திடு மன்றே

எ - து. ஞானசாதகம் பண்ணுகின்றவன் உச்சிக்காலத் தொழிந்து மற்றைபுதயகாலமுதலிய காலங்களின் அன்னாதிகளைப் புசிக்கலாகாது: தேகமயக்கம் வருதலினாலும், இழிவினையுடைய சுக்கிலவர்த்தனையாமென்று துறந்தோரால் இகழ்ந்து விடப்பட்டன வாகலாலும், தான் பிசசையேற்று ஒருபோது புசிக்கின்ற புசிப்பும் எந்நாளும் ஒருசமமாகப் புசியாமல் குறைந்ததாயினும் மிகுந்ததாயினும் ஊன்பொருந்திய உடம்பின்கண் வியாதிவந்து அடையும் அன்றைக்கு நித்திரையும் மிகுந்து வரும். எ - று.

மயக்கம் வருதலினால் தேகம் ஆசனத்தின்கட் செவ்வேயிராது. விந்து மிகுதலினால் மனத்தின்கட் காமமிருந்து அம்மனம் அசைவற நில்லாது. வியாதிவருதலினால் சமாதிகூடத் தொடங்கவே கூடாது. உறக்கமிருதலினால் கேவலம் வந்து அடையும்

ஆகலின் இதனுட் கூறியமுறையே செய்யவேண்டுமென்பதறிக. உதயமாதியவென்றதனால் சாயங்காலம் இராக்காலம் விடியற்காலமுதலியவுங் கொள்க. (எஅ)

மிகுத்திடு முனமிற் படுதழ லவிப்பான் விடுபவன் கலங்கனீர் தெளிநீர், பகுத்திடா னதுபோற் காடிசோ றேனும் பசித்தவன் புசித்திட றகுமா, னகத்தவர் மனைதோ றுழன்றெனக் கடிசி னல்கிடென் றொருவன் வேட்டுணலா, னகத்துறு பசியும் போக்கிமற் றதுகொ டதிகமென் பயனடை வானோ.

எ - து. வீட்டின்கட்பட்ட அக்கினிமிகுந்து பற்றி எரியுமுன்னர் அவிப்பவன் அதனை அவித்தலைப் பார்க்குதலேயன்றிக் கலங்கனீரென்றும், தெளிந்தநீரென்றும், நீரினைப்பகுத்துப் பாரான். அதுபோல் உதராக்கினி மிகுவதற்கு முன்னர் இதனை அவித்தற்கு நீரென்றுகருதி நாச்சுவைவிரும்பி நன்று தீதென்று பகுக்காது காடிச்சோறாயினும் நல்லசோறாயினும் பசியையுடைய தவத்தோன் புசிக்குதல் முறைமையாம். தவத்தோர் சிரிக்க வீடுதோறுந் திரிந்து எனக்குச் சோறு கொடுமினென்று கேட்டு ஒருவன் நாச்சுவைவிரும்பி வாங்கி உண்டலினால் அவ்வயிற்றில் உறுபசியைப்போக்குதலும் அன்றி அங்ஙனம் உண்டது கொண்டு அதிகமாக வேறே யாதுபயனைப் பெறுவானோ எ - று.

பிச்சைவாங்கி உண்டலினாலும், வேட்டுண்டலினாலும் பசிபோதலேயன்றி வேறுபயன் இன்மையால் அதிகமென் பயனடைவானோவென்றார். தவத்தோர்க்கு நாச்சுவைவேட்டு ஒருவரைப் பின்சென்று வாங்கியுணலாகாதென்பது கண்டுகொள்க.

காடிசோறேனும் பசித்தவன் புசித்திடறகுமென்றதற்கும், நகத்தவர்மனைதோ றுழன்றென்றதற்கும், உதாரணம்: கூர்மபுராணம். "இவ்வகைமையயமேற்று நன்குண்போன் காடிசோறெவற்றினை யேனுஞ்—செவ்விதி னளித்த தருந்திடல் வேண்டு மனைதொறுஞ் சென்றுசென் றற்று — வெவ்வழல் போல

வெகுண்டுமேற் றொன்றை விழைந்துநீ யளித்திடுமென் றருந்த—
லவ்விய மவித்த மனத்தினோர்க் காகா வென்றுரன் மறைய
றைந்திடுமால்." என வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. ()

எரிந்தெழு பசிநோய் தணிக்கவோர்மருந்தென் றேற்றுண்
டொருவனுஞ் சுவைவேட், டருந்திடு மளவும் வருந்தியப் பிண்ட
மளித்தவர் தம்மைநோ வதுமென், னிருந்துள கிரக வாழ்க்கை
யும் பினைவந் தெய்திய துறவுமல் லதுவீண், டிரிந்துடல் வளர்
த்தி யெனத்தனை விடுத்த தெய்வத்தை நோவது மறந்தே.

எ - து. வயிற்றின்கண் எரிந்து எழுகின்ற பசிவியாதியை மாற்றுதற்கு ஈதோர் மருந்தென்று எதாயினும் வந்த பிச்சையை வாங்கி உண்ணுத ஒருவன் நாச்சுவையை விரும்பிக் காடி கூழ் முதலிய பிச்சை வந்தவிடத்து அதனைப் புசிக்குமளவும் உள்ளம் வருந்தி அந்தப்பிசசை கொடுத்தோரை நோவது என்னையோ தான்! முன்னிருந்துள்ள இல்வாழ்க்கையுமல்லாது அதனை விட்டுப் பின்னர் வந்து அடைந்த துறவுமல்லாது பதிதனாய் வீணே திரிந்து உடம்பை வளர்ப்பாயென்று தன்னைவிட்ட ஊழ்வினையை நோதல் மறந்து. எ - று.

ஒருவரைப் பின்சென்று வேட்டுண்ணாது பிச்சையேற்றுண்ணினும் காடி கூழ்முதலிய பிச்சைகளை அருந்தும்போது உள்ளத்தில் வெறுப்புவைத்து அருந்துதலும் தவத்தினர்க்குக் குற்றமென்பது காண்க. (அ0)

எய்தவ னுறமற் றேவையென் னேவ தெனவுல குரைத்தலி
னொருதாஞ், செய்துள வினைக்குத் தக்கபே றிறைவன் சேர்க்
குத றனைமறந் தென்னே, வுய்தவ மறியாக் கைதவ ரைய முத
விடார் தமையுத வினரை, வைதல்வாழ்த் திடுதல் செய்துமற்
றொருசாண் வயிறுநாடொறும்வளர்ப் பதுவே.

எ - து. எய்தவன் இருக்க அம்பை நோவது என்னை யென்று உலகத்தார் வழக்கமாக எடுத்துச் சொல்லுதலின் ஒப்பற்ற தாம் செய்துள்ள நல்வினை தீவினைகளுக்குத்தக்க சுகதுக்கங்

களைக் கடவுள் கூட்டுகிற முறைமையினை மறந்து என்னையோ வீட்டினை அடைந்து பிழைக்குந் தவத்தினைப்பண்ணா அறியாத வஞ்சகர் பிச்சை கொடாதவரையும் அது கொடுத்தவரையும் வைதல் செய்தும் வாழ்த்துதல் செய்தும் தமது ஒருசாண்வயிறு நாடோறும் வளர்ப்பது. எ - று.

சிவச்செயலை மறந்து சீவச்செயலை நாடினாராகலின் உய்தவு மறியாக் கைதவரென்றும், அங்ஙனம் நாடிப்பிச்சையுதவிடா ரையும் உதவினோரையும் வைதலும் வாழ்த்துதலும் தவத்தோர்க்கு இழிவாகலின் சாண்வயிறு நாடொறும் வளர்ப்பதுவே யென்றும், கூறினார். (அக)

தன்னரு குறுசேய் சிரத்தொரங் குலியாற் றன்புடைத் தொருவன்மீ தொருவன், சொன்னமாத் திரத்தி னவனையச சேயுந் துணிவுகொ டெழுந்தறை குதல்போன், முன்னவன் விளை யாட் டாயவைந் தொழிற்கு முன்னிலை யாயசீ வரைப்பார்த், தின்னல்செய் சாப மிட்டுமாதவரு மென்கொலோ தவமிழப் பதுவே.

எ - து. ஒருவன் தனது அருகேயிருக்கின்ற சிறுபிள்ளையினது சிரத்தில் தான் ஒருவிரலால் தெறித்துப் பிறனொருவனைக் காட்டி அவன்மீதே சொன்னமாத்திரத்தில் அதனை அறியாமையினால் மெய்யென்று கருதிக்கொண்டு அதனை அந்தச் சிறுபிள்ளையும் எழுந்திருந்து அறைகுதல்போல், கடவுளது திருவிளையாட்டாகிய பஞ்ச கிருத்தியத்தில் சீவர்கண் முன்னிலையாகத் தான்செய்த தீவினைகளுக்கு ஈடாகத் துன்பஞ் செய்தலை மறந்து சீவர்கள் தஞ்செயலாகச் செய்தாரென்று கருதி அவரை நோக்கித் துன்பஞ்செய்யாநின்ற சாபமிட்டு மாதவத்தினையுடைய முனிவோரும் என்ன அறியாமையோ தாம் அருமையாகச்செய்த தவங்களை இழந்துபோவது. எ - று.

மாதவருமென்ற சிறப்பும்மையால் சீவச்செயலை நோக்காது சிவச்செயலை நோக்குதல் யாவர்க்கும் அரிதென்பதும், சிவச்

செயலை நோக்குவார்க்கு இம்மையில் தவமிழவாமையின் மறுமையிற் பிறவித்துன்பம் இன்றென்பதும், காண்க.

சாபமிட்டு மாதவரு மென்சொலோ தவமிழப்பது என்றதற்கு உதாரணம்: அஞ்ஞவதைப்பரணி. "கோப மிக்கபோதே வராறுவார் குறுகுவோர்தமைக் கொடிய நோய்புகுஞ்—சாப மிட்டுமா தவர்களாயினார் தலைமை மிக்கதந் தவமி ழப்பரே" என வரும். மற்றும் வருவனவற்றாற் காண்க. (௮௨)

பெண்ணைவிட் டகலா வொருவிடன் றன்னைப் பிறர்வழக் கினிற் கொடு போகக், கண்ணைவிட் டகலாதவள்வரல் போலுங் கண்டுகொண் டேகியாங் கஃசெவ். வண்ணமா யினுந்தீக் கிரத்தினின் முடித்தவ் வனிதைபான் மறிதரன் மானப், பண்ணிய சமாதி விடுத்தறி ஞருந்தம் பசிதணித் தலைபுறும் பரிசே.

எ - து. அழகினால் மிகுந்துள்ள ஒரு பெண்ணைக் கணப் போதாயினும் விட்டு நீங்காத ஒரு காமியை அவனுக்குக் கடன் கொடுக்க வேண்டிய பிறர் வந்து வழக்கினிடை அழைத்துக் கொண்டுசெல்ல அவன் தனது கண்ணை விட்டு நீங்காது அந்தப் பெண் வருதல்போலும் பார்த்துக்கொண்டு சென்று அவ்விடத்து அந்தவழக்கினை எப்படியாயினும் சீக்கிரத்தில் தீர்த்துக் கொண்டு அந்தப்பெண்ணினிடத்தில் மீண்டும் வந்து கூடியிருத்தல்போல், அறிஞரும் கணமாயினும் இடைவிடாது தாம் பண்ணிய ஞானசமாதியை விட்டு நீங்கிக் காடி கூழேதாயினும் சீக்கிரத்தில் வாங்கிப் புசித்துத் தமது பசியை மாற்றிக்கொண்டு மீண்டும் வந்து அந்த ஞானசமாதியைக் கூடுமுறைமை. எ - று.

அறிஞர் மிகவும் விரும்பி ஒருகணமாயினும் விட்டு நீங்காது ஞானசமாதியைக் கூடியிருத்தலின் பெண்ணை விட்டகலா வொருவிடனென்றும, பசியினாற் பிச்சையைக் குறித்துப் பிராரத்த வசத்தனாய்ச் செல்லுகின்றபோது மனத்தின்கண் அந்நிஷ்டை நீங்காது செல்லுதலின் கண்ணை விட்டகலாதவள் வரல்போலுங் கண்டுகொண்டேகியென்றும், நாச்சுவை விரும்

பாது காடிகூழேதாயினும் வந்ததைச் சீக்கிரத்தில் வாங்கிஉண்டு பசியைமாற்றி மீண்டும் வந்து சமாதியைக் கூடியிருத்தலின் ஆங்கஃதெவ்வண்ணமாயினுஞ் சீக்கிரத்தினின் முடித்தவ்வனி தைபான் மறிதரன் மானவென்றும், உவமை கூறினர். (அரு)

நடந்துறங் கொருவன் றனைமல ரமளி நண்ணுமா புரியின் மற் றவனுங், கிடந்துறங் குவதைக் குறித்துமுன் னுறக்கம் விழித்தவா கிளக்குதல் போலுந், தொடர்ந்தொரு கணமு மிடைவிடா ஞான நிட்டரைத் தூயதஞ் சமாதி, யடைந்தனர் விடுத்தா ரென்பரே காந்த மவர்க்கனு கூலமா தலினே.

எ - து. நடந்து செல்போது நித்திரைபண்ணும் ஒருவனைப் புட்பசயனத்திலே இருக்கும்படி செய்யில் மற்றவனும் பின்பு படுத்துக்கொண்டு நித்திரை பண்ணுவதைப் பார்த்து முன்பு நடந்தபோது பண்ணிய நித்திரையை விழித்துச் சென்றவாறாகச சொல்லுதல்போலும்; மனத்தால் தொடர்ந்துபற்றி ஒரு கணமாயினும் இடைவிடாத ஞானநிஷ்டாபரரை நின்மலமாகிய தமது சமாதியை அடைந்தனரென்றும், விடுத்தனரென்றும் சொல்லுவர் ஏகாந்தம் அவர்களுக்கு அனுகூலமாகலின். எ - று.

நடந்துறங்குவோனுக்கு மலரமளி அவ்வுறக்கத்தில் அனுகூலமாவதுபோல் நிற்றல் நடத்தல் ஓடல்முதலிய காலத்தும் இடைவிடாத ஞானநிஷ்டருக்கு இருந்து நிஷ்டைகூடல் அனுகூலமென்பதும், நடந்துறங்குவோனுக்கு இடையிலே ஓரோர் நினைவுதோன்றுதலபோல் நிற்றல் நடத்தல் முதலிய காலத்தும் ஞானநிஷ்டை விடாதோர்க்கு இடையிடையே ஓரசைவுமனத்தின்கண் தோன்றுமென்பதும், காண்க.

தொடர்ந்தொரு கணமு மிடைவிடா ஞானநிட்டரென்றதற்கு உதாரணம்: திருமந்திரம். "நிற்றலிருத்தல் கிடத்த னடையோடல்—பெற்ற வக்காலுந் திருவருள் பேராமற் — சற்றியன் ஞானந்தந் தானந்தந் தங்கவே — யுற்ற பிறப்பற் றொளிர்ஞான

கிட்டையே." எ-ம். மெய்ஞ்ஞான விளக்கம். "உறங்கிடிற் பிணமேயென்ன வுணர்வுமாய்புதலினூற் றுன்பம்-- பிறங்குமக் கனவாற் றோன்றும் பீருவான் மிகவுந் துன்ப — மறங்கண்மற் றோர்ச்சி மூன்று மனைத்துமாய்த் திருளேமூடு — முறங்கலிற் கொடிய துன்ப மோர்ந்திடி னில்லையன்றே. எ-ம். வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. (அசு)

நித்திரை தடைமீறிடிற் கைகால் போர்த்து நிசியிடைப் பூவணை துயில்வா, ரொத்துரு விடையிற் கிடையுமப் பயிக்க வூணுமெங் ஙனமித மென்னி, லித்தரை யோர்நித் திரைமிகிற் பாயு மெரிகொடும் பசிமிகிற் கறியுஞ், சித்தமே வேண்டா வென்றசொல் லன்றோ தெரியுமோ வவர்க்கவை மிகலான்.

எ - து. ஞானசமாதியிலிருக்குமிடத்து நித்திரை வந்து அடுக்கும்போது அதனை விவேகத்தால் தடுக்குமிடத்து நில்லாது தடைமீறி வருமாயின் இராக்காலத்திலே கையும் காலும் ஆகிய போர்வையைப் போர்த்துக்கொண்டு பூமியாகிய பஞ்சணையில் நித்திரைபண்ணுவார்கள். ஒவ்வாத பூமிக்கண்ணே சயனமும் அந்தப் பிச்சையூணும் அவருக்கு எப்படியிதமாயிருக்குமென்னில் இவ்வுலகத்தார் நித்திரை மிகுந்தாற் பாயும்வேண்டாவென்றும், எரியாநின்ற கொடிய பசிமிகுந்தால் கறியும் வேண்டாவென்றும், சொன்னசொல் உண்மையே யல்லவோ அவர்களுக்கு அந்த நித்திரையும் பசியுமிகுதலால் இதமன்றென்று தெரியுமோ தெரியாது. எ - று.

மிகுந்த நித்திரை வந்தவிடத்து நித்திரைபண்ணவேண்டுமென்பதும், மிகுந்த பசிவந்தவிடத்துப் புசிக்கவேண்டுமென்பதும், பகற்காலம் நித்திரைபண்ணலாகாதென்பதும், காண்க. ()

தென்பர வையினுட் கழிவட 'பரவை சேர்நுகத் துளையினிற் செலல்போ, லொன்பதிற் றென்ப தோடேழு விலக்கமுளவியோ னியும் பிழைத்தேறிப், பின்பிறப் பிதுபெற் றத

னினும் பாதி 'பிறப்புறு நாளதாக் குநரி, எரின்பமீ தெனமிக்
குறங்கலர் பிறவிக் கறவெரீஇ யுளர்துளங் கிடுவோர்.

எ - து. யுகாந்த காலம் வந்து ஏழ்கடலும் ஒன்றாகித் தென் கடலுட் கிடக்கின்றகழி வடகடலுட் கிடக்கின்ற நுகத் துளையின் வழியே தெய்வ கதியாகச் செல்வதுபோல் எண்பத்து நான்கு நூறாயிரம்பேதமாயுள்ள கருப்பங்கடோறும் அளவிறந்த காலம் பிறந்து பிறந்து சுழன்று அவையெல்லாம் தப்பிக்கடந்து பின்பு இந்த மானுடப்பிறவியை அரிதாகப்பெற்று இப்பிறப்பு அடைந்த நாள்களுள்ளும் பாதிநாள் பிறப்படையாத நாளாக நித்திரை பண்ணிப் போக்குவார்போல் இந்த நித்திரையை இன்பமென்று கருதி மிகுந்த நித்திரைபண்ணுர்கள் பிறவித் துன்பத்திற்கு மிகவும் பயந்து உள்ள நடுக்குறுவோர். எ - று.

பெறுதற்கரிய மானுடப்பிறவி பெற்றும் ஞானசமாதி கூடு தல் மிகவுந் துல்லபமாகலின் இப்பிறப்பு அடைந்த நாள்களைச் சமாதிகூடிக் கழித்தலேயன்றி வீணுள்களாகக் கழிக்கலாகா தென்பது காண்க. (அக)

அறவுநித் திரையைத் துறந்திடி னுடற்க ணடைதரும பிணிகண்மற்றதனுற், குறைதலு மிகலு மின்றியோர் சமமாக் கொண்டுகண் டுயின்றுபின் விழிக்கி, லுறுசுகா தனத்தி லெழு துசித் திரமொத் துறைகுவ ரிறைதலை கழுத்துன், செறியுடல் வாங்கா தோங்கரே ரவர்பாற் சேருமோ காமநோய் சிறிதும்.

எ - து. மிகவும் நித்திரையைத் துறந்தால் தேகத்தின் கண் வியாதிகள் வந்து பொருந்தும் அதனுற் குறைதலுமின்றி மிகுதலுமின்றி ஒரு சமமாகக் கொண்டு நித்திரைபண்ணிப் பின்னர் விழிக்குமிடத்துப் பொருந்திய சுகாதனத்திலே இறை யளவாயினும் தலையும், கழுத்தும், ஊன்செறிந்தவுடலும், வளை யாது நேரே ஓங்க எழுதிய சித்திரம்போல் இருப்பார்; அவரி டத்து வந்தடையுமோ காமவியாதி சிறிதாயினும். எ - று.

சுகாதனமென்றது தமக்குக் கைவந்த பத்மாதன முதலிய ஆதனங்களை. இதனுட்கூறிய இலக்கணத்தோடும் ஆதனங்கட்டிச் சமாதியில் இருப்போர்க்குக் காமம் வந்தடையாதென்பது காண்க.

குறைதலுமிகலு மின்றியோர் சமமாக்கொண்டு கண்டுயின்றென்றதற்கு உதாரணம்: பரமார்த்ததரிசனம். எண்டிகழுமியோகத்தை யிப்பரிசி னெப்பொழுதுங்—கொண்டு பயில்வார் கடைக்கா லென்னையே கூடுவரா—லுண்டியினின் மிகுவாருண்டுறப்பார் மிக்குறங்குவார் -கண்டுயிலையறத் துறப்பா ரவர்க்கிதுகை வாராதால்." எ - ம். தத்துவராயர் அமிர்தசாரம். "செவ்வே யுடலுஞ் சிரமுங் கழுத்துமுற—வெவ்வா தனத்தி லிருந்தவர்க்குங்-கைவந்தால்—வாத முதனோய் நலியாமதி யுடையோ—ராதன மென்ப தது." எ-ம். வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. (அஎ)

உறக்கமும் பசியு மிகுந்திடிற் காம முற்றிடா தற்றபோழ்துள்ள, மிறக்கு மொண்சமாதி யடைதலி னடையா விடையினுமிடுபவத் துயரை, மறக்கலா மையினு லச்சமும் வீட்டை மதித்தலா லிச்சையு முடலை, வெறுக்குநிக் கிரகத்தாற் களிப்பறலு மேவலான் மேவிடா ததுவே.

எ - து. நித்திரை மிகுந்த காலத்தும் பசி மிகுந்த காலத்தும் காமம் வந்து பொருந்தாது. அந்த நித்திரை பசி இல்லாத காலத்தும் ஒள்ளிய ஞானசமாதி கூடுதலின் உள்ளமிறந்துபோமாகலின் அஃது அடையாது. அந்நித்திரை பசி சமாதிகளுக்கு இடையிடையே காமந் தோன்றுதோவென்னின் அவ்விடையிலும் வருத்தாநின்ற பிறவித் துன்பத்தை மறவாமையால் பயமும், வீட்டின்பத்தை என்றைக்கு அடைவோமோவென்று அதனைக் கருதுதலால் ஆசையும், அன்னபானாதிகளை ஒறுத்தல் முதலியவற்றால் உடலை வெறுக்கு நிக்கிரகத்தால் மனச்செருக்கின்றி யிருத்தலும் பொருந்துதலாற் காமநோய் பொருந்தாது. எ - று.

நித்திரை மிகுந்தவிடத்தும், சமாதி கூடுமிடத்தும், மனம் இறத்தலினுலும், பசிமிகுந்தவிடத்தும், உடலைக்கிரகிக்குமிடத்தும் மனக்களிப்பு அறுதலினுலும், பிறவித்துன்பத்தை நினைக்குமிடத்தும், வீட்டின்பத்தை நினைக்குமிடத்தும் பயமும் ஆசையும், தோன்றலாலும், காமமேவுதற்கு இடமின்மையால் மேவிடாததுவே யென்ருர். இவை இரண்டுபொட்டாலும் காமம் அடையாதிருத்தற்கு உபாயங் கூறினர்.

அடுபவத்துயரை மறக்கலாமையினு னென்றதற்கு உதாரணம்: காசிகாண்டம். "கருவிடை யழுந்துந் துன்பமு நிலத்தின் கண்ணுறிற் கொடிய வெந்நோயான்—மருவுவெந் துயரு நமர் திரையெய்தி வருந்திடுந் துன்பமுங் கூற்ருர—லுருவினை யொருவுந் துன்பமு மீட்டுங் கருக்குழி யொன்றுறு துயரும் — வெருவு வெண்ணி யின்பவீ டதனின் மேவநன் குணர்தலே வேண்டும்." எ-ம். சிவதருமோத்தரம். "பொற்கடத்தின் மலம் பொருந்திற்புல்லியரும் பொருணசையா—லக்கடத்தைப் பற்றியிடாரங்கையினு லவனிதனின்—மக்கடம துடலினைத்தா மலபாண்ட மெனவறிந்து—மெக்கணக்கா லிகழாதே யருவருப்பற்றிருக்கின்ருர்." எ-ம் வரும். மற்றும் வருவனவற்ருற் காண்க.

எங்குள புனன்மற் றிதுகழீஇ யிடுதற் கென்றுகா லிடைப்படு மசுத்தக், கங்குடல்குலையு மொருமகன் மலம்புக் காடவு நாடுமே யதுபோற், பொங்குபுன் மலவூன் பொதியிதென் ருெழிப்ப லெனவரு வருத்துடல் பொறுகருங், தங்கமா தவற்கு மெங்ஙன மடவார்த் தோயவு நேயமுட் டோன்றும்.

எ - து. எவ்விடத்தில் உள்ளது நீர் இதனைக் கழுவுதற்கென்று காலினிடத்துப்பட்ட அசுத்தத்திற்கு அவ்வசுத்தம்பட்ட அவ்விடத்திலே தானே மனம்பொருது உடல் நடுக்குறும் ஒரு சுத்தபுருஷனவன் மலங்களே நிறைந்துள்ள தடாகம் புகுந்து மூழ்கவும் நினைப்பனே! அவன்போல் உள்ளே நிறைந்த புல்லிய மலங்கள் புறத்திலே நவத்துவாரங்களிலும் கசிந்தொழுகாநின்ற

மாமிசச் சுமையாகிய இதனை என்றைக்கு நீக்குவேனென்று உள்ளத்தில் அருவருப்புடனே உடலைத் தாங்காநின்ற உயர்ச்சிபொருந்திய மாதவத்தினையுடையவனுக்கும் எப்படி மடவாரைக் கூடவும் அன்பு மனத்தின்கண் தோன்றும். எ - று.

காலிற்படும் அசுத்தத்திற்கு உடல்குலைந்து நீர்தேடும் ஒரு மகன் மலதடாகத்தில் மூழ்க நினையாமைபோல் உடலை மலப் பொதியென்று அறிந்து இதனை என்றைக்கு நீக்கிக்கொள்வேனென்று மனத்தில் அருவருப்புற்று இதனை நீக்குதற்கு ஏதுவாகிய வீட்டினைக் கருதுமாதவன் அசுத்தமீதசுத்தமாய் வருமாதர் கூட்டுறவினை நினையானென்பது காண்க. (அகூ)

அருந்தவம் புரிவோ ரெதிருரு வசிதா னாதிய மாதர்வந்
துள்ளம், வருந்திநின் றியாது புரியினு நோக்கார் மற்றிவ ணுற்
றமா தரையும், பொருந்துமோர் வெளின்மீ தேறவிட் டுளநாய்
போனனி நோக்குமென் போல்வா, ரிருந்துள விடத்தாங் கவர்
வரின் விழியோ டென்படுமோ பதைத் திதயம்.

எ - து. அரிய தவத்தினைப் பண்ணுகின்ற பெரியோர் முன்னர் ஊர்வசி முதலிய அரம்பைமாதர்வந்து எங்களுபசாரப் பணிவிடைகளைக் கைக்கொண்டருளித் தேவரீர் எங்கண்மீது காருணியம் வைக்கவேண்டுமென்றுகூறி உள்ளம் வருந்திநின்று யாது செய்தாராயினும் அவ்வுபசாரப்பணிவிடைகளைக்குறித்தாயினும் அவரைப்பாரார். அவர் நீங்கலாகிய இந்நிலத்துள்ள மாதரையும் பொருந்தாநின்ற ஓரணிலை மரத்தின்மீதே ஏறவிட்டுள்ள நாய் அதனைப் பார்த்தலினாலே தனக்குப் பயன் இன்றாயிருந்தும் பார்த்தல்போல் அவரைப் பார்த்தலினாலே தமக்குப் பயனின்றாயிருந்தும் மிகவும் பாராநின்ற என்போல்வார் இருந்த விடத்தில் அந்த அரம்பைமாதர் வந்தாராயின் கண்ணுடனே மனமும் பதைபதைத்து என்ன பாடுபடுமோ யாம் அறியேம். எ - று.

வெளின்மீதேற விட்டுள நாய்போனனி நோக்குமென்றார் 'அணிலேற விட்ட நாய்போலேன் பார்க்கின்றாய்' என்பது

ஓருலகவழக்கச் சொல்லாகலின். விழிபதைத்தல் காம விருப்பினாலே பிறழ்ந்து நோக்குதல். (௧0)

பெற்றதாய் முதலோர்ப் புரையமா தரையெண் பெருந்துற வடைந்துளோன் றவழுஞ், சிற்றொரு மினைத்தன் மனையென விநோதத் திறத்துரைப் பினுமுனங் கிரகத், துற்றநா டனது மகடனை யவண முரைத் திடா மையிற்பழு தென்றாற், பொற்றொடி யவர்தோ டழுவவும் விழைதல் புரியினென் னுங்கொலவ் வறமே.

எ - து. தன்னைப் பெற்றதாய் முதலானோரைப் போல மாதர்களையெல்லாம் கருதாநின்ற பெரிய துறவினை அடைந்தவன் தவழ்கின்ற சிறியவொரு பெண்ணினைத் தனது மனைவியென்று விநோதமுறைமையாற் சொல்லினும் முன்னம் இல்வாழ்க்கையிலிருந்தகாலத்துத் தனது மகளை அங்ஙனம் சொல்லாமையினால் அங்ஙனம் சொல்லுவதும் குற்றமாமென்றால், பொன்னாலாகிய தொடியினையுடையாரது தோளினை அணையவும் மனத்தின்கண் விரும்புதல் செய்யின் அத்துறவறத்தினை எதனோடு சேர்த்தலாகும். எ - று.

துறவறத்திற்கு மகளிரை விழைதல் மிகவுமாகாமையால் அத்துறவறம் போயதாய்வைத்தும் அதனைப் பிரமசரியம் இல்வாழ்க்கை வானப்பிரத்தமென்னும் இவைகளோடும் சேர்த்தலாகாமையால் என்னுங்கொலவ்வறமேயென்றார். (௧௧)

சிறந்தகற் புடைய மாதரும் பரத்தை யருமலாத் தெரிவையர் புவிமேற், பிறந்தநாட் பிறந்தான் போலுநெஞ் சகத்தைப் பிரிகடை யுரியனு மொருவ, னிறந்ததன்னிச்சை யெவணமவ் வண்ண மிகத்திலுஞ் செயப்படா துடலைத், துறந்தகாலையிலு நரகில்வீழ்த் தியம வாதுவர் வருத்தலி னன்றே.

எ - து. மகளிர் இலக்கணமெல்லாம் சிறந்துள்ள கற்புடையமாதரும் வேசை மாதரும் அல்லாத வியபிசார மாதர் புவியின்

கண்ணே பிறந்த நாளிலே பிறந்தவன் போலும்; நெஞ்சகத்திலே வஞ்சகத்தை வைத்துக்கொண்டு தவத்தோர் நடைபோல் வாக்குக் காயங்களில் நெஞ்சகத்தைப் பிரிந்து பிறர்க்குக் காட்டு நடைக்கு உரியனாகிய ஒருவன் தனது மிகுந்த ஆசையெப்படியோ அப்படி இம்மையிலும் செய்யக்கூடாத படியினாலும், உடம்பினை நீங்கிய மறுமைக்காலத்திலும் யமதூதுவர் நரகத்தில் வீழ்த்தி வருத்தலினாலும். எ - று.

கற்புடைய மகளிருக்கு இம்மை மறுமைகளிலும் இன்பம். பரத்தையருக்கு இம்மையில் இன்பம். வியபிசாரமாதருக்கு இம்மை மறுமைகளிலுந் துன்பம். அவர்போலச் சுத்த தவத்தினர்க்கு நிராசை முதலியவற்றால் இம்மையிலும் தபோபலத்தால் மறுமையிலும் இன்பமென்பதூம், இல்வாழ்வானுக்கு இம்மையில் இன்பமென்பதூம், கூடாவொழுக்கம் உடையோனுக்கு இம்மை மறுமைகளிலும் துன்பமென்பதும், காண்க. வியபிசாரமாதர் தன்மைபோல் நெஞ்சகத்தைப் பிரிநடையுடையோன் தன்மையுமிருத்தலிற் பரத்தையருமலாத் தெரிவையர் புவிமேற் பிறந்தநாட் பிறந்தான்போலுமென்றார். எங்குளபுனன்மற்றென்பது முதல் இந்நான்கு பாட்டாலும் தவத்தோர்கள் மனம் விழிமெய்களினால் மகளிரை நினைக்கலாகாதென்றும், பார்க்கலாகாதென்றும், கூடலாகாதென்றும் கூறியவாறு காண்க. (கஉ)

மைப்படு விழியா ரின்பமோர் முள்ளி மலரின்வாய்த்
தேனெனவொப் பெனக்கண், டொப்பில் பேரின்பம் வேண்டி
னோன் வேண்டி யுலகர்வே றெனைகொடுத் திடினுந், துய்ப்ப
மற் றுடுப்ப விரண்டுமே யன்றித் தொடுவனோ பிறிதிவற் றினுக்
கூர், குப்பைசா ரிடம்புக் கிடுதலி னவற்றைக் குறித்தொரோ
ரிடம்புகா மையினே.

எ - து. மைபொருந்திய கண்ணினையுடைய மாதரால்வரும் இன்பம் ஒரு முள்ளி மலரின்கணுள்ள தேனுக்குச் சமானமென்று கண்டு துறந்து ஒப்பற்ற பேரின்பத்தை அடையவிரும்பி

ஞென் உலகத்தார் தன்னை வேண்டிக்கொண்டு வேறே எவற்றி னைக் கொடுத்தாராயினும் உண்பனவும் உடுப்பனவுமாகிய இர ண்டுமேயன்றிப் பிறிதொன்றனையும் கையினாலும் தீண்டுவனோ! ஆனால் இவையிரண்டையும் வாங்கலாமோ வென்னில், இவற்றி னைக் குறித்து ஊரினிடத்தும், குப்பைசாரிடத்தும், செல்லுகை யால் இவைவாங்கிக் கொள்ளலாகும்; மற்றையவற்றினைக் குறி த்து ஓரிடத்திலே செல்லாமையால் அவற்றினை வாங்கலாகாது. எ - று.

இல்வாழ்க்கையின்பத்தை அற்பமெனத் துறந்து பேரானந் தத்தை அடையத்தொடங்கினோன் தன்னைப் பிறர் வந்து பின் சென்று எவற்றினைக்கொடுப்பினும் உண்பனவும் உடுப்பனவு மன்றிப் பிறிதொன்றனையும் அங்கீகரிக்கலாகாதென்பது கண்டு கொள்க.

மைப்படுவிழியாரின்பமோர் முள்ளிமலரின் வாய்த்தேனை யொப்பெனக்கண் டென்றதற்கு உதாரணம்: அனந்தபோதம். "கள்ளக்கோலக் கருங்குழன் மாதர்பான் — முள்ளித்தேனை முனிந்துயர் முத்தியாம் — வெள்ளத்தேனை விரும்பும் விடா யினு—னெள்ளிற்போது மிராதுட னேகினான்" எனவரும். மற்றும் வருவனவற்றாற் காண்க. (கஅ)

தனைகனி யிரந்து வருந்திமற் றொருவன் சந்தன மாதிய பூசி, யினமலர் மாலை புனையினு முனியா விழுத்துவை தடித்து தைத் துடலிற், பினைமல மாதி பூசினு மன்னோன் பிரியமப் பிரி யமொன் றின்றி, வினைவழி முனைவ னைர்தொழில் புரியும் வித த்தையே நோக்கியுண் மகிழும்

எ - து. பிறனொருவர் வந்து தன்னை மிகவும் வருந்தி வேண்டிக்கொண்டு சந்தனமுதலிய பூசி நாலுவாயுள்ள மலர்களி னால் இயற்றப்பட்ட மாலையைத் தரித்தானாயினும், அவையன் றிக் கோபித்து இழுத்து வைது அடித்து உதைத்து உடம்பின் கண்ணே பின்னர் மலமுதலியவற்றைப் பூசினானாயினும், அந்தத்

தவத்தினோன் நன்று செய்தானென்றும், தீது செய்தானென்றும் கருதி, விருப்பும் வெறுப்பும் சிறிதாயினும் இல்லாமல் தனது நல்வினை தீவினைகளுக்கு ஈடாக அவன் அவள் அது முன்னிலையாகச் சுக துக்கங்களை ஊட்டுதற்கு இறைவன் செய்யும் பஞ்சகிருத்தியமென்று அறிந்து, அப்பஞ்சகிருத்தியஞ் செய்யும் விதத்தையே பார்த்து, உள்ளே மகிழ்ந்திருப்பான். எ - று.

ஒருவன் சந்தனமாதிய பூசி யினமலர்மாலை புனையினு முனியா விழுத்துவை தடித்துவைத் துடலிற் பினைமலமாதி பூசினுமென்றதற்கு உதாரணம்: "வையினும் வாழ்த்தினு மலர்கொண்டேத்தினும்—வெய்யவரா விடைவீழ நூக்கினு—மெய்யினு மெறியினு மியாது செய்யினு—நைவொடு மகிழ்வில ஞானி சீலமே." எனவரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. (கசு)

தந்தைதாய் பலமா தியகொடுத் திடவுந் தக்கைபுண் செவியினுக்கிடவு, மைந்தவா வெனலுங் குதித்தெழுந் தோடி வருதல்போ குதல்செயு மகவி, னைந்தொழில் புரியு மெந்தையூழ் வழியீந் தருள்சுகமாதிய வருங்காற், சிந்தையுள் விழைந்து முற்செலா ரழிந்து பிற்செலார் மாசறத் தெளிந்தோர்.

எ - து. தந்தையும் தாயும் முப்பழ முதலிய பழங்களைக் கொடுக்கவும், புண்பொருந்திய செவிக்குத் தக்கையிடவும், மைந்தவாவென்று அழைத்தவுடனே குதித்தெழுந்தோடிவருதலும், குதித்தெழுந்தோடிப்போகுதலும், செய்யும் பிள்ளைபோல் பஞ்சகிருத்தியங்களையும் பண்ணுகின்ற எமது தந்தையாகிய இறைவன் ஊழ்வினைப்படியே கொடுத்தருளிய சுகதுக்கங்கள் வருமிடத்துச் சுகமென்று மனத்தின்கண் விரும்பி முன்சென்று பற்றார்; துன்பமென்று மனத்திடழிந்து பின்சென்றிடையார்; முக்குற்றங்களும் அற வேதாகமங்களைத் தெளிந்த பெரியோர். எ - று.

இவை யிரண்டுபாட்டாலும் தவத்தினர் சீவர்கண் முன்னிலையாகச் சுக துக்கங்கள் வந்தவிடத்து அச்சீவச்செயலாக

நாடாது சிவச்செயலாக நாடி விருப்பு வெறுப்பின்றிச் சமபாவனையோடு இருக்கவேண்டுமென்று கூறியவாறு காண்க. (கடு)

இத்தரை யிடைப்பா ழாயவா லயமற நிருண்மிகு முடுக்கரா நிகளிற், சுத்தமெய்த் தவரெப் பொழுதடைந் துறினுந் தோன்றுறா தச்சமங் கவர்பா, லத்தனிவ் வுடலைப் புரக்குஞான் றழிப்பா ரிலையவனேபினு மழிக்கின், வைத்திவண் புரப்பா ரிலையெனுந் துணிவு மனத்தினு ளிருத்தலி னன்றே.

எ - து. இந்தப் பூமியின்கண்ணே பாழ்ங்கோயில் இருண்மிகுந்த மலைக்கெவி முதலிய இடங்களிலே பரிசுத்தமாகிய சத்தியதவத்தோர் எக்காலத்திலே சென்றிருந்தாராயினும், அவ்விடத்திலே பாம்புமுதலியவற்றால் துன்பம் வருமென்று அவரது மனத்தின்கண்ணே பயம் தோன்றாது; இறைவன் தான்படைத்த இவ்வுடலைக் காக்குநாளில் அழிப்பார் ஒருவரும் இல்லை படைத்துக் காக்கும் அவனே பின்னரும் அழிக்குமிடத்தில் இந்நிலத்தின்கண் வைத்துக் காப்பார் ஒருவரும் இல்லை என்னும் நிச்சயம அவரது மனத்தின்கண்ணே இருத்தலினால். எ - று.

இதனுள்ளே பாழ்ங்கோயில் முதலிய விடங்களிலே ஏகாந்தமாயிருக்கும்போது இராக்காலங்களிலும் சிவசெயலை நாடிப் பயப்படாதிருக்கவேண்டுமென்று கூறியவாறு காண்க. (கசு)

ஊனையோம் புதல்கை விடுத்துனை யுவப்பா ருணர்வரென் றுளுடை நம்பி, தானுரைத் தமையா னுடல்விழைந் திடினத் தத்துவ நிலையுங்கை தவறி, யீனமார் பிறப்புற் றிடுவனேந் தொழிற்கு மிறையதி காரியென் றெண்ணு, ஞானமொன் றனையே தொடருமோர் புருட னண்ணுவன பாகதி திண்ணம்.

எ - து. ஊன்பொருந்திய உடம்பினைப் பாதுகாத்தல் கைவிட்டு உனது திருவடியை விரும்புவார் அதனை அறிவாரென்று என்னை ஆளாகவுடைய சுந்தரப்பெருமாளுயனார் ஓதினமையால், தான் உடலைப் பாதுகாத்தற்கு விரும்பிடின் அந்தப்

பரதத்துவ நிலைமையை அறியும் அறிவும் தன்னைவிட்டு நீங்கித் தன்னால் உடலைப் பாதுகாக்கக் கூடாமையால் அவ்வுடலும் நீங்கி மறுமைக்கண் இழிவுபொருந்திய பிறப்பினையும் அடைவ னாதலின் பஞ்சகிருத்தியத்துக்கும் இறைவனே அதிகாரியே யென்று அறிந்து இவ்வுடலை அவ்விறைவன் வசமாக ஒப்பித்து, ஞானமொன்றனையுமே விடாது பற்றும் ஒரு புருஷன் பரகதி யினை அடைவான் இது உண்மையாம். எ - று.

ஊனையோம்புதல் கைவிடுத்தனை யுவப்பாருணர்வரென்ற தற்கு உதாரணம்: தேவாரம். "தேனைக்காவல் கொண்டுவிண்ட கொன்றைச் செழுந்தாராய்—வானைக்காவல் கொண்டுநின்று ரறியா நெறியானே—யானைக்காவி லரனேபரனே யண்ணாமலை யானே—பூனைக்காவல் கைவிட்டுன்னை யுகப்பா ருணர்வாரே." எனவரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. (கஎ)

உள்ள துண்டாமற் றில்லதின் றெனவெண் காடரோ திடுதலி னுறுமூழ், தள்ளொணு மையினெவ் விதத்தினு முழைந்து தவம்புரி காலையூ னுயிரை, விள்ளல் செய்திடினு ஞானசா தகனுண் மேவுமவ் வாதனை யொடும்போய்த், தெள்ளிய போக முண்டுமீண் டடைவன் சிவமதுற் பவமதொன் றிரண்டில்.

எ - து. உள்ளது ஒளிப்பினும் உண்டாம் இல்லது ஒரு காலத்தும் இல்லையென்று திருவெண்காட நாயனார் ஓதுதலி னாலே பொருந்தாநின்ற ஊழ்வினையை யாவராலும் தள்ளக்கூடாமையால் தான் தவத்தினைப் பண்ணுங்காலத்தில் அந்தவூழ் வினை எந்த விதத்தாலாயினும் வந்து பொருந்தித் தன்னுடம்பி னையும் உயிரினையும் வேறுக்குதல் செய்தாலும் ஞானசாதகனா னவன் தன்னுள்ளத்தின்கண் மேவிய அந்தச்சுத்த வாதனையு டனே ஊர்த்தலோகங்களிலே சென்றிருந்து சுத்தபோகங்களை அனுபவித்துப் பின்னர் மீண்டும் பூமியின்கண் வந்து ஒருசன னம் இரண்டு சனனத்திலே பரிபூரண ஞானத்தைப் பெற்றுச் சிவத்தினை அடைவான். எ - று. (கஅ)

அருந்தவ விலக்கிவ் வுடற்பரிப் பதுதா னச்சமா திகடரு மூலர், திருந்துநஞ் சிந்தை சிவன்கணே யாவர் வரினுமென் றமையிற் பேதிப்பான், பொருந்தினும் வானோ ரெதிர்முதிர் கொலை வெம்பூதமா தியவளைந் திடினு, மிருந்ததஞ் சமாதி நிலை குலை யாதோ ரெண்ணிய வெண்ணியாங் கடைவர்.

எ - து. அரிதாகிய தவத்திறுக்கு மாறுபாடு இவ்வுடம்பி னைத் தாம் பாதுகாக்குதல் அதனால் பயம் ஆசை அபிமானம் முதலியன மனத்தின்கண் உண்டாமாதலில் தவத்தினுக்கு இடையூறு செய்தற்கு யாவர் வந்தாராயினும் நமது சிந்தை சிவ னது திருவடியின்கண்ணே திருந்தாநிற்குமென்று திருமூலநாய ஞர் கூறினமையால், மனத்தினைப் பேதிக்கும்பொருட்டுத் தமது எதிரே தேவர்கள் வந்தாராயினும், முதிர்ந்த கொலை யினைச் செய்கின்ற வெவ்விய பூதங்கள் முதலியவை வளைந்து கொண்டனவாயினும், தாமிருந்த சமாதி நிலைமை வழுவா திருந் தோர் தாம் எண்ணிய வீட்டின்பத்தினை எண்ணியவாறே அடைகுவார். எ - று.

இத்தரையென்னும் பாட்டுமுதல் இந்நான்குபாட்டாலும் தவத்தினோர்கள் தாம் உடம்பினைப் பாதுகாத்தல் கைவிட்டு இவ்வுடம்பினைப் படைத்த இறைவனே காத்தலும் அழித்தலும் செய்வான் அவனையன்றிப் பிறரொருவராலும் காத்தல் அழித் தல் செய்யக்கூடாதென்று அறிந்து அவ்விறைவன் செயலைநா டிப் பயமாதிகளின்றி ஞானசமாதி கூடவேண்டுமென்று கூறிய வாறு காண்க.

அருந்தவ விலக்கிவ் வுடற்பரிப்பதுதா னென்றதற்கு உதா ரணம்: தேவாரம். "நன்றுடம்பினைப் பெற்றவள் பங்கினன்— றென்கடம்பைத் திருக்கரக் கோயிலான்—றன்கடன்னடியேனை யுந் தாங்குத—லென்கடன்பணி செய்து கிடப்பதே." எ-ம். திருந்துநஞ்சிந்தை சிவன்கணே யாவர்வரினு மென்றதற்கு உதா ரணம்: திருமந்திரம். "இருந்து வருந்தி யெழிற்றவஞ்செய்யும்—

பெருந்தன்மை யாளரைப் பேதிக்க வென்றே—யிருந்திந்திரனே யெவரே வரினுந்—திருந்துநஞ் சிந்தை சிவனவஞ் பாலே." எ-ம். சமாதிநிலை குலையாதோர் எண்ணியவெண்ணியாங் கடைவரென்றதற்கு உதாரணம்: ஞானவாசிட்டம். "எனக்கீதென்னு மூணர்வுடைமை யிடர்விட்டகலா துணர்வின்மை—யனர்த்தமி ல்லாவீடளிக்கு மாசையேதிங் கதுசெய்வாய்—சனிப்பில்சிவ மெங் கணுமுளது சாந்தஞ்சுபஞ்சித் துருவென்னுங்—கனத்த விந்த வொருநிலைவே கருமத்தியாக மிராகவனே." எ-ம். வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. (கக)

தேவர்மா முனிவ ரசுரர்வா ளரக்கர் சித்தர்வித் தியாதரர் முதலோர், யாவரும் விரும்பிச் சித்திபுத் திகளுமெட்டுநிலை யச்சமா தியவுண், மேவுரு தகற்றித் தவம்புரிந் தடைந்தான் மேலதா மூலபண் டார, மோவற வவையே குடிகொளென் போனெஞ் சுடையரா லடையவும் படுமே.

எ - து. தேவர்களும் மகத்தாகிய முனிவர்களும் அசுரர்களும் இராக்கதர்களும் சித்தர்களும் வித்தியாதரருமென்று சொல்லாநின்ற இவர்கள் முதலியவர்களும் அஷ்டமாசித்திகளையும் மேலாகிய ஊர்த்தபோகங்களையும் விரும்புங்காலைப் பயம் ஆசை கோபம் அபிமானம் முதலியவை எண்மாத்திரமாயினும் மனத்தின்கட் பொருந்தாது மாற்றித் தவத்தினைப் பண்ணி அவற்றினை அடைந்தாராலல், அந்தச் சித்தி புத்திகளுக்கு மேலாயுள்ள வீட்டின்பமாகிய மூலபண்டாரத்தினை அந்தப்பயமுதலியவை தாமே விட்டு நீங்காது குடிகொண்டிருக்கின்ற எப்போதும் மனத்தினை யுடையவரால் அடையவுங் கூடுமோ. எ - று.()

ஒருவனுக் கிருளற் றுரியசிற் சொரூப முள்ளவா விளங்கினன் றறமிப், பருவர லுருவப் பற்றுமற் றதுநேர் படுமள விறைபுரி தருமைங், கருமமெவ் விடத்துங் கண்டுதற் செயலைக் கைவிடுத் தச்சமா தியவுண், மருவுரு தகற்றித் தவஞ்செயல் வழக்கால் வாழியெங் குரவனீ ழே.

எ - று. ஒருபுருஷனுக்கு அஞ்ஞானவருட்டு நீங்கித் தனக்குரிய ஞானசொரூபம் உள்ளபடியே விளங்குமாயின் இந்தத் துன்பம் செய்யாநின்ற தேகப்பற்று அன்றைக்கு நீங்கும். அந்த ஞானசொரூபம் தனக்கு நேராய்வந்து லபிக்குமளவும் இறைவன் செய்யாநின்ற பஞ்சகிருத்தியங்களை எவ்விடத்திலும் பார்த்துச் சீவச்செயலை விட்டுநீங்கிப் பயமுதலிய துர்க்குணங்கள் மனத்தின்கண்ணே பொருந்தாது மாற்றித் தவத்தினைச் செய்வதே முறைமையாம். எமது ஞானாசாரியன் நீடூழிகாலமும் வாழக்கடவன். எ - று. (கOக)

வைராக்கியதீபவுரை

முற்றுப்பெறறது.

உருவுகண் டெள்ளா துளர்கே
பொருணலந் தேராமு னுந்தீ பற
புன்சொல்கண் டெள்ளாரென் றுந்தீ ப

எ - து. ஒருவனது வடிவின்கண்ணே குறை உண்டாயி னும் அதனை நோக்கி இகழாது உள்ளத்தின்கண் உள்ள சிறப் பினை விசாரியா நிற்கிற உத்தமராயினோர் யாதொரு நூலினைக் காணுமிடத்தும் அதன்கண் உண்டாகிய பொருளினது நன்மை யைத் தேருதலின்முன்பே சொல்லின்கண்ணே குறை உண்டா யினும் அதனை நோக்கி இகழார். எ - று. சொல்லினது கருத் துப் பொருளாமாதலினெனக் கொள்க.

இந்நூற்குச் சொல்லின்கண்ணே குறை உண்டாயினும், பொருள் சுருதி குரு சுவானுபவசித்தமாகலின், குற்றம் உண்டா காதென்பது துணிவு. (ரு)

இந்நூலில் வீட்டுநெறி கூறுவான்றொடங்கி முதற்கண் அவ் வீட்டினது சிறப்புக் கூறுகின்றார்.

அறம்பொரு ளின்பம்வீ டாயவோர் நான்கிற்
சிறந்த பயன்வீடென் றுந்தீ பற
தேரின்வீ டேயெலா முந்தீ பற.

எ - து. தருமம் அருத்தம் காமம் மோக்ஷம் என்று அறிவு டையோர் அடையும் பயன்களாய் எல்லாநூல்களாலும் சொல் லப்படுமவையாகிய நான்கனுள்ளும், வீடு நிரதிசயமாதலால் சிற ந்த பயனை உடையது. அஃதன்றியும், தருமாதிகளுக்கு உள்ள இலக்கணங்களும் வீட்டிற்கே உளவாகலின் மாசறத் தேருங் காலே அந்நால்வகைப் பயன்களும் அவ்வீடேயாகும். எ - று. ()

அஃது எங்ஙனமேனில்.

தாங்குபற் றற்ற சகலத் தியாகத்தி
னோங்கு தருமமே துந்தீ பற
உள்ளது வீட்டிற்கஃ துந்தீ பற.

எ - து. ஒன்றிலும் தாக்கற்றுடைய சர்வசங்கபரித்தியாகத்தினும் உயர்ந்த தருமமே இல்லை; தருமமாவது பெரும்பான்மையும் தானந்தவமென்கின்ற இரண்டின் கண்ணே அடங்குதலின். மேலாய சிவத்தினிடத்தே உடல் பொருள் ஆவி மூன்றையும் சத்தியமாக ஒப்பித்து எவ்விடத்தும் தனது சுதந்திரத்துவம் தோன்றாமை நிற்றலின் இதற்கு மேலாகிய தானமும் இல்லை. அங்ஙனம் அது தோன்றாமல் நிற்போர்க்குச் சிவமேயொழியத் தானும் பிறரும் தோன்றாமையின் யான் செய்தேன் பிறர் செய்தார் என்னும் இதாகிதங்களிலே சிறிதும் உண்டாகாமையின் இதற்கு மேலாகிய தவமும் இல்லை. இவை வீட்டிற்கு உரியவாகலின், வீடே அறமும். எ - று.

இதற்குப பிரமாணம்: திருவாசகம். "அன்றே யென்றனாவியுமுடலு முடைமை யெல்லாமுங்—குன்றே யனையா யென்னையாட் கொண்டபோதே கொண்டிலையோ—வின்றோ ரிடையூறெனக்குண்டோ வெண்டோண் முக்க ணெம்மானே—நன்றேசெய்வாய் பிழைசெய்வாய் நானோ விதற்கு நாயகமே" எ-ம். அருட்பிரகாசம். "நிறைந்த பொருளொ டியாக்கைதம் மாவிமைய நீடருளா—னுறைந்த குருகரத் தேதத்தஞ் செய்தவற் றொன்றனையு—மறந்து மியானென தென்று நினைகழன் மன்னிநிற்குஞ்—சிறந்த சகலத் தியாகரி னோரறஞ் செய்தவரே." எ-ம். பரிபூரணசித்தி. "சகமென வுடலமென்னத் தருகரணங்களென்ன--வகமென விதமதென்ன வழிவில்போ கங்களென்ன--வகைபட வுயிர்கட் காதன் மாயையம் மாயை நீக்கிப்—புகலருமுத்திசேரு மவர்கள் புண்ணியத்தி னோரே." எ-ம். வரும். மற்றும் வருவனவற்றாற் காண்க. (ரு)

பொன்றாப் பொருளே பொருளென்பர் நல்லோர
தன்றிப் பொருளியா துந்தீ பற
அல்லன மாயையென் றுந்தீ பற.

எ - து. அழிவற்றபொருளே பொருளென்று கூறுவர் நல்லோர். முத்தியே நித்தியமாதலின், அஃதன்றிப் பொருளே

இல்லை. மற்றையவெவையும் அநித்தியமாகிய மாயாகாரியங்கள். எ - று.

இதற்குப் பிரமாணம்: திருக்கடைக்காப்பு. "செல்வ நெடுமாடஞ்சென்றுசே ணோங்கிச்—செல்வ மதிதோயச்செல்வ முயர்கின்ற—செல்வர்வாழ் தில்லைச் சிற்றம் பலமேய—செல்வன் கழலேத்துஞ் செல்வஞ் செல்வமே." எ-ம். திருவாசகம். "காலமுண் டாகவே காதல்செய் துய்மின் கருதரிய — ஞாலமுண் டானொடு நான்முகன் வானவர் நண்ணரிய—வாலமுண் டானெங்கள் பாண்டிப் பிரான்றன் னடியவர்க்கு—மூலபண் டாரம் வழங்குகின் றான்வந்து முந்துமினே." அன்றியும், "ஓடுங் கவந்தியு மேயுற வென்றிட் டுள்கசிந்து—தேடும் பொருளுஞ் சிவன் கழலே யெனத் தெளிந்து—கூடு முயிருங் குமண்டை யிடக் குனித்தடியே—னாடுங் குலாத் தில்லை யாண்டானைக் கொண்டன்றே." எ-ம். அஞ்ஞவதைப்பரணி. "என்றும் பொருவரிய வின்பப் பொருளுடையார்—பொன்றும் பொருளும் பொருளாகப் போற்றுவரோ." எ-ம். மோகவதைப்பரணி. "கொழுங்கனலோ வவிப்பதுவுங் கோபமெனுங் கொழுங்கனலே—வழங்குவது மழிபொருளோ மறைதேடும் வான்பொருளே." எ-ம். வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க.

பூரண மும்மாம் பொருவிலா னந்தக்கு
நேரியா தின்பம்வே றுந்தீ பற
நீங்காச சுகமதே யுந்தீ பற.

எ - து. முற்கூறிய நித்தியத்துவமுமல்லாமல் பரிபூரணமுமாயிருந்துள்ள ஒப்பற்ற நிரதிசயானந்தமே ஆனந்தம் அல்லது அதற்கு இணையாய் வேறே ஒரு இன்பமும் இல்லை. நித்தியமாகையால் காலத்தினாலும், பூரணமாகையால் தேசத்தினாலும், நீக்கமற்றுள்ளதாயிருக்கிற சுகமும் அதுவே. எ - று.

மற்றுள்ள மாயாபோகங்களெல்லாம் தோற்றமுடையனவாகையால் நாசமும், நாசத்தை அடைவதற்குமுன்னும் பரிச்சின்ன

மாகையால் நீக்கமும், நீங்குதற்குமுன்னும் பலவாய் உயர்ச்சி தாழ்ச்சியுடையனவாகையால் ஒன்றுக்கொன்று அதிசயமும், உடையனவாம்: ஆதலின், அவை துக்கமேயன்றிச சுகமல்லவென்பது கருத்து.

இ - ம். திருக்கடைக்காப்பு. "நிறைவெண் கொடிமாட நெற்றிநேர் தீண்டப் பிறைவந் திறைதாக்கும் பேரம்ப லத்தில்லைச் —சிறைவண் டறையோவாச சிற்றம் பலமேய—விறைவன் கழலேத்து மின்ப மின்பமே." எ-ம். திருவாசகம். "தினைத்தனையுள்ளதோர் பூவினிற்றே றுண்ணாதே—நினைத்தொறுங் காண்டொறும் பேசுந்தோறு மெப்போது—மனைத்தெலும் புண்ணெகவானந்தத் தேன்சொரியுங் குனிப்புடை யானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ." எ-ம். சிவானந்தமாலை. "துன்பமயக் காயிழிபொய்த் துட்டபந்த நோயதனை—யின்பமெனக் கொண்டிங் கிழந்தேனே - யன்பிலெழுந்—தோவாத மெய்யுணர்வா யுள்ளே நின் றுளளுருக்குந்—தாவாவா னந்தந் தனை." எ-ம். கலிமடல். "அருநான் மறைநூலொ டாகமநூன் மற்று முறைசான்ற நூலெல்லா மோதுகின்ற தோசிற் - பொருளுங்கே யந்நான்கும் பொய்மையற மெய்மை தெரிவார் தெரியுங்காற் றீங்கொன்று மேவா விருபா திகமென்றே நேரே தருமப் பொருளா வது மெனறும பொனறுப் பொருளே யிரியாத வின்பமே யின்பஞ்செனறெய்தற்—கரிதாய வீடு மதுவேயாய் நின்று - லுரையாடுவ தெல்லா மொன்றுய விளப்ப—பெருமானை யல்லவோ பேதமாய் வேறே—பொருளுடி நின்று புலம்புவோர்க் கரதப்—பரமானந் தத்தைப் பகரப் படுமே." எ-ம். வரும். மற்றும் வருவனவற்றுற்காண்க (எ)

ஆதலாற் பெற்ற வறிவாற் பெறும்பய
ஞேதும்வீ டேயென வுந்தீ பற
உண்மைநூல் யாவுமென் றுந்தீ பற.

எ - து. சர்வசங்க பரித்தியாகத்தின் எய்துவதாய் நித்திய பூரண நிரதிசயானந்தத்தையுடையதியாது அதுவே வீடுமாத

லின் ஒருவன் பெறுதற்கரிய பிறவியையும், அதிலும் பெறுதற்க ரிய நன்னூலுணர்வையும், பெற்றகாலையின் அங்ஙனம் பெற்ற வறிவாற் பெறும்பயனாவது வீடொன்றுமேயெனக் கூறுகிற்கும் அவர்கற்ற யதார்த்தமாகிய வேதாதிநூல்களனைத்தும். எ - று.

இ - ம். தேவிகாலோத்தரம். "பிறந்து பெற்ற வறிவாற் பெறும்பய—னிறைந்த நீர்முகி னீங்கிய வானென—வறிந்து தம்மை யமல வியாபகஞ்—செறிந்து நல்ல தியானத் திருத் தலே." எ-ம். திருவள்ளுவநாயனார். "கற்றதனா லாய பயனென் கொல் வாலறிவ—னற்றா டொழாஅ ரெனின்." எ-ம். திருமந் திரம். "முன்னைப் பிறவியிற் செய்த முதுதவம்—பின்னைப் பிறவியிற் பெற்றா லறியலாந்—தன்னை யறிவ தறிவாமஃ தன் றிப்—பின்னை யறிவது பேயறி வாமே." எ-ம். வரும். மற்றும் வருவனவற்றாற் காண்க. (அ)

மேல் வீட்டினைச் சாதிற்தற்கு ஏதுகூறுகின்றார்.

வீடுஞா னத்தன்றி மேலொரு தாகையாற்
கூடுவோ னந்தவாழ் வுந்தீ பற
கோதின்மெய்ஞ் ஞானியென் றுந்தீ பற.

எ - து. முத்திசாதனமாகிய சரியாதிநான்கனுள் ஞான மொன்றுமே முத்திசாதனமாம் மற்றையமூன்றும் ஞானத்திற் குச் சாதனமன்றி முத்திக்குச் சாதனமாகாமையால், அந்தமுத் தியாகிய பேரானந்தவாழ்வைக் கூடுமவன் குற்றமற்ற மெய்யுண ர்வையுடையோனே, மற்றையர் அல்லர். எ - று. குற்றமாவது ஐயந்திரிபெனக்கொள்க.

இ - ம். சிவஞானசித்தியார். "ஞானத்தால் வீடென்றே நான்மறைகள் புராண நல்லவாகமஞ், சொல்ல வல்லவா மென் னு—மூனத்தா ரென்கடவா ரஞ்ஞா னத்தா லுறுவதுதான் பந்தமுயர் மெய்ஞ்ஞா னந்தா—னானத்தா லதுபோவ தலர்கதி ர்மு னிருள்போ லஞ்ஞான மறப் பந்தமறு முத்தியாகு—மீனத் தார் ஞானங்க ளல்லா ஞான மிறைவனடி ஞானமே ஞான

மென்பர்." எ-ம். திருமந்திரம். "ஞானத்தின் மிக்க தவநெறி காட்டில்லை—ஞானத்தின் மிக்க சமயமு நன்றன்று—ஞானத்தின் மிக்கவை நன்முத்தி நல்காவான்—ஞானத்தின் மிக்கார் நரரின்மிக் காரே." எ-ம். பிரபுலிங்கலீலை. "உரைசெயிற் பரமஞான மொன்றுமே முத்திக் கேது—சரியைநற் கிரியை யோகந் தாமொரு மூன்று ஞான—மருவுதற் கேது வென்றே மறைபுகன் றுரைக்கு மிந்தக்—கருவியைப் பொருளென் றெண்ணிக் களிப்பவர் கயவ ரன்றே." எ-ம். வரும். மற்றும் வருவனவற் றுற் காண்க. (க)

மெய்யுணர்வுடையோனது இலக்கணம் யாதெனின்.

யானென தென்செருக் கீர்த்த மகனேமெய்ஞ்
ஞானியென் றோதிய வுந்தீ பற
நான்மறை யாதிய வுந்தீ பற.

எ - து. யானென்றும் எனதென்றும் இந்நிலைக்கட் கூறப்படுவதாகிய மயக்கத்தினை அறுத்துள்ள புருஷன் யாவன் அவனே மெய்யுணர்வுடையோனென்று கூறுநிற்கும் வேதமுதலிய பலகலைகளும். எ - று.

இ - ம். திருவள்ளுவநாயனுர். "யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்—குயர்ந்த வுலகம் புகும்." எ-ம். திருவாய்மொழி. "நீர்நும தென்றிவை—வேர்முதன் மாய்த்திறை—சேர்மி னுயிர்க்கது—நேர்நிறை யில்லே." எ-ம். பிரபுலிங்கலீலை. "யானென தென்ப திருந்திடு காறு—ஞான முறுனது நண்ணிலனுயிற்—றுனிலை யாத சகந்திகழ் கிற்குந்—தீனமிலாத சிவந்திகழாதே." எ-ம். வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. (க0)

யாதினையாதினையானென தென்பதென்னின்.

தேகாதி நான்கனுட் டேக கரணங்க
ளாகு மியானென்ப துந்தீ பற
வலமற் றெனதென்ப துந்தீ பற.

எ - து. இந்நிலைக்கண் உயிர்களுக்கு மாயையினுண்டாகிய தனுகரண புவன போகங்கள் நான்கினுள்ளும் தனுகரணங்கள் யானென்றும், புவனபோகங்கள் எனதென்றும், சொல்லப்படும். எ - று.

தனுவென்றது தேகத்தை. கரணமென்றது அந்தக்கரண புறக்கரணங்களை, புவனமென்றது பூ பூதாதிப் பிரபஞ்சத்தை. போகமென்றது சத்தாதிவிடயங்களை. இவற்றுள் கரணங்கள் தனுவுக்கு அபேதமாயும், புவனங்கள் போகத்துக்கு அபேதமாயும், நிற்கையால், தேகபோகமென்றிரண்டாகவும் சொல்லப்படுமெனக் கொள்க. (கக)

தனுகரணங்கள் ஸ்தூலமாய் அசித்தாய் அநித்தியமாய் உள்ளன; ஆன்மா சூக்ஷுமமாய்ச சித்தாய் நித்தியமாய் உள்ளது; இவைகள் ஒன்றுக்கொன்று மாறுபாடாதலின், உயிர்களுக்குத் தனுகரணங்களை யானென்னும் ஐக்கியாத்தியாசம் எங்ஙனம் கூடிற்றென்னில்,

அழிதேக மன்னுயிர்க் கன்னிய மேயேனும்
பழமோகத் தால்யானென் றுந்தீ பற
பற்றுமை யொற்றுமை யுந்தீ பற.

எ - து. அநித்தியமாகிய சரீரம் நிலைபேறுடைய உயிர்களுக்கு விசாதியமேயாயினும் உயிர்கள் உள்ளவன்றே உண்டாய் அநாதியாயிருந்துள்ள அஞ்ஞான சம்பந்தத்தினாலே சிறியவிளக்கமாய் நிற்கின்ற தனுவாதிகளைத் தானென்று அபிமானித்த பிராந்தியே ஐக்கியம். எ - று. (கஉ)

ஒருவனுக்குத் தேகத்தை நானென்னும் அகப்பற்றாகிய அகங்காரப் பிராந்தியை நீக்குதற்கு உபாயம் யாதென்னின்,

விறகா ரழல்போலு மின்னூர்பொன் னாதி
யுறுகாறு மந்தமை யுந்தீ பற
உள்ளக்கண் மாறுதென் றுந்தீ பற.

எ - து. புறப்பற்றாகிய பெண் பொன் முதலிய பொருள்கள் சூழ்ந்துள்ளவளவும் முற்கூறப்பட்ட அகப்பற்றானது விறகுபெற்ற தழல்போல் முறுகுவதல்லது ஆத்துமாவிடத்து நீங்காது. எ - று.

இ - ம். தேவிகாலோத்தரம். "மூணைய பற்றி முழங்கி யெழுங்கன—லீண்டு காட்ட மிலதே விலதாகும் - நீண்டு மப்பொருளின்றெனிற் சித்தமு—மாண்டு தோற்ற மிலதாய் மடிந்திடும்." எ-ம். திருவள்ளுவர். "அடல்வேண்டு மைந்தன் புலத்தை விடல்வேண்டும் -வேண்டிய வெல்லா மொருங்கு" எ-ம். வரும். மற்றும் வருவனவற்றாற் காண்க. (கக.)

வேரினைக் களையிற் கொடிமுதலிய வாடுதல்போலும் யானென்னும் அகப்பற்றை முன்பு நீக்கின் அதன் சார்பாகிய புறப்பற்றுத்தானே நீங்கிவிடும். இஃது ஒழிந்து புறப்பற்றை முன்பு நீக்கின் அதனால் அகப்பற்று ஒழியுமென்பது விருத்தமாகையால் அது கூடாதென்னின்.

நீக்காமுற் சூழ்காடு நீடெயிற் கொள்ளொணு
போக்கார் புறப்பற்றே லுந்தீ பற
போமோ யகப்பற்றென் றுந்தீ பற.

எ - து. சூழ்ந்துள்ள காட்டை வெட்டி வெளிசெய்யாவிடத்து நிலைபெற்று நடுநின்ற எயிலைக் கவருதல் கூடாது: அதுபோல் எனதென்னும் புறப்பற்றை நீக்காராயின் யானென்னும் அகப்பற்று ஒழியாது. எ - று.

இ - ம். அஞ்ஞவதைப்பரணி. "சுற்றமொ டுற்ற துவந்துவமெல்லா—மற்றவர் தம்மொடு மற்றவர் தாமே." எ-ம். "கதறிய வாழியாறி யாடுதல் கருதினர் யாவர்தா மியாவையு—முதறியரூத போது நாடொறு மொழுக விடாத வாரவாரமே." எ-ம். "கழிய நிலாதபோது சேறது கழுவி யிலாப மேதி யாவையு—மொழிய நிலாதபோது மாசற வுதற வொணுது பாச மூடுமே." எ-ம். வரும். மற்றும் வருவனவற்றாற் காண்க. (கச)

ஒருவன் புறப்பற்று நீக்கியமாத்திரத்து அவனுக்கு அகப்பற்று ஒழியுமோவெனின்.

புறப்பற் றெலாந்தூரப் போக்கிமீட் டெண்ணா
துறப்பற்றின் மெய்யுணர் வுந்தீ பற
ஓடு மகப்பற்றென் றுந்தீ பற.

எ - து. யாதென்னும் பொருள்களனைத்தையும் ஒரு சற்றுமா தாக்காது தூரத்திலே போவனவாகக் கைவிட்டு அவ்வாசனையும் மனத்தின்கண்ணே தோன்றாமலொழித்துத் தன்னுண்மைக்கண் முறுகப்பற்றி நிற்கின், சுவடுந்தோன்றாமல் நீக்கும் அகப்பற்று. எ - று. தூரப்போக்கியென்றது விட்டபொருளின் நாமரூபங்கள் மீண்டும் தனதிந்திரியங்களுக்கு விடயமாகாமையெனக்கொள்க

புறப்பற்றெல்லாம் நீக்கவேண்டுமென்பதற்குப் பிரமாணம்: திருவள்ளுவர். "இயல்பாகு நோன்பிற்கொன் றின்மை யுடைமை—மயலாகு மற்றும் பெயர்த்து." மற்றும் வருவனவற்றாற் காண்க. அவற்றினைத் தூரப்போக்கி மீண்டும் அவ்வாசனையும் தோன்றாமை அடக்கவேண்டுமென்பதற்குப் பிரமாணம்: ஒழிவிலொடுக்கம். "கரையடுக்க வந்தாற் றிரையலைக்குங் கப்பல்—பொருளடுத்தாற் றோன்றும் பொய்ப்போதம் - விருதினவன்—வெற்றிக் குழிகுதித்தோன் போல்வேண்டும் விட்டதுபின்—பற்றுமதிற் சிக்கென நிற்பாய்." மற்றும் வருவனவற்றாற் காண்க. மெய்யுணர்வின்கண் முறுகப்பற்றி நிற்கின் அகப்பற்றொழியு மென்பதற்குப் பிரமாணம்: திருவள்ளுவர். "பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப் — பற்றுக பற்று விடற்கு." எ-ம். தேவாரம். "விறகிற்றீயினன் பாலிற் படுநெய்போன்—மறைய நின்றுளன் மாமணிச் சோதியா—னுறவு கோனட்டுணர் வுகயிற்றினான்—முறுக வாங்கிக் கடையமுன் னிற்குமே." எ-ம். ஞானவாசிட்டம். "மோக வற்சநா பிக்கொடி முளைத்தெழு மூலஞ்—சோகமாசுண மிருந்தர சாள்வதோர் சூழ—லாக மேமுதல்

யானென தென்னு மஞ்ஞான — மேகமாகிய பராபரந் தோன் றிற விறக்கும்." எ-ம். சிவஞானசித்தியார். "யான்செய்தேன் பிறர்செய்தா ரென்னதியா னென்னு மிக்கோட்டை ஞானவெரி யால் வெதுப்பி நிமிர்த்துத்—தான்செவ்வே நின்றிடவத் தத்து வன்ற னேரே தனையளித்து முன்னிற்கும் வினையொளித்திட் டோடு—நான்செய்தே னெனுமவர்க்குத் தானங்கின்றி நண்ணு விக்கும் போகத்தைப் பண்ணுவிக்குங் கன்ம — மூன்செய்யா ஞானந்தா னுதிப்பி னல்லா லொருவருக்கும் யானெனதிங் கொழியாதன்றே." எ-ம். மற்றும் வருவனவற்றாற் காண்க. ()

அகப்பற்றை ஒழித்தற்கு மெய்யுணர்வே காரணமாயின் அதனை எவ்விதத்தாலும் சாதித்தல் வேண்டுமென்னுது முன்பு புறப்பற்றை நீக்கிப் பின்பு சாதித்தல் வேண்டுமென்பானே னெனின்.

வேண்டா துறத்தலே மெய்யுணர் வென்பதொன்
றீண்டிடை யூறதற் றுந்தீ பற
எய்துமே யில்லையென் றுந்தீ பற.

எ - து. மெய்யுணர் வென்பது ஒரு பரமகேவலப்பொ ருள்; இவ்விடத்து இல்வாழ்க்கையோடு கூடியிருக்கவும் ஓரிடை யூறின்றி ஒருவனாலே சாதிக்கப்படுமாயின், அவன் இல்வாழ்க் கையைத் துறக்கவே வேண்டாம். எ - று. (கக)

ஆயின், இல்வாழ்க்கையை நீங்காவிடத்து மெய்யுணர்வு இடையூறின்றித் தலைக்கூடாதோவெனின்.

குடும்பபா ரந்தலைக் கொண்டவர்க் கல்லல்
விடும்பரி சின்மையா லுந்தீ பற
மெய்யுணர் வெங்ஙனமுந்தீ பற.

எ - து. தாய் தந்தை மனை மக்கள் சுற்றமென்னுங் குடும்ப த்தைத் தனதென்றும், அவற்றினைத் தாங்கும் அதிகாரமுடை யோன் தானென்றும், அபிமானம்பூண்ட ஒருவன் அக்குழாங்

களோடும் கூடி நுகர்தற்கு விஷய சுகங்களைத் தேடுதலாலும், அவை பொருளினாலன்றி வாராமையின் அப்பொருளைத் தேடற்கு முயலுதலாலும், அங்ஙனம் முயலுமிடத்து 'அவற்றிற்கு வரும் இடையூறுகளை நீக்கவேண்டுதலாலும், அவ்வாறு கூட்டப்பட்ட பொருளுக்குப் 'பிறரால் அழிவு வாராமல் காத்தலாலும், அப்பொருளினைக் காலதேசங்களறிந்து நுகருதலாலும், அக்காலையில் தமது குழாங்களுக்கும் தமக்கும் வரும் தாபத்திரயங்களை நோக்கி வருந்துதலாலும், இவை முதலிய அல்லல்கள் அனந்தம் இடையறாது சூழ்தலின், அவற்றினை நீக்கிச சற்குருவை அடைந்து நித்தியாநித்தியப் பொருள்களைக் கேட்டுச சிந்தித்துத் தெளிகுதலே கூடாது கூடினும், தனனுண்மைக்கண் ஒருகணமேனும் நிட்டாபரனாய்ச் சித்தசலனம் அற்று இருத்தல் கூடாது. அஃது ஒருகாலையிற் கூடினும், கூடியவுணர்வு முதிர்வளவில் ஓரோரிடையூறுகளால் சித்தசலனம் பிறந்து மெய்யுணர்வு நீங்கிவிடும். அது நீங்கவே, அகப்பற்றும் அவனுக்கு நீங்காது. எ - று.

இ - ம். திருவள்ளுவர். "பற்றி விடாஅ விடும்பைகள் பற்றினைப்—பற்றி விடாஅ தவர்க்கு." எ-ம். திருககடைக்காப்பு. "தந்தைதாய் தன்னுடன் றோன்றினார் புத்திரர் தாரமென்னும்--பந்தனை காதவர்க குய்ந்துபோக கில்லெனப் பறறினையே—வெநதீ றுடியா ராதியார் சோதியார் வேதகீத—ரெநனைதயா றூர் தொழு துய்யலா மையல்கொண் டஞ்சனெஞ்சே.' எ-ம். தேவாரம். "பழகினால் வரும் பண்டை சுற்றமும் —விழவி டாவிடின் வேண்டிய தெய்தொணா—திகழ்கொள் சேறையுட் செந்நெறி மேவிய—வழக நருள ரஞ்சுவ தென்னுக்கே." அன்றியும், "அருத்த மும்மனை யாளொடு மக்களும்—பொருத்த மில்லை பொல் லாதது போகட்டுக்—கருத்தன் கண்ணுத லண்ணல் காட்டுப்பள்ளித்—திருத்தன் சேவடியைச்சென்று சேர்மினே." எ-ம். திருப்பாட்டு."பதியுஞ்சுற்றமும் பெற்ற மக்களும் பண்டையார்கல்ல பெண்டிரு—நிதியு மிம்மனை வாழும வாழ்க்கை நினைப்

பொழிமட நெஞ்சமே—மதியஞ் சேர்சடைக் கங்கை யானிட மகிழ மல்லிகை சண்பகம்—புதிய பூமலர்ந் தெல்லி னறும் புற ம்ப யந்தொழப் போதுமே." எ-ம். திருவாசகம். "தாமே தமக் குஞ் சுற்றமுந் தாமேதமக்கு விதிவகையும்—யாமா ரெமதார் பாசமா ரென்ன மாய மிவை போகக்—கோமான் பண்டைத் தொண்டரொடு மவன்றன் குறிப்பே குறிக்கொண்டு—போமா றமையின் பொய்நீக்கிப் புயங்க னாள்வான் பொன்னடிக்கே." எ-ம். பட்டணத்துப்பிள்ளையார். "திருவடி பிடித்து வெருவரல் விட்டு—மக்களு மனையு மொக்கலுந் திருவும்—பொருளென நினையாதுன் னருளினை நினைந்து." எ-ம். கந்தரனுபூதி. "வளை பட் டகைமா தொடுமக் களெனுந்—தளைபட் டழியத் தகுமோ தகுமோ—கிளைபட் டெழுசூ ருரமுங் கிரியுந்—துளைபட் டுரு வத் தொடும்வே லவனே." எ-ம். திருவாய்மொழி. "கொண்ட பெண்டிர் மக்களுற்றார் சுற்றத்தவர் பிறரும்—கண்டதோடு பட் டதல்லாற் காதன்மற் றியாதுமில்லை—யெண்டிசையுங் கீழுமேலு முற்றவு முண்டபிரான்—றொண்ட ரோமா யுய்யி னல்லாலில்லை கண்டீர் துணையே." எ-ம். தத்துவராயர். "தந்தையொடு தாய் மைந்தர் முன்பினுடன் வந்தார் தாரமொடு பேரரிகு கூருமுற வாரும்—பந்தமென வேவந்த தொந்தமிவை யொன்றிற் பட்ட தல காணுமிவை விட்டுவிடுநேரா—வந்தமுத றனன்றி யென் றுமுள தானே யண்டமுத லாயன்றி நின்றபொருளுமா—விந்த வுல கேவந்து தந்தருளுமாறு தெந்தைசொரு பானந்த னென்று மொழியீரே." எ-ம். சிவதருமோத்தரம். "மண்ணினுந் தனத் தினு மனைக்கு வாய்த்தநற்—பெண்ணினு மகவினும் பெரியபே ரினுந்—தண்ணென விழைவினைத் துறந்த தூயரே—விண்ணி னுமின்புடன் விளங்கி மேவுவார்." எ-ம். ஞானவாசிட்டம். "தார தன மிகுமென்னிற் றனைபாகு மப்பாசந் தளைத்துக் கொண்டா—லாரதனையறுத்தகலும் வீரருடையா ரறிவிலா ராசைவிஞ்சிக்—கூரிதய மப்போகத் தழுன்றுழக்குங் கொடுந்துயரைக் குறித்த போதே-தீரதையா மறிஞருக்கு விரத்திபுள தாய்ச்சித்தந் தெளி

புமன்றே." எ-ம். பரமார்த்ததரிசனம். "இறவா வகைதன் னுள் ளத்தை யடக்கு மவனே தனக்கென்று—முறவாயுள்ளா னல்லா தார் தமக்கே பகையா யொழுகுவார்—துறவா தொழுகுந் துவந் துவங்க டெறந்தோன் றனையே தொடர்ந்த வன்பான் — மறவா தெழுந்த மெய்யறிவிம் மாயை மறைக்க மறையாதால்." எ-ம். அமுதசாரம். "மடம்படுமிப் பிறவி மாற்ற நினைவார்க்—குடம்பு மிகையென் றுணர்வுற் - றடங்கத்—துறவா மனிதர்க் கெளித ன்றோ அஞ்சிப்—பிறவா நெறியைப் பெற." எ-ம். ஞானசூரி யன். "உடலை யொண்பொரு ளினையுல கியல்பினை யுயர்குல நெறிதன்னை — யடையு மைந்தர்தாய் தந்தைநன் மனையெனு வறைதரு மவர்தம்மை—விடவி கழ்ந்திறை கழலிணை மருவிய விமலர்தங் களையெல்லா—முடைய நன்குறு மொழிமறை முனி வர்க ளுரைப்பராத் தர்களென்றே." எ-ம். நாலடி. "துன்பம் பலநா ளுழந்து மொருநாளை—யின்பமே காமுறுவ ரேழையா - ரின்ப—மிடைதெரிந் தின்னாமை நோக்கி மனையா—றடைவொ ழிந்தா ரான்ற மைந்தார்." எ-ம். சிவானந்தமாலை. "உடம்பு மனைவிமக வுற்றாரோ டோர்கே—ளடைந்த தனம் வீடடிமை காணி - தொடர்ந்தவிவை — யென்னவெனுஞ் சொன்னினைவு போனு லிறையருளான்—மன்னிய வனைப்பெறுமான் மா." எ-ம். ஒழிவிலொடுக்கம். "நாடுநகர் வீடுடையா டாய்தந்தை நட் புமக்கண்—மாடுகுலம் பொன்னுடன்பின் வாதனைகள்-கூடத்— தொடுத்தவலைக் கண்ணித்தொடக்கிதை யிப்போது—விடப்பெ றுவா ரேன்பிறப்பார் மேல்." எ-ம். வரும். மற்றும் வருவனவற் றுற்காண்க. (கஎ)

ஆயிற் குடும்பசகிதராய் நின்று மெய்யுணர்வடைந்தோர்கள் இலரோவெனின்.

கற்றழீஇ முந்நீர் கடந்தோரு முண்மையா
னிற்றழீஇ மெய்யுணர் வுந்தீ பற
வெய்ந்தோரு மில்லெனு ருந்தீ பற.

எ - து. கல்லைப் புணையாகத் தழுவிக்கொண்டு சமுத்திரத்தைக்கடந்தோரும் ஒருவருண்டாகையால், மனைவாழ்க்கையைத்தழுவி நின்றுகொண்டு மெய்யுணர்வை அடைந்தோரையும் இல்லையென்று சொல்லார்கள் பெரியோர்கள். எ - று.

எனவே அந்நிலைக்கண் மெய்யுணர்வை அடைதல் அரிதென்றது எனக்கொள்க. அங்ஙனங் கடல்கடந்தவர் அப்பமூர்த்திகள். (கஅ)

ஆயின் எல்லார்க்குந் துறவடைகுதல் கூடுமோவெனின்.

எல்லோர்க்குங் காலன் றுறவீவ னீயாமு
னல்லோர் துறப்பர்தா முந்தீ பற
நன்றறி வார்களென் றுந்தீ பற.

எ - து. ஆண் பெண் அலியென்று கூறப்பட்ட அனைவர்க்கும் யமன் சடிதியிலே பற்றொழிவு கொடாநிற்பன்; அவன் வந்து சரீரங்கைக்கொளுஞ் செய்வதற்கு முன்னம் தாமே அச்சரீரத்தின் கண்ணே பற்றொழிந்து அதன் சார்பாகிய புறப்பற்றையும் கைவிட்டு மெய்யுணர்வடைவோரே நன்மையினையுடையராவர். அவரே தமக்கு உறுதியாயின அறிவார். எ - று.

இ-ம். சித்தாந்தகாரணம். "எல்லோர்க்குங் காலன் றுறவீவ னீந்தபிற்கேள்—பல்லோரு மாய்ந்தமனைப் பாலுடலை-யொல்லையினில்—வைப்பர் சமாதியிந்த வாறவர்செ யாமுனலோ—ரப்பரிசே தாம்புரிவ ரால்." எ-ம். வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. (கக)

துறவடைந்தோர் அடைந்த மாத்திரத்திற்செய்யும் கருமம் யாதென்னின்.

இருமையுண் மைவல்லோர்க் கிம்மெய்கொண் டம்மெய்
விரவினுய்க் தெய்தலே யுந்தீ பற
வேலையா சானையுற் றுந்தீ பற.

எ - து. ஒரு மெய்யென்னும் பெயரினையுடைய சரீரத்தி னது அசுத்தமும் அஃது அளவற்ற துக்கத்தோடும் அவதி அறி தற்கு அரிய அநித்தியத்தோடும் கூடியிருத்தலையும் மற்றுமொரு மெய்யென்னுமியல்பினையுடைய வீட்டினது பரிசுத்தமும் அத னது நிரதிசயானந்தமும் நித்தியத்தன்மையும் அந்த வீட்டினை அடைவதற்கு இந்தச்சரீரம் இன்றியமையாமையும், சென்மாந்த ரத்திலேசெய்த தபோபலத்தால் இந்தச் சரீரம்பெற்ற அருமை யும், பிரத்தியக்ஷத்தினாலும் வாக்கியத்தினாலும் கண்டும், கேட் டும், அறிந்துளோர்க்கு இந்தச்சரீரம் நீங்குவதற்கு முன்பே அநாசாரியனை நீங்கி ஞானாசாரியனை அடைந்து அதிசீக்கிரத்தில் வீட்டு நெறியை விசாரித்து நிட்டை கூடுதலே கருமம். எ - று.

இந்தத்தேகம் அசுத்தமும், துக்கமும், நிலையாமையும், உடையதென்பது பிரத்தியக்ஷமாயினும், பெத்தான்மாக்களிமி த்தம் புராதனர் கூறியிருத்தலின் வாக்கியப்பிரமாணமும் காட் டுதும்.

தேகமிழிவுடையதென்பதற்குப் பிரமாணம்: திருக்கடைக் காப்பு. "என்பினாற்கழி நிரைத்திறைச்சி மண்சுவரெறிந்திது நம் மில்லம்—புண்புலா னறுதோல் போர்த்துப் பொல்லாமையான் முகடு கொண்டு—முன்பெலா மொன்பது வாசலார் குரம்பை யின் மூழ்கிடாதே—யன்பனூர்தொழு துய்யலாமையல்கொண் டஞ்சனெஞ்சே." எ-ம். திருப்பாட்டு. "உதிரநீ ரிறைச்சிக் குப்பை யெடுத்தது மலர்க்குக் கைம்மேல்—வருவதோர் மாயக் கூரை வாழ்வதோர் வாழ்வு வேண்டேன்—கரியமா லயனுந் தே டிக் கழலிணை காண மாட்டா—வரியனாய் நின்ற வாரூ ரப் பனே யஞ்சி னேனே." எ-ம். திருவாசகம். "பொத்தை யூன்சு வர் புழுப்பொதிந் துளுத்தசும் பொழுகிய பொய்க்கூரை—யித் தை மெய்யெனக் கருதிநின் றிடர்க்கடற் சுழித்தலைப் படு வேனை—முத்து மாமணி மாணிக்க வயிரத்த பவளத்தின் முழுச் சோதி—யத்த னாண்டுதன் னடியரிற் கூட்டிய வதிசயங் கண் டாமே." எ-ம். சிவதருமோத்தரம். பொற்கடத்துண் மலம்பொ

ருந்திற் புல்லியரும் !பொருணசையா—லக்கடத்தைப் பற்றி யெடா ரங்கையிஞ லவணிதனின்—மக்கடம துடலினைத்தா மலபாண்ட மெனவறிந்து—மெக்கணக்கா விகழாதே யருவரு ப்பற் றிருக்கின்ருர். எ-ம். "அடுத்தவை யூத்தை யாக்கு முடம் பைநல் லறிவாற்ருேலே - விடுத்துளே வேறு வேரு நரம்பினே டிறைச்சி யென்பாற்—ருெகித்தவிம் மாலை தன்னைத் தூய்தி ன்மை நோக்கித் துன்ப—மெடுத்தவிக் காமபாச மெறிகிலா ரென்னே யென்னே." எ-ம். மற்றும் வருவனவற்றுற் காண்க.

தேகம் துன்பமுடையதென்பதற்குப் பிரமாணம்: சிவான ந்தமாலை. "இருவகையா மான்மிகமிக் காயத்தி னெஞ்சின்—வருமவைதா ஞேதக்கேண் மனுப்-பொருவரிய—குன்மமதிசா ரம் வெப்புக் கொடுஞ்சூலை—யன்னபிற வின்னங்கே ளாய்." அன்றியும், "மக்களொடு துட்ட மிருகம்பேய் வன்பசுநற்—பக்கி பறிப் போரசுரா பற்பலவுந் - தொக்கிலுறல்—சோகமசூயை யபிமான மாற்சரிய—மாருபல வுள்ளுறநோ யாம்.'' அன்றியும், "சீதமுடன் வெம்மை செறிந்து மிகச்சலிக்கும்—வாத மழைத்டி த்து வானிலிடி - தீதிற்—கெளரியொரு பாகன் கருணையிஞ லாகும் பௌதிகமீ தென்றே பகர்." அன்றியும், "கருவா யுத ரத்திற் கட்டுண்டன் மண்ணி—லுருவாகி யுற்பவித்த லோங்க - னரைதிரைதான்—மைவிரவுஞ் ஞான மரணநர கஞ்சனனந்— தெய்விக மீதென்றே தெளி." எ-ம். சிவதருமோத்தரம். "அன்னைதன் வயிற்றிடை யனேக துன்பமே—பின்னையும் பிற ப்புழிப் பெரிது துன்பமே—தன்னைய ரறவுரை தரிக்கத் தாதை யோர் -சொன்னவில் குரவனுஞ் சுளியத் துன்பமே." அன்றி யும், "காலையு மலத்திஞற் கடிது துன்பமே—சாலவும் பசியி ஞற் றளர்வ ருச்சியின்--மாலையிற் காமமு மலியவாடுவர்—வேலை கடொறுமிடர் விளையும் விஞ்சியே." எ-ம். தத்துவாமிர்தம். "பிணிகளுங் கவலையும் பேசி னேழ்கட—லணைதரு மணலினு மனந்தகோடியா—விணைதரும் பிறவியி லிடரலாதொரு—

கணமது மிலதெனக் கண்டு னொந்தனன்." எ-ம். வரும். மற்றும் வருவனவற்றாற்காண்க.

தேகமநித்தியமென்பதற்குப் பிரமாணம்: திருவள்ளுவர். "நெருந லுளனொருவ னின்றில்லை யென்னும்—பெருமை யுடைத்திவ் வுலகு." எ-ம். திருக்கடைக்காப்பு. "தந்தையார் போயினார் தாயரும் போயினார் தாமும் போவார்—கொந்தவேல் கொண்டொரு சுற்றத்தார் பார்க்கின்றார் கொண்டுபோவா—ரெந்த நாள் வாழ்வதற்கேமனம் வைத்தியா லேழைநெஞ்சே—யந்தணாரூர்தொழு துய்யலா மையல்கொண் டஞ்ச னெஞ்சே." எ-ம். தேவாரம். "நடலை வாழ்வுகொண் டென்செய்தீர் நாணிலீர்—சுடலை சேர்வது சொற்பிர மாணமே—கடலி னஞ்சமு துண்டவர் கைவிட்டா—லுடலி னார்கிடந் தூர்முனி பண்டமே" எ-ம். திருப்பாட்டு. "பரிந்த சுற்றமு மற்றும்வன் றுணையும் பலருங் கண்டழு தெழவுயி ருடலைப்—பிரிந்து போம்பொழு தொசசய மறிந்தாற் பேதை வாழ்வெனும் பிணக்கினைத் தவிர்ந்து—கருந்தடங் கணி பங்கனை யுயிரைக் கால காலனைக் கடவுளை விரும்பிச்—செருந்தி பொன்மலர் திருத்தினை நகருட் சிவக்கொழுந்தினைச் சென்றடை மின்னே" எ-ம் கந்தரனுபூதி. "கூகாவென வென்கிளை கூடியழப்—போகாவகை மெய்ப்பொருள் பேசியவா—நாகா சலவே லவநா லுகவித்—தியாகா சுரலோக சிகாமணியே." எ-ம். கந்தரலங்காரம். "கூர்கொண்ட வேலனைப் போற்றாமலேற்றங்கொண் டாடுவீர்காள்—போர்கொண்ட காலனுமைக் கொண்டு போமன்று பூண்பனவுந்—தார்கொண்ட மாதரு மாளிகை யும்பணச் சாளிகையு—மார்கொண்டு போவரை யோகெடுவீர்நும் மறிவின்மையே." எ-ம். பட்டணத்துப்பிள்ளையார்பாடல். "வினைப்போக மேயொரு தேகங்கண் டாய்வினை தானொழிந்தாற்—றினைப்போ தளவுநில் லாதுகண்டாய் சிவன் பாதநினை—நினைப்போரைமேவு நினையாரை நீங்கிந்நெறியினின்று—வினைப்போ லொருவருண் டோமன மேயெனக் குற்றவரே." எ-ம். திருவாய்மொழி. "மின்னி னிலையிலிம்—மன்னுயி ராக்

கைக—ளென்னு மிடத்திறை—யுன்னு மினீரே." ஞானவாசிட டம். "நிதியுமர சுஞ்செயலு மிவ்வுடம்பும் வேண்டுவது நிற்கி னன்றோ—விதியில் வருங் காலனுலிவை யெல்லாஞ் சிலநாளில் வீந்து போகு—முதிரமொடு தசையுடைத் தாயுடை வதியல் பாய்த்தாழ்ந்தோ ருயர்ந்தோ ரொத்த—வதிகசரா மரணமுறுந் தரமறியா ரிவ்வுடலி னழகென் கொல்லோ." எ-ம். நாலடியார். "புன்னுனிமே னீர்போ னிலையாமை யென்றெண்ணி—யின்னினி யே செய்க வறவினை - யின்னினியே—நின்று னிருந்தான் கிடந்தான்றன் கேளலறச்—சென்று னெனப்படுத லால்." எ-ம். சிவஞானசித்தியார். "கருவினு ளழிவ தாயுங் கழிந்திடா தழிவ தாயும்—பரிணமித் தழிவ தாயும் பாலனு யழிவ தாயுந்—தரு ணனு யழிவ தாயுந் தானரைத் தழிவதாயு—முருவமே யழிவே யானு லுள்ளபோ தேபாருய்ய." எ-ம். தத்துவராயர். "கொட் டாவி கொண்ட வர் விட்டா ருயிரென்று கூடநின்று—நட்டார் கள் சுட்டு நடக்கும் வகையிது கண்டு கண்டு—மொட்டா தென் னெஞ்ச மொருகாலி தென்னென் றுணரா வும்பர்க்—கெட்டா தவனென்னை யாளுடை யானருளில் லவர்க்கே." எ-ம். ஒழிவி லொடுக்கம். தேடப் படும் பொருளைச் சிக்கென வாசப்பு தைத் துக்—கோடிக்கொரு சிகிடங் கொள்ளுகினுங் - கூடாத—வா ணுளை வீண்கழிக்கு மானுடரைப் போன்மயக்கம்—பூணுர்பொய் கண்டு துறப்போர்." எ-ம் வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க

வீடு சுத்தமாய் நித்தமாய்ச சுகமாயிருக்குமென்பதற்குப் பிரமாணம்: தேவிகாலோத்தரம். "ஒருபொரு ளெக்காலத்து முளதாகி சிறப்புடைத்தா—யிருவினை யின்றிமேலா மின்பத் தை யளிப்பதாகும் - பொருவிலா விதன்மேலன்பு பொருந்திடா தாருமுண்டோ—திருவுலா வகன்றகல்வி சிறந்தசான் றோர்க டாமே." எனவரும். மற்றும் வருவனவற்றுற் காண்க.

அத்தன்மையவீடடைதற்கு இத்தேகமின்றியமையாதென் பதற்குப் பிரமாணம்: சிவதருமோத்தரம். "அழியு மாக்கைகொ

டேயழி யாப்பதங்—கெழுமு வார்பெற்ற தேநல்ல கேள்வியு—மழியு மாக்கை தனையழி யாதெனை—விழுவ ரோர சங்குழி வெய்யரே." எ-ம். பிரபுலிங்கலீலை. "எய்தற் கரிய யாக்கைதனக் கெய்திற் றென்று லதுகொண்டு—செய்தற் கரிய வறங்கள்பல செய்து துயர்கூர் பிறவியினின்—றுய்தற் கொருமை பெறவெண்ணு துழல்வோ னுடம்பு பொற்கலத்திற்—பெய்தற் குரிய பால்கமரிற்பெய்வ தொக்கு மென்பரால்." எ-ம். நாலடியார். "அரும்பெறல் யாக்கையைப் பெற்ற பயத்தாற்—பெரும்பயனு மாற்றவே கொள்க - கரும்பூர்ந்த—சாறுபோற் சாலவும் பின்னுதவி மற்றதன்—கோதுபோற் போகு முடம்பு." எ-ம். சித்தாந்தகரணம். "மந்திரவாட் பெற்றும் பகைவெல்லான் மற்றதுகொண்— டந்தோதன் மெய்யை யரிந்தான்போன் - றிந்தவுடற்—கொண்டு முத்திசெல்லுங் குறிப்பின்றிச் சிற்றின்பங்—கண்டுவினைக் காளாங் கணக்கு." எ-ம். வரும். மற்றும் வருவனவுமற்றுற்காண்க.

இச்சரீரம் பெறுதற்கரிய தென்பதற்குப் பிரமாணம்: திருமந்திரம். "இக்காய நீக்கி யினியொரு காயத்திற்—புக்குப் பிறவாமற் போம்வழி தேடியே—னக்காலத் திவ்வுடல் வந்தெமக் கானதென்—றக்காலே யுன்ன வருள்பெற லாமே." எ-ம். அறிவானந்த சித்தியார். "தேரிற சதுரயுகமிரண் டாயிர நாட்டிங்களாண் -டோரிலேந் நூற்றின யன்மாண் டொகாந்தமு முற்றுத் தென்பாற்—சேருநகத துளையில்வட பாற்கழி செல்லெளிது—சாரும் பிறப்பொழித் திம்மா னுடத்திற் சனிக்கரிதே." எ-ம். சிவஞானசித்தியார். "அண்டசஞ் சுவேத சங்க ளுற்பிச்சஞ் சராயு சத்தோ—டெண்டரு நாலெண் பத்து நான்குநூ றாயிரத்தா—னுண்டுபல் யோனி யெல்லா மொழித்துமா னுடத் துதித்தல்—கண்டிடிற் கடலைக் கையா னீந்தினன் காரியங்காண்." எ-ம். அனந்தபோதம். "சனித்திடுஞ் சராச ரத்தின் றுன்மிக வரிய தொன்றே—மனித்தரா யறிவுண்டாகை மற்றதி னரிய தொன்று--மனித்தமி றன்னை யாயு மறிவதி னரிய தையா—வினித்தமா மின்பங் காண்பா ரியாரினு மரிய ரன்றே." எ-ம்.

ஞானவாசிட்டம். "எறியுங் கடலி னுகத் துளையி லியாமைக் கழுத்துப் புகுவதுபோற்—பொறிவெம் பிறவி யனேகத்தாற் புருடன் விவேகி யெனப்பிறந்து—முறியும் பிறவிப் பயனிலவிம் மோக மனையுஞ் செய்தொழிலாற்—செறிவ தென்னே யிவற் றாலே தினங்களெல்லாஞ் சென்றிடுமால்." எ-ம். திருக்கடைக் காப்பு. "நீநாளு நன்னெஞ்சே நினைகண்டா யாரறிவார்—சாநா ளும் வாழ்நாளுஞ் சாய்க்காட்டெம் பெருமாற்கே—பூநாளுந் தலைசுமப்பப் புகழ்நாளுஞ் செவிகேட்ப—நாநாளு நவின்றேத் தப் பெறலாமோ நல்வினையே." எ-ம். வரும். மற்றும் வருவன வற்றாற் காண்க.

அநாசாரியனை நீக்கியென்பதற்குப் பிரமாணம்: சித்தாந்த தீபிகை. "வேதிய ராதி நான்காம வெவ்வேறு மனுவோ மத் தாற்—சாதிதான் சொல்லி னிற்க சடசன்மா வாகி னுகேள்— கோதிலா ஞான மின்றேற் குருவலன் பாச பந்தஞ்—சேதியா வீட்டைக் காட்டுந் தெளிவில னாகி லன்றே." எ-ம். மெய்ம் மொழி. "ஆர்த்தன பிறவித் துன்ப மறுத்தறி வுலகின் மிக்க— மூத்தவர் போனடித்து மூடமா மனிதரெல்லாந்—தீர்த்திட்டார் தகுற் றத்தைச சிலர்குற்றந் தீர்க்கும் வண்ணம்—பேர்த்தடி யிடமாட் டாதான் பிறர்க்கூன்று கோலா மாகவே." எ-ம். அமு தசாரம், "துயிறபுணர்ப்பாற் கர்ப்பந் தொடுகேடனீ ராமை— மயிர்ப்படா மின்மினியின் வன்னி - முயற்சோ— டெருத்திற் பான் மெய்யுணர் வில்லாதான் பண்ணுங் —குருத்துவமு நேரா கக் கொள்." எ-ம். அறிவானந்தசித்தியார். "அளிமலர் விட்டு விட் டாய்ந்து மதுவுண் டகநிரம்பிக்—களிவந் திருந்த கருத்திங் குறுநின் கவலையென்னும்—விளிவினை விட்டுவிட் டாய்ந்து விய ன்குரு மேவிநின்று—தெளிவந் துணைக்கண் டிடுமள வுங்குருத் தேடிடுமே." எ-ம். அருட்பிரகாசம். "மெய்ம்மண மன்றிமுன் சிற்றிலின் கண்ணொரு மெல்லியலைப்—பொய்ம்மணஞ் செய் தோன் பதியன் றவட்கெனல் போலுமிறை—செம்மைநெறி யறி விப்பான் குருவன்றித் தேர்ந்து தம்பி—னம்மைய நீர்க்கறி யார்

குரு வோபிறர்க் காய்ந்திடினே." எ-ம். வரும். மற்றும் வருவன வற்றாற்காண்க.

ஞானசாரியனையடைவதற்குப் பிரமாணம்: மெய்ம்மொழி. "பிறிந்திடக் கடைந்த வெண்ணெய்பின்புமோரதனைக் கூடிச்—செறிந்திடா வாறுபோலத் தேகமுந் தேகிதானும்—பிறிந்திடப் பார்த்த பின்புபெயர்த்ததி னிற்பினுங்கேள்--செறிந்திடா வாறு செய்யுந் தேசிகன் றேசிகன்றானே." எ-ம். மெய்ஞ்ஞானவிளக்கம் "கரையறு பிறவிவெங் கடலுளேவிழுந்—தயர்வுறு துயருழந் தவரை யோவெண—விரைவொடு வினைகெட நோக்கி வேதகக்—கரையினை யருள்பவன் கருணை நன்குரு." எ-ம். உண்மைநிலயம. "சிறுபுலைக் கிருங்கு லப்பேர் செப்பலின் மெய்ப்பேர் கொண்டிங்—கிறமுடற் குறைபார்த் தஞ்சி யெதார்த்தமா யிருத்த லாலே—பெறுமொரு மெய்ப்பேர்கொண்ட பேரினப வீடு காண்பார்—குறைவறத் தேர்ந்துஞானக் குரவர்தா ளடைந்துய் வாரால்." எ-ம். வரும். மற்றும் வருவனவற்றாற்காண்க. (உ0)

அங்ஙனம் அடைந்த அதிபக்குவமுடைய சீஷருக்குச் சிவமே குருவடிவமாய் வந்து அனுக்கிரகம் பண்ணுமென்று மேற்கூறுகின்றார்.

> மாய்க்கு நோய்க் கன்றே மருந்தீகு வாரின்மா
> றேய்க்குமோர் பக்குவற் குந்தீ பற
> தேசிக னுய்ச்சிவ முந்தீ பற.

எ - து. இவ்வுலகின்கண்ணே வைத்தியராயினோர் இந்நோய்க்கு இத்தனை தினத்தின்மேல் ஔஷதம் கொடுக்கவேண்டுமென்று நியமம் இருப்பினும் அந்த அவதிக்கு உட்பட்ட ஒருதினத்தின்கண்ணே நாவிழுதல் முதலிய அசாத்தியங்களைக் காட்டுமாயின் அந்நோய்க்கு அக்கணமே மருந்துகொடுத்துத் தீர்ப்பது போலப் பவரோக வைத்தியராகிய ஆசாரியர் சீஷருக்கு உபதேசிக்கு முறைமை அவரவர் வருணத்திற்கு ஏற்கச் சோதிக்குங் காலங்களும் அவற்றுள்ளும் உயர்ந்த பக்குவருக்கு ஒருவருஷ

மளவாயினும் சோதிக்கவேண்டுமென்பன உளவாயினும், பரம
சிவமே குருவடிவமாகி எழுந்தருளிவந்து அநாசாரம் சற்றுமி
ன்றி ஆசாரங்களனைத்தையும் இயல்பாயுடைய, அதிதீவிரபக்குவ
முடையோனுக்கு வந்தவுடனே அனுக்கிரகம் செய்து பிறவிச்
செருக்கை அழிக்கும். எ - று.

அவரவர்வருணத்திற்கு ஏற்கச் சீஷரைச் சோதித்தலென்
பதற்குப் பிரமாணம்: சைவசமயநெறி. "பண்ணிடுக தீக்கையி
னைப் பக்குவம் பார்த்தா றிரண்டு—ளெண்ணு மூன்மூன் றுறின்
மூன் றின்." அன்றியும், "சூத்திர ராதியர்க்குச் சொன்ன
முறை யாலாண்டு—பாாத்தே யனுக்கிரகம் பண்." எ-ம். வரும்.
மற்றும் வருவனவற்றுற் காண்க.

வலரினும் பக்குவமுயர்ந்தோர்க்கு ஒருவருஷமளவாயினும்
சோதிக்கவேண்டுமென்பதற்குப்பிரமாணம்: சிவநெறிப் பிரகா
சம். "தேசிகரு மாணவர்கள் செய்தியுணர்ந்திடவே சிறியோ
ரைப் பெரியோர்செய் தொழிலதனிற் செறித்து—மேசிலரரம்
பெரியோரை யினமாந் தொழிற்கே யிசைத்து மடித்துமவைது
மிவ்வாறு செயவுங்—கூசியிடா திட்டபணி செய்துகுரு பத்தி
குறைவிலராய் நம்பினராய்த் துரோகமின்றி—மாசிலராய் மன
வாக்குக் காயத்தாற் குருவின் வாக்கியபால னஞ்செய்யு மதி
மானு மாயே." அன்றியும், "ஆதரவுஞ் சாந்தியுநற் பொறுமை
தானுமசத்தியமில் லாவுரையுமாசாரந் தவமுந்—தீதான செயன்
மறந்து நன்றியறிந் திடலுஞ் சிவாகமத்தைக் கேட்டதனைத்
தெளித லுனும்—போதலறப் பொறிவழியி னிற்ற லாதிப் புக
ன்றுடைய நற்குணங்கள் பொருந்திமேலு — மோதலுறுங்
குணங் குற்றஞ் சோதித் தோர் வருடமுறுங் குணத்தி னளவா
கத் தீக்கைசெய்வ ருயர்ந்தோர்." எ-ம் அருட்பிரகாசம். "குரு
பரனுக் கவனெஞ்சகம் போலனு கூலத்தனைய்க்—கரசா ணுதியி
னேவல்செய் தேதினங் கட்கிமைபோ—லுரிய மனைமுதல்யா
வையுங் காத்துண்மை யாயொருதற்—பரமிவ னேயெனக்

காண்பான்சற் சீடன் பகர்ந்திடினே." அன்றியும், "தேசிகன் பாற்பற் பலதீக்குணங்கள் செறியினுநம—பாசம் பிராந்திக் கிவைதோற்றியவிறை பாவிலையென்-றுசறுபத்தியி னேர்ந்தெவ் விதத்து மவனருளைத்—தேசங் குலவ வளர்ப்போன் சற்சீடன் றெரிந்திடினே." அன்றியும், "பூரணமாய சிவனெனம் பிறவி யைப் போக்குதற்கித்— தாரணி மேற்குருவாய்வந் திடிலவன் றன்னெதிர்யா—மோரணு வென்னப்பொய் தானுமென் ஞெரு மென் றுண்மைகளக்—காரண னேடுரைப் பானேசற் சீடன் கருதிடிலே." அன்றியும், "பிடையேறி பீசன் வரின்மூ டரு மவன் வேண்டியதைப்--படிமீ ளிப்பர் குருவே சிவமெனப் பாவனைமுற்—றுடையார்க டத்த முடலாவி யீந்திறை யுண்மை பெறத் —தடையா துளதிங் குளதேல பக்குவர் தாமவரே." எ-ம். ஞானவாசிட்டம். "இயர்கைகுணஞ் சோதித்து முன்னே பின்னே யானையுமாம் பிரமமீ யென்னல் வேண்டும்—வியப்பு றவா சையினுழல்வார்க் கிவ்வா றேதின் மீளாத நிரயகில் வீழ் த்த தாகும்—தியக்குறுபோ கத்தாசை தீர்ந்துபுந்தி தெளிந்த வுணைப் போல்வார்க்கே திகழத் தோன்று—மயக்கமற வுணர் த்தவல்ல குருவைக் கிட்டா வருந்தியுந்தன் பிறப்பறுக்கு மகனு மாங்கே" அன்றியும், "சகப்பேர் பெறுமிவ் வாதனைதான் றவிரி லழியாச சாந்தியதா—மகப்பா வனையி லிசசகத்தி லல கைத் தோரா ரீர்தன்னி—லுகப்பா மறதி யுள்ளோர்க ளுபதே சிகக வொண்ணுதோர்—மிகப்பா விகளாஞ் சீசியென் றிகழ்வா ரவரை மெய்யுணர்ந்தோர்." எ-ம். வரும். மற்றும் வருவனவற் றுற் காண்க.

அதிதீவிர பக்குவமுடையோர்க்கு உடனே அனுக்கிரகம் பண்ணுதலுண்டென்பதற்குப் பிரமாணம்: திருவாதவூரடிகள் புராணம். "வந்தநான் வறுமையுற்றேன் மாற்றெனை திலம்பா டென்று—சிந்தையா குலமுற்றுன்னைச் செழும்பொரு ளீதல் செய்வா—ரிந்தநா ளளிக்க வேண்டு மெனவிதி யின்மையாலே—யந்தநா ளிந்நா ளாக வடிமைகொண்டருள வெண்ணி." எ-ம்.

ஒழிவிலொடுக்கம். "அதிபக்குவத்தோர்க் கனுக்கிரகஞ் செய்யும்—புதுமைக்குச் சாத்திரங்கள் போதா-வதுவென்றுப் — பேறே யனந்த பிரகாரந் தந்தானும்—வேறே யனந்த விதம்." எ-ம். வரும். மற்றும் வருவனவற்றாற் காண்க.

சிவமே குருவாய் வந்ததென்பதற்குப் பிரமாணம்: திருவாசகம். "அருபரத் தொருவ னவனியில் வந்து—குருபர னாகி யருளிய பெருமையைச்—சிறுமையென் றிகழாதே." எ-ம். "சிவனென யானுந் தேறினன் காண்க—வவனெனை யாட்கொண் டருளினன் காண்க." எ-ம். திருவாய்மொழி. "துயரில் சுடரொளி தன்னுடைச் சோதி நின்றவண்ண நிற்கவே—துயரின் மலியு மனிதர் பிறவியிற் றோன்றிக் கண்காண வந்து—துயரங்கள் செய்துதன் றெய்வநிலை யுலகிற் புகவுய்க்கு மம்மான்—றுயரமில்சீர்க் கண்ணன் மாயன் புகழ்துற்ற யானோர் துன்பமிலேனே" எ-ம். வரும். மற்றும் வருவனவற்றாற்காண்க. (உ௧)

குருவாக்கியமும் சுருதியும் சுவானுபவமும் ஒத்திருக்கவேண்டுமென்று மேற்கூறுகின்றார்.

> ஆன்றவா சான்சொன்மெய்ந் நூறன் னனுபவ
> மூன்றுமொத் தாந்தணி வுந்தீ பற
> முத்தி நெறியதென் றுந்தீ பற.

இ-து. அமைவுபெற்ற ஞானாசாரியர் வாக்கியமும், உண்மைநூலாகிய சுருதியும், விசாரிக்குந் தன்னுடைய சுவானுபவமும், ஆகிய இம் மூன்றும் ஒன்றாகக்கொண்டு மாறுபடாமல் ஒரு தன்மையாகிய அவ்விடத்துண்டாகிய நிச்சயமே வீட்டு நெறி. எ-று.

இ-ம். ஞானவாசிட்டம். "ஆசான் மொழியா னூற்பொருளா லன்றிப் பெறவு மரிதாகுந்—தேசார் குருநூன் மாணாக்கன் சிறந்த விம்மூ வருவகூடிற்—பாசா தீதப் பதமெய்தும் பன்னு ணீங்கா விக்கூட்ட — மேசா வுணர்வைத் தரும்

பகற்போ தெல்லாத் தொழிலுந் தருவதுபோல்." எ-ம். ஞான சூரியன். "ஒன்றேடொன் றெவ்வா வறிவுக ணேக்கும் பொரு டனி னியல்புவே றுகா—வொன்றவப் பொருளி னியல்பினு லறிபு மறிவன்றே வுண்மையா மறிவஃ—தின்றியப் பொருளே யுளதெனு முளதை யிலதெனு முணர்வினை யொழித்து- முன் றிகழ் குருவோ டளவைதன் றேர்ச்சி மூன்றினு லறிவது மார்க் கம்." எ-ம். வரும். (உஉ)

குருவாக்கியம்போல் ஒருபடித்தன்றிச் சுருதி நாளுவழிகற் பித்தலால் எங்ஙனம் ஒக்கு மென்பதற்கு மேல் உத்தரம் கூறு கின்றார்.

வேதம்பல் பக்குவ மோர்ந்தொரு வீட்டினுக்
கோதும்பல் லாற்றானு முந்தீ பற
உண்மைகண் டார்க்கேக முந்தீ பற.

எ - து. ஒப்பற்ற வீட்டிற்கு மார்க்கம் ஒருவிதம் அன்றிப் பலவிதமாக வேதம் கூறுகிற்பதும் ஆன்மாக்களது கன்மத்தள வில் உண்டாகிய பருவபேதத்தை ஞானமயனுகிய பகவான் அறிந்து அம்மார்க்கங்களினது கருமகாண்டங்களை அங்ஙனங் கூறி ஞானகாண்டங்களிலெல்லாம் தற்போத நீக்கமே கூறுத லின் உள்ளபடி தேர்வார்க்கு மார்க்காந்தரங்களெல்லாம் அபே தமாதலிற் சுருதிநெறி ஒன்றே. எ - று.

இ-ம். திருமந்திரம். "ஒன்றதே பேரூர் வழியா றதற்குள—தென்றதே போலு மிருமுச சமயங்க—ணன்றிது தீதிது வென் றுரை மாந்தர்கள்— குன்று குரைத்தெழு நாயையொத் தாரே." அன்றியும், "ஒத்த சமயங்க ளோரா று வைத்திடு—மத்த ளொரு வனு மென்ப தறிந்தில—ரத்த னொருவனு மென்ப தறிந்திடின்—முத்தி விளக்கு முதல்வனு மாமே." அன்றியும், "முதலொன்று மானை முதுகுடன் வாலுந்—திதமுறு கொம்பு செவிதுதிக் கைகான்—மதியுட னந்தகர் வகைவகை பார்த்தே—யதுகூற லொக்குமா று சமயமே." எ-ம். திருவாசகம். "சமயவாதிக டத்த

மதங்களே—யமைவதாக வரற்றி மலைந்தனர்" அன்றியும்,"இரு மூச் சமயத் தொருபேய்த் தேரினை—நீர்நசை தாவரு நெடுங் கண் மான்கணம்—தவப்பெரு வாயிடைப் பருகித் தளர்வொடு--மவப்பெருந் தாப நீங்கா தசைந்தன." எ-ம். அஞ்ஞவதைப் பரணி. "தலைபலவாய்ப் பெயர்பலவா நதிகளெல்லாஞ் சாகரத்தி லொருநீராந் தன்மைபோலப்—பலபலவாய்ச் சொல்லுநெறி யெல்லாஞ் சொல்லப் பட்டதொரு பொருளினையாம் பணிதல் செய்வாம்." அன்றியும், "அழியாத வீடென்னும் பழைய வூர் கண் டறியாதா ரதுகாண வேண்டி யாறு—வழியாகுஞ் சமயங் கள் கொண்டுதம்மின் வழக்குப்பே சுஞ்சழக்குமாழ்க வன்றே." எ-ம். பட்டணத்துப்பிள்ளையார். "அன்றென்று மாமென்று மாறு சமயங்க—ளொன்றோடொன் றொவ்வா துரைத்தாலு-மொன்று—மொருதனையே நோக்குவா ருள்ளத் திருக்கு—மரு தனையே நோக்க வரும்." எ-ம். அமுதசாரம். "உரைத்த துரையா துரைக்குஞ் சமயம்—பரத்தை யறிவுற்ற பான்மை-மாத்தி - னவயவத்தி லேயொன் றறிந்தார் மரமா—வவயவத் தைக் கொண்ட வாறாம்." எ-ம். வரும். மற்றும் வருவனவற்றாற் காண்க. (உகூ)

கற்பனையாகிய சாதிசமயங்களைப் போலும், அழிவற்றதா யிருந்துள்ள ஞானமார்க்கமே ஞானிகள்செல்லும் வழியென்று மேற்கூறுகின்றார்.

சாதி சமயங்க டம்மின்மா ளாதமெய்ப்
போதமா மோர்சுரத் துந்தீ பற
போயினார் மீளாரென் றுந்தீ பற.

எ - து. அவரவர் கர்மபக்குவத்துக்கு ஏதுவாகச் சர்வஞ் ஞனாலே கற்பிக்கப்பட்டிருந்துள்ள சாதிமார்க்கமும் அதற்கு உத்தரமாகிய சமயமார்க்கமும்போல் முடிவதன்றி யதார்த்தமா யிருந்துள்ள ஞானவழியை அடைந்தோரே பிறப்பின்கண் மீளா தவர். எ - று. (உச)

சாதிசமயங்கள் கற்பனையாய் அழியுமோவென்பாரைப் பற்றி மேற்கூறுகின்றார்.

வருணெ நெறிசார் மதத்தம் மதமெய்ப்
பொருளுணர் வூடிறு மூந்தீ பற
பொன்றாத தொன்றேயென் றுந்தீ பற.

எ - து. ஒருவன் குலாசார சங்கற்பம் அவனால் அனுசரிக்கப் படுவதாகிய ஒருசமய முதிர்ச்சியின்கண்ணே கெடும். அச் சமயாசாரசங்கற்பம் அவனது பக்குவத்தின்கண்ணே தோன்றிய மெய்யுணர்வினாலே கெடும். அந்த மெய்யுணர்வொன்றினாலே முத்தி சித்தித்தலால் அதுவே நித்தியமார்க்கம். எ - று.

சாதிசங்கற்பஞ் சமய முதிர்ச்சியாற் கெடுமென்பதற்குப் பிரமாணம்: தேவாரம். "எவரேனுந் தாமாக விலாடத் திட்ட திருநீறுஞ் சாதனமுங் கண்டா லுள்கி - யுவராதே யவரவரைக் கண்டபோது முகந்தடிமைத் திறநினைந்திங் குவந்துநோக்கி-- யவர்தேவ ரிவர்தேவ ரென்று சொல்லி யிரண்டாட்டா தொழிந் தீசன் றிறமே பேணிக்—கவராதே தொழுமடியார் நெஞ்சி னுள்ளே கன்றாப்பூர் நடுதறியைக் காணலாமே." எ-ம். பிரமோத்தரகாண்டம். "எள்ளற் படுகீழ் மக்களெனு மிழிந்த குலத்தோ ராலுனும்—வள்ளற் பரமன் றிருநீறு மணியு மணிந்த மாண்பினரை—யுள்ளத் துள்ளே யிருபோது முணர்ந்து தெருண்டு சிவனெனவே—கொள்ளத்தகைய வறிவினரே பிறவிக் கடலிற் குளியாதார்." எ-ம். திருவாய்மொழி. "குலந்தாங்கு சாதிகளாலி லுங் கீழிழிந் தெத்தனை —நலந்தா னிலாத சண்டாள சண்டாளர்க ளாகிலும்—வலந்தாங்கு சக்கரத் தண்ணன் மணிவண்ணற் காளென்றுள்—கலந்தா ரடியார்தம் மடியாரெம் மடிகளே." எ-ம். வரும். மற்றும் வருவனவற்றிற் காண்க.

சாதிசமயம் என்னுமிருவகைச் சங்கற்பமும் மெய்யுணர்விற் கெடுமென்பதற்குப் பிரமாணம்: அமுதசாரம். "எந்தக் குலனுயென் னெந்தக் கவியாயென் —னெந்தச் சமயத் தெவரா

யென்-சிந்தைத்—துறவிதருஞ் சொல்லே தூய்தாவ தல்லாற்—பிறவிதருஞ் சொல்லே பிற." எ-ம். அநுபூதிநிலயம். "அறுவகைச் சமயத்,தறையுமெப் பொருளு மறுபத்து நாலுநற் கலையு—மறுவறப் பயின்று மாசறத் திகழு மதிஞரா மவர்களே யெனினும்—குறைவறத் தன்னைக் கொடுத்திடுங் குரவன் குரைகழற் புனைந்தவ ரன்றேற்—பறையர்மற் றவரே பறையரே யெனினு மருளுடை யவர்பரம் பரரே." எ-ம். தத்துவசரிதை. "செந்துகில் புனைவார் சீவரந் தரிப்பார் திரிதண்டோ டொருதண்டு பிடிப்பார்—தந்தமுத் திரைகள் பலபல தரிப்பார் தவமெனத் தம்முடம் பொறுப்பார்—முந்துகாய் கிழங்கோ டிலையயின் றிடுவார் மோனமென் பார்கத றிடுவா—ரிந்தவா குலத்தா லீசன்மே விடுமோ விவர்தூய ருறுவதே னந்தோ." எ-ம். போதரத்நாகரம். "சடையினைப் பரித்துந் தலையினைப் பறித்துஞ் சீவரந் தாதுநற் கலிங்க—முடையெனப் புனைந்து முடைகளைத் தவிர்ந்து மூணுறக் கங்களைத் துறந்தும்—படியுநற் சருகும் வாயுவு மயின்றும் பாரொடு கல்லிடைத் துயின்று—மிடையதற் றுழலு மிவையருட் சொருபன் மெய்யருட் பெறுதவர்க் கியல்பே." எ-ம். உண்மைநிலயம். "குலநல முடையோ ரெவரவ ருயர்ந்தோர் குவலயத் தவர்க்கதின்றேனு—நலமுளோர் சமயர்க் கவரவர் மேலாநவினெறி வழாரெவ ரவரே—புலகிலெக் குலமெச் சமயமா யினுமென் னொருதம துண்மையை யுணர்ந்திட்—டிலகுதத் துவஞானிகளெவ ரவரே யெனப்படு மவர்கண்ஞா னிகட்கே." எ-ம். வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. (உக)

முற்கூறிய விருவகைச் சங்கற்பமும் எம்முடைய மார்க்கத்தால் வாதிக்கப்படுதலின் இதுவே ஞானமார்க்கமென்னுஞ் சமயிகளைப் பற்றி மேற்கூறுகின்றார்.

ஒன்றொடொன் றெவ்வா மதங்களொன் றென்றிறற்
பொன்றுவ தில்லையே யுந்தீ பற
பொய்யென்ப தெத்தைநா முந்தீ பற.

எ - து. ஒன்றுக்கொன்று மாறுபடுதலையுடைய சமயங்களெல்லாம் ஒன்றிஞென்று கெடுதலில்லையாயின், அவற்றுள் யாதுசத்தியநெறியென்றும் மற்றியாது அசத்திய நெறியென்றும் நம்மாலே கூறப்படும். எ - று. (௨௬)

எம்முடைய சமய புராதனரால் அம்மார்க்கங்கள் முன்செயிக்கப்பட்டுள வென்பாரைப்பற்றி மேற்கூறுகின்றார்.

தோல்வியும் வெற்றியுஞ் சொன்மதங்கட் கெலாங்
காலபே தத்தினுண் டுந்தீ பற
கருத்தன் செயலதென் றுந்தீ பற.

எ - து. இக்காலத்தில் இதனுல் அது தோல்வி அடைந்ததென்றும், அக்காலத்தில் அதனுல் இதுதோல்வி அடைந்ததென்றும், சமயங்களாறும் காலபேதங்களின் ஒன்றுக்கொன்று வெற்றி தோல்வி அடைதல் உண்டாதலின் அவற்றினை நிறுவிய ஒருபரனது இச்சையால் தெய்வத்தன்மை கொண்டு எக்காலத்தில் எதை உயர்த்தி எதைத் தாழ்த்தல் வேண்டுமோ அதை அங்ஙனம் செய்குவது ஒழிந்து மற்றோர் காலத்தினுள்ளே ஒருமதத்தை ஒருவராலும் வாக்குவாதத்தினலே செயிக்குதல் கூடாது. எ - று.

இ-ம். உண்மைநிலயம். "இறைவிதன் முலைப்பா லயின்றசீகாழிக் கிறைவனு மிறைவனைப்பரிமே--னறைமலர்ப் பொழில்சூழ் மதுரையம் பதியி னடத்திய வொருபெருந் தவனும்—புறநிலைச் சமண மாதியைச் செயித்தார் பொருந்து தெய்வி கத்தெனிலெவரோ—மறைசொல்சட் சமயத் தொன்றுகொண் டொன்றை வாக்குவா தத்தில் வெல்பவரே." எனவரும். மற்றும் வருவன வற்றுற்காண்க. (உ௭)

ஒருமதங்கொண்டு ஒருமதத்தை வாக்குவாதத்தினும் வென்றது உண்டென்பாரைப் பற்றி மேற்கூறுகின்றார்.

வாதிக டங்களுக் கல்லான் மதங்களுக்
கோதார் வலியின்மை யுந்தீ பற
ஓதி யுணர்ந்தோரென் றுந்தீ பற.

எ - து. முன்னைநாள் அசசமயி இச்சமயியை வாதில்வென்று மனோரதம் அடைந்தானாயின் பின்னைநாள் இச்சமயத்திலே பின்னும் ஒருவன் அவனை மனோதுக்கம் அடையும்படி வாதித்து வெல்லுதலின் அவனவன் கற்ற கல்விவலியினாலும், யுத்தி புத்தி வலியினாலும் வெற்றிதோல்வி அடைந்தாராதலின் வாததுர்ப்பல மொழிந்து மததுாப்பலம் இல்லையென்று கூறுவார் எல்லாக்கலைகளும் ஓதியுணர்ந்த பெரியோா. எ - று. (உஅ)

மததுர்ப்பலம் இல்லையென்பதற்கு மேற் பொருந்துமாற்றானும் கூறுகின்றா.

ஆறனு மோரா றவாதித மென்கைநீ
தாறும் விளங்கலா னுந்தீ பற
அளவி லளவைகொ டுந்தீ பற.

எ - து. அறுவகைச சமயங்களில் இச்சமயமே அவாதித்தர்த்தம் மற்றையவனைத்தும் இதனால் வாதிக்கப்படுமென்று கூறுதலே கூடாது; கூறுமாயின், அனைத்தையும் வாதிதஞ்செய்த சமயமே பரமாய் விளங்கல் வேண்டும்: அது இன்றி எண்ணிறந்த எது திட்டாந்தங்களோடுங் கூடி ஆறும் தனித்தனியே விளங்கலின, யாது அவாதிதமும் யாதுவாதிதமும்! எ - று.

அளவிலளவைகளென்றது அவரவர் கோட்பாட்டினது அளவினுக்கு ஏற்ற அளவைகளென்றுமாம். (உகூ)

சகலமுந் தேரினுந் தத்த மதநெஞ்
சகலா துரத்தலி னுந்தீ பற
அபல மியாதென்ப துந்தீ பற.

எ - து. எச்சமயத்தின்கணின்றுள யாவரும் வேதாகமமாதிய நூல்களும் மற்றைச் சமயநூல்களும் கசடறக்கற்றுணர்ந்

தோரேயாயினும் இதுவே ஞானசமயமென்று ஒருசமயத்தையே அடையாது தத்தஞ்சமயமே ஞானசமயமென்று ஸ்தாபித்தற்கு ஏது இட்டாந்தங்கள் மிகவும் மனத்தின்கண் வலிதலின், வலியின்மைச் சமயம் யாது! எ - று. (கூ௦)

எல்லாச்சமயத்தையும் மெய்ஞ்ஞானிகளாயினோர் விட்டு நீங்குவாரென்று மேற் கூறுகின்றார்.

எல்லாச் சமயத் தியல்பு மறிந்தவர்
நில்லா ரவற்றாடென் றுந்தீ பற
நீங்கிற் பழியாதென் றுந்தீ பற.

எ - து. சகலசமயத்திலுண்மையும் உள்ளபடி அறிந்து அவற்றின் முடிவுகண்ட ஞானிகள் எச்சமயாபிமானமும் பற்றி நிற்பதே இல்லை நீங்கிவிடுவார். அங்ஙனம் நீங்கியதுகொண்டு அவரடையும் தாழ்வு யாது! எ - று. (கூக)

ஞானிகள் சமயாசாரங்களை நீங்குவராதலின் அவர்க்கு அதனுல்வரும் தாழ்வொன்றும் இல்லையென்று மேல்வருஞ் செய்யுள் இரண்டாலும் வலியுறுத்திக் கூறுகின்றார்.

உயர்ந்த நெறியீதென் றொன்றைவிட் டொன்றை
யியைந்திடு வோனுமுண் டுந்தீ பற
ஏத மடையானென் றுந்தீ பற.

எ - து. தன்சமயத்தின்கண் இழிவும் பிறிதொரு சமயத்தின்கண் உயர்வும் கன்மபாகத்தினளவின் ஒருவனுக்குத் தோன்றுகையால், தான் முன்புநின்ற நெறியைநீங்கி உயர்வுதோன்றிய நெறியை அடையாநிற்பன். அதனுல் அவனுக்குப் பின்பு அடைந்துளமதத்தில் உண்டாகிய நன்மை அடைகுவது ஒழிந்து, முன்புநின்றுள மதத்திற் கூறிய பதிதத்தன்மை அடையான். மேற்சங்கை: யாவனொருவன் யாதொரு மதத்தின்கண் நின்றுயினும் அதனைநீங்கி எம்முடைய மதத்தின்கண் வந்தானுயின் அவனே பரமமுத்தனென்றும், எம்முடைய மதத்தின்கண்

நின்றவன் மற்றொருசமயியுடன் நட்புற்றுக் கூடியிருந்தானேயாயினும் அவனே பதிதன் அவனே அதிபாதகனென்றும், பகவானது வாக்கியமாகிய வேதங்களும், வியாசரார்ற் கூறப்பட்டுள்ள புராணங்களும், எம்முடைய மதத்தின்கட் புராதனரது வாக்கியமும் உண்டென்பாரும் உளர். அஃதெத்தாலெனில் மேலுத்தரம்: மற்றொரு சமயத்திற்கும் ஒருவன் வந்து கூடினும் நீங்கினும் அங்ஙனம் முத்தத்துவமும் பதிதத்துவமும் உண்டென்று வேதபுராணவாக்கியங்களும் அச்சமயபுராதனவாக்கியமும் இருத்தலின் அது கூடாது; ஆயின் அச்சமயங்கட்குக் கூறியவாக்கியங்கள் அயதார்த்தமோவென்னில், அயதார்த்தமும் அன்று. யதார்த்தமேயென்றால், அவ்வாக்கியங்களுக்குத் தாற்பரியம் எதெனில் ஒருசமயத்தின்கணின்றோன் அச்சமயமே உயர்ச்சியென்றும் மற்றையவை தாழ்வென்றும் மனதினிச்சயார்த்தம் பிறந்திருக்கவும், புகழ்பொருளாகிய முன்னிலையினுன் மற்றொரு சமயத்தை அடைந்தானேயாயின் அச்சமயத்திற் கூறியமுத்தியை அடையாது முன்புநின்ற சமயத்திற்கூறிய பதிதத்தன்மை அடைந்து நரகில் தாழ்குவன். இஃதன்றி முன்பு நின்றுள சமயம் தாழ்வென்றும் பின்பு செல்லவேண்டிய சமயம் உயர்வென்றும் நிச்சயார்த்தம்பிறந்து சென்றானேயாயின், அச்சமயத்திற் கூறிய நன்கு அடைகுவதன்றி முன்பு நின்றுள சமயத்திற்கூறிய பதிதத்தன்மை அடையான்; இங்ஙனமாதலின், உயர்ந்தநெறி ஈதென்னும் துணிவுடைமையாற் பின்பு ஒருநெறியை அடைந்து ஒருதாழ்வு அடைகுதலிலன். எ - று. (௩௨)

ஆதலான் மேலா நெறியடைந் தோர்க்கொரு
சாதி சமயமே துந்தீ பற
சங்கற்ப நாசமென் றுந்தீ பற.

எ - து. ஒருசமயத்தைவிட்டு ஒருசமயத்தை அடைந்தோனுக்கும் துணிவுடைமையான் இங்ஙனமாதலின், எல்லாச்சமயத்தினுண்மைகளும் அறிந்து அவற்றினுக்கெல்லாம் மேலாகிய ஒரு

சன்மார்க்கத்தை அடைந்துள்ளவராதலின் ஞானிகளாயினோர்க்கு உலகாசார குலாசார சமயாசாரங்களும் இல்லை; அன்னோர் சர்வசங்கற்பமும் ஒருங்கே இறந்துடையராதலின். எ - று.

இச்செய்யுளிரண்டிற்கும் பிரமாணம்: திருப்பனுவல். "உலகுய ரியவென் றோதிரு மூன்று—ளைந்தையு நீங்கி யிந்தநன் னெறியூ—டுற்றோர் பவமற் றோரிஃ தொரீஇப்—பிறிதொரு நெறிசார் பேதையெஞ் ஞான்று—முய்குவ திலெயனச் சைவமாதி—யறுவித சமயத் தவருந் தனித்தனி—சுருதி புராணந் தொல்லோர் நல்லுரை—காட்டிப் புவிப்பா ஞட்டிய வதனு—னின்றவோர் நிலைநீத் தொன்மையீண் டடைந்தோன்—றன்னெஞ்சிடையே தான்மூத னின்ற—வந்நிலை பெரிதென் றறிந்துமஞ்சாது—குறுகின்மண் ணுறி குறித்தொரு நெறியை—யடைகுவனிரயத் திடையஃ தன்றிச்—சென்னெறி பெரிதெனத் தேர்ந்துகொ டேகி—னந்நெறிக் குளபே றவனுமெய்ப் துதலான்—மூவிரு சமய முடிவையு முணர்ந்திட்—டேறிய ஞானி சிலுகுவையெனக்கொண்—டச்சம யச்சார் பனைத்தைய—மிச்சகத் திடைநீத் திடிலெவன் பழியே" எ-ம். தேவிகாலோத்தரம் "சமயாசாரசங் கற்ப விகற்பமு—மமையா தாங்குல வாசார மானது—மிமையா தாரும் விடாதவில் வாழ்க்கையு— மமையார் தோளாய் விடுதலா சாரமே." எ-ம். திருமந்திரம். "ஆறு சமயமுங் கண்டிலர் கண்டில ராறுசம யப்பொருளு மவனலன்—றேறுமின் றேறித் தெளிமின் றெளிந்தபின்—மாறுத லின்றி மனைபுகலாமே." அன்றியும், "சிவமல்ல தில்லை யறையோ சிவமாந்—தவமல்ல தில்லை தலைப்படு வோர்கட்—கவமல்ல தில்லை யறுசமயங்க—டவமல்ல நந்திதாள் சார்ந்துய்மி னீரே. எ-ம். திருவாய்மொழி. "யாவரு மெவையுந் தானு யவரவர் சமயந் தோறுந்—தோய்விலன் புலனைந் திற்குஞ் சொலப்படா னுணர்வின் மூர்த்தி—யாவிசேருயிரி னுள்ள லாதுமோர் பற்றிலாத—பாவனையதனைக்கூடி லவனையுங் கூடலாமே." எ-ம். அஞ்ஞவதைப் பரணி. "தமர்பிற ரற்றூர் சமயமு மற்றூர் சகவியல் பற்றூர்

தமையொழி பற்று—ரமர்விட மற்று ரறமற மற்று ரறிவயர் வற்று ரவடிடி யாரே" எ-ம். தத்துவராயர். "இலனென் றினிச் சென் றிரக்கின்றி லேனிங் கியாவரையுங்—குலனென் று கோத் திர சாத்திரக் கத்துகள் கூறுகிலே—னலம்வந்து மற்றை யறுசம யத்தினுமாயகிலேன்—றலம்வந்த தத்துவ ஞரெம்மை யேயின் று சார்ந்தனரே." எ-ம். ஞானவாசிட்டம். "தவமகந் தீர்த்தஞ் சேவை யருச்சனை தான மாதி—யவமயக் கத்தா னீணுள் விலங் குபோ லவலத் தாழ்வார்—பவமுறு மிவற்றை விட்டுப் பரிசுத்த பரம போகங்—கவர்வறப் பற்றி யெல்லாக் காதலு நீங்கி நிற் பாய்." எ-ம். ஞானசித்தி: "தீர்த்த மர்ச்சனை யத்துவா மந்திரஞ் செடியுடற் றிதிசெப்பு—மார்த்த சாதியே தத்துட னளவைநூ லலைதரு மிகுதர்க்கம்—பார்த்திடார்மிகு குருபர னருளினுற் பர ம்பர மதுகாண்பா—ரோர்த்திடாதவ ரவையவை பொருளென வுழலுவ ருலகெல்லாம்." எ-ம். சிவஞானசித்தி. "ஞாலமதின் ஞானநிட்டை யுடையோருக்கு நன்மையொடு தீமையிலைநாடுவ தொன் றில்லை—சீலமிலை தவமில்லை விரதமொடாச் சிரமச் செய லில்லை தியானமிலை சித்தமலமில்லை—கோலமிலை புலனில்லை கர ணமில்லை குணமில்லைகுறியில்லை குலமுமில்லை—பாலருட னுன் மத்தர் பிசாசர்குண மருவிப் பாடலினே டாடலிவை பயின்றிடி னும் பயில்வர்." எ-ம் ஒழிவிலொடுக்கம் "சிந்தை பயமிலசசை சீல மருவருப்ப—கந்தைவிடுஞ் சாந்திகுல மாசார -மிந்தவழி—யெட்டுஞ் சிவயோகிக் கில்லையென மாமறைக—டட்டும் பெரு முரசந் தான்." அன்றியும், காமாதி விட்டுக் கரமே கலமா கிப்—பூமீதே கைகாலைப் போர்த்துறங்கி - நாமகுண—சாதி கருமமெனும் வாதனையிற் றுக்கற்றார்க்—கேது சமயமென லாம்." எ-ம். திருவாசகம். "புல்வரம் பாய பலதுறை பிழைத் தும்." எ-ம். சித்தாந்தசூரணம். "ஓங்கி வருநீர்க் கதிமீ துளசி றைக—டேங்கி நதிசேர் திறமைபோன் - றுங்குப்—பருவத்துக் கேற்றநெறி பற்றியவை யெல்லா—மொருவியுயிர் முத்தியுறும்." எ-ம். வரும். மற்றும் வருவனவற்றுற்காண்க (௩௩)

இத்தன்மைப்பட்ட ஞானிகளாயினோர் ஓரோரிடத்திலே சமயாதி சங்கற்பங்களோடும் கூடி நிற்பினும் அவர்க்கு அஃது இல்லையென்று மேற் கூறுகின்றார்.

நீங்கா தெவற்றோடு நின்றாலு நெஞ்சிடைத்
தாங்கான்மெய்ஞ் ஞானியென் றுந்தீ பற
சலமரை யாதியொத் துந்தீ பற.

எ - து. மெய்ஞ்ஞானிகளாயினோர் முற்கூறிய சமயாதி சங்கற்பங்களோடு கூடி நிற்பினும் மனத்தின்கட் பற்றொழிந்து இருப்பர்: அஃது எங்ஙனமெனின், தாமரையும் சலமும் புளியம்பழமும் ஓடும் முதலிய கூடி இருத்தல் போன்று. எ-று. எவற்றோடு நின்றாலுமென்ற உம்மையால் நில்லாரென்பதே துணிவு.

இ-ம் அமுதசாரம். "அருந்தல் பொருந்த லவையொக்கு மேனும்—பெருந்தகையோ ருள்ளம் பிறிதே - இருந்து—மனத் தின்வே றேபதியு மைந்தனுமம் மாதின் —றனத்தின்வே றல்லவே தான்." எ-ம். சிவதருமோத்தரம். "மனத்துமய லற்ற னனே மனைவிதனைத் தழுவியவன்—றனக்குமக டனைத்தழுவித் தகுகினனே வங்குமயன்—முனைப்பயனை யருந்திடினுந் தெருண்டார்கண் மோகமிலை - வினைப்பயனை வியந்தருந்தி மற் றையரே வினைவிளைப்பார்." எ-ம். அருட்பிரகாசம். "கடையே கிக் காம நுகர்வா ளொருகன்னி காக்குஞ் சுற்றத் — தடையால் வருந்தி யுறவின்பி ராரதநத் தாலெவற்றி—னிடைஞான வானந்தம் பெற்றோ ரிருந்தும்பற் றின்றியெல்லா—முடையான் றிரு வடிக் கீழே மனம்வைத் துறங்குவரே." அன்றியும், "ஈங்கழனீருக் கவியினு மோரிடத் தின்மிகுத்த—வோங்கழற் கீர மிலையென்னை போலெவ் வுபாதியையு—நீங்கினர்க் கன்றிநன் கின்றினு மோரொரு நீடறிஞர்க்—காங்கவைசூழினுந் தாழ்விலென்றோது வராய்ந்தவரே." எ-ம். நீதிசாரம். நிற் கழற்கொடியு நீர்த் தாமரை யிலையுஞ் — சேற்றிற் கிடந்த சிறுபுழுவுஞ்-சாற்றுங் கான்—மண்ணிற் றபனியமு மாஞானி கண்மனமு — மெண்

ணிக்கொளோந்து நிலைவ." எ-ம். வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. (௩௪)

இத்தன்மைப்பட்ட ஞானிகளது அனுபவ நிச்சயார்த்தம் மேற்கூறுகின்றார்.

> ஆறு நெறிக்கு மவிரோத போதமே
> தேறுமெய்ஞ் ஞானியென் றுந்தீ பற
> சித்தாந்த மாகும துந்தீ பற.

எ - து. ஒன்றுக்கொன்று விரோத நீங்காத அறுவகைச் சமயத்திற்கும் அவிரோதமாய் அவற்றிற்கெல்லாம் முடிவாயிருப்பதொரு ஞானம் யாது அதுவே தத்துவ ஞானிகளது துணிவு: அதுவே சித்தாந்தமென்று சொல்லப்படும். எ - று. சித்தாந்தமென்றது முடிந்த பொருளெனக்கொள்க.

இ-ம். ஞானசூரியன். "அறைந்தவெச சமயக்கலையினு மெடுத்துக் காட்டலா யருமறை முடிவிற்—சிறந்தநற் பொருளாய்ச் சிவனரி யயனற் செப்பிய வருத்தமுமாகித்—துறந்துமற் றவிரோதத்தையே துணிந்தோர் சொல்லிடும் பெருநூமா மொன்றை—நிறைந்தகைத் தலத்தின் மணியென காட்டு நீதிசன் மார்க்கத்தி னியல்பே." அன்றியும், "செய்ததே தவமாய்ச் செறிவது விடுவதின்றியே சகலசங் கறபப்—பொய்யதா மொழுக்கப் புலைமைய தறவே போதமா மெய்யொழுக் கதுவாய்க்—கையிலா மலக மென்னவே வீட்டைக் காட்டவும் வல்லதே ததுவே—மெய்யதாம வேத வேதனமல்லா தவற்றயல் வேதன மறியே." எ-ம். திருவள்ளுவர். "எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்—மெய்ப்பொருள் காண்ப தறிவு." எ-ம். அவிரோத போதம். "எடுத்தவெம் மதமெர் நூல்கள் யாவையுந் தமதாவங்கு—வடித்தநற் பொருளே கொண்டு வளம்பட மகிழ்வ தல்லாற்—படித்தெரு பெருளைப் பற்றிப் பாங்கினு லதிலொ துங்கிப்—பிடித்தது பிடித்துக் காதும் பேதைமை பெரியோர்க் கின்றே." எ-ம். அருட்பிரகாசம். ஓரோர் சமயத் துயிராய்ச் சில

பல வுண்டுசொன்ன — மாராயின் முத்தியொன் றேயெனி னெங்கு மதைவிரும்பித்—தேராம லெய்மத மிம்மத மென் றொன்றிற் சிக்கியிந்தப்—பாரீ துழல்வதென் னீர்தெளிந் தோர்செயும் பண்பி தன்றே." எ-ம். மோகவதைப்பரணி. கூறுபல பேருடைய வாறுபல வும்போய்க் கோத்தபர வைக்க ணொரு நீத்தமெனு மாபோல்—வேறுபல வானசம யங்கண்முடி விற்போய் வேறற வடைந்தவது வேதநெறி வீடே." எ-ம். அமுதசாரம். "இந்நெறி யிந்நெறியென் றெம்மார்க்க மும்ப கர்க — வுந்நெறியெல்லா மறிந்தவறி - வெந்நெறியா—லெய்தலி மந்தநெறி யென்றறைந்த தேவேத—மெய்தலா வீட்டி னெறி." அன்றியும், "எய்த வெளிதா மிறையரு ளில்லையே—லெய்த வரிதா மியாவர்க்கு - மெய்தெளிந்தா—லெம்மார்க்கத் தோடு மிகலற் றிருக்குமதே - சன்மார்க்க மாகுநெறி தான்" எ-ம். வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. (கூ௯)

வேதமுடிவும் சமயங்களினது துணிவும் இதுவென்று மேற் கூறுகின்றார்.

சுருதிகள் சொல்பல் சமயத் துணிவுமப்
பரசிவ பந்தமென் றுந்தீ பற
பகர்நாமம் வேறுவே றுந்தீ பற.

எ - து வேதங்களிலே சொல்லப்பட்ட பலவித சமயங்க ளினது துணிவும் யாதென்னில் பரசிவ பந்தமென்னு மூவகைப் பொருளையும் உணர்த்துதல். சமயிகள் அவற்றிற்குத் தத்தங் கோட்பாட்டால் கூறுகிற்கும் பரிபாஷை நாமங்கள் வெவ் வேறு. எ - று. (கூ௱)

இங்ஙனம் கூறிய முப்பொருளையும் இன்றென்பாரும் உள ராகலின், அதுபற்றி முதற்கட் பாமுண்டென்று மேற்கூறு கின்றார்.

நிருமல பூரண நித்தாதி நீங்கா
வொருபாலு தானுள துந்தீ பற
உலகங்க டோற்றலா னுந்தீ பற.

எ - து. நிருமலம் பூரணம் நித்தம் அதிசூக்குமம் சச்சிதா னந்தம் என்று கூறும் இவை முதலிய குணங்களைச் சொரூபவி லக்கணமாகவுடைய ஒரு பரம்பொருளுண்டு; அதினிடத்து நின் றும சராசரப் பிரபஞ்சங்கள் உற்பவித்தலின். எ - று.

இது அநீசுரவாதிகளை மறுத்தது. அது எங்ஙனமென்னில், ஒருவன் ஒருத்தி ஒன்று என்னும் பிரபஞ்சமானது ஒரு கர்த் தாவையுடையது, தோன்றிநின் றழியுங்காரியமாதலின்: எங்ங னம் கடம்போல். அஃதொக்கும்; மாதாபிதாக்கள் காரணமெ ன்னின் அன்னோர் புத்திரோற்பத்தி வேண்டிய காலத்து உண் டாகாமையினாலும், வேண்டாத காலத்து உண்டாகுதலாலும், ஆணிச்சிக்கப் பெண்ணாகுதலாலும், பெண்ணிச்சிக்க ஆணாகுத லாலும், இருவகையிச்சையும் அனறியிலே அலியாயும் குரூபியா யும் தோன்றுதலினாலும், உற்பத்தியானதும் ஆகாததும் உடனே உணரப்படாமையினாலும், ஒருவர் பண்ணைக்காணாதிருக்கவும் மாதாவுதரத்தில் மாதங்கடோறும் உருவாய் வளர்ந்து கருப்பாச யமுதலிய துன்பங்களுக்கு இறவாது இங்ஙனம் தோன்றுதலா லும், கடோற்பத்திக்குத் தண்டசக்கராதிகள்போல் மாதாபிதா க்கள் சுதந்தரமின்மையாலும், அஃதன்றியும் உற்பிச்சத்தோற்ற ஙகள் மாதாபிதாக்கள் சையோகம் இன்றியே வித்துக்கார ணமாக உண்டாமையினாலும், அன்னோர் காரணமென்பது கூடாது.

அஃதொக்கும்; சுக்கிலம் காரணமாய்த் தேகங்கள் உண் டாதலின் உத்தரோத்தரசரீரங்களுக்குப் பூர்வசரீரபீசம் காரண மெனின்; பாம்பின்வாயிலே கல்லும் கல்லின்வாயிலே தேரை யும் நராதிதேகங்களிலே தோன்றிய புழு முதலியவைகளும் மரங்களில் தோன்றும் கிருமி கீடம் புல்லுருவி முதலானவைக

ளூம் காளான்முதலியவையும் நிலத்திற் சலத்திற்றோன்றா
மியாதி வடிவங்களும் ஆகிய சுவேதசத் தோற்றங்களுக்குப்
சரீரபீசம் காரணம் அல்லாமையால் வித்தே காரணமென்
கூடாது. சுவேதசத்தோற்றங்களும் பூ பூதராதி பிரபஞ்சத்
ன்றும் உற்பவிக்கையால் அவையே சரீரோற்பத்திக்குக் கா
மெனின்;சுவேதசோற்பத்திக்குச் சராசரவுருவமிரண்டும் கா
மாதையினாலும், மற்றுமுள்ள மூவகையோனிகட்கும் அப்பூ
ராதி காரணமென்கை காணப்படாமையினாலும், அது கூடா

அங்ஙனமன்று, ஒருதீபததில் ஒருதீபமாகப் பாரம்பரியத்
தில் அநேகதீபம் உண்டாயினும் அத்தீபத்தினது தாபசத்தி அக்
கினியின்கட் காணப்படுகையால் அதற்குக்காரணம் அக்கினியே
யானாற்போலத் தேகருணங்கள் பூ பூதராதி சரத்தில் கிருமி ட
முதலியவும், அசரத்தில் காளான் முதலியவும், காணப்படுகை
யால் அவைகட்குப் பிருதிவியாதி சாதுர்ப்பூதமே காரணமெ
னின்; அப்படித் தோன்றுவித்ததென்கை ஒருகாலத்தும் ஓரிட
த்தும் ஒருவராலும் கண்டோமென்கை கேட்கப்படாமையினா
லும், அது கூடாது. ஆயினும் அங்ஙனமன்று, விளக்கு உண்டா
வதற்கு முன்னே அக்கினி விளக்கைத் தோன்றுவிக்க வேண்டு
மேயல்லாமல் விளக்கு உண்டானதின்பின்பு அதுவும் இருக்க
வேறொரு விளக்கை அக்கினி தோன்றுவிக்க வேண்டுவதில்லை;
அதுபோல் தேகாதிகள் இல்லாத காலத்திலே சாதுர்ப்பூதம்
தேகாதிகளைத் தோன்றுவிக்குமல்லாமல் இப்பொழுது தோன்
றுவியாதெனில், இப்பொழுதும் பிருதிவியாதிகளில் சுவேதச
வுருவம் தோன்றுகையினாலும், அஃதன்றிக் காஷ்டத்தில் அக்
கினியை, அக்கினியில் விளக்கை ஒருவன் முன்பு தோன்றுவித்
துப் பின்பு ஒரு விளக்கில் ஒருவிளக்கைத் தோன்றுவிக்குதலன்
றிக் காஷ்டத்திற்கும் அக்கினிக்கும விளக்கிற்கும் தானே
வேறொன்றைத் தோன்றுவித்தல் கூடாமைபோல் சராசரப் பிர
பஞ்சங்கள் சடமாதலின் அவைகளே மாயையினின்றும் தோன்
றுவித்தவன் ஒரு கர்த்தா உண்டெனக் கொள்க.

சிவஞானசித்தியார். ஒருவனோ டொருத்தி யொ
ன்றென் றுரைத்திடு முலகமெல்லாம்—வருமுறை வந்து நின்று
போவதும் வருவதாகலாலே—தருபவ னொருவன் வேண்டுந் தான்முத
லீறு மின்றி—யுருவிடு மநாதி முத்த சித்துரு மன்னி நின்றே."
என்றும் வருவனவற்றாற் காண்க. (௯௭)

பரம்பொருள் ஒன்றென்று மேற்கூறுகின்றார்.

சேர்முத்தி பாலை லடைதலாற்
பல்சீ வருமுள ...
திர னெனரென் றுந

இ - ள். அநேகசித்திச[redacted]ப் முத்தியையும் அப்பரம்பொ
ருளினது அருளினால் இவ்வாறு அடைவார் உளராகலின்,
அநாதியாய் அநேக உயிர்கள் உளர். அவ்வுயிர்களும் சுதந்திர
மிலர். எ - று.

பல்சித்தியென்றதனால் மாயாவாதியை மறுத்தது அஃது
எங்ஙனமெனில், பரகாயப்பிரவேசமும் சித்தியாதலினெனக்
கொள்க. முத்தியென்றது சீவர்க்கே: சீவர்க்கல்லது பரத்திற்
குப் பந்தம் கூறுதல் ஒருவர்க்கும் ஒவ்வாமையினெனக் கொள்க.
உயிர்களை அநாதியென்றது பரத்தினது சிருட்டியாதி விளையா
டல் அநாதியாதலினெனக்கொள்க அநேகமென்றது ஏகாத்து
மவாதிக்கும் விவகாரத்தில் இவ்வண்ணமே கூறப்படுதலினென
க்கொள்க. சுதந்திரனெரென்றது பரதந்திர சுதந்திரரென்றதெ
னக்கொள்க. அஃதன்று பரதந்திரரேயெனில், தாமே வினை
செய்குதல் கூடாது. அதுவும் பரமேசெய்விக்குமெனில், பரத்
திற்கு அவிகாரியென்றும், பேரருளுடையோனென்றும், வேதா
திகள் கூறுதல் அப்பிரமாணமாம். அன்று-சுதந்திரரேயெனில்,
முத்தியை அடையவேண்டுவதில்லை, முத்தியில் உயிர்க்குச் சுத
ந்திரமோ பரதந்திரமோவெனில், அது மேற்கூறப்படுஞ் செய்யு
ளினது அர்த்தங்களாலே கண்டுகொள்க. ஆதலாலே, பந்த

முடையராய் அநாதியாய் ... நக சீவர்கள் உளரெ
ரெனக்கொள்க.

பந்தமுண்டென்று மேற்கூறுகின்றார்.

பல்லுயிர் முத்தி யடைதலாற் பந்தமுஞ்
சொல்வரெல் லோருமென் றுந்தீ பற
தொன்மை யதுவுமென் றுந்தீ பற.

எ - து. பல்லுயிர்களுக்கும் முத்தியடை
லின், அவ்வுயிர்களை அநாதிய ... மறைத்து நிற்பது
உண்டென்று ஆன்மவாதிகள் அனைவரும் கூறுநிற்பா,, எ - று.

பந்தத்தை அநாதியென்றது, சீவர்கள் உள்ள அன்றே
உளதாதலின் எனக்கொள்க. (௩.

பந்தம் திரிவிதமாயிருக்குமென்று மேற்கூறுகின்றார்.

அஞ்ஞான மாயைகன் மம்பந்த மாமிவற்
றஞ்ஞான மோர்முத லுந்தீ பற
அன்றுகு மென்பரா லுந்தீ பற.

எ - து. ஆன்மஞானத்துக்கு இங்ஙனம் பந்தமென்று
சொல்லப்படுவது யாதெனில், கேவலாவஸ்தையைக் காட்டாநி
ற்கும் அஞ்ஞானமும், அவ்வவஸ்தையை நீக்கிச் சகலாவஸ்தை
யைக் காட்டாநிற்கும் மாயையும், சகலாவஸ்தையின் மனோவாக்
குக் காயத்தால் உயிர்கள் ஆர்ச்சிப்பதாகிய கன்மமுமே. இந்த
மூன்றினுள்ளும் அஞ்ஞானம் மிகவும் நுண்ணிதாகையால் அத
னது சுபாவம் தோன்றாமையால் அஞ்ஞானம் தனியே ஒருமுத
லன்று சிவத்தினது திரோபாவசத்தியேயென்பாரும், ஆன்மா
வினது குணமேயென்பாரும், காரணமாகிய மாயையே யென்
பாரும், கன்மத்துள் தீவினையேயென்பாரும், பலவாயிருக்குமெ
ன்பாரும், ஒன்றாய் அநாதிசித்தமாயிருக்குமென்பாருமாய், இப்
படி அநேகவிதங்களாலே கூறுநிற்பர். இவ்வண்ணம் மயக்கத்

திற்கு இடங்கொடுத்ததும அஞ்ஞானமேயாதலின், அஞ்ஞானுதி திரிவித பாசம் உண்டு. எ - று. (௬0)

இத்திரிபதார்த்த நிச்சயம் எலலாாகருமம ஒக்குமாயினும், அவரவர் கோட்பாடுகள் வெவ்வேறென்று மேற்கூறுகின்றார்.

பல்லோர் துணிவும் பாரதிமூன் றுந்தேர்த
லல்லால்வே றில்லேனு முந்தீ பற
அவரவர் கொள்கைவே றுந்தீ பற.

எ - து. வீட்டுநெறி யாராயும் பலசமயிகளினது துணிவும் பாசீவபந்தங்களை மூன்றையும் விசாரித்தலேயன்றி வேறில்லை யென்றாலும் அத் திரிவிதபதார்த்தங்களினது உண்மைகளை அவரவர் கருதிக்கொள்ளுங்கோட்பாடுகள் வெவ்வேறு. எ - று.

பலசமயிகளினது துணிவுந் திரிபதார்த்த விசாரணையேயென்பது எங்ஙனமெனின், எல்லாநூல்களாலும் உயிர்கட்குக் கூறப்பட்ட தருமாதிநால்வகைப்பயனில் வீடென்பதற்குப் பொருள் விடுதலை. விடுதலையாவது பந்த நீக்கமாதலின், பந்தமொன்று உண்டென்பதும், அஃது உண்டாகவே பந்தத்தினாலே கட்டுப் பட்டிருந்து அதினின்றும் விடப்படுவான் உண்டென்பதும், பந்தம் சடமாகையினாலும் பந்தமுடையோன் சுதந்திரகீனனாகையினாலும் உயிர்களுக்குப் பந்தத்தைநீக்கி முத்திகொடுப்பான் ஒரு சுதந்திர கர்த்தா உண்டென்பதும், சாவமதசம்மதமெனக் கொள்க. அங்ஙனமாயினும், அவரவா கோட்பாடுகள் வெவ்வேறென்றது எங்ஙனமெனின்; ஆன்மாக்களுக்குக் கனமபேதம் அநேகமாதலின், அவற்றினுக்கு ஏற்க வேதாதிகள்கூறிய பொருள்களைத் தத்தமகருத்தினுக்கு ஏற்பத் துணிந்துகோடல். அஃதாவது பிரமாதி சிவாந்தமாகச சொல்லப்பட்ட வடிவங்களுள் ஒவ்வொரு மூர்த்தியைப் பரம்பொருளெனறு துணிந்து அப்பரம் பொருளுக்குப் பசுபாசங்களைப் பேதமென்றும், அபேதமென்றும், பேதாபேதமென்றும், கொள்வாரெனக்கொள்க. (௬௧)

அங்ஙனஞ் சீவபரங்களுக்குச் சமயிகள் சொல்லும் பின்ன பின்னத்துவவாதம் எத்தால் உண்டாயிற்று என்பாரைப் பற்றி மேற்கூறுகின்றார்

சீவ பரமத் துவிதமென் றிண்சொலா
ஞேவா தனைவரு முந்தீ பற
ஒன்றிரண் டென்பரா லுந்தீ பற.

எ - து. சீவபரங்களை ஏகமுமென்னுமல், துவிதமுமென்னு மல், அத்துவிதமென்று அவாதிதமாகிய சுருதி கூறுகையால், இரண்டாகில் முத்தியில் ஒன்றாதல் கூடாது, கூடுமெனில், ஒன்று கெட்டு ஒன்றாதல் வேண்டும்: கெடும்பொழுது முத்தியி ன்மையால் இரண்டென்பதே கூடாது: பொன்னும் பணியும் போல் இரண்டாகத் தோன்றுதலின் ஏகமென்னுது அத்துவித மென்றதெனக்கொண்டு அப்பதத்திற்குத் தாற்பரியம் ஏகமே யென்பாரும், அங்ஙனமன்று ஒன்றாகில் வஸ்துவுக்குப் பந்த மோக்ஷம் சொல்லவேண்டும் அஃது இன்மையால் ஒன்றென் பதே கூடாது உடலுயிராதியபோல் பேதம் தோன்றுமையின் துவிதமென்னுது அத்துவிதமெனுகின்றது. அதற்குத் தாற்பரி யம் துவிதக்கலப்பே யென்பாரும், ஆகி எல்லாச்சமயிகளும் கூறுவார். எ - று.

அனைவரு மென்றமையால் எல்லாசசமயிகளும் பேதம் அபேதம் என்பனவற்றையே அனுசரித்து நிற்கையால், அவ்விர ண்டையுமே கூறினுரெனக்கொள்க. பேதாபேதமென்பாரும் உளர்: அங்ஙனம் ஒருபொருள் இருப்பது விருத்தமாதலினு லும், அதுவும் துணிவின்கண் முற்கூறிய இரண்டினுள் ஒருப க்ஷத்து அடங்குமாதலின் அதனை ஒருபக்ஷமாகத் தொகுத்துக் கூறினுரில்லையெனக் கொள்க. (சஉ)

இங்ஙனம் கூறியவற்றுள் ஏகவாதம் சாதித்தல் கூடாதெ ன்று மேற்கூறுகின்றார்.

ஒன்றெனா வீடும்இன் றுண்டேனும் லீலையாற்
பின்னையுஞ் சாருமென் றுந்தீ பற
பெத்த மநித்தம்வீ டுந்தீ பற.

எ - து. சிவபரங்கள் ஏகமென்னும் பக்ஷத்தில் வஸ்துவுக்குப் பந்தம் இன்மையால் முத்தியே இல்லை. பந்தம் உண்டாயினும், முத்தி இல்லை. பரத்தினது லீலையால் பந்தமோக்ஷம் உண்டாயினும் பின்னும் லீலையால் பிறப்பின்கண் சாராநிற்பர். சாரும்பொழுது முன்பு முத்தியடைந்தது அவமாகப் பந்தம்நித்தியமாய் விடுமாதலின் ஒன்றென்பது கூடாது. எ - று.

அஃது எங்ஙனமெனின், சிவபரங்கள் ஏகமேயென்னின் இங்ஙனம் துவிதபாவனை வருவானேன். பந்தத்தாலெனின், வஸ்து நின்மலனாகையால் பந்தம் உண்டென்பதே கூடாது. உண்டென்னில், அப்பந்தம் வஸ்துவுக்குப் பின்னமோ அபின்னமோ. பின்னமென்னில் வஸ்துவைவிடப் பந்தம் வேறே ஒரு முதலாக உண்டாதலினால், அவ்வஸ்துவுக்கு ஏகமென்பதே கூடாது: அதுவுமன்றிப் பந்தமுடைய பொருட்குச் சுதந்திரமின்மையால் அப்பந்தத்தை நீக்குவான் நின்மலனாக ஒரு கர்த்தாவும் மேலே உண்டாகவேண்டும்: அங்ஙனம் கர்த்தா இன்மையால் அப்பந்தம் நீங்குதலே கூடாது. அங்ஙனமன்று அப்பந்தம் வஸ்துவுக்கு அபின்னமேயெனின், அபின்னம் தன்னியல்பாகையால் ஒருகாலும் பந்தம் நீங்காது. இங்ஙனமாதலால் வஸ்துவுக்குப் பந்தம உண்டாயின் முத்தியும் இல்லை. அதற்குப் பந்தமே இல்லையென்றால், அதற்கு முன்பே முத்தியும் இல்லை. அஃது ஒக்கும்: அந்தவஸ்துவுக்குச சுபாவத்திலே பந்தமுத்தி இல்லாவிட்டாலும் அதனது சுதந்திரலீலையாலே பந்தமுத்திகள் உண்டென்னில், அங்ஙனமாயின் சீவர்கள் வீடுகூடினும் பரத்தினது லீலையாற் பின்னும் பிறப்பின்கண் சாராநிற்பர். சாரும்பொழுது முன்பு முத்தி அடைந்ததும் அவமாகப் பந்தம் நித்தியமாதலால், சிவபரங்கள் ஏகமென்று கூறுதல் கூடாது எனக்கொள்க. (சஙு)

ஏகவாதத்துள் பந்தத்தைப் பிராந்தியென்பாரைப் பற்றி மேற் கூறுகின்றார்.

ஆகு முயிரபந்தத் தானது மித்தையே
லேக வமலன்க ணுந்தீ பற
எவ்வா றுளதாமென் றுந்தீ பற.

எ - து. பிரதிபிம்பம் அவிச்சின்னம் இவைபோலும் சீவர்கள் மாயையில் உண்டாகாநிற்பர். அம்மாயையும் பிராந்தியென்னில், அப்பிராந்தி ஏகத்துவ நிருமலத்துவமுள்ள பிரமத்திற்கு உண்டாகுதல் கூடாமையால், ஆத்மாக்களது அஞ்ஞானாதி பந்தம் மித்தையன்று. எ - று.

அது எங்ஙனமெனின், மித்தையாவது விஷயாதி தோஷத்தால் தோன்றும் சுத்திகா ரசதாதி பிராந்தி ஞானம்: அப்பிராந்தி ஆத்மாவுக்கேயெனின், ஆத்மாவுங் கடதர்ப்பணாதிகளிலே தோன்றும் அவிச்சின்னம் பிரதிபிம்பம் இவைபோலும் மாயையின்கணின்று தோன்றவேண்டும். அதனால் மாயையினால் சீவருமசீவர்களால் மாயையும் என்று அன்னியோன்னியாச்சிரய தோஷம் வரும். அதனால் ஆன்மாவுக்குத் தோன்றியதென்பது கூடாது: ஆனால் பிரமத்துக்கே தோன்றிற்றென்னில், அதுவும் கூடாது: பிரமம் ஏகமாதலால் விஷயதோஷமும், நிருமலமாதலால் கரணகர்த்திருதோஷமும், தோன்றுதலின்மையால், பிராந்திஞானமே உற்பவித்தல் இல்லை. அஃது இன்மையாகவே, சீவர்களும் இல்லையாக,அதற்கு முன்பே பந்தம் சொல்லுகிறதும் இல்லையாய் விடும். அதனாலே பந்தம் மித்தை அன்றென்றதெனக்கொள்க. (௬௪)

இனித் துவிதவாதமும் சாதிக்கல் கூடாதென்று மேற் கூறுகின்றார்.

ஓரிரண் டேவிறைக் குற்ற அருணையார்
சேர்வரன் றேயின்று முந்தீ பற
சேர்தலென் சீவர்வீ டுந்தீ பற.

எ - து. சிவாரங்கள் துவிதமாயிருக்குமெனில், பரத்தி னது கருணையால் அநாதியே எல்லாவுயிர்களும் முத்தியே அடை யாநிற்கும். இப்பொழுது சிருட்டியாதி தொழிற்பண்ணுதற்கு இடமே இல்லை. அவை உண்டாயிருத்தலின், சிவர்களைப் பரத் திற்குப் பேதமென்று கூறுதலும் கூடாது. எ - று.

அஃது எங்ஙனமெனின், வஸ்து பின்னமாய் ஓராத்மாவி ருக்கில், அவனும் சித்தாதலால் அவனுக்குப் பந்தம் வருவா னேன்? அதுவும் செம்பிலே களிம்புபோல் சகசம்: அப்பந்த மும் ஆத்மாவே நீக்கிக்கொள்ளில் அநாதியே நீங்கிப்போம், அஃ தின்மையால், வஸ்துவே நீக்குகின்றுனென்னில், வஸ்து ஆன ந்த சொரூப சர்வதிர்ப்தனுதலால், அவன் தனக்கு ஒருபயனும் வேண்டான்: அவன் ஆத்மாக்களால் அடையும் பயன் யாது. அங்ஙனம் பயனைக்குறித்ததன்று; வஸ்து ஒப்பற்ற பேரருளு டையோனுதலின். ஆத்மாக்களிடத்து வைத்த கருணையேயெ னில், அங்ஙனமாயின் உடனே பந்தம் நீக்கவேண்டும். நீக்குதல் கூடாதென்னில், அசத்தனுதல் வரும். மெள்ள மெள்ள நீக்குவ னெனில், பேரருளுடையோனென்பது கூடாது. இதுவன்றி யும், ஆத்மாக்கள் நித்தியமாதலாலும்,முத்தியையடைந்தோர்கள் பிறப்பின்கண் திரும்பாமையாலும், அநாதியே பஞ்சகிருத்தியம் ஒழியவேண்டும்.

அங்ஙனமன்று, ஆத்மாக்கள் மிகுதியினுலும் ஒவ்வொருவர் க்கு இருவினையொப்பும் மலபரிபாகமும் வருதல் கிளியீடாதலி னுலும், பஞ்சகிருத்தியம் ஒழியாதென்னில், எண்ணிறந்த ஆத் மாக்களும் சிருட்டிக்கு ஒருவர் முத்தியடையினும் எண்ணிறந்த சிருட்டியில் எண்ணிறந்த ஆத்மாக்கள் முத்தி அடைதலால், என்றுயினும் ஒரு காலையில் பஞ்சகிருத்தியம் ஒழியாநிற்கும். அப்படி ஒருகாலத்தில் பஞ்சகிருத்தியம் ஒழியின் தோஷம் ஏதெனில், பதியும் பசுக்களும் நித்தியமாதலால் முன்னிறந்த காலத்திற்கு அளவின்மையால் அநாதியே பஞ்சகிருத்தியம் ஒழியவேண்டும். ஒழியாமையால், இனியொருகாலத்தில் ஒழிபு

மென்பதற்குப் பிரமாணமேயில்லை. அல்லது ஒழியுமென்னில், பஞ்சகிருத்திய காரணாரம்பத்திற்கு அவதி கூறவேண்டும். அது கூடாமையால் பஞ்சகிருத்தியம் ஒழியுமென்பது கூடாது.

அங்ஙனமன்று ஆத்மாக்கள் இடைவிடாது முத்தியடையினும், உலவாக்கிழிபோல் தொலைவற்றிருக்குமெனின், அக்கிழி தெய்விகத்தினாலே பின்னும் இடையறாமல் வர்த்தித்தல்போல பசுக்களைப் பதிமுத்தியடைவித்தல்செய்ய மேலுமேலும் அதற்கு அதிபதியாகிய ஒருபதி வர்த்திப்பியாநிற்கிறதென்றாலும், அது இல்லை. இப்பதியே தற்காருணியத்தினால் உண்டுபண்ணிக் கொள்ளுகிறதென்றாலும், அன்றி ஆத்மாக்களே சகசமாய் உண்டாகா நிற்கிறதென்றாலும், உற்பத்தியே காட்டாநிற்றலால், ஆத்மாக்கள் நித்தியமென்பது வரத்திரியும். இதுவன்றியும், ஆத்மாக்கள் எண்ணிறந்ததென்னுமுறை ஆத்மபோதத்துக்கு எட்டாவென்பதொழிந்து சிவத்திற்கும் அங்ஙனம் கூறுதல் கூடாது. அதற்கு அங்ஙனந் தானேயெனின், ஓரோராத்மா பண்ணியிருந்துள்ள சங்கிதகர்மங்களுக்கு அளவில்லையாதலின், எண்ணிறந்த ஆத்மாக்கள் செய்த எண்ணிறந்த கர்மங்களையும் அதற்குக் கோரிக்கும் பலன்களையும் சர்வமுத்தியும் ஏககாலத்தில் அளவிடாநிற்கும் அப்பதிக்கு ஆத்மாக்களது தொகை தெரியாதென்னில், வகைகண்டவனுக்குத் தொகை காணப்படாதென்பது கூடாது: 'வினையும் அளவறுக்கப்படாது. அவரவர்க்கும் அவரவர் கர்மங்களுக்கும் அடையாளம் கண்டே கூட்டுவனென்னில், சர்வஞ்ஞனென்பது கூடாது. எண்ணிறந்த பொருளை எண்ணிறந்ததென்றறிகிறதே சர்வஞ்ஞத்துவமென்னில், எண்ணிறந்ததென்பது ஆத்மலக்ஷணமன்று. பலமரம் கூடினது ஒருசோலை என்பதுபோல் எண்ணிறந்ததென்பது ஆத்மசமுதாயத்துக்கு உண்டானது:' ஆத்மாவுக்கு லக்ஷணமானது சத்து சித்து நித்திய விபுவென்னும் இலக்கணங்கள். இவை ஓராத்மாவிடத்தும் பல ஆத்மாவிடத்தும் இருத்தல் போலே எண்ணிறந்ததென்னு மிலக்கணமும் அங்ஙனம்

இருக்கவேண்டும்; வது கூடாமையால் அசங்கியம் ஆத்தும லக்ஷண மென்பது கூடாது.

இதுவன்றியும், மூவகையுயிர்களுக்கும் சிருட்டிகாலத்தில் பதியினால் தனுகரணங்கள் கொடுத்து முடியுமோ முடியாதோ? முடியுமென்னில் அளவில்லையென்பதே கூடாது. இதுவன்றி யும், வரத்தும் இல்லாமல் செலவும் உண்டாயிருக்கிறபொருள் சிலகாலம் அளவுபடாவிட்டாலும் சிலகாலத்தில் அளவுபட்டுச் சிலகாலத்தில் ஒழியுமென்பதே யதார்த்தமாதலால் செலவு உண் டாய் ஒழியாதபொருட்கு வரத்துண்டென்பது வரத்திரியும். ஆத்மாக்கள் நித்தியமாதலால் பதியாலளவுபடுமென்னில், அளவு கண்டதற்கு முடிவில்லையென்பது கூடாது. ஆதலால் எவ்வித மும் பஞ்சகிருத்தியத்துக்கு ஒழிவுதோன்றுகிற்கும்: அங்ஙனம் அன்று ஆத்மாக்களெல்லாம் நித்திய சமுசாரியும் அநித்திய சமு சாரியுமாய் இருப்பார்கள்: அநித்திய சமுசாரிகளெல்லாம் முத்தி யடைந்துபோனாலும் நித்திய சமுசாரிகள் இருக்கையால் சிரு ட்டியாதி தொழில் ஒழியாதென்னில், அநாதியே அநித்திய சமுசாரிகளெல்லாம் முத்தியடைந்துபோய் நித்தியசமுசாரிகண் மாத்திரம் இருக்கவேண்டுமாதலால், இப்பொழுது முத்திஅடை வார் இல்லையாமென்பது வரத்திரியும்: உண்டாயிருத்தலின், அநித்தியசமுசாரிகளை இல்லையென்பது எங்ஙனம்? ஆதலால்,சீவ பரங்களைத் துவிதமென்று கூறுதல் கூடாதெனக்கொள்க.(௪௫)

துவிதவாதத்துள் பந்தத்தை நித்தியமென்பாரைப் பற்றி மேற்கூறுகின்றார்.

உதியா விருளை யுதித்தவை கூட்டிப
பதிபந்தஞ் செய்யுமே லுந்தீ பற
பதிசத்தி யென்னுமென் றுந்தீ பற.

எ - து. ஆத்மபந்தமாயிருந்துள்ள அஜன்னியமாகிய ஆண வமலத்தை ஜன்னியமாகிய மாயாகாரியங்களால் முதற் பிரதிபந் தம் செய்வித்துப் பின்பு தனது ஞானசத்தியால் பிரதிபந்தம்

செய்யாநிற்கும் சிவமென்னில், அப்பொழுது அச்சிவத்திற்கு அசத்தனாகுதல் வாராநிற்கும்: அதனால், பந்தம் நித்தியமென்பது கூடாது. எ - று.

அஃது எங்ஙனமெனின்; யாது நித்தியம் அஃது அஜன்னியம். அங்ஙனம் அஜன்னியமாகிய ஆணவமலம் கண்ணுக்கு இருளும் செம்பிற் களிம்பும்போல் அநாதியே ஆத்மஞான சத்தியைப் பிறிவறக் கலந்து மறைத்து நிற்குமாயின், பிரகாசத்தோடு கூடிய கண்ணுக்கு இருளும் ரசகுளிகையுடன் கூடிய செம்பிற்குக் களிம்பும் இன்மைபோலும்: நித்தியபூரண சுத்தமாயிருந்துள்ள சிவத்தோடு கூடிநின்றுள்ள ஆத்மாவை அஞ்ஞானமாவரித்தல்கூடாது. கூடுமென்னின், சிவம் அஞ்ஞான விரோதியென்பது கூடாது. அது நிற்க. ஆணவமலம் நித்தியமாகின் முத்தி எங்ஙனம் கூடும். அது பிரதிபந்தப்படுதலின் முத்திகூடுமென்னில், அங்ஙனம் பிரதிபந்திப்பது யாது. மாயாகாரியங்களினால் பிரதிபந்தமென்னில் அநாதியே அவைகூடியிருக்கவும் முத்தியெய்த்தாமையின் அது கூடாது. அங்ஙனம் அன்று முத்திகாலத்தில் ஜன்னியமாகிய சுதவதிட்ட சையோக மாயாகாரியங்களினால் பிரதிபந்தமென்னில், அவையிரண்டும் ஜன்னியமாதலால் யாது ஜன்னியம் அஃது அநித்தியமென்று அவைகளுக்கு நஷ்டமெய்தாநிற்கும். அப்பொழுது முத்தியினும் அஞ்ஞானம் ஆவரியாநிற்கும். அங்ஙனம் அன்று அவையிரண்டினாலும் சிவஞானம் ஆவரியாத அஞ்ஞானத்திற்குப் பிரதிபந்தம் வரும். அப்பொழுது சிவஞானம் ஆத்மாவுக்கு விஷயமாம். அச்சிவஞானம் நித்தியமாகையால், அஞ்ஞானத்திற்கு என்றும் பிரதிபந்தமென்னில் சிவஞானம் அஞ்ஞானத்திற்கு விரோதியேயாமாகில், அநாதியே முத்திவரும். அஃது இன்மையால், இங்ஙனம் பிரதிபந்தப்படுத்துமென்பது கூடாது.

அங்ஙனம் அன்று; அநாதியினாலே சிவஞானம் ஆத்மாவுக்கு விஷயமாகானமையின் முத்திகாலத்து ஆகுதலின், இங்ஙனம் பிரதி

பந்தம் படுத்துதல் கூடுமாயின், சிவஞானமும் மாயாவலியின் ஆத்மாவிற்கு விஷயமாங்கலின் சூரியப்பிரகாசத்தில் கண்ணிற்கு விஷயமான கடம் அப்பிரபை நீக்கத்து இருளைப்பிரதிபந்தம் செய்து பின்னும் விஷயமாகுதல் கூடாமையின், மாயா நீக்கத்தில் ஆணவமலத்தை அது பிரதிபந்தம் செய்குதல் கூடாது. அதனாலும், மாயாகர்மங்கள் இல்லாவிடில் ஆத்மாவின் ஆணவமலத்தை நீக்குதல் கூடாது என்பதினாலும், சர்வசத்தியுமுடைய வஸ்துவுக்கு அசத்தனாகுதல் வாராநிற்கும். அதனால் பந்தம் நித்தியமென்பது கூடாது என்றதெனக்கொள்க. (௬௬)

இங்ஙனம் திரிபதார்த்த நிச்சயம் பண்ணுவதொழிந்து இத்தசைக்கண் மனமுதலாகிய மாயாகாரியங்களைக்கொண்டு துவிதாத்துவித நிர்ணயம் சாதித்தல் கூடாதென்று மேல்வரும் செய்யுள் இரண்டாலுங் கூறுகின்றார்.

பந்தாந்த மூன்றும் பகர்வதல் லாலிவை
சிந்தித் துரைக்கொணா துந்தீ பற
சித்தமும் பெத்தமா லுந்தீ பற.

எ - து. பரசிவ பந்தங்களென்று சொல்லப்பட்ட திரிபதார்த்தங்களையும் உண்டென்பதே இந்நூலினது துணிவாயினும் அவற்றினை ஒன்றுக்கொன்று பேதமென்றும், அபேதமென்றும், பேதாபேதமென்றும், சமயிகள் கூறாநிற்பர். அவ்வுண்மை நிச்சயித்துக்கூறுதல் ஒருவருக்கும் முடியாது. நினைத்தற்குக் கருவியாகிய சித்தமும் மாயாகாரியமாய் இத்தசைக்கண் சீவனுக்குப் பந்தமாய் விடுதலின். எ - று.

அஃது எங்ஙனமெனின், இத்தசையின்கண் நிச்சயிப்பதெல்லாம் மனத்தைக்கொண்டாதலாலும், பரசிவபந்தங்களினது உண்மை வாக்கு மனத்துக்கு எட்டாதென்று சுருதியாதிகள் கூறுகையாலுமெனக்கொள்க. (௬௭)

மின்மினிச் சோதியால் வீடிருட் கூடுவூ னை
றன்மைபோன் மாயைகொ டுந்தீ பற
தத்துவந் தேர்வதென் றுந்தீ பற.

எ - து. மிகுந்த அந்தகாரத்தின்கண் வழிகாணாது மிகவும் வருந்தியவொருவன் மின்மினி விளக்கத்தைக் கருவியாகக்கொண்டு தனது இல்லிடத்தைக் கூடுவான் நினைத்துச் செல்வது போலும், பேரந்தகாரமாகிய அஞ்ஞானவிருளில் மறைந்துள்ள சிவன் கிஞ்சித்தாகிய மனவிளக்கத்தைக்கொண்டு தனதுண்மையை விசாரிக்கத் துணிந்தது. எ - று.

இசெய்யுளிரண்டிற்கும் பிரமாணம்: திருக்கடைக்காப்பு. "ஆட்பா லவர்க்கருளும் வண்ணமு மாதி மாண்புங்—கேட்பான் புகி லளவில்லை கிளக்க வேண்டா—கோட்பாலனவும் வினையுங் குறுகாமை யெந்தை—தாட்பால் வணங்கித் தலைநின்றிவை கேட்கதக்கார்." அன்றியும், "ஏதுக்க ளாலு மெடுத்தமொழி யாலுமிக்குச்—சோதிக்க வேண்டா சுடர்விட்டுள னெங்கள் சோதி—மாதுக்க நீங்க லுறுவீர் மனம்பற்றி வாழ்மின்—சாதுக் கண் மிக்கீரிறையே வந்து சார்மின்களே" எ-ம். திருமந்திரம். "உரையற்ற வொன்றை யுரைசெய்யு மூமர்காள்—கரையற்ற தொன்றைக் கரைகாண லாகுமோ—திரையற்ற நீர்போற் சிந்தைதெளி வார்க்குப்—புரையற்று நின்றான் புரிசடை யோனே." எ-ம். திருவாசகம். "இன்றெனக் கருளி யிருள்கடிந் துள்ளத் தெழுகின்ற ஞாயிறே போன்று—நின்றநின் றன்மை நினைப்பற நினைந்தே னீயலாற் பிறிதுமற் றின்மை—சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றாந் திருப்பெருந் துறையுறை சிவனே—யொன்றுநீ யல்லை யன்றியொன் றில்லை யாருனை யறியகிற்பாரே." அன்றியும், "நூலுணர் வுணரா நுண்ணியோன் காண்க—சொற்பதங் கடந்த தொல்லோன் காண்க—சித்தமுஞ் செல்லாச் சேட்சியன் காண்க." எ-ம். தத்துவராயர். "ஆகியு மழிந்தும் போகு முற்பவத்—துன்பந் துடைத்திங் கின்பங் கொடுக்கத்—திருவுருப் புனைந்த குரவன் சொரூபன்—பொற்ப

தஞ் சூடிச் சிறப்பதனீடு—கையிற் கனியெனக் காணு மையவோ—தர்க்க நெறியிற் சாலுவார் தர்க்கஞ்—சொல்லல தில்லை யாருஞ் சொல்லு—மனனல தில்லை யாரு மனனுங்—கனவஞ் ஞானக் காரியமாகு—மஞ்ஞா னத்தா லாகிய விருநெறி மெய்ஞ்ஞா னத்தை விளக்கு மாறென்—னிலதுள தேக மநேக மெனப—தலதில்லை தர்க்க மறைவ திலதெனி—லிலது முத்தி யெய்துத லின்ப—மலடி மைந்த னெய்துத லிலையா—முள்ளது முன்னே யுள்ள தாதலி—னெள்ளறு முத்தி யென்செய வுள்ள—தன்னின் மாசு தாநொழித் திடுத—லென்னி னேறியமாசோ முன்னே—யுள்ள மாசோ வொழிப்ப தென்னின்—னிள்ளா முன்னே யுள்ள தாகி—னிடையோர் காலத் தென்னின முத்தி—யடைவோர் இறத்தி னடையும் பின்னு—மொழிவறு பரம்பொரு ளொன்றே யாகி—னிழவு பேற தில்லை விழைய—வேறே யொருவ னுண்டெனின் வேறு—கூறின் முத்தியிற் கூடா தாகு—மிங்ஙன மான பின்ன—ரெங்ஙனஞ் சொல்வா ரிகற்சம யிகளே." அன்றியும், "பின்று பின்னம தெனவே நின்று பிணங்கா நிற்பர்கள் பேசிற்கு—முன்று நின்றிடு மனனுக் கும்பிவை யுடையானென வரு முணர்விற்கு—முன்று நின்றிடு சொருபா னந்தனை மொழி வா னறிதென முதுவேதஞ்—சொன்னு லறிகில ரவனு ரருளடி சூடா தவர்மதி கேடாயே." எ-ம். பிரமகீதை. "வேதமாகம புராண மிருதிகள் வேறு மார்க்க—ரோதுமா கமங்க டர்க்க மொன்றொன் றொவ்வாதாகு—மீதெலா மொக்கப் பண்ணை லாவதன் றிதைய துக்க—மாதலாலனைத்தும் விட்டிங் கனைத்து மாஞ் சிவத்தைப் பார்ப்பான்." அன்றியும், "சம்புவி னருளா லன்றி மாறுனுஞ் சகலதே வதைகளு மந்த—வும்பனை யுணரோ மருள்பெறும் பொருட்டே யோதிய யாவையு முளவாஞ்—செம் பொரு டன்னை யருளினு லொழியத் தெரிவினுற் றெரிகு வராக—நம்புமானுடவர் கையினு ஞற்ற மறிவரோ நாசியா லொழிய." எ-ம். ஞானவாசிட்டம். "பேதமுறு புந்தியேமாயை யாகும் பெரிதுவருந் தியுமிதனைப் பேர்த்தல் வேண்டும்—போத

முறும் பேற்றினா லன்றி மாயைப் பொருநதியின் கரைதோன்றா பொருந்தத் தோன்றி—லேதமறு மப்பதமே யிறவா வீடா யிம் மாயை பிறப்பிடமே தென்ன வேண்டாஞ்—சேதமுறக் கொல் வழியே தென்று தேர்வாய் சிதைவுற்றா லதனியல்பு தெரியு மன்றே." எ-ம். அஞ்ஞவதைப்பரணி "ஒன்றென்று நின்றசில பலவென்று நின்றசில வுபயத்து நின்ற சிலபே — யன்றென்று நின்றதனை யாமென்று சொல்லியுட னடகிட்டு விட்ட சில பேய்." எ-ம். சிவஞானசித்தியார். "பந்தமும் வீடுமாய பதபதார்த்தங்க ளல்லா—னந்தமு மாதியில்லா னளப்பில னாதலாலே—யெந்தைதா னின்ன னென்று மின்னதா மின்னதாகி—வந்திடா னென்றுஞ்சொல்ல வழக்கொடு மாற்ற மின்றே." எ-ம். நெஞ்சு விடுதூது. "பண்ணின் பயன்சுருதி யாகமங்கள் பார்த்துணர்ந்து—நண்ண வரியதொரு நாடுடை யான்." எ-ம். சிவானந்த மாலை. "இந்திரசா லங்காட்டு மஞ்சனக்கண் ணோடிருந்து—முக்தவுல கங்காண மூனாவதாஞ் - சிந்தனையுஞ்—சிற்றறிவு நீக்கியருட் சோராது பாதிகொடு—தற்பரத்தைத் தேடுமது தான்." எ-ம். ஒழிவிலொடுக்கம். "மணிப்பாம் பிருளின் மறைந்திருக்கத் தேடுங்—கணக்காங் தற்போதத்தைக் காட்டி - யுணர்த்தினா—நீரிற்கிணறு நிழலுயுத்த மும்போலா— மாரித்தை நீக்கியிருப் பார்." எ-ம். மற்றும் வருவனவற்றாற் காண்க. (சஅ)

இங்ஙனம் கூறிய உண்மையை அறிதற்பொருட்டு மனோலய சாதகம் செய்யவேண்டுமென்று மேற்கூறுகின்றார்.

ஆதலாற் பந்த மறுப்பான் மனோலய
சாதகஞ் செய்வனா லுந்தீ பற
தற்பரந் தோன்றுமா றுந்தீ பற.

எ - து. பெத்த தசைக்கண்ணே சீவாதிகளினது உண்மை தெரிதல் ஒருவருக்கும் கூடாமையால், அப்பந்தத்தை நீக்குதற் பொருட்டுச் சிவதரிசனம் வரும்படி மனோலயசாதகம் செய்ய வேண்டும். எ - று.

இதன் கருதது பந்தநீக்கத்திற் சிவதரிசனமும், சிவதரி சனத்தின் மனோலயமும், ஒருதலையாக வேண்டப்படுமென்ப தாயிற்று.

மனோலயஞ் செய்யவேண்டுமென்பதற்குப் பிரமாணம்: திருமந்திரம். "மனமாயை மாயை மாயை மயக்க—மனமாயை தான்மாய மற்றொன்று மில்லை—பினைமாய வேண்டா பிதற்ற வும் வேண்டா—தனையாய்ந் திருப்பது தத்துவர் தானே." எ-ம். தேவிகாலோத்தரம். "கருத்தடங்கின் முத்தியது கையகலிற் கட்டாகும்—விரித்தபொரு ளிதுவென்ன வறிவுடைய மேதக் கோர்—திருத்தகுநல் லறிவாலே சித்தத்தைத் திறம்பாம—லரு த்தியுட னிலைநிறுத்து மதுவறிவின் பயனாமால்." எ-ம். ஞான வாசிட்டம். "சனன கருமங் களின் வித்தாய்த் தருவை யசைக் குங் காற்றேபோற்—றினமு முடலை யசைப்பதுவுஞ் சித்த மித னைத் தீர்வதுவே—யனக சகலத் தியாகமதா மதுவே பரம வான ந்தம்—வினவு பிறவெல் லாமிகவும் வெருவுகின்ற வெந்துயரே." எ-ம். பிரபுலிங்கலீலை. "விரிந்த நெஞ்சங் கருவியாம் விடய முணர விரியாம—லொருங்கு நெஞ்சங் கருவியாந் தன்னை யுணர வொருங் காமல்—விரிந்த நெஞ்ச முடையானை விடாது பிறவி யென்றுணர்க—வொருங்கு நெஞ்ச முடையானை யுறாது பிறப்பென் றுணர்கவே." எ-ம். மோகவதைப்பரணி. "வீயு மோகினை வேராறுமல் விடுஞ்செய் மோகன் விவேகனுன்—மாயு மோவுயர் மாயை யாரு மனத்தி னுரு மிருக்கவே." எ-ம். ஒழிவி லொடுக்கம். குடையுஞ் செருப்புங் கொடொடப்ப தன்றிப்— படியும் விசும்பும் பரப்பி - யிடையாடு—மாத்திரம்போ லேசமய வாதமனம் போதாத—சாத்திரங்கற் றூர்வீடுற் றூர்." எ-ம். மற் றும் வருவனவற்றுற் காண்க.

மனோலயமுண்டாகவே திருவருடோன்று மென்பதற்குப் பிரமாணம்: திருக்கடைக்காப்பு. "கள்ள நெஞ்ச வஞ்சகக் கரு த்தைவிட் டருத்தியோ—டுள்ள மொன்றியுள்குவா ருளத்துளா

ஞுகந்தவூர்—துள்ளிவாளை பாய்வயற் சுரும்புலாவு நெய்தல்வா-யள்ளனுறை யாரல்வாரு மந்தணுரு ரென்பதே." எ-ம். தேவாரம். "வெள்ளத் தார்விஞ்சை யார்கள் பெ ரும்பவே—வெள்ளத் தைச்சசடை வைத்த விகிர்தனுர்—கள்ளத் தைக்கழி யம்மன மொன்றின்—றுள்ளத தில்லொளி யைக்கண்ட துள்ளமே." எ-ம். திருப்பாட்டு. "குண்டலங் குழைதிகழ் காதனே யென் றுங் கொடுமழு வாட்ப டைக் குழகனே யென்றும்—வண்டலம் பும்மலர்க் கொன்றைய னென்றும் வாய்வெரு வித்தொழு தேன் விதி யாலே—பண்டைநம் பலமன முங்களைந் தொன்றுய்ப் பசு பதி பதிவின விப்பல நாளுங்—கண்டலங் கழிக்கரை யோதம் வந்துலவுங் கழுமல வளநகர்க் கண்டு கொண்டேனே." எ-ம். பட்டணத்துப்பிள்ளையார். "இருக்கு மருதினுக் குள்ளிமை யோர்களு நான்மறையு—நெருக்கு நெருக்கத்து நீளகத்திற் செ ன்று மீளவொட்டாத்—திருக்கு மறுத்தைவர் திமையுந் தீர்த்துச்செவ் வேமனத்தை—யொருக்கு மொருக்கத்தி னுள்ளே முளைக்கின்ற வொண்சுடரே." எ-ம். அருணகிரிநாதர். "அராப் புனை வேணியன் சேயருள் வேண்டு மவிழ்ந்த வன்பாற்—குராப் புனை தண்டையந் தாடொழ வேண்டுங் கொடியவைவர்—பராக் கற வேண்டு மனமும் பதைப்பற வேண்டு மென்று—விராப்பக லற்ற விடத்தே யிருக்கை யெளி தல்லவே." எ-ம். தத்துவராயர். "இசையா னலனெனை யாளுடையா யானிந் தியங்களுட—னசை யாத நெஞ்சங்கொண் டன்பா னினைந் தழியு முடம்பின்—னசையான தின்றி நலஞ்செய்வ ராயினற் றுடலையின்—மிசை யார வைத்தென்று மெய்யான தன்னை வெளிப்படவே" எ-ம். தேவிகாலோத்தரம். "மருவிய பொருண்மே லன்பாய் வான ரம் போர்ச ரித்துத்—திரியுமச் சித்தந் தன்னைத் திரித்துச்சூ னியத்தே நின்றுன்—மருவினேர் பிறித லின்றி வானவ ரறிவுக் கெட்டாப்—பொருவிலா நித்த சுத்தப் பொருளினை யடைவ ரன்றே." எ-ம். பகவற்கீதை. "வேபண்டல் வேண்டாமை யின்றி மிகைசெலாப் புலன்க ளாலே—மாண்டபோ கங்க டுய்ப்பான்

மனங்கலக் குருன்றூற் றத்தா—லீண்டிய தெளிவுண் டாமாற் றெளியவே யெல்லை யின்றிப்—பூண்டநோய் நீங்கு நீங்கப் புலனலாப் பொருளுந் தோன்றும்." எ-ம். பிரமகீதை. "பரப்பிரணிந்தி யங்களைப் பராக்குறப் பரம்பர னுள்ளாகி—யிருத்தலாலறி வுண்கிலன் புறம்புள விரதமே காண்கின்றான்—றிருப்பிஞானநாட் டத்தினு லப்பொரு டெரியவே பெறுந்திர—னொருத்த னேயவி நாசியா கியவொளி யாயவ னொளிர்கின்றான்." எ-ம் பிரபுலிங்கலீலை. "பொறியிற் புறத்து மனஞ் செல்லிற் புலனே தோன்றி யிமைகத்திற்—செறியிற் கரணம் பரானந்த சிவமே தோன்றுஞ் சிவந்தோன்ற—வறிவிற் பரந்த விடயமயமாகுமுலகந் தோன்றாமற்—பிறவித் துயரக் கடல்கடந்து பேரின்பஞ் சார்குவனென்றும்." எ-ம். திருக்களிற்றுப்படியார். "அன்றிவரு மைம்புலனு நீயு மசையாம—னின்றபடி யேநிற்க முன்னிற்குஞ் - சென்று—கருதவதன் முன்னங் கருத்தறியப் பாயு—மொருமகடன் கேள்வ னுனக்கு." எ-ம். சிவானந்தமாலை. "ஓயாம லைம்புலன் சேர்வாயி லொடி யெறிந்தங்—காயா மனத்தை யலைவறுத்து - மாயாதே—பண்டை யறிவொழிந்து பண்டையறி வாய்ப் பரத்தை—மொண்டழுந்திப் போவதுமுத்தி." எ-ம். மற்றும் வருவனவற்றாற் காண்க.

மனோலயத்திற்றோன்றிய திருவருளாற் பந்த நீங்குமென்பதற்குப் பிரமாணம்: திருவள்ளுவர். "பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தா—ரிறைவ னடிசேரா தார்." எ-ம். தேவாரம். "பொன்னுள் ளத்திரள் புன்சடை யின்புற—மின்னுள் ளத்திரள் வெண்பிறை யாயிறை—நின்னுள் ளத்தருள் கொண்டிரு ணீங்குத—லென்னுள் ளத்துள தெந்தை பிரானிரே." எ-ம். திருவாசகம். "என்புள் ளுருக்கி யிருவினையை யீடழித்துத்—துன்பங் களைந்து துவந்துவங்க டேய்வித்து—முன்புள வற்றை முழுதழிய வுள்புகுந்த—வன்பின் குலாத்தில்லை யாண்டானைக் கொண்டன்றே." எ-ம். பட்டணத்துப்பிள்ளையார். "உற்பவந் துடைத்த னிற்பிடித் தல்லது—பிறிதொரு நெறியு மில்லை." எ-ம். தத்

துவராயர். "இதையா லயத்தி லிருப்பா ரறிய விரந்துருகிப்—பதையா திருப்பதென் பாவிநெஞ் சேபர ஞ்ரருளாற்—சிதையா தொழியிற் சிலுகாய் விளையுமிச் சில்சமயப் —கதையான் மனக்கணக் கால்விடு மோலிக் கடும் பிறப்பே." எ-ம். பிரமகீதை. "இந்த யாக்கையி லியம்பிய பரம்பொரு ளறிபி—லந்த மானுடன் மெய்யதா யபேதமா கியசிர்த்—தொந்த மாம்பர மடைந்திடுந் தோன்றிடா தாகிற்—பந்த மாம்பவக் கடற்படும் பரகதியடையான்." எ-ம். சிவானந்தமாலை. "வெய்யோன் வரவரவே மெய்ந்நிழலுந் தம்முளே—பைய வொடுங்கும் பகுதிபோ-லைய—னருள்வந் தணுகவே யாணவமாம் போத- மருளுங் கெடும்பேர் மறிந்து." எ-ம். வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க.()

மனோலயத்தாற் பரத்தையுணர்ந்தோன் மற்றையவனைத் தையு முணர்ந்தோனென்று மேற் கூறுகின்றார்.

> உணர்ந்தோ ரனைத்துமா மோர்பொரு டன்னை
> யுணர்ந்தோ ரனைத்துமென் றுந்தீ பற
> உள்ளங்கை நெல்லியீ துந்தீ பற.

எ - து. தானன்றிப் பிறிதொரு பொருளும் இன்மையால் அனைத்துமான ஒரு பரம்பொருளை யாவரொருவர் உணர்ந்தார் அவரே எல்லாப் பொருள்களையும் ஒருங்கே உள்ளங்கையினெல்லிக்கனிபோல் ஐயந்திரிபின்றிப் பிரத்தியக்ஷமாக உணர்ந்தோர். எ - று.

இ-ம். திருவாசகம். "பந்த விகார குணங்கள் பறிந்து மறிந்திடு மாகாதே—பாவனை யாய கருத்தினில் வந்த பராவமு தாகாதே—யந்த மிலாத வகண்டமு நம்மு ளகப்படு மாகாதே—யாதி முதற்பர மாய பரஞ்சுட ரண்ணுவ தாகாதே—செந்துவர் வாய்மட வாரிட ரானவை சிந்திடு மாகாதே—சேலன கண்களவன்றிரு மேனி தினைப்பன வாகாதே—யிந்திர ஞால விடர்ப்பிறவித்துய ரேகுவ தாகாதே—யென்னுடை நாயக ளுகிய வீசனெதிர்ப்படு மாயிடிலே." எ-ம். பட்டணத்துப்பிள்ளையார்

'மங்கை பங்க கங்கைநா யகநின்—றெய்வத் திருவருள்
பெட்டத்தமின்—மாயைப் படலங் கீறித் தூய—ஞான
வெற்றனன் பெற்றபி—னின்பெருந் தன்மையுங் கண்
காண்டலு—மென்னையுங் கண்டேன் பிறரையுங் கண்
னின்னிலை யனைத்தினுங் கண்டே னென்னே—நின்னைக்
காணு மாந்தர்—தன்னையுங் காணுத் தன்மை யோரே." எ-ம்.
திருவாய்மொழி. "மனிதரு மற்று முற்று மாயப்பிறவி பிறந்த—
தனியன் பிறப்பிலி தன்னைத் தடங்கடல் சேர்ந்த பிரானைக்—
கனியைக் கரும்பினின் சாற்றைக் கட்டியைத் தேனை யமுதை—
முனிவின்றி யேத்திக் குனிப்பார் முழுதுணர் நீர்மையி னாரே."
எ-ம் பிரமகீதை. "எப்பொருள் களுக்குந் தோற்றமு நிலையு
மிறுதியு மிதன்கணே யாகி—யொப்பிட வொன்று மின்றியே
நின்று முள்ளதா யுரையுணர் விறந்த—வப்பொரு ளேனோ
யறிந்தபோ தெல்லாப்—பொருள்களு மறிந்தவா மந்த—மெய்ப்
பொரு டானே யெப்பொருள் களுமாய் விளங்கலால் வேறிலா
மையினால்." அன்றியும், "ஈசனை யறிந்த வந்த விடத்திலே யெ
ன்று மெல்லாப்—பாசமு நசித்த ருனும் பணியறப் பவத்தின்
றீர்வுங்—காசுறு மகில மாய கங்குலின் கழிவுந் தானே—யாசுறு
மகண்ட ரூபி யாகையு மனைத்து மெய்தும்." எ-ம். வரும். மற்
றும் வருவனவற்றாற் காண்க. (௩0)

மனோலயசாதனஞ் செய்யு நீர்மைமேற் கூறுகின்றார்.

அந்நிட்டை நீயு மடைகுதற் கூனுயிர்ப்
பின்னத்தை முன்னுணர்ந் துந்தீ பற
பேதைமை நீங்கிடென் றுந்தீ பற.

எ - து. பந்தநீக்கத்துக்கு ஏதுவான அந்த மனோலய நிஷ்
டை கூடுதற்குப் பந்தத்தை முன்பறிந்து நீங்கவேண்டலின் தே
கேந்திரியாந்தக்கரணங்களை நேதி நேதி யென்று ஒன்றொன்றா
கக் களைந்து தன்னுண்மை காணுவதாகிய ஊனுயிர் வேறுபாடு
முன்புணர்ந்து உனதறியாமையை நீங்குவாய். எ - று. (௩௧)

என்னுண்மையாவது இத்தேகத்தின் வேறில்லை
கமே நானென்று கூறுநிற்கும் மாணாக்கனை நோ
நீயல்லையென்று மேற்கூறுகின்றார்.

ஓயு மரணாந்த காலத் துருத்துவெந்
தீயட லானுமிங் குந்தீ பற
தேகநீ தானல்லை யுந்தீ பற.

எ - து. இளைத்தேன் பருத்தேனென்று தேகத்தைச் சொல்லுதலினாலும், இதனுட் சோதிக்குமிடத்தும் இதற்குவேறாக வோராத்மாவைக் காணாதபடியினாலும், தேகமேயானென்னில், அது கூடாது. என்மாடு என்வீடு என்கிறபோது சொன்னவனுக்கு அவை வேறாயிருத்தல்போல் என்னுடம்பென்றலாலு யோகிகள் கூடுவிட்டுக் கூடுபாய்தலினாலும் மரணகாலத்தி அக்கினி மிகவும் பற்றிக் கடத்தைப்போல் சுடுதலினாலு தேகம் நீயல்லைவேறே. எ - று. அடலானுமெனவும்மைய மற்றையமறுதலையும் வருவிக்கப்பட்டதெனக்கொள்க. ([illegible])

பிராணவாயுவும் ஆத்மாவல்லவென்று மேற்கூறுகின்றார்.

உணர்வின்றி நாளு முறக்கத் தடைந்த
மணநுக ராதானு முந்தீ பற
வாயுவு நீயல்லை யுந்தீ பற.

எ - து. தேகத்திலே பிராணவாயு இருக்கிறபோது இது குளிர்கிறது இது சுடுகிறது என்றறிந்தும் அது நீங்கினபோது கடம்போலத் தேகம் சுடப்படுதலினாலே பிராணவாயுவே யானென்னில், உணர்வின்றித் தினந்தோறும் நித்திரையில் அஃது இராநின்றும் அப்போது அடைந்த கந்தாதியையுணராமையினாலும் பிராணவாயுவும் நீயல்லை. எ - று. (௩௫)

இந்திரியங்கள் ஆத்மாவல்லவென்று மேற்கூறுகின்றார்.

ஒன்றுணர் போழ்தொன் றுணராமை யானைம்புல
னொன்றுணர்ந் தோதலா னுந்தீ பற
உணர்விந் தியங்களன் றுந்தீ பற.

எ - து. சுநதாதியைக் கிராணாதி உணராநிற்கின்றன அவை அடங்கின நித்திரையிலே தேகமும் பிராணவாயுவும் இருக்கப் பாம்புவரினும் சத்துரு வரினும் அறியாமற்கிடத்தலால் ஞானேந்திரியங்களே யானென்னில், இந்திரியங்களுள் ஒன்று உணர்போழ்து ஒன்று உணராமையாலும், ஒன்றை ஒன்று உணராமையாலும், ஒன்று அறிந்ததை ஒன்று அறியாமையாம், அவைகளுக்கு வேறாய் ஒன்று இருந்து நான் கண்டேன் கட்டேனென்று கூறுதலாலும், கண்ணிற்குத் தீபம்போல் னக்கு விஷயகாரணமல்லது அவைகள் நீயல்லை. எ - று.

ஒன்றுணர்போழ்தொன் றுணராமையானுமென்றமையால் துவக்கிந்திரியமே ஆத்மாவென்பாரையும் மறுத்தாராயினார். அஃது எங்ஙனமெனில், துவக்கிந்திரியம் சரீரமெல்லாம் வியாபித்தலின் இஃதே மற்றைய நான்குகொள்கையினின்று சத்தாதியை உணராநிற்கின்றதெனில், அது கூடாது. அங்ஙனமா ஐம்புலனும் ஒருங்கேயுணர்தல் வேண்டும்: அஃது இன்மையால், துவக்கிந்திரியமும் ஆத்மாவன்றென்று மறுக்கப்பட்டதெனக் கொள்க. (௫௪)

வாக்கிந்திரியமும் ஆத்மாவல்லவென்று மேற்கூறுகின்றார்.

எனெனு ஆமற்கு மியானென தென்றபி
மான மிருத்தலா னுந்தீ பற
வாக்குநீ தானல்லை யுந்தீ பற.

எ - து. இந்திரியங்களுணர்ந்ததை நான் கண்டேன் கேட்டேனென்று வாக்கிந்திரியம் கூறாநிற்கின்றது: தானறிந்ததைக் கூறுமல்லது அறியாததைக் கூறாமையால் வாக்கிந்திரியமே யானென்னில், அது கூடாது. வாக்கில்லாத ஊமனிடத்தும் யானெனதென்கிற அபிமானம் இருத்தலால், அது வசனகாரணமல்லது நீயல்லை. எ - று. (௫௫)

ஆங்காரமும் புத்தியும் மனமும் ஆத்மாவல்லவென்று மேற்கூறுகின்றார்.

ஆங்கார நிச்சயித் தப்புத்தி பற்றலா
ளேங்குள ளென்மன முந்தீ பற
ஒன்றுநீ யன்றிவற் றுந்தீ பற.

எ - து. ஊமனுக்கும் யானெனதென்கிற அபிமானம் இருத்தலால் இங்ஙனம் செய்வது அகங்காரமாதலின் அதுவே யானென்னில்; அது கூடாது. ஒருபொருளின்கண் நிச்சயமில்லாவிடத்து இஃது என்னதென்றும், யானுடையேனென்றும், அபிமானித்தல் கூடாமையால் அஃது உனக்குக் கிரியாகாரணமல்லது நீயல்லை. ஆயின் நிச்சயிப்பது புத்தியாதலால், அஃதேயானெனில், ஒருபொருளின்கண்ணே பற்றுதலில்லாவிடத்து அப்பொருளை நிச்சயித்தல் கூடாமையால், அஃது உனக்கு ஞானகாரணமல்லது நீயல்லை. ஆயின் அங்ஙனம் செய்வது மனமாகலின், அஃதேயானென்னில், நெஞ்சு நினைவெழாவி அஃது ஒன்றையும் பற்றுதலின்மையால், அஃது உனது காரணமல்லது நீயல்லை. எ - று.

சித்தமும் ஆத்மாவல்லவென்று மேற்கூறுகின்றார்.

அறிவா னினைவு மடங்கலாற் சித்த
மறிவன் றசித்தாமென் றுந்தீ பற
அறிவுன் னுருவமென் றுந்தீ பற.

எ - து. அங்ஙனம் நினைப்பது சித்தமாதலால் அதுவேயானென்னில்; அது கூடாது. நெஞ்சின்கண் நினைவும் எழாமல் அடக்குவோர் உளராகலின் வேறே ஓரறிவு இருந்துகொண்டு சித்தத்தையும் அசைவின்றித் தடுத்தலால் அச்சித்தமும் நீயல்லை: இவையெல்லாம் யானலனாகில் எனது உண்மை மற்றியாதென்னில், தத்துவாதீதமாகிய ஞானமே நினது வடிவம். எ - று. ()

மேல் அவ்வாத்மாவினது பரிபூரணங் கூறுகின்றார்.

எங்குமாய் முத்தியி லீசனோ டெய்தலான்
மங்கா வுயிர்விபு வுந்தீ பற
மற்றைய கூறொணா துந்தீ பற.

எ - து. அழிவின்றி வழங்காநிற்கும் ஆத்மா பரமுத்தியில் பூரணமாகிய பரத்தோடு கூடிப் பூரணமாகையால் அதனுக்கும் மகத்பரிமாண மில்லது மற்றைய பரிமாணங்கள் கூறுதல் கூடாது. எ - று.

அஃது எங்ஙனமெனில், உள்ளதன்றி இல்லது ஒருகாலும் உண்டாகாமையின முத்தியில் விபுத்துவமுடைய ஆத்மா பந்தத்திலே அஞ்ஞானத்தால் ஆர்ப்புண்டதாதலின், கருமத்தளவில் அணுபரிமாணமாய், மத்தியபரிமாணமாயும், விளங்காநிற்கும் உண்மை மகத்பரிமாணமே யென்பது துணிவென்றதெனக் கொள்க. (ருஅ)

மேல் தன் உண்மை அறிதற்கு முற்பழகிப்போந்த வாசனை நீங்கவேண்டுமென்று மேற் கூறுகின்றார்.

இந்த உண்மையின் னியல்பை மறைத்தவப்
பந்தத்தைப் போக்கநீக் குந்தீ பற
பழவா சனையலா முந்தீ பற.

எ - து. பலவாறுவமாயிருந்துள்ள நினது உண்மையைச் சற்றும் தெரியவொட்டாமல் அநாதியே மறைத்துநிற்கும் அந்த அநாதி பாசங்களை வேறாக்கினதற்கு நின்னோடு பழகிப்போந்த வாசனையும் பற்றற விடுவாய். எ - று.

இ-ம். தேவிகாலோத்தரம். "மந்திரஞ் செபந்தி யானம் பூசனை வணக்கம் வேண்டா—வந்தமி லாத முத்தி யுபாயமே யறிதல் வேண்டும்—சிந்தனை புறமே செல்லிற் றுயரமே திரிய மீட்கிற்—பந்தமாந் துன்ப நீங்கிப் பரமான வின்பஞ் சேர்வாய்." எ-ம். பிரமகீதை. "சதுர்மறை யொழிந்தவாதனை பொலாத தர்க்கவா தனையுலகத்தின்—மதமுற வொழுகும் வாதனை தாரமக்கள் சுற்றத்தின் வாதனையு—மிதமுறு பொருளில் வாதனை தேகேந்திரியமனம் புத்திநற் பிராணன்—முதலவா தனையும் வித்தைவா தனையு முடிவிலபோ கத்தில்வா தனையம்" அன்றியும், "ஏறுடை யானைத் திருநெடு மாலை யிகழும்வா தனையும்வே தத்

திற்—கூறிடுஞான சாதன மாகக் கொள்ளுமுத் தளபுண் டா
தை—மாறுடணிகழும் வாதனை பாவ வாதனை யாவுமா னுட
க்கு—வேறடும்பரமாத் துவித ஞானத்தை விலக்குறும் விரோ
விண்ணவரே" அன்றியும், "ஆதலால் வீடதனி னாசை யு
ளோ னதின் கிக தாற்பரிய ஞெகி முன்ன—மோதும்
தனைகளொல்லா மிகந்தெப் போது முற்றபர மாதுவித ஞா
யாவான் பேதமே தாந்தங்க ளுரைக்கப் பட்ட மேலான
துவித ஞான மான—சாதனும் மிரமத்தை கவிட லா
காமௌனத் திருப்பதலா ளுகத் தீரே" எ-ம். ஞானவாசிட்
"மறுகுவா லைகை சேர்ந்த மௌனத்தை யெய்திய வேரே—
கதி நல்ல தில்லை யுணர்வன வுணர்ந்த தாருந்— திசை
துருசுற்றி மீண்டதாந் தொல்லை ஞாலர் தறுகியா முண்
கண்டோர் வொரிந்ரே ரவழ்கின் மாய்வோர்." எ-ம். சி
புராணம். "அரியுரைக் கருமனந்த கோடிபிறப் பிடை
மாற்றினார் துவறாரிலா பரகதியைச் சைவினிசொல்
தச்சொற்க டோர்க—கன்றிதரு பொருட் டெளிவாந்
ஞானஞ் சிவனருளா னண்ணின் முத்தி—யொன்றலெனி
வினுன் மூதுணர்வா விதற்கேற்ற வுரை போர்வாய்."
சிவஞானதீபம் "சாத்திரம் புத்தகம் பூசை சாமாமந்த் த
தந்திரமச் சிரயோகந் தவவிரதஞ் சீல மேத்தரிய பா ன
யெண் சித்திகளை முதலா மெப்பயனு முத்திவிலக் ன
வொருசொல் லதனூற்—றீர்த்தவன் மெய்த் தேசிகனு மவ
னருளா லகலாச சித்தமல மறுத்துலகிற் றீமை நன்மை செயி
னும்—வாய்த்ரகதி ரவன்செயல்போ லிசைந்திசையா தொழு
கும் வண்மையரே மெய்ஞ்ஞான வுண்மைநிலை யினரே." எ-ம்.
சிவானந்தமாலை "பூசனையும் வாசனையும் புத்தகமுஞ் சாத்திர
மும்—வாசகமா மந்திரமுந் தந்திரமு—நேச—மிறக்கின்ற சிந்த
னையு மெல்லாம் பொருளை—மறப்பென்று மாணு மதி." எ-ம்.
ஒழிவிலொடுக்கம். "கிரியை கிளைத்துவந்து கேட்டவர்க்குச்
சும்மா – திரியச் சுகம்விளைத்த சீமான் - குருவன்றிச்—சற்றே

பதைப்பைத் தரினுஞ் சகம்படைக்கக்—கற்றானுங் காலனுமாங் காண்'' அன்றியும், ''சுகாசீதம் வேண்டித் தொழில்செய்வோ மென்று—னகாரோ * துயில்வார் நடந்தோர் விகாரமெனச்—சந்திரமும் பூசைச் சமாதிகளுஞ் சார்போரக் —கோத்திரங் காண் மாயக் குழாம்.'' எ-ம். வள்ளல் வாக்கு. ''வார்த்தையா லர்ச்சனையான் மந்திரத்தாற் பாவகத்தாற் சாத்திரத்தாற் றந் திரத்தாற் றர்ப்பணத்தா - னாசையுடன்—னுர்பவமு மோயாதிங் குன்றனை மாமாயா சம்பிரமுங் கிட்டாதே தான்.'' எ-ம். வரும். மற்றும் வருவனவற்றுங் காண்க. ()

வாதனைகளெல்லாம் நீங்கி மாணுக்கனுக்குச் சமாதி கூடுதற்கு ஆசனம் மேற்கூறுகின்றார்.

> பட்டற முத்தித் தடையா யுளவெலாம்
> விட்டனை போயினி புக்கி பற
> மேலே. சாசனந் துக்கி பற.

எ - று. முத்திக்கிடையூறாய் இவ்வாறு கூறப்படுஞ் சகல வாசனையும் மாசற முற்ற நீத்தனையாயின், மேற்சமாதி கூடுகைக்கு அனுகூலமாகிய தொரு சுகாசனம்; அவ்வாசனத்தைப் பொருந்துக. எ - று.

இ-ம். பகவற்கீதை. ''தலையுங் கழுத்து முடம்புமிவை செவ்வே தளராதே யிருக்கு—நிலையி லிருந்து கண்களைத்தன் மூக்கி னுனிமே லேகிறுத்தி யலையுங் கடல்போற காமமுமெய்ப் பயமந் தன்னைவிட் டகல —வுலைவு மனமுள் ளடங்கவெனை யணர்ந்தே யிருக்கு மதுயோகம்'' எ-ம். பிரமகீதை. ''தக்கஞா னத்தத் தானபெறற் பொருட்டுத் தனியிடந் தனையடைந் திதய—க்கமே வாமற் சுகாசனத் திருந்து தோடலை கழுத்துடம் பவைநே—ரொக்குமா றிருத்திப் பூதிகொண் டிர்த வுடம்பையுத் தூளனம் பண்ணி—மிக்குவாய் வருமிந் திரியங்களை யெல்லாம் டயமே லெழாவகை மீட்டு.'' எ-ம் அமுதசாரம். ''செவ்வே —லுங் கழுத்துஞ் சிரமுமுற—வெவ்வா தனத்தே யிருந்தெவர் நுங் - கைவந்தால்—வாத முதனோய் கலியா மதியுடையோ—

ராதன மென்ப தது" எ-ம். வரும் மற்றும் வருவனவற்றுங் காண்க. (கூ0

மேல் இச்செய்யுள் தொடங்கி உண்மைநிஷ்டை கூறுகின்றார்

வாங்கிப் பொறியைந் தணின்ற மனந்தன்னை
நீங்கா தகத்திருத் துந்தீ பற
நினைவு மெழாமலென் றுந்தீ பற.

எ - து. ஐம்பொறிகளோடு கூடிச சத்தாதி விஷயங்களைக் கவராநிற்கும் மனத்தினை அவற்றினை விட உள்ளே வாங்கிப் பின்பு அவற்றின் வழி போகாமல் நெஞ்சிலே வைத்து அவ்விஷய வாசனைகளும் எழாதபடி அடக்கவேண்டும். எ - று.

இ-ம். தேவாரம். "பொறிப்பு லன்களைப் போக்கறுத் துள்ளத்தை—நெறிப்படுத்து நினைந்தவர் சிந்தையுள்—அறிப்பு றும்மமுதாயவ னேகம்பன் - குறிப்பி னுற்சென்று கூடித் தொழுதுமே." எ-ம். திருவாய்மொழி. "புலனைந்து மேயும் பொறியைந்து நீங்கி—நலமந்த மில்லதோர் நாடு புகுவீ—ரலமந்து வீய வசுரரைச செற்றான் - பலமுந்து சீரிற் படிமினோ வாதே." எ-ம். பகவற்கீதை. "வாங்கி யைம்பொறி நின்ற மனந்தனை—நீங்கிடாவகை நெஞ்ச விருத்தியே—தீங்கி யாவையுஞ்சிந்தை செயாவணம்—பாங்கியாதது வேபயில் வாயரோ." எ-ம். ஞானவாசிட்டம். "மனமணிபேதச சேற்றின் மறைந்தொரு வருக்குந் தோன்று—கன முற விவேக நீராற் கழுவினுற் சித்தி காட்டும் வினவுறு விவேக வன்பான் மெய்ம்மையை மதியாற் கண்டு- சினமுறு பொறியை வென்று நீவரும் பிறவி தீர்வாய்." பிரபுலிங்கலீலை. "இந்திய மோரொன் றுவிட் டிடின் மற்றை யொறு சாரு—முந்திய மனம ழிப்ப முற்றும்போ மணிய பாம்பினைந்தலை களினு ளொன்றை யரிந்திடின் மற்றொன் றுலஞ்சிந்திடு மிடற நிந்தாற் றீர்ந்திடு மொருங்கு மாதோ." எ சிவானந்தமாலை. "பூதஞ்சுழலும் பொறிபுலனுந் தக்கரணபோதங் கழித்துநாள் போக்காதே - போதச்—சிறையா நி

யத்தே—நிறையா நிறைவாகி நில்." எ-ம்.
வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. (கக)

பதைத்தெழா துள்ளம பதைப்பாய பதைக்கில்
வதைப்பாயங் கங்கேயென் றுந்தீ பற
மாயு மனப்பேயென் றுந்தீ பற.

எ - து. சித்தத்தைச சற்றும் அசையாதவண்ணம் அடக்கக்கடவாய். அங்ஙனம் அடங்காது அசைந்து ஒருபொருளைப் பற்றுமாயின், பற்றுமுதிர்ந்து நிசசயிப்பதற்குமுன் விவேகத்தால் உடனே அழித்து முன்னின்ற நிலையே நிற்கக்கடவாய். அப்பொழுது அலகைபோல் உழலாநிற்கிற மனம் இறந்திடும். எ - று

இ-ம். தேவிகாலோத்தரம் "பற்றிஞெற் சலிக்கு முள்ளம் பூர்ணமா பண்ணிக்கொள்க—நிற்றலின் றெனினுந் தத்த நிலையினி னிறுத்திக் கொண்டாற் பெற்றன மென்று பேணிப் பின்னைப்பே ராமற் காக்கு நற்றவ ரன்றி யிந்த வுலகினி னல்லார் யாமே." எ-ம். ஞானவாசிட்டம். "எந்த வெந்த வாதனைக ளிதயத் தெழுந்த வவை யெல்லா—மந்த வந்த விடத்தழிக்கி னதுவே மாயைக் கறிவாகு—முந்து போக மோகமெனமொழியு மிருவா துனைவிட்டு—வந்த பாவா பாவமற மாற்றி விகற்ப மற வாழ்வாய்" அன்றியும், "எங்கே யெங்கே மனமோடி யினையோ ரென்ன வீழ்ந்தழுந்து—மங்கே யங்கே நின்றெழுப்பி யகண்ட வறிவி னடை வித்தான் ஏகே தமதா லிவவாறு சாதித் துளமா மதகரியை—வெங்கே தமறத் தனைத்தெல்லா விசாரத தாலும் பிடனைந்தான்." எ-ம வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. (கஉ)

அசைவறச சித்த மடங்குமேற் பின்ன
ரசையாமற் காத்திடென் றுந்தீ பற
அறிவால் வருந்தியு முந்தீ பற.

எ - து. அசைவொழியாத சித்தம் யாதொருகாலத்து அசைவொழிந்து அடங்குமாயின் பின்னர் அசையாதபடி அதன்கண்

அசைவு பிறப்பித்தற்கு உரியன எவையேனும் னது வீரப்பாட்டால் அக்கணமே நீக்கித் திடமாக்கிக் கொள். எ - று.

இ-ம். திருவள்ளுவர். "எண்ணிய வெண்ணியாங் கெய்துப வெண்ணியார்—திண்ணிய ராகப் பெறின்." அன்றியும், "துன்ப முறவரினுஞ் செய்க துணிவாற்றி—யின்பம் பயக்கும் வினை." எ-ம். தேவிகாலோத்தரம். "ஆராத சித்த மானதோர் காலத் தடங்கு மாறுற்—பேராமல் வருந்திக் காத்துப் பின்னைசசிந் தனைகள் சென்று—சாராமல் வல்ல வாறு தடுத்துச்சார் வான வெல்லாஞ்—சேராமன் மயக்க நீக்கித் திரமாகச செய்து கொள் வான்." எ-ம். ஞானவாசிட்டம். "வருந்தி முயன்ற மனந் தன்னை மாற்றி யில்லை யுண்டென்று—திருந்த பதத்தி லிருத்தி வோ யிடர்தீர் நெஞ்ச மிடரின்றிப்—பொருந்தல் வேண்டு மனம் வென்றுற் புவன மூன்றுந் துரும்பாகுந்—திருந்த விளிவிதென் றனைவெல்லாஞ் சீதாய்த் தோன்றின் மனமாறும்." எ-ம். நாலடி நானூறு. "ஊக்கித்தாம் கொண்ட விரதங்க ளுள்ளுடையத்—தாக்கருந் துன்பங்க டாந்தலை வந்தக்கா—னோக்கி யிறாக முயல்வோரே நல்லொழுக்கங்—காக்குந் திருவத் தவர்." எ-ம். அருட்பிரகாசம். "கடைதரு தீப்புகை கால்வருத் தகைகொடு கைநெகிழ்ந்து—விடினவிந் தாக்க வொறுத்துய ரெய்தலின் வெம்பொறிவாய்ப்—படர்தரு சித்த மொருகா லடங்கிற் பினைப்படாத்—தடைசெயல் வேண்டும் படர்ந்தா லெவர்பின் றடுப்பவரே." எ-ம். வரும். மற்றும் வருவனவற்றாற் காண்க. (௯௬)

ஆங்கறி யாமையுஞ் சாரா தறிவொடுந்
தூங்குவாய் நாளுமென் றுந்தீ பற
தோன்றும் பரம்பொரு ளுந்தீ பற.

எ - து. விகற்பவுணர்வாகிய சித்தசலனமற்றிருந்துள்ள அவ்விடத்து அறியாமையாகிய கேவலமும் பொருந்தாமல் உன்னுடைய சுபாவ அறிவோடுங்கூடி இரவும்பகலும் இடைவிடாது

சாதகம் செய்வாயாகில் அங்ஙனம் உனக்கு மேலாகிய பரம்பொருளே தோன்றும். எ - று

இ-ம். திருமந்திரம். "அறிவறி யாமை யிரண்டு மகற்றிச—செறியறிவா யெங்கு நின்ற சிவனைப்—பிறிவறி யாத பிரானென் றபேணுங்—குறியறி யாதவர் கோனறி யாரே" அன்றியும், 'பொங்கு மிருணீக்கும் பண்ணியக்கூத்தனை பொங்குமாய் நின்றுடு மேகம்பக் கூத்தனைக்—காதல் பகலிரவு காணுது கூத்தனை—யிங்கெ னிடமாக யான் கண்டவாறே.' எ-ம். பட்டணத்துப்பிள்ளையார்பாடல். "நினைத்தனை யற்றுப் பிரியமுந் தானற்றுச செய்கையற்று—நினைக்கது மற்று நினையா ததுமற்று நின்மலமாய்த்—தனைத்தவிர் மெய்யிருந் தானந்த நித்திரை தங்குகின்ற—மனைதவி லென்றிருப் பேனத்த னேகயி லாயத்தனே" எ-ம். தேவிகாலோத்தரம். "சித்திரையும் பராக்கினையு நீக்கிச சித்தமொருவ்லயு நீங்காம னிறுத்தி கொண்டாற்—சித்தமொரு பொருளினையுஞ் சேரா தாகிச் சேரும்வகை சேராமற் செல்ல நின்று—மத்தமன முதலாய வடித்தை யொன்று மருவாத வங்க நிற்கு மதுவே யாகு—முத்திநெறி யென்றுமறை யிடைவி டாது முறையிடவு மாகமங்கண் மொழியுங்காணே." எ-ம். திருவுந்தியார். "இரவுபக லில்லா வின்பவெளி யூடே—விரவி விரவிநின் றுந்தீ பற—விரைய விரையநின் றுந்தீ பற." எ-ம். சிவஞானசித்தியார். "அறியாமை யறிவகற்றி யறிவினுள்ளே யறிவுதனை யருளினு லறியாதே யறிந்து—குறியாதே குறித்தந்தக் கரணங்களோடுங் கூடாதே வாடாதே குழைந்திருப்பை யாகிற்—பிறியாத சிவன்றானே பிறிந்து தோன்றிப் பிரபஞ்ச பேதமெலாந் தானாய்த் தோன்றி—நெறியாலே யவையெல்லா மல்ல வாகி நின்றென்றுந் தோன்றிடுவ னிராதார னாயே." எ-ம். திருவம்மானை. "உற்ற மறப்பு நினைப்பற்றேன் காணம்மானை—யோவாத சித்தத்தே யொத்தேன்கா ணம்மானை." எ-ம். ஒழிவிலொடுக்கம். "அறிவா யிரீர்மயக்க மாகா தசையில்—விறிசாய் விடாதோ விகற்பம் - பிறியாத்—தராசுநிலை போலே சமாதிவான் ஞான—

விராசனுமக் கொப்பா ரெவர்." எ-ம். மோகவதைப்பரணி. "ஆங்குணரா மையுமுணர்வு மாகியகோ ளறவிருக்து—தூங்கி னர்காண் சுகமடைவார் சும்மேலோ சும்முலக்காய்." அன்றியும், "நீங்குத லில்லா வறிவே நிகழ்ந்தக்கால் விழிப்பதுவுங்—தூங்கு வது முண்டாமோ சும்மேலோ சும்முலக்காய்." அன்றியும், "ஒழித்தே யுள்ள முணர்வடைய வொழியா வொருவன் வருமள வும்—விழித்தே யுறங்கும் விளங்கிழையீர் மேவுங் கபாடந் திற மினோ." எ-ம். வரும். மற்றும் வருவனவற்றுற்காண்க. (௬௪)

அந்தப் பரத்தோ டிரண்டற் றயிக்கமா
மந்தநன் னிட்டையே யுந்தீ பற
அத்து விதவீடென் றுந்தீ பற.

எ - து. அங்ஙனம் சுத்தாவத்தையிற்றோன்றிய பரத்து டன் காண்பானும் காட்சியும் இன்றி வேறறக்கலந்து நிற்கும் அந்தச் சிறப்பினையுடைய நிஷ்டையே அத்துவிதமாகிய முத்தி யெனப்படும். எ - று.

இ-ம். திருமந்திரம். "குறியாக் குறியினிற் கூடாத கூட் டத்—தறியா வறிவி லுகந்தேக சித்த—நெறியாம் பரானந்தி ரீடருதோன்றிச் — செறியாச் செறிவைச சிவமெனலாமே" அன்றியும், "நித்தம் பரனோ டுயிருற்று நீண்மனஞ்—சதத முத லேர்து தத்துவந் தானீங்கிச—சுத்த மசுத்தந் தொடரா வவைவி னேர்—தத்த னவன்பா லடைதல்சித் தாந்தமே." எ-ம். கந்த ரலங்காரம். "போக்கும் வரவு மிரவும் பகலும் புறம்பு முள்ளும்— வாக்கும் வடிவு முடிவுமில் லாவொன்று வந்து வந்து—தாக்கு மனோலயந் தானே தருமெனைத் தன்வசத்தே—யாக்கு மறுமுக வாசொல்லொ ணுதிந்த வானந்தமே" எ-ம். கந்தரனுபூதி. "ஆறு வமுதே யயில்வே லரசே—ஞானா கரனே நவிலத் தகு மோ—யானு கியவென் னைவிழுங் கிவெறுந்—தானுய் நிலைநின் றதுதற் பரமே." அன்றியும், "வானே புனல்பார் கனன்மா ருத மோ—ஞானே தயமோ நவிலுன் மறையோ—யானு மனமோ

வெனையாண்ட விடந்—தானே பொருளாவது சண்முகனே.” எ-ம். திருவாய்மொழி. “நன்றாய் ஞானங் கடந்து போய் நல்லிந் திரிய மெல்லாமீர்த்—தொன்றாய்க் கிடந்த வரும்பெரும்பாழுலப்பி லதனை யுணர்ந் துணர்ந்து—சென்றாங் கின்பத் துன்பங்கள் செற்றுக் களைந்து பசையற்ற—லன்றே யப்போதே வீடதுவே வீடு வீடாமே.” எ-ம். பகவற்கீதை. “யாதொன் றிந்தப் புலனறியா வளவி லின்ப மாயிருக்கும்—யாதொன் றினைச் சென் றடைந்தோர்கள் பின்னை யதனி னிரண்டாகார்—யாதொன் றினைப்பெற் றவரிதனின் மிக்க தொப்புண் டென்னார்கள்—யாதொன் றிந்த வறிவிற்கே யறிவாய் நிற்கு மதினின்றோர்.” எ-ம். பிரமகீதை. “சுழுத்தியதனிற் றுயர் துவக்குமுட்றன்னின்—றெழுப்பியுள தன்வடிவி னுலிறையை யெய்துற்—றழுத்தமுற யாவனது வாகுமவனெங்கு—முழுத்தியுள தற்பரம தாகிமுடி வுற்றான்.” எ-ம். பிரபுலிங்கலீலை. “ஞேயஞானஞா திருவெனு மிவைபல நிற்கு—மாயின் வேறறுமுத்தி யன்றதுசக மாமென்—றேயுமாறிது வதுவெனுஞ் சுட்டிலா வியல்பை—மாயை மாறிய தேவிபா லருளினன் வள்ளல்.” எ-ம். ஞானவாசிட்டம். “முடிவுகன வஞ்ஞான மில்லா நீ டுயிலதுவா மும்மை யாகு—மடர்தருஞா திருஞான ஞேயமெழுந் தொடுங்குமிட மதுவே யாகுந்—திடவிசும்பன் றயிருந்தும் விசும்பான நிலையதுவாஞ் சித்தம் புத்தி—படர்மனம் போய்த் தாவாவுணறிவுபெறி லொப்பாமப் பரம ரூபம்.” எ-ம். சிவப்பிரகாசம். “பொற்புறு கருவி யாவும் புணராமே யறிவி லாமைச்—சொற்பெறு மதீதம் வந்து தோன்றாமே தோன்றி நின்ற—சிற்பரமதனு லுள்ளச் செயலறுத் திடவு திக்குந்—தற்பரமாகி நிற்றல் சாக்கிரா தீதந் தானே.” எ-ம். சிவநெறிப்பிரகாசம். “ஞானமுடன் ஞேயஞா திருவெனு மூன்றுமாடாமற் றனதுவாய் நண்ணியிட றனே—யூனமிலா வுன்மனைக்கு மேலான முத்தி யுற்றதனின் மலதுரியா தீதமென வுரைப்ப—ரானவிதே சுத்தமா முத்தியாகு மன்றிவே றுரைக்கு முத்தி யவைக ளெலா—மீனமா

முத்தியது தன்னை யெல்லா மியம்புவா மறிந்ததனை யிசையா வாறே.'' எ-ம். திருவம்மானை. "சத்திய மானது சத்தே காண மம்மானை—தற்போதம் போனவிடந் தற்பரமா மம்மானை.'' எ-ம். சிவானுபூதிவிளக்கம். "எரிசுத்தங் கொண்ட விரும்புபோ லெங்கும்—பரிசுத்த மான பராபரமே யானதே.'' எ-ம். நெஞ்சொடு மகிழ்தல். "நீரோடுதண் ணொலிவிண்டு நீரான வாறேபோ—லூரொடுபே ரில்லாதே யொன்றினாய் நெஞ்சமே.'' எ-ம் சிவானந்தமாலை. "மித்தையுடற் கட்டறுத்து மெய்யருளாய் மெய்யொழிக்கு—தத்துவமுங் கேவலமுஞ் சார்வகற்றிச-சுத்தத்—தனியாகித் தானும்போய்த் தற்பரமாய் விட்டாற்—சனியாளிது சத்தியம்.'' எ-ம். வரும். மற்றும் வருவனவற்றுற்காண்க.()

எம்மதத் தோரெவ் வகைநிட்டை சொல்லினுஞ்
சம்மத மேயெமக் குந்தீ பற
தற்போத மாய்க்குமே லுந்தீ பற.

எ - து. இங்ஙனங் கூறியது ஒழிந்து பின்னும் நானாவிதமாக முத்திநிஷ்டை கூறுவாரும் உளர். யாதொரு சமயி கூறிய யாதொரு நிஷ்டையேனும் ஆத்மாவினது தற்போதத்தைக் கெடுத்துச் சிவத்தோடு இரண்டறக் கலப்பிக்குமாயின் அந்நிஷ்டைகளும் எமக்கு அவிரோதமே. எ - று.

இ-ம். சிவானந்தமாலை. "நாலாய நற்பதமு நல்ல வவுத்திரியு—மாலாய தந்திரமு மந்திரமு - மேலாய—சிற்போத வுண்மைத் தெரிசனமு மெல்லாமுன்--றற்போத நட்டமெழுத்தான்.'' எ-ம். வீராகமம். "வேதவாகமமுந் தீக்கை விதிகளுஞ் சரியையாதி—மேதகு பாதநான்கு மிகுபத முத்தி நான்கும்—நீதின்மாணவக மற்றுஞ் செப்பிய வனைத்து மூன்றற்—போதநீ ரூகநாதன் புந்திசெய் தமைத்த வாமே.'' எ-ம். வரும். மற்றும் வருவனவற்றுற்காண்க. (௯௯)

நானற்ற போதத்தே நானுன முத்தியை
நானெங்ங னஞ்சொல்வ துந்தீ பற
நான்மறைக் கெட்டாதென் றுந்தீ பற.

எ - து. காண்பானும் காட்சியும் இறந்து அத்துவிதமாகிய பரசுகாதீதத்தை இவ்வண்ணம் இருந்ததென்று இங்ஙனங் கூறுவது எங்ஙமைய அந்நிலை வேதாதீதமாதலின். எ - று.

இ-ம். திருமந்திரம். "முகத்துக்கண் கொண்டு பார்க்கின்ற மூடர்கா—ளகத்துக்கண் கொண்டு பார்ப்பதே யானந்த—மகட்குத் தாய்தன் மணாளனோ டாடிய—சுகத்தைச் சொல்லென்றாற் சொல்லுமா றெங்ஙனே." எ-ம். தேவாரம். "மைப்படிந்த கண்ணாளுந் தானுங் கச்சி மயானத்தான் வார்சடையா னென்னி னல்லா—னொப்புடைய னல்ல னொருவனல்ல னோரூர னல்லனோ ருவமனில்லி—யப்படியு மந்நிறமு மவ்வண்ணமு மவனருளே கண்ணாகக் காணி னல்லா—லிப்படிய னிந்நிறத்த னிவ்வண்ணத்த னிவனிறைவ னென்றெழுதிக் காட்டொணாதே." எ-ம். திருவாய்மொழி. "நின்ற வொன்றை யுணர்ந்தேனுக் கதனுண்ணர்மை யிதுவிதுவென்—றொன்று மொருவர்க் குணரலாகா துணர்ந்து மேலுங் காண்பரிது—சென்று சென்று பரம்பரமாயாது மின்றித் தேய்ந்தற்று—நன்று தீதென் றறிவரிதாய் நன்றாய் ஞானங் கடந்ததே." எ-ம். பிரமகீதை. "ஒழிவிலாப் பரம யோகிய ரநுபவ முள்ளவா றுரைத்திட வெனக்கோர்—வழிபெறே னெனுமான் மகேசன்மா முனிவர் வானவ ருரைத்திட மாட்டார்—விழிமிகுஞ் சிவனால் விஞ்ஞையாஞ் சிவையால் விளம்பவும் படாதது விளம்பு—மொழியெலாம் வந்து மூகபா வகத்தே முடியுமந் நிலமதே முடிவு." எ-ம். நித்தியானந்தசரிதம். "மோகித்த காமத்தின்கண் முயற்சியிற் சுகமுந் தண்ணீர்—தாகித்த தாகத் தையுந் தாகித்தோனறிவ தல்லா—லேகத்த பொருளதாகி யிடைவிடா தமுத மூறும்—போகத்தை நுகர்வ தல்லாற் போகத்தாற் புகல லாமோ." எ-ம். சிவானந்தமாலை. "சொல்லுவான் சுட்டுவான் போனசுகா தீதத்தைச—சொல்லுவா யென்றாலென் சொல்லுகேன் - புல்லிவிடா—வண்மைக்குஞ் செய்மைக்கு மப்பாலா மத்துவித—வுண்மைக்கோ ருத்தரமுண் டோ." எ-ம். திருவம்மானை. "உண்டேதக் கிட்டெங்கு மொன்றானே

னம்மானை—உண்மைக்கோ ருத்தரந்தா னில்லைகா ணம்மானை." எ-ம். ஒழிவிலொடுக்கம். "சத்தாதி தத்துவம்போய்த் தானுமெதி ருங்கழன்ருற்—சித்தாந்த வேதாந்தச் செம்மையிலே-முத்தி—யகிர்வசன மின்ப மதீதமெனி லாங்கே—பினமிடுதல் கன்மம் பிளாய்." எ-ம். வரும். மற்றும் வருவனவற்ருற்காண்க. (சுஎ)

பெத்தர்க் கொருசிவ மின்மையிற் பேரருண்
முத்தர்க் குலகுமின் றுந்தீ பற
முழுதுஞ் சிவமாத லுந்தீ பற.

எ - து. பெத்தராயினேர்க்கு உலகமேயன்றிச் சிவந்தோ ன்ருது: அதுபோலும் பேரருளினை நீங்காத முத்தராயினேர்க் குச் சிவமேயன்றி உலகம் தோன்ருது; அசசிவத்தையன்றி வேறொருபொருளும் இன்மையால், எ - று.

இ-ம். பிரமகீதை. "தன்னின் வேறிலா வையிற்பர முத்தி யைத் தனதுபுத் தியினுலே—யன்னி யங்களாய்த் தோற்றுமா பாசரு பங்களி லறிகின்ருன்—முன்ன மெப்படி மூடமாந் தசை யிற்றன் மோகத்தா லெலலாம்பந்த—மென்ன வுற்றனன் முத்திபு மப்பரி சிருக்கும தியல்பேயாம்." எ-ம். சிவப்பிரகாசம். "அகம் புற மெனவிரண்டா லருச்சனை புரியு மிந்தச்—சகந்தனி லிர ண்டு மின்றித் தமோமய மாகி யெல்லா—நிகழ்ந்திட மகிழ்ந்து வாழு நீர்மை யார்போல ஞானந்—திகழ்ந்தகம் புறமெ ளுத செம்மையோர் நன்மையோரே." எ-ம். அறிவானந்தசித்தியார். "பெத்தனைச் சேதிக்க வென்றே மொழியவிப் பேருலக—மித் தனையும் மிறுமென் றனக் கில்லை யெனுமதுபோன்—றத்தன்சொ லொன்றி லெனைமாயச் சேதிக்க வன்றெனக்குச்—சித்த மய துல கெல்லா மிறந்ததென் செப்புவதே." எ-ம். சிவானந்த மாலை. "நின்செயலற் றெப்போது நம்முடனே நிற்குநிலை—புன் செயலற் ருேதியிட வுற்றுக்கே-ளென்சுவடங்—கொன்றுமற வொன்ருகி யொத்துடனும் பந்தத்து—னின்றதுபோன் முத்தி யிலு நில்." எ-ம் வரும். மற்றும் வருவனவற்ருற்காண்க. (சுஅ)

எல்லாஞ் சிவமேயென் றெண்ணினு நின்போத
மல்லாலஃ துண்மையன் றுந்தீ பற
ஆங்கது நீங்கிடென் றுந்தீ பற.

எ - து. உள இல என்பன வெல்லாப்பொருள்களும் சிவமேயெனக் காணுமிடத்தும் காண்பதும் நின்போதமாதலின் அதுவும் உண்மையன்று: எவ்விதத்தேனும் நின்போதம் எழாமல் அடக்குதலே உண்மைநிஷ்டை. எ - று. ஆங்கதுமென்ற வும்மையால் நானாவிதமாகியெழாநிற்கும் ஆத்மபோதமெல்லாம் அடங்குகவென்பதாயிற்று.

இ-ம். சிதானந்தமாலை "பற்றிலிழுப் பாயகலும் பார்க்கிலிவ னுண்டாகு—முற்றுணரில் வேறுகு மொன்றுமெனின்—முற்றும் - பிறியாப் பொருள் பிறியும் பேசுமுறைக் கெட்டாக்—குறியாக் குறியாங் குறி." அன்றியும், "கண்ட வறிவு கடமே யெனிலதமங்—கண்டழித்துக் காணுமை காணுமது—கொண்டிணரின் - மத்திமமே யந்த வகுப் பொன்றுங் காணுத—துத்தமமா மென்றே யுணர்." எ-ம். ஒழிவிலொடுக்கம். "கட்டிய நாண் விட்டாலுங் கந்தகலாக் கன்றுகளைத்—தட்டிப் புறப்படுத்துந் தன்மைபோ - லொட்டொழித்து—நின்றுற்போ னீசிவமாய் நில்லென்று நீக்கமறுத்—தொன்றாக்கி லொன்றிரண்டாகும்." அன்றியும், "குரங்கை நினையா திருமென்று கூறத்—திரும்பி யதுவே தியானம் - வருங்கதைபோ—னீசிவமாய் நில்லென்று னீங்கியதுவா நினைந்து—மாய்வையது வன்றே மலம்." எ-ம். வரும். மற்றும் வருவனவற்றுற்காண்க. (௬௧)

பாவனு தீதநினை வின்மை யுண்டெனிற்
பாவனை யாகுமென் றுந்தீ பற
பன்னூற் கருத்திஃ துந்தீ பற.

எ - து பாவனைக்கு அதீதமாகிய உண்மை நிஷ்டை யாதென்னில் உன்னுடைய நினைவிறந்து நின்றவிடம் அஃது ஒரு

ச்ற்றுண்டேனும் அதுவே பாவனையென்று பேசாலலப்படும் எல்லா நூல்களினது துணிவும் இதுவே. எ - று.

இ-ம். சிவப்பிரகாசம். "பாவிக்கின் மனுதி வேணயம பய னிலை காண நீத்துப்—பாவிப்ப னென்னி லென்னை பழுதுபா பாவ கத்தாற்—பாவிக்க வொண்ணு னென்று பாவிப்ப னெ ன்னி னியென்—பாவிக்க வேண்டா வாண்ட பரனருள் பற்றி னோர்க்கே." எ-ம். ஒழிவிலொடுக்கம். "குறங்கு குத்திக் கொ ண்டு குரோக்கை கத்திக் கூட்டை—மறந்தழைத்தாற் றாக்கம் வருமோ - வெறுங்கெடுவீர்—தன்னை யழித்தெழுந்த சச்சிதா னந்தத்தை—யுன்னி லொழித்துவிடா தோ." எ-ம். வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. (எ0)

ஒன்றிய கேவல மென்றே யுனத்தகுந்
துன்றிரு ளொன்றிலா துந்தீ பற;
சுத்த மிதாயதென் றுந்தீ பற.

எ - து. சகலகரணங்களும் ஆத்மபோதமும் அடங்கின விடத்துத் தோன்று நிற்கும் சுத்தாவத்தையும் உயிர்களுக்குச் சகசமாயுள்ள கேவலாவத்தையென்றே எண்ணப்படும். அக்கே வலத்திற்கு உண்டாகிய பேரிருளொன்றும் இன்மையின் இது சுத்தாவத்தை யென்னும் பேருடைத்து. எ - று.

இ-ம். கந்தரலங்காரம். "வரையற் றவுணர் சிரமற்று வாரிதி வற்றச் செற்ற—புரையற்ற வேலவன் போதித்தவா பஞ்ச பூத முமற்—றுரையற் றுணர்வற் றுடலற் றுயிரற் றுபாயமற்றுக்— கரையற் றிருளற் றெனதற் றிருக்குமக் காட்சியதே." எ-ம். மோகவதைப்பரணி. "யாதுமா யறிவிறந்த விருளொன்று மில தே—யாதும்மா யறிவிறந்த வொளியொன்று முளதே." எ-ம். வரும். மற்றும் வருவனவற்றுற் காண்பு.

வாங்கிப் பொறியைந்துமென்ற செய்யுள் தொடங்கி இச் செய்யுள்காறும் உண்மைநிஷ்டை கூறினுரெனக்கொள்க. (எக)

இங்ஙனங் கூறிய உண்மை நிஷ்டைக்குளிருந்தும் துவித பாவனை தோன்றுமாகில் அஃது ஒழிந்து முன்னிலை கூடுதற்கு மேலும் ஓருபாயநிஷ்டை கூறுகின்றார்.

பாவனு தீதம் பதியா விடத்தேக
பாவனை பற்றிநின் றுந்தீ பற
பழுத்தா லொழித்திடென் றுந்தீ பற.

எ - து. முற்கூறிய சகசநிஷ்டை பதியாவிடில் அங்ஙனம் தோன்றிய நினைவு அநேகபாவனைகளைப்பற்றி மயங்காமல் எல்லாப் பாவனைகளும் தன்னுள் அடங்குவதாகிய ஏகபாவனையைப்பற்றி நின்று அப்பாவனை முதிர்ந்து மற்றொரு பாவனையும் தோன்றாதவிடத்து அதனையும் மெள்ளமெள்ள நீக்கவே முற்கூறிய உண்மை நிஷ்டைகூடும். எ - று.

பழுத்தாலொழித்திடென்றது மேற்கூறுவனவாகிய உபாய நிஷ்டைகளுக்கும் ஒக்குமெனக்கொள்க.

இ-ம். திருவாசகம். "அளவிலாப் பாவகத்தா லமுக்குண்டிங் கறிவின்றி—விளைவொன்று மறியாதே வெறுவி யனுய்க்கிடப்பேனுக்—களவிலா வானந்த மளித்தென்னை யாண்டானைக்—களவிலா வானவருந் தொழுந்தில்லை கண்டேனே." எ-ம். ஞானவாசிட்டம். "பொய்ய தாமுயற் கொம்பினைப் பற்றவும் போக்கவு நினைப்பாரா—ரையனேபர போதபூ ரணத்திலே யயலொன்று வருமாறென்—பொய்ய தாகிய வனேகபா வனையினைப் பொருந்தல்புன் பிறப்பாகு—மைய மின்றிய வேகபா வனையினி லழுந்துதல் பவந்தீர்தல்." எ-ம். வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க.

பழுத்தா லொழித்திடென்றதற்குப் பிரமாணம்: திருவள்ளுவர். "சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின் மற்றழித்துச்—சார்தரா சார்தரு நோய்." எ-ம். சிவதருமோத்தரம். "நீங்கினரிந்த வுண்மை நிலையினை நெஞ்சந் தன்னிற்—றுமைருக சகளங்

தன்னைச் சங்கரன் றன்னை யுன்னி—நீங்குக சகளந் தன்னை முன்னையி னிலையி னீடித்—தூங்குக திரியிற் பின்னுஞ் சகளமா தரிக்கை சூழ்ந்தே." எ-ம். திருக்களிற்றுப்படியார். "பற்றினுட் பற்றைத் துடைப்பதொரு 'பற்றறிந்து—பற்றிப் பரிந்திருந்து பார்க்கின்ற - பற்றதனிற்—பற்றுவிடி லந்நிலையே தானே பர மாகு—மற்றமிது சொன்னே னறி." அன்றியும், "சார்புணர்ந்து சார்பு கெடவொழுகி னென்றமையாற்—சார்புணர்வு தானே தியானமுமாஞ் - சார்பு—கெடவொழுகி னல்ல சமாதியுமாங் கேதப்—படவருவ தில்லைவினைப் பற்று." எ-ம். வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. (எஉ)

ஏகபாவனை யிதுவென்று மேற்கூறுகின்றார்.

பாராதி யெட்டுமெப் பாலுமெப் பாலுமா
யோர்சோதி யேநின்ற துந்தீ பற
உன்னுவே றில்லையென் றுந்தீ பற.

எ - து. பிருதிவியாதி அட்டமூர்த்தமும் அவற்றினுக்குப் பரமாகியுள்ளனவும் பின்னும் வாக்கு மனத்திற்கு எட்டுவனவும் எட்டாதனவுமாய் விரிந்துநிற்பது ஒருசோதியே வேறொரு பொருளும் இல்லையென்று பாவனை பண்ணுவாய். எ - று.

இ-ம். திருமந்திரம். "தானே கடன்மலை யாதியு மாய்நிற் குந்—தானே திசையொடு தேவரு மாய்நிற்குந்—தானே யுடலு யிர் தத்துவமாய் நிற்குந்—தானே யுலகிற் றலைவனு மாமே." அன்றியும், "எங்குந் திருமேனி யெங்குஞ் சிவஞ்சத்தி—யெங் குஞ் சிதம்பரமெங்குந் திருநட்ட—மெங்குஞ் சிவமா யிருத்தலா லெங்கெங்குந்—தங்குஞ் சிவனருட் டன்விளை யாட்டே." எ-ம். திருக்கடைக்காப்பு. "பட்டிசைந்த வல்குலாள் பாவை யாளோர் பாகமா—வொட்டி சைந்த தன்றியு முச்சி யாளொ ருத்தியாக்—கொட் டிசைந்த வாடலாய் கூடலால வாயிலா—யெட்டி சைந்த மூர்த்தியா யிருந்த வாறி தென்னையே." அன்றி யும், "அரிய நாட்சிய ராய்த்த மதங்கைசே—ரெரிய ரேழகந்

தேறுவர் கண்டமுங்—கரியர் காடுறை வாழ்க்கைய ராயினும்—பெரிய ராசுறி வாரவர் பெற்றியே," எ-ம். தேவாரம் "அருந்த வர்க ளொழுதேத்து மப்பன் றன்னை யடிரர்கடம் பெருமானை யளனை மூவா—மருந்தமரர்க் கருள்புரிந்த மைந்தன் றன்னை மறி கடலுங் குலவரையுமண்ணும் விண்ணுந்—திருந்தொளிய தார கையுந் திசைகளெட்டுந் திரிசுடர்க ளோரிரண்டும் பிறவுமாய—பெருந்தகையைப் பெரும்பற்றப் புலியூ ரானைப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே." அன்றியும், "மாலாகி நான்முகனாய் மாபூத மாய் மருக்கமா யருக்கமாய் மகிழ்வு மாகிப்—பாலாகி யெண்டிசைக்கு மெல்லை யாகிப் பரப்பாகிப் பரலோகந் தானே யாகிப்—பூலோக புவலோக சுவலோ கமாய்ப் பூதங்க ளாய்ப் புரா ணன்றானேயாகி—யேலா தனவெல்லா மேல்விப் பானு யெழுஞ்சுடரா யெம்மடிக ணின்ற வாறே." எ-ம். திருப்பாட்டு. "ஊனுயி ரானு யுடலானுயுல கானுய்—வானுய்நில னுனுய்கட லானுய்மலை யானுய்—தேனார்பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூ ரருட்டுறையு—ளானுயுனக் காளாயினி யல்லே னென லாமே." அன்றியும், "கார்க்குன்ற மழை யாய்ப்பொழி வானைக் கலைக்கெலாம்பொரு ளாயுடன் கூறிப்—பார்க்கின்ற வுயிர்க் குப்பரிந்தானைப் பகலுங் கங்குலு மாகி நின்றானை—யோர்க்கின்ற செவியைச்சுவை தன்னை யுணரு நாவினைக் காண்கின்ற கண்ணை—யார்க்கின்ற கடலை மலை தன்னை யாரூரானை மறக்கலு மாமே." எ-ம். திருவாசகம். "நிலநீர் நெருப்புயிர் நீள் விசும்பு நிலாப் பகலோன்—புலனாய மைந்தனோ டெண்வகையா ய்ப் புணர்ந்து நின்றா—னுலகே ழெனத்திசை பத்தெனத்தா னொருவனுமே—பலவாகி நின்றவா தோணோக்க மாடாமோ." அன்றியும், வேதமும் வேள்வியு மாயினார்க்கு மெய்ம்மையும் பொய் மையு மாயினார்க்குச்—சோதியு மாயிரு ளாயினார்க்குத் துன்ப மூமா யின்பமாயி னார்க்குப்—பாதியு மாய்முற்று மாயினார்க் குப் பந்தமு மாய்வீடு மாயினாருக்—காதியு மந்தமு மாயினருக் காடப்பொற் சுண்ண மிடித்துநாமே." எ-ம். ஞானவண்ணத்

தந்தாதி. "அலையார் புனலனன் ஞாயி றவனி மதியம் விண்கா—ஞூலையா வுயிருடம் பாகிய சோதியைத் தொக்குமி ழேஞ—தலையாற் சுமந்தூந் தடித்துங் கொடித்தே ரரக்கனென்னே—கலையானொருவிரற் ருங்கநில் லாவிட்ட காரணமே." எ-ம். திருப்புகழ். "அதல விதலமுத லந்தத் தலங்களென வவனி யெனவமர ரண்டத் தகண்டமென வகில சலதியென வெண்டிக்கில் விண்டுவென வங்கி பானு—அமுத கதிரென வந்தத்து மந்திரமென வறையு மறைகளின ருந்தத்து வங்களென வணுவி லணுவென நிறைந்திட்டு நின்றதொர்ப ரப்பிரகாசம்."எ-ம். திருவாய்மொழி. "ஏகமூர்த்தி யிருமூர்த்தி மூன்று மூர்த்தி பலமூர்த்தி—யாகியைந்து பூதமா யிரண்டு சுடரா யருவாகி—நாகமேறி நடுக்கடலுட் டுயின்ற நாராயணனேயுன்—ஞகமுற்று மகத்தடக்கி யாவியல்லன் மாய்த்ததே." அன்றியும், "துன்பமு மின்பமு மாகிய செய்வினை யாயுலகங்களுமா—யின்பமில்வெந்நர காகியினிய நல்வான் சுவர்க்கங் களுமாய்—மன்பல் லுயிர்களுமாகிப் பலபலமாய மயக்குகளா - யின்புறு மிவ்வினை யாட்டுடை யானைப் பெற்றேதுமல்லலிலேனே." எ-ம். தத்துவராயர். "மாற்றங் களுமன னும் வினை யாவையு மற்றந்தவான்—காற்றங்கி நீர்நிலன் முற்று மவற்றுட் கலந்துநின்ற—நாற்றஞ் சுவையொளி யூறோசையு நண்ணுமிவ்வுலகிற்—ரேற்றங் களுஞ்சொரு பானந்த நாதர் சுடர்வடிவே." எ-ம். தேவிகாலோத்தரம். "ஆனநிலை யாவுடைய பூதங்களனைத்துநா—னேனையவை யாவையுள வவையுநான் றூலநுண்மை — யானவெவை யவையுமலே னெனையறியி லறிவோர்க்கு—ஞானமொன்று மென்னுருவ நானேயெவ் வுயிர்க்குறவும்." அன்றியும், ஒன்றுடனுந் தோய்வில்லா னொத்தார்மிக் காரில்லானுலக மில்லா—னின்றநினை வுக்கெட்டா னித்தன் காணப்படா னெஞ்சுணிற் பான்—பொன்று பிறப்பிலி முதலா மறிவினிட் களன் பழையோன் பொருள்க ளில்லோ—னென்றுநினைந் தடிக்கடியும் பிரமமென நோக்குதலே யியல்ப தாமே." எ-ம். சிவதருமோத்தரம். "சராசரத் தமலனீங்காத் தன்மைய

றுத லாலே—சராசர மமலன் மேனி யெனவுணர் தக்கோர் தாமுஞ்—சராசர வுயிர்க்குத் தாயாஞ் சங்கர னுலகஞ் சார்ந்து—சராசர மொடுங்கும் போது தற்பரன் றானுஞ் சார்வார்.” எ-ம். பகவற்கீதை. “மண்ணு நீருமெரி தீயும் வாயுவுமவ் வானினோடுமனம் புத்தியு—மெண்ணு நீர்மைகளின் யானெனும்பதமுமென்ற வெட்டுமிவை யன்றியே—பண்ணு நீர்மைகளின் மேலதாயுலகில் யாவை யுங்கொடு பரித்துடற்—கண்ணு நீடுயிரு மாகி யென்னுருவ மாகி நிற்பதுனை வேலினோய்.” அன்றியும், “யாவ னொருவ னெனையெல்லா வுயிர்க ளிடையு மென்னிடையே—மேவ வெல்லா வுயிர்களையும் வேறு காமே மெய்காண்பான்—றேவர் பகைமுன் செகுத்தோனே யவன்யா தேனுஞ் செய்திடினு—மாவ னவனு கின்றேன்யான் யாது நீயிங் கையுறேல்.” எ-ம். பிரமகீதை. “உலகம் யாவு முயிர்பலவு நானே சிறிதும் வேறில்லை—யலகி லறிவா லாய்ந்திடினு மாயா விடத்து மருத்தமிதே—திலக மாய மறை துணிந்து திகழ்த்தும் பொருளு மிது வென்ற—விலகுந் தன்மை யனுபவமு மிதரோ வைய முளதன்றால்.” அன்றியும், “அங்கிதலை வாய்விவித மானமறை பானு—திங்கள்விழி யெண்டிசைக ளுஞ்செவிகள் வாயு—தங்குமுயிர் தன்னிதய மேசகல மூர்த்தா—னிங்கவனி சங்கர னிருக்கும்வடிவீதால்.” எ-ம். ஞானவாசிட்டம். “திக்குங் காலமு முதலிய வசத்துறு சிறுவடி வறத்துன்பந்—தொக்க வன்னவற் றுன்மறைவாகியே சூக்கமாய் நொய்தாகி—மிக்க சோதியா யனைத்துமாயொன்றுமாய் மெய்யறி வொன்றேயாந்—தக்க வின்னிலை நில்லென வுரைத்தனன் றலைமையா முபதேசம்.” அன்றியும், “இந்திலாதி விரிந்துசகத் திரளாய்க் கிளைத்த விவையெல்லாம்—விஞ்சு பிரம மேயறிவு பிரம மிம்மே தினிபிரமம்—பஞ்ச பூதம் பிரம நாம் பிரமநமது பகைபிரமந்—தஞ்ச நட்புப் பிரமமெனிற் சங்கராதி நிச்சயமே.” எ-ம். திருவுந்தியார். “எட்டுக்கொண் டார்தமைத் தொட்டுக்கொண்டே நின்றார்—விட்டா ருலகமென் றுந்தீபற—வீடேவீ டாகுமென் றுந்தீ பற.” அன்றியு “சொல்லும்

பொருள்களுஞ் சொல்லாதனவுமங்—கல்லவு மாறுமெனன் றுந்தீ பற—வம்பிகை பாகனென் றுந்தீ பற." எ-ம். திருக்களிற்றுப் படியார். "ஈறாகி யங்கே முதலொன்றா யிங்கிரண்டாய்—மாறாத வெண்வகையாய் மற்றிவற்றில் - வேறா—யுடனா யிருக்கு முருவு டைமை யொன்றுங்—கடனா யிருக்கின்றான் காண்." அன்றியும், "அவனே யவனிமுத லாய்நின்றான் றானு—மவனே யறி வாய்நின் றானு - மவனேகா—ணாணாகிப் பெண்ணா யலியாகி நின் றானுங்—காணாமை நின்றானுங் கண்டு." எ-ம். சிவஞானசித்தி யார். "உலகமே யுருவ மாக யோனிக ளுறுப்ப தாக—விலகுபே ரிச்சா ஞானக் கிரியையுட் கரண மாக—வலகிலா ருயிர்ப்புலன் கட் கறிவினை யாக்கி யைந்து—நலமிகு தொழில்க ளோடுநாடக நடிப்ப னாதன்." சிவஞானதீபம். "அத்துவா வடிவாமெம் மிறை முடிதான் கலைக—ளைந்தாகுஞ் சாந்திமுத லானநான் குரமாம்—வித்தைமுதன் மூன்றிரண்டாம் பிரதிட்டாதியுந்தி— வியன்பாத நிவிர்த்தியதா மிளிர்துவக்கக் கரங்கள்—வைத்தபுவ னங்கண்ம யிர் மந்திரங்க ளெய்த்தோர்—வளர்ந்திகழும் பதங்களருந் தசை யாகு மதித்த—தத்துவங்கள் சுக்கிலமோ டத்தி நிணமூளை—சத் திகடா நேத்திரமூ வைந்தாமித் தகையே." அன்றியும், "அனு க்கிரகஞ் சதாசிவன்றா னாதத்தா லுளத்தி—லருமறைப்புச் சிந் தையினில் விந்துவினான் மகேசன்—றனித்தமனத் துருத்திரன் றான் மகாரத்தா லழிக்குந்—துழாய் முடியோன் புத்தியினின் றுகாரத்தா லளிக்கும்—பனிப்பதும னகாரத்தா லகங்காரம் பொருந்திப்—படைத்திடுவ னோங்காரப் படிவமுமா மதனா—லினைத்துலகு மிலிங்கமய மாமெலையு மிதுவே--யாக்கியளித் தழி த்துமறைத் தனுக்கிரகஞ் செயுமே." எ-ம். சிவானுபூதிவிளக்கம். "எட்டுருவ மென்று மிறையுருவ மென்னுமது—சிட்டா மறை யுஞ் சிவாகமமுஞ் செப்பியதே." அன்றியும் "பத்துத் திசையும் பதினா லுலகும்விடத்—தத்திக் கரைபுரளுஞ் சாகரமே யல்ல வோ." எ-ம். நெஞ்சுவிடுதூது. "பாருந் திசையும் படரொளியா லேநிறைந்தா—னூருந் தலையுமிலாத் தோன்றலான்-வேராகி--

வித்தாகி வித்தின் முளையாய் விளங்குதனிச்—சத்தாதி பூதங்க டாளுகிச்-சுத்த—வெறுவெளியாய்ப் பாழாய் வெறும்பாழுக் கப்பா—லூறுபொருளாய் நின்றவொருவன்.'' எ-ம். காசிகாண்டம். "ஐம்பெரும் பூத மாகி யவற்றுறு குணங்க ளாகி—யைம்பொறி யாகி யந்தக் கரணமா யறிவுமாகி—யைம்பெருங் கருமமாகி யனைத்தினுந் தோய்ந்துந் தோயா—வைம்பெருங் கடவுளாகு மாதிநின் னடிகள் போற்றி.'' அன்றியும், உயிர்ப்பரு மறைக ளோவிவ் வுலகெலாஞ் செய்ய பொற்றாள்—பயிர்ப்பறு நிலநின் சென்னி பரமவா காய மாகும்—வியப்புறு சுழிகொளுந்தி நடுவெளி யாகு மெய்யின்—மயிர்த்தொகை யனைத்து மெண்ணில் வான்றருக் குலங்க ளாமால்.'' எ-ம். பெரியபுராணம். "ஆயி னும்பெரி யாரவ ரென்பது—மேய விவ்வியல் பேயன்றி விண்முதல்—பாய பூதங்கள் பல்லுயி ரண்டங்க—ளேயும் யாவு மிவர்வடி வென்றதாம்.'' எ-ம். திருவம்மானை. "பார்த்தவிட மெல்லாம் பரமேகா ணம்மானை—பாராம விந்நாளும் பாழ்பட்டே னம்மானை.'' எ-ம். நெஞ்சொடுமகிழ்தல். "மண்ணிறந்து நீரிறந்து வளியிறந்து தீயிறந்து—விண்ணிறந்து நின்றதிலே மேவினையே நெஞ்சமே.'' அன்றியும், "பார்த்தவிடந் தோறும் பரந்துபரந் தெஞ்ஞான்றுங் - கோத்திருந்த பாழ்தனிலே குடியிருந்தாய் நெஞ்சமே.'' எ-ம். வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. (எஉ)

அட்டமூர்த்தமும் சிவமேயென்று வேதாதிகள் கூறினும் உலகின்கண் வரைந்து நீக்குவனவாகிய தீயனவற்றையும் அங்ஙனம் காணுதல் கூடுமோவென்பாரைப் பற்றி மேற்கூறுகின்றார்.

> உதித்தச் சிவத்தோடேய்ந் துள்ளதேன் மாயை
> யதற்கன் னியமென்ளு ருந்தீ பற
> அதினன்கு தீதியா துந்தீ பற.

எ - து. ஜகத்காரணமாகிய மாயை நித்தியபூரணமாகிய சிவத்தினிடத்திலே நின்றுந் தோன்றி அதனையே வந்து கொண்

டிருத்தலால் அச்சிவத்திற்கு அம்மாயையை அன்னியமென்று சொல்லார் அறிவுடையோராதலின் மாயையினுண்டாகிய புவனகோடிகளின் ஒவ்வொருபதார்த்தங்களை இதுநன்று இதுதீதென்று கூறுதல் கூடாது அவையும் சிவமேயாதலின். எ - று.

அஃது எங்ஙனமெனின், மாயையைச் சிவத்திற்குப் பேதமென்றும் அபேதமென்றும் கூறுவார் உளராயினும் முத்திதசையில் அனைவர்க்கும் அபேதமென்பதே உண்மை. அஃது எப்படியென்னில், பேதமென்று காண்பார்க்கும் சுத்தசித்தாகிய வஸ்து பூரணனாகையால் வேறொருமாயை உண்டாயினும் அவனிடத்து நின்றுந்தோன்றி அவனையே கூடிநிற்பதல்லது அன்னியமாய்த் தோன்றுதற்கும் நிற்றற்கும் இடம் இன்மையாலும், உப்பளத்திற் கனலிற் பரிசனவேதியாதிற் கூடிய திருணாதிகள் தத்தந்தன்மைகெட்டு அவற்றினது தன்மையாய் விளங்குதலின் மாயையும் சிவமேயாய் விளங்காநிற்பதாதலின் அச்சிவத்தின்கண்ணே தோன்றுநிற்கிற ஓசையாதி விஷயங்களை இது நன்று இது தீதென்று பற்றுதல் விடுதல் கூடாது. கூடுமேல் பூரணநிஷ்டையும் கூடாது. இதுவன்றியும் ஒவ்வொருகாலதேசங்களில் நிருமலபாவனை பற்றித் தீயனவற்றையும் நல்லனவெனக் காணாநிற்கிற அபரிச்சின்ன நிஷ்டைகளும் கூடாது; காலதேசங்களும் அவைகளிற் காணப்படுகிற பொருளும் மாயையாதலின். இதுவன்றியும் நன்மை தீமைகளாய் விளங்காநிற்கும் புவனபோகங்கள் தம்மதீனமாகிய தனுகரணங்களை அடைவது ஒழிந்து நிரவயவனாகிய ஆத்மாவைப்பற்றாமையாலும், ஒருவன் தனக்கு அன்னியமாகப் பற்றிய சரீரத்தினும் இகழப்படுபொருள் வேறின்மையாலும், ஒருவகைப் பொருளிலே பேதம் தோன்றுதல் சீவகற்பனையாதலினாலும் கற்பனாரகிதமாகிய பூரணநிஷ்டைக்கு அஃது இல்லையென்றதெனக்கொள்க.

மாயாப்பிரபஞ்சமெல்லாம் சிவத்திற்றோன்றி யொடுங்குதலின் அம்மாயையும் சிவத்திற்கு அன்னியமாகா தென்பதற்குப் பிரமாணம்: தேவிகாலோத்தரம். "புறனகங் கீழ்மேல் பக்கம்

புணர்வதோர் பொருளு மில்லை—திறனுடை யுருவ மெல்லாந் தானாகித் தேகமின்றா—யறன்முறை யடங்கு ஞான யோகினா லறியப்பட்ட—விறன்மலி ஞான னந்த மேன்மையால் விளங்கா நிற்கும்." அன்றியும், "கன்மபல மேதுமில்லை சுபாவமே காணுங்காற்—றென்மையுல குயிரில்லை தோன்றுவதெ லாஞ்சத்து—நன்மையினைத் தோன்று வித்துப் பற்றிலராய் நணுகரிய—தென்னவறிந் தானுலகு மிலதாகிச் சுத்தனுமாம்." எ-ம். பிரமகீதை. "எப்பொருளு மாயையினா லெனச்சிலவ ரியம்புவர்கண்—மெய்ப்பரமன் றனையொழிய வேறொருமா யையுமில்லை—யொப்பரிய பரனொழிய வொருமாயை யுண்டாகி—லப்பெரிய பரன்பெருமைக் கதுநேரே யழிவன்றோ." அன்றியும்." ஒழிந்ததொரு பொருளில்லை யுள்ளதெல்லா மவனேமுன்—கழிந்தபொருண் மேலும்வரக் கடவபொரு டானுமவன்—மொழிந்தனனிப் பலவிச்சை யவிசசையெனு முற்றுமவ—னிழிந்தபிறப் பறவேறோர் வழியில்லை யிவனொழிய." எ-ம். ஞானவாசிட்டம். "நானாவாம் பணிகளு ணண்ணுகினு மொருமையே நண்ணுங் கற்போ—லானாத சகங்களையுள் ளடக்கினும்வேற் றுமைமேவா தறிவொன் றேயாங்—கானூர்பங் கயமெல்லாம் வேறன்றிக் கான்மயமாங் கணக்கே போல—வானோர்சிற் சொரூபத்தைப் பிறியாது தன்மயமாம் வையமெல்லாம்." அன்றியும், "கனிமெய்யா மாயையில தென்றிவ் வாறு நாடுவாய் ஞானியாய் ஞானம் பெற்றாற்—றனிசெயுமீ துளமாயை யறிதியன்றே துகளிலா நற்போதந் தோன்று மட்டும்—பனிமாயை யில்லையென லென்சொல் லாலே பழுதிலா வறுதியுறப் பற்றி நிற்பாய்—புனிதமுறு பிரமமே யெல்லா மென்று புந்தியிற்கண் டோர்முத்தி பொருந்தினோரே." எ-ம். சிவானுபூதிவிளக்கம். "பதிபசு பாசப் பரப்பட நிந்து பார்க்கப்—பதிபசு பாசப் பரப்பா யிருந்ததே" அன்றியும், "பார்த்தே னுலகப் பரப்பெல்லாம் பார்த்தளவிற்—பேய்த்தேர்போ வில்லையாப் போரிவே கண்டனமே." எ-ம். திருவம்மானை. "மெய்யான தொன்றுமே மெய்யான தம்மானை—மெய்

யன்றி மற்றெல்லா மித்தைகா ணம்மானே." எ-ம். சிவானந்த மாலை. "எங்குஞ் சிவமொழிய வில்லையவன் றன்னுணே—யங்கத் திரள்கருவி யாணவமாம் - பொங்குமிருள்—மைசெய்த மாமா யை மாயைவினை மற்றனைத்தும்—பொய்பொய்பொய் பொய் பொய்பொய் பொய்." எ-ம். காசிகாண்டம். "கானலிடைத் தெண்ணீருங் கயிற்றினில்வா ளரவுமலை கடலிற் பட்ட—கூன் முதுகிப் பியிற்றோன்றும் வெள்ளியுமம் முதலுண்மை குறிக்கிற் றீரு—மானவைபோ னினையறியிற் றோன்றுசக மனைத்துமில்லா தழியு மாற்றாற்—றேனவிழ்பூங் கடுக்கையணி செல்வனின தறைகழற்றாள் சென்னிசேர்ப்பாம்." எ-ம். தத்துவராயர். "உல கமாந் தோற்றம்போ யோரொளியாய் நேரே—யிலகிறு மென்க ண்ணி னிற்கட் - புலனொழித்துக் —கையாற் றடவினர்க்குக் காண்கின்ற வோவியங்கள்- பொய்யாய்ச சுவராளுற் போன் று." எ-ம். வரும். மற்றும் வருவனவற்றாற் காண்க.

பிரபஞ்சமெல்லாஞ் சிவமேயாதலின் இப்பிரபஞ்சத்தின் கண்ணே தோன்றிய பொருள்களில் யாதொன்றையும் இது நன்று இதுதீதென்று பற்றுதல் விடுதல் கூடாதென்பதற்குப் பிரமாணம் திருக்கடைக்காப்பு "குற்றநீ குணங்களீ கூட லால வாயிலாய்— சுற்றநீ பிரானுநீ தொடர்ந்தி லங்கு சோதிநீ— கற்றநூற் கருத்துநீ யருத்த மின்ப மென்றிவை—முற்றநீ புகழ் ந்துமுன் னுரைப்ப தென் முகம்மனே." எ-ம். திருவாசகம். "கூறு நாவே முதலாகக் கூறுங்கரண மெல்லாநீ—தேறும் வகைநீ திகைப்புநீ தீமை நன்மை முழுதுநீ—வேறோர் பரிசிங் கொன்றில்லை மெய்ம்மை யுன்னை விரித்துரைக்கிற்—றேறும் வகையென் சிவலோகா திகைத்தாற் றேற்ற வேண்டாவோ." எ-ம். பொன்வண்ணத்தந்தாதி. "தவனே யுலகுக்குத் தானே முதறான் படைத்த வெல்லாஞ்—சிவனே முழுதுமென் பார்சிவ னேசம் பெறுவர் செய்ய—வவனே யடல்விடை யூர்தி கடலிடை நஞ்ச முண்ட—பவனே யெனச்சொல்லு வாரும் பெறுவ ரிப்பா ரிடமே" எ-ம். தத்துவராயர். "திகழ்கின்ற வெல்லாமு நின்ம

லமே யாரு—விகழ்கின்ற வேறுதா னியாதோ - புகழ்பின்றி—நாடப் படாவெங்க ளையனுர் சீர்பாதஞ்—சூடப் படாதார்தஞ் சொல்.'' அன்றியும், "யாதொன்று நீயன்றி யில்லாத பின்பிங் கேவற்றை நன்று—தீதென்ப தெங்கள் சிவக்கனியே செய்ய வேண்டுவது—மாதொன்றிய நின்றிருமேனி கொண்டிங்ஙன் வந் தவிர்தப்—போதொன் றியகழலேவழு வாது புகழ் விப்பதே.'' எ-ம். பகவற்கீதை. "நன்றே ஞான வருமறையோ ரையி ரவி னிறைச்சிதனைத் —தின்றே யுழலு மவன்யாவன் யாவென் றறி ந்த திறத்தெல்லா--மன்றே யென்று தாமென்று தறிவாய் நின்ற வெனை யெங்கு—மொன்றே யாகக் காண்பானிவ் வுடம்போ டிருந்தே யுடம்பறுப்பான்.'' எ-ம். பிரமகீதை. "போதமதாகித் தோன்றும் பொருளெலாஞ் சிவமே யாக—வேதமிலறிவாற் காண்பா னெவனவ னுண்மை கண்டான் —நீதிலாச் சிவமன் றென்று சிறிதொன்றைச் சிந்தை செய்வான்—பேதமா மருளின் மேய பித்தனென றறிய லாவான்.'' அன்றியும், "சிவனிது வன்றே யென்று சிறிதொன்றைச் சிந்தை செய்வா—னவனறி வுடையோர் தம்பா லதமனென் றறியப் பட்டா—னுவமனென் றில்லாவீசன் றனையிகழ்ந் தொழுகு வானும்—பவமதி லென்று மேவும் பசுவெனப் படுகின்றானும்.'' அன்றியும், "தீதெனும் பொருள்க ளன்றெனும் பொருள்கள் செய்யலா வனசெயப் படாத—வேதமா முடல மிந்தியம் பிராண னிசைமனம் புத்தி யாங் காரந்—தீதுறு காமங் கோபமே முதலாந் தீயன சாந்தி தாந் திகளே—யாதியா நலங்க ளடையவுந் தானே யாகியே தோன்றுமெய்யருளால்.'' எ-ம். ஞானவாசிட்டம். "மேனியிற் புறத்தி னுள்ளின் மேலொடு கீழிற் றிக்கில்—வானில்லை யகத்தி லெங்கு நானன்றி மற்றொன் றில்லை—யானிலா விடமு மில்லையென திடத் திலாது மில்லை—தானிகழ் பொருள்வே றில்லை சசிதானந்தமென்றான்.'' அன்றியும், "மேவலுற் றதுபோ கத்தில் விருப்பும் வெறுப்பு மெனக்கில்லை—யாவ தெய்து மதுவருக யாது போகு மதுபோக—பாவ மிகுமிவ் வஞ்ஞானட ரகைவனுலே

விவேகமெனு—மேவ மில்லாப் பொருளெல்லா மிழந்தே னுண ர்வா லிதுபெற்றேன்." எ-ம். மோகவதைப்பரணி. "சத்தமா திகளுமெலாந் தற்சொருப மானபரி—சுத்தமாய் விட்டதுகாண் சும்மேலோ சம்முல்க்காய்."எ-ம். சிவானுபூதிவிளக்கம். "வெறு ப்பு விருப்பென்று வேறுரைத்தா லெந்தை—யுறப்பிற் குறை யாதோ வுணர்வுடையோர் சொல்லுவரோ." அன்றியும், "வேண் டலும்வேண் டாமலுமாய் மேவு வினைப்பயனு—மாண்டகை யோ டுற்ற வனுபூதி யானதே." அன்றியும், "எல்லாஞ் சிவ மென் றிருக்கு மொழியுமுரை—யல்லாமல் வேறுமுண்டாமோ." எ-ம். திருவருட்பயன். "உள்ளும் புறம்பு மொருதன்மைக் காட்சியருக்—கெள்ளுந் திறமேது மில்." எ-ம். நெஞ்சொடு மகிழ்தல். "உள்ளும் புறம்பு முவட்டாத வானந்தக்—கள்ளரு ந்தி நின்ற களிப்பென்கொ னெஞ்சமே." எ-ம். அருட்பிரகா சம். "தெளியும் புழுவு மலமும் பொதியூ முலுசிமல—வொசிவின் வடிவென வேவேத மோதுத லோர்ந்து முண்மை—தெளியும் பரிசில ஞய்ச்சிவ மன்றிது வென்னவொன்றை—யெளியொன் றினைப்புகழ் வோனையுஞானி யெனப்படுமே." எ-ம். வரும். மற் றும் வருவனவற்றுற்காண்க. (எச)

இந்நிஷ்டைக்கண் யான் பிறரென்னும் விகற்பங்களே தோன்றுமாயின் அவற்றினை நீக்க உபாயம் மேற்கூறுகின்றார்.

தோன்றுமேல் யான்பிறர் தோன்றுஞ் சுகாதிக
டோன்றும னில்லுயிர்க் குந்தீ பற
சுதந்திர மின்மைதேர்ந் துந்தீ பற.

எ - து. இங்ஙனங்கூறிய நிஷ்டைக்கணின்றும் யான் பிற ரென்னும் விகற்பங்கள் தோன்றுமாயின் சுக துக்க ராகத் துவேஷமென்னும் இருவகைத்துவந்துவங்களும் கூடவே தோன்றுநிற்கும். அவ்விகற்பங்கள் தோன்றுதபடி எல்லாவுயிர் கட்கும் சுதந்திரமின்மை தேர்ந்து உன்னையும் பிறரையும் காணு மலே நிற்பாய், எ - று.

தோன்றாமனில்லென்றமையால் அந்நிலை நிற்கவே சுகாதிகளும் தோன்றாத பூரண நிஷ்டையும் கூடுமென்பதாயிற்று. அஃது எங்ஙனமென்னின், எல்லாச்சீவர்களுக்கும் தனுகரணங்களைக் கூடாதவிடத்து அறிவு உகியாமையால் அவர்கள் தாமே அவற்றினைக் கூடுகைக்குச் சத்தி இ ாமையினாலும், அவைகள் உயிர்களைக் கூடாதவிடத்துப் பிரேரகம் இன்மையவாகிய சடமாதலாலும், தாமே கூடாதவற்றினைக் கூட்டி உயிர்க்கு அறிவைவிளக்குவான் சிவனே. நானும் பிறரும் சுதந்திரரல்லமென்று ஒருவன் சுகதுக்கங்கள் தோன்றின விடத்தெல்லாம் தன்னையும் பிறரையும் காணாமற் சிவனையே கண்டு நிற்கவே அச்சிவன்மீது இவனுக்குப் பிரியாப்பிரியங்கள் தோன்றுவது இன்மையால் பூரணநிஷ்டை கூடுமென்றதெனக் கொள்க.

இ-ம். தத்துவராயர். "புகழ்ந்தேன் புகழல்ல சொல்லியொன்றாகப் புவியி னுள்ளோ—ரிகழ்ந்தேன் றனையவ ரென் செய்கி லென்னினி யாவையு மாய்த்—திகழ்ந்தெங் கணுந்தன் செயலன்றி யின்மையைத் தேற்றிச் சிந்தை—நிகழ்ந்திங் கெனையின்று நீங்காம னின்மல னின்றனனே." எ-ம். சிவப்பிரகாசம். "மருவிய பொறியி லொன்று மாபூத மைந்தி லொன்றுங்—கருவிக ணான்கு நீங்காக் கலாதிக ளைந்துங்கூடி—யொருபுல னுகரு மிந்த வொழுங்கொழிந் துயிரு மொன்றைத்—தெரிவுறா தவனொழிந்தத் திரள்களுஞ் செயலி லாவே." அன்றியும், "தனக்கென வறிவி லாதான் றானவை யறிந்து சாரான்—றனக்கறிவிலாத வாயிற் றானறியாது சாரத்—தனக்கென வறிவிலாதான் றத்துவ வன்ன ரூபன்—றனக்கென வறிவா னாவிச் சகலமு நுகருந் தானே." எ-ம். சிவநெறிப்பிரகாசம். "தன்மைமுன் னிலை படர்க்கை மூன்றுவிதத் தாலே சாருமுயிர்க் கறிவிப்ப னிறைவனதிற் றன்மை—தொன்மையதா ஞானத்தைத் தடுத்திடுமாணவத்தைத் துறந்தெவையு முள்ளபடி தோற்றுவித்த லுளத்தே—நன்மையுடன் றீமையினை யவரவரா லறிய நல்குவது முன்னிலையா நரகசொற்க மாதிப்—பன்மையதாம் பரலோக

பாவபுண்ணியத்தின் பலமதனை நூலினா லுணர்ந்திடுகை படர்க்கை." எ-ம். சிவஞானதீபம். "சத்தமுதல் விடயத்தைப் பகுத்தறித லவித்தை · தக்கதொழிற் படுத்திடுத லீசர்தொழின் ஞான—மொத்ததுசா தாக்கியமாஞ் சத்திநசை யுறவே யுருஙிப் பித் திடுதல்சிவந் தற்செயல் பண்ணுவதாந்—தத்துவகா லொன் பதுவுஞ் சடமெனவிட் டகன்றே தானறியா காமலறி யாமையுமா காம—லத்தனுணர்த் திடவுணரு மறிவுயிரென் றருளாலறிந்தெவையு மிறைசெயலென் றுன்செயல்விட் டகலே." எ-ம். உண்மைவிளக்கம். "அக்கரங்கட் கெல்லா மகரவுயிர் நின்றாற்போன்—மிக்க வுயிர்க்குயிராய் மேவினு—மெக்கண்ணு—நில்லா விடத்துயிர்க்கு நில்லா தறிவென்று—நல்லா கமமோது நாடு." எ-ம். திருவருட்பயன். ஊனறியா தென்று முயிரறியா தென்றுமிவை—தானறியா தாரறிவார் தாம்." எ-ம். சைவநெறிவிளக்கம். "உண்டோ வதீதத் துணர்வுதிக்க யாமுளத்திற்—கொண்டகுறிப் பன்றிவிளங்கும்." எ-ம். வரும். மற்றும் வருவனவற்றாற்காண்க. (எஙி)

எல்லாத் துவந்துவமும் உடலைப்பற்றிவருதலால் அதனது காவலைக் கைவிடல் வேண்டுமென்று மேற்கூறுகின்றார்.

படைப்பாதிக் கீச னதிகாரி பற்று
துடற்காவ லீவிடுத் துந்தீ பற
ஓவா தவனேநோக் குந்தீ பற.

எ - து. அனைத்துயிர்க்கும் இத்தசைக்கண்ணுண்டாகிய சராசர தேகங்களும் அவற்றினைப்பற்றி வருகிற சுக துக்க போகமும் அத்தேகங்களினது நீக்கமும், உணர்வைப்பற்றி வருகிற மயக்கமும் தெளிவும், ஊழின் வலித்தன்மை யாதிகளாலே கூட்டிச் சிவனே ஐந்தொழில்களையும பண்ணுகிற்கிற அதிகாரியாதலின் யாதொன்றன்கண்ணும் நான் பிறர் அதிகாரியென்குதலையும், யான் இந்தவுடலைக் காக்கின்றேனென்னு மபிமானத்

றதையும், பற்றறக் கைவிட்டுச் சுதந்திரனாகிய பரனையே ஒழி யாது நோக்குவாய். எ - று.

உடற்காவல் கைவிடென்றமையால், அதனைக் கைவிடவே அதன்கட் பற்றிவரு மிருவகைத் துவந்துவமுங் கூடவே நீங்கு மென்பதாயிற்று.

இ-ம். திருமந்திரம். "எவ்விடத் தந்தம் பணியின்மை கண் டோரா—ரெவ்விடத் தும்பணி யீசன் பணியென்றே—யவ்வி டத் தைங்கரு மத்தா லறிதலா—லுவ்விடத் தோருக் கோருபாய மில்லையே." எ-ம். தேவாரம். "நன்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்—றென்க டம்பைத் திருக்கரக் கோயிலான்—றன்க டன்னடி யேனையுந் தாங்குத—லென்க டன்பணி செய்து கிடப் பதே." எ-ம். திருப்பாட்டு. "தேனைக் காவல் கொண்டு விண்ட கொன்றைச் செழுந் தாராய்—வானைக் காவல் கொண்டு நின்ரு ரறியா நெறியானே—யானைக் காவி லரனே பரனே யண்ணு மலையானே—வூனைக் காவல் கைவிட் டென்னை யுவப்பா ருணர் வாரே." எ-ம். திருவாசகம். "நாயிற் கடையா நாயேனை நயந்து நீயே யாட் கொண்டாய்—மாயப் பிறவி யுன்வசமே வைத்திட் டிருக்கு மதுவன்றி—யாயக் கடவே னானோதா னென்ன தோவிங் கதிகாரங்—காயத் திடுவா யுன்னுடைய கழற்கீழ் வைப் பாய் கண்ணுதலே." எ-ம். குகைநமசிவாயர்பாடல். "ஐயா மர ப்பாவை யாடுவதுங் சூத்திரிதன்—கைவாசி யோபாவை கற்ற தோ - வெய்யவினை—யென்னிச்சை யோவருணை யீசா படைத் தளிக்கு—முன்னிச்சை யன்றோ வுரை." அன்றியும், "நீயே படைத்தவுட னீகாப்பை காவென்ன—நாயேனுக் கென்பொறு ப்பு நாயகனே - யாயுமறைச் —சீர்கேட்குஞ் சோணகிரிச் சீமா னேவைத்தவனே—நீர்கேட்கு மோமரங்கனின்று." எ-ம். தேவி காலோத்தரம். "கடைபடு மூலகிய றன்னைக் காண்குறி இ— யுடையவ ரெனையிலை யாதுடை யானிலை—யடையவு மெனக் கிலை யானு மன்னதே—கடையிது கிலையெனிற் றமிய ருன

ரோ.” எ-ம். சிவபோகசாரம். “அன்றே யனாதி யமைத்தபடி யல்லாதொன்—றின்றே புதிதா யிசையுமோ - வென்றுஞ்— சலி யா தியற்றுவான் றன்னையே நோக்கி—மெலியா திருந்து விடு.” எ-ம். உப்பை. “கண்ணுழையாக் காட்டிற் கடுமுண் மரத் துக்கு—முண்ணும் படிதண்ணீ ரூட்டுவா - ரெண்ணா—நமக் கும் படியளப்பார் நாரியோர் பாகர்—தமக்குத் தொழிலேது தான்.” உறவை. “சண்டப்பைக் குள்ளுயிர்தன் றுயருந்தத் தானருந்து—மண்டத் துயிர்பிழைப்ப தாச்சரிய - மண்டி—யலை கின்ற வன்றா யரனிடத்தி லுண்மை - நிலைகண்டு நீயறிந்து நில்.” எ-ம். வரும். மற்றும் வருவனவற்றாற் காண்க. (௭௬)

ஊழின்வலியால் வரும் இன்பத்துன்பங்களை யாவரொரு வரேனும் அனுபவியாது நீங்குதல் கூடாதென்று மேற்கூறு கின்றார்.

இரும்பூ ரணநின் மலன்வினை யெல்லா
மொருங்குணர்ந் தூட்டுமே லுந்தீ பற
உண்ணா தொழிப்பதா ருந்தீ பற.

எ - து. மகத்துவமாகிய பூரணத்தையும் நிருமலனாகை யாற் சுதந்திரத்தையும் முழுதுணர்தலையும் உடைய பரமேசுவ ரன் பல்லுயிர்களது வினைகளையும் அதற்கேற்ற தனுவாதிகளை யும் ஏககாலத்து உணர்ந்து ஊட்டுமாயின், அவ்வினைப் பயன் களை அனுபவியாது நீங்குவது யாவரால் ஆவது, எ - று.

அஃது எங்ஙனமென்னில், அனைத்துயிர்க்கும் தத்தம் உபாய தந்திரத்தால் துன்பத்தை நீங்கி இன்பத்தைக் கூடவே ண்டுமென்பது துணிவாதலின் பகவான் உணர்ந்து கூட்டாநிற் கும் இன்பத்துன்பங்களை ஒருவன் பற்றுதல் விடுதல் செய்வான் நினைத்தல் பழுது. அங்ஙனமன்று; எல்லாவினைகளும் சிவனே கூட்டுகின்றானே அவனை அறியாமல் வரும் இன்பத் துன்பங் களை நீங்கவேண்டாவோவெனில்; இவ்வஸ்துவுக்குக் கர்த்திருத் துவமும், சர்வஞ்ஞத்துவமும், உண்டென்பது கூடாது. அங்ங

உண்டாயினும் அவ்வஸ்து அறிந்து கூட்டாநிற்கும் இன்பத்தைக் கைப்பற்றித் துன்பத்தை உபாயத்தால் நீங்கிவிடுவேனெனில, அவ்வஸ்து பூரணனாகையால் நீங்குதற்கு இடமே இல்லை: அங்ஙனமாயினும், அவ்வஸ்துவையன்றி எழுவகைத் தோற்றத்தும் ஒவ்வொரு சீவர்களால் வரும் இடையூறுகளை என்னுபாயத்தினாலே நீக்கிக்கொள்வேனெனில், எல்லாவுயிர்களையும் கன்மத்தளவில் இயக்கும் சுதந்திரன் சிவனேயாதலின். அவனையன்றி உனக்கும் பிறர்க்கும் இயங்குதல் கூடாது. இவ்வாறு சுதந்திர ஹீனராகிய உன்னையும் பிறரையும் சுதந்திரராகப் பாவித்தல் சிவதூஷணமாதலின் ஜனனமரணங்களை ஒருக்காலும் நீங்குதல் கூடாது. ஆதலால், யாதோரிடத்தும் சிவத்தையேகண்டு யான் பிறரென்று காணுதலை ஒழிந்து யாதொன்று வரினும் எடுத்தவுடற்கு அடைத்தபொறியளவே வந்து முடியாநிற்குமென்று தமது மனோவாக்குக்காயங்கள் அசையாமல் அடங்கிநிற்பர் மெய்யுணர்வுடையோரென்றதெனக்கொள்க.

இ-ம். திருமந்திரம். "செத்திடலென் சீவிடலென் செஞ்சாந் தணிகிடலென்—மத்தகத் தேயுளி நாட்டி மறிக்கிடலென்—வித்தகனந்தி விதிவழி யல்லது—தத்துவ ஞானிக டன்மை குன்றாரே." எ-ம். குகைநமசிவாயர் "பேரா யிரமுடைய பெம்மானைச் சோணகிரி—யாராவமுதை யறியாமல் - வாராது—தீதுநலமுந் தெரியுங்கா ணெஞ்சமே—யேதுமவ னன்றே யிரு." எ-ம். சிவஞானதீபம். "சித்தமுறு நினைவுரைக டொழில் பொய் வாய்மை தீமைநலம் விருப்புவெறுப் பின்பதுன்பம்—வைத்தபுசிப் பிகழ்ச்சி புகழ்தருமந் தான மடிமுயறசி பேறிழவு மற்று மெல்லா—மத்தனறிந் தளவிலவ ரவர்க்கு நாளு மருங்கனவு நனவினுநின் றளிப்ப தோரார்—சுத்தமறி வானுகருங் கருத்த ராகித் தடுமாறி யுளமெலிந்து தளர்வ ரந்தோ." அன்றியும், "உடலிலிருவினையுதவு மிதமகிதப் பயனூ லுளவாகு மின்பதுன்ப முணவொழியா துயிர்க்கு—நடலைமரு ளறிவினுட னுமருந்தி லதுவே நமன்

றாத ரருத்துவதா நணுகிடுமேல் வினையுஞ்—சடமுடலம் வினை றுகரா தறிந்துயிர்தா னருந்தா தலைவனவ னவளதுவா நிலைமை யிறு லுயிர்கட்—கிடமுடனின் றருத்துவனென் றுணர்ந்தருள வருந்தி விழைறபணியா மெதிர்வினையு மெரிசேர்வித் தாமே." எ-ம். திருப்பனுவல், "ஈனனேனுடற் கின்பதுன் பங்கணீ—ஞான பூரண நல்கவு நானுனித்—தானினைப்பதென் னேசென னித் தண்கிரி—வானு ளோர்தொழு மார்க்கண்ட லிங்கமே." அன்றியும், "இன்ப துன்ப மெனக்குநீ நல்கவு—மன்ப கன்றினி யல்லும் பகலுநா—னுன்ப்ர தாப முணருத லோவினேன்—மன்ப ராபர மார்க்கண்ட லிங்கமே." எ-ம். வரும். மற்றும் வரு வனவற்றுற் காண்க. (எஎ)

யான் பிறனென்னும் பாவனைநீக்கும் அவதி கூறுகின்றார்.

உறும்பொழு தவ்வீ டொருதன் னுழப்பா
னுறும்பிறர் யானென்பொ யுந்தீ பற
அலதொன் றினுமாறு துந்தீ பற.

எ - து. ஒருவனுக்கு முத்தியடையுங் காலையில் தன்னிடத் துண்டாகிய யான் பிறனென்னும் பொய்ப்பாவனை முயற்சியால் நீங்கா நிற்கும்: அஃதன்றி மற்றொன்றனாலும் அப்பாவனை நீக் கிச் சிவபாவனை தோன்றாது. எ - று.

அஃது எங்ஙனமெனில், ஈசுவரன் முழுதொருங் குணர்ந் தோனுதலின் யாவரொருவர் முத்தியடையுங்காலம் அவனுன் மதிக்கப்படும். அங்ஙனம் அவன் நியமித்த காலத்தன்றி ஒருவர் க்கும் இடையே யானெனதென்னும் பாவனை நீங்கி முத்திகூடு தல் கூடுமோவெனில், கூடாது. ஆயின் இவ்வுபாயநிஷ்டை கூறி யது யார்க்கெனின், நிருமலனுகிய பகவான் எல்லாவுயிர்களது பருவமும் ஒருங்கே நியமித்து அதற்கு ஏற்ப வேதாதி நூல்களும் அன்றே கூறியதாதலின் முத்தியடையும் பருவமுடையோர்க்கு அவரது மனத்தின்கண்ணே பொய்ம்மை நீங்கி மெய்ம்மை கூடுவதா கிய விழைவு தோன்றுதலின் அன்னோர்க்கு இத்திறநூல்கள் சம்

மதமாய் இவைகளிற் கூறியபடியே முயற்சி உண்டாகாநிற்கும்.
றும் பிறத்தற்கு உரியோர்க்கு யான் பிறரென்னும்
ினை நீங்குதற்குரிய முயற்சி உண்டாகாமையால் பிற
துவது இல்லையாதலின் முத்திக்கு யான் பிறரென்னும்
ினையைக் கெடுப்பதாகிய முயற்சியே நிமித்தமெனக்கொள்க.

இதற்குப் பிரமாணம்: பட்டணத்துப்பிள்ளையார் பாடல். "உழப்பின் வாரா வுறுதிக ளுளவோ—கழப்பின் வாராக் கையற வுளவோ." அன்றியும், "நினையா மெலியா நிறையழியா வாளா—புனைவார்க்குங் கொன்றை பொதுவோ - வினைவீரு—மெச்சியே காண வியன்றில்லை யானருளைப்—பிச்சியே நாளைப் பெறும்." எ-ம். குகைநமசிவாயதேவர்பாடல். "சும்மா கிடைக்குமோ சோறு சலன்பாத—மம்மால் விரிஞ்ச னறிகிலார் - நம்மா—விரு ந்துகளை சொன்னக்கா லென்னுகு நெஞ்சே—பொருந்த நினை யாத போது." எ-ம். தத்துவராயர் பாடல். "ஒளியார் வளைகலை நாணிழ வாருரு வுந்திரியார்—தெளியாத பித்தென்று செப்ப விரார்நின்று தேங்கக் கண்ணீர்—குளியா ரினிய கொடிய வென் றூர் குரவன் சொரூப—னளியா ரலங்க லெளிதோ புனைய வரி வையர்க்கே." அன்றியும், "தொழிலா னதுபணியாத் தோத்தி ரஞ்செய் தோவா—தழிலுகி னியஞ்ச லென்பா - யெழிலார்—நிருபா திகனே நினையவுநான் மாட்டேன்—சொருபாநா னென் செய்கேன் சொல்." எ-ம். பிரமகீதை. "திரமா மருத்தத்தி னுண்மைந்த ரானுந் திரா தவற்றின் றியாகத்தி னுலே—யுரமான வேதாந்த மாவாக்கி யத்தா லுற்பன்ன மாம்விச்சை யானிச்ச யித்தார்—பரமான வஞ்ஞான வந்தத்தி லேயப் பரஞான வுப தேச மொன்றாலு மேயிப்—புரமா முடம்புக்கு ளேயந்த முத்திப் பொருள்கண்டு வீடெய்துவாரிப் புவிக்கே." அன்றியும், "உலத்த லின்றியொழி வற்றபெயாரு ளுண்மை யதுவாஞ்—சலித்த லின் றிய தவத்தினவர் தங்க ணெதிரே—நிலத்தி லெண்ணெ யர ணிக்கன றகிக்க ணிகழ்நெய்—நிலத்தி னீரென நிகழ்ந்து வெளி யாகி நிலையாம்." எ-ம். ஞானவாசிட்டம். "இனிப்பிறவா முடி

வான பிறப்பிலே மெய்ஞ்ஞான மெளிதி னுண்டாம்—பனிச்சு டர்வெண் ணித்திலங்க ளுத்தமமா மூங்கிலலாற் படுவ டோ—செனித்தவரின் மேலோராய் நல்லோராய் மிக்கீர் தெளிந்தோ ராகி—யனித்தமறு முத்தராய் ஞானிகளாய் மெல்லா மவரைச் சாரும்.'' அன்றியும், சனன மஞ்சினர்க் குடை முயற்சியே சரணூர்—தினமு மிங்கிலை நானெனுஞ் சிறு மைதான் சிதையி—லனகமாயுல கெங்குமாம் விசால முண் டாகு—மனனுறத்தன துயர்ச்சிதான் காண்புற வருமால்.'' எ-ம். வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. (எஅ)

இப்பாவனு நிஷ்டையினது சிறப்பும் இதனுல் வரும்பய னும் மேற்கூறுகின்றார்.

இப்பாவ னுநிட்டை மாயோக மீசற்கீ
தொப்பின்மா பூசையு முந்தீ பற
உண்மையைக் கூட்டுமென் றுந்தீ பற.

எ - து. இங்ஙனங் கூறிய பாவனு நிஷ்டை மகாயோக மென்று கூறப்படுவது. இஃதே அகண்டாகார சுத்தசைதன் னிய சிவத்தை அர்ச்சித்தது. இந்நிலை கைவரவே உண்மை நிஷ் டையும் எளிதிற் கிடைக்கும். எ - று.

இந்நிஷ்டையே மகாயோகமென்பதற்குப் பிரமாணம்: திரு ப்புகழ். ''ஐந்துபூதமுமாறு சமயமு மந்த்ரவேத புராணகலைகளு மைம்பதோர்வித மானலிபிகளும் வெகுரூப வண்ட ராதி சரா சரமு முயர் புண்டரீகனு மேக நிறவனு மந்தி போலுரு வானு நிலவொடு வெயில் காயுஞ்—சந்த்ர சூரியர் தாமு மசபையும் விந்து நாதமு மேதுவடிவுமோர் தன்சொரூபம தாகி நிகழ்வது சிவயோகந் தங்களாணவ மாயை கருமம லங்கள் போயுப தேச பரகுரு சம்ப்ர தாயமொ டேயு நெறியது பெறுவேனே.'' எ-ம். ஞானவாசிட்டம். ''பாசமன்றி யுள்ளுணர்வைப் பதினைங் கடிகை பூசிக்க—ராசசூய மிலக்கநிக ரிவ்வா றெருநா ளருச்சிக்கி—

னாசி லாத பரவொளியி லமர லாகு மதுதானே—யேசில் பரம யோக மிதுதானே பரம கிரியையுமே." எ-ம். அமுதசாரம். "யோகத் தபாவமெனும் யோகமது கைகூடி—னேகப் பொருளதனா னெய்தியிடு - மேக—மதுவா மிதுவன்றெ னாவகண்டமான—வதுவாகை மாயோகமாம்." எ-ம். வரும். மற்றும் வருவனவற்றாற் காண்க.

இந்நிஷ்டையே சிவபூசையுமென்பதற்குப் பிரமாணம்: பிரமகீதை. "எப்பொருட் கண்ணு மன்னி யிலங்கிடு மறிவா மீச—னப்படி விளங்கு கின்ற தறிதலே சிவன்றனக்கு—மெய்ப்படு பூசை வேறோர் செயலினா லன்று மெய்யே—யிப்படி ஞானந் தன்னா லிறைஞ்சிடப் படுவா னீசன்." எ-ம். "ஆன்தாகாத் தெய்வமதே யடையும் விடய மிந்திய மாய்த்—தானுமாகித் தனைத்தன்னாற் றானே நுகருந் தன்மையது—ஆன மாகு ஞாதாதி யொழிந்தே யுள்ள வறிவதனாற்—றானே யாகக் கண்டிருத்தல் சத்தா யுள்ள பூசையது." எ-ம். ஞானவாசிட்டம். "தேகமுதற் பிரிவுக ளாய்ச் சிறியனவாம் பொருள் களிலத் தெய்வமுண்டோ—பாகமறப் பணியற வடிமுடிவற் றளவுணர்வே பரமபோத—மாகலினா லதுதெய்வ மருச்சித்தற் குரித்தாகு மறிவிலாத—மூகருக்கு வடிவுமுத லருச்சனையே யியல்பென்று மொழியு மன்றே." அன்றியும், "அறிவுசம பாவனை சந்தோடமெனு மலர்களா லந்தத் தேவாம்—பிறிவரிய வான்மதத்து வத்தையருச் சிப்பதே பெரியபூசை—குறிவடிவிற் பூசனைபூ சனையல்ல வகண்ட மெனக் கூறுந் தெய்வ—நெறி கொள்புறத் தொழில்களா னோராதிங் கிதனாலே நிறையு மின்பம்." அன்றியும், "ஓது பேதம் பேய்த்தே ரென்றுணர்த லது வொண் புனலாகுங்—காத லின்ப மிடர்களவென் றிடலே கருது புகை யொளிதான்—வாதங் கழிய மறித் துணர்தன் மலர்பூ ணுடை மகிழ்சாந்த—மேத மின்றி யிருந்திடுத லிறைவற் கிலையில் பூசையதே." எ-ம். சிவானந்தமாலை. "எங்குஞ் சிவாலயமா மெங்குஞ் சிவமாகு—மெங்குஞ் சிவனடிமை யெங்கு

மாய்ப்-பங்கறவே—நிற்றல் சிவபூசை நின்றநிலை யாய்நிறைவிற்--பற்றொழிதல் பூசா பலம்." எ-ம். வரும். மற்றும் அருவனவற்றாற் காண்க.

பாராதியென்னுஞ் செய்யுட்டொட்டு இச்செய்யுள்காறும் பூரண பாவனாநிஷ்டை கூறியதெனக் கொள்க. (எக)

இப்பூரணபாவனை கூடாதார்க்கு மேலும் ஓர் குறிப்புப் பாவனை கூறுகின்றார்.

கொள்ளரி தேலக் குறியெம திவ்வுரு
வுள்ளத்தி னுள்ளேவைத் துந்தீ பற
ஓங்கார முச்சரி யுந்தீ பற.

எ - து. முற்கூறிய பூரணபாவனைக்கண் மனம் நில்லாவிடத்து உன்னையாளும் பொருட்டாக நாம்கொண்டருளிய இக்குரு வடிவத்தை இதயத்தினுள்ளே தியானஞ்செய்து அவ்விதயத்தினுள்ளே பிரணவாக்ஷரத்தையுச்சரி. எ - று.

பூரணனாகிய சிவன் ஒருவனுக்கு அனுக்கிரகஞ் செய்யுமிடத்துக் கொள்ளுந் திருமேனி குருவடிவேயாதலாலும், மற்றொரு குறிப்பு வடிவங்களும் அவனருளாற் பெறப்படுவ வாதலாலும், இங்ஙனங் குருவடிவே குறிப்புருவமாகக் கூறினாரெனக்கொள்க.

குருத்தியானத்திற்குப் பிரமாணம். திருமந்திரம். "குருவே சிவமெனக் கூறினனந்தி—குருவே சிவமென் பதுகுறித் தோரார்—குருவே சிவமாகிக் கோனுமாய் நிற்குங்—குருவே யுரையுணர் வற்றதோர் கோவே." அன்றியும், "கருட னுருவங் கருதுமளவிற்—பருவிடந் தீர்ந்து பயங்கெடு மாபோற்—குருவி னுருவங் குறிக்கொண்டு நோக்கத்--திரிமலந் தீர்ந்து சிவனவனாமே." எ-ம். சிவாநுபூதிவிளக்கம். "சீருருவங் கொண்டருளுந் தேசிகன்செம் மேனிபோ—லோருருவங் கொண்டங் குணரா துணர்த்தினனே." எ-ம். "வந்த குருவடிவை வந்தித்துப் பூசித்துத்—தந்த சிவானுபவந் தானருந்தப் பெற்றனமே." எ-ம். அமுதசாரம். "உள்ளத்தி னின்று மொளித்தான் பரன்குரவன்—கள்ளங்

ட்டிஞன் - வளள-
ங — குருவான சே
வருவனவற்றுற் காண்க.

னவமுச்சரித்தற்குப் பிரமாணம்: தா[illegible]ரம். "ஓமென்னு மோங்காரத் துள்ளே யொருமொழி—யோமென்னு மோங்காரத்துள்ளே யுளபேத—மோமென்னு மோங்காரத் துள்ளே யுருவரு—வோமென்னு மோங்கார மொண்முத்தி சித்தியே." எ-ம். திருவாசகம். "உய்யவென் னுள்ளத்து ளோங்கார மாய் நின்ற—மெய்யா விமலா விடைப்பாகா." எ-ம். பிரமகீதை. "தீமரந்தொறு மடைந்தழி வுறுது தெரிவா—காமை நின்றரணி யால்வடிவு காணு மதுபோ—லாமு டம்பிலழி வின்றிமன்ற நின்ற வமல—ஞெமெ னும்பொரு ளுணர்ந்திட வுடம்பி லொளி வாம்." எ-ம். ஞானவாசிட்டம். "ஓங்குஞ் சின்மாத்திரப்பொருளா மோங்கா ரத்தை யுண்ணினைந்து—தூங்குந் தியான பரஞகித் தொடர்சங் கற்ப மெல்லாம்போய்—வாங்குந் தொழிலீ டணையைய மனன ஞான ஞேயமிவை—தாங்கு ஞாதா வினைத்துமறத் தனிச்சித்திரம்போ னெடிதிருந்தான்." எ-ம். வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. (அ0)

அஞ்சுமுன் றஞ்சக்க ராதியே தேனுநின்
வஞ்ச மறுத்தோதென் றுந்தீ பற
மனமிட்ட மானவொன் றுந்தீ பற.

எ - து. பஞ்சாக்ஷரி அட்டாக்ஷரி முதலிய மந்திரங்களாயினும் உன்மனத்திற்கு இட்டமான வொன்றை ஏகாக்கிரசித்தம் பொருந்தி உள்ளத்தினுள்ளே உச்சரிக்கக்கடவாய். எ - று.

இதற்குப்பிரமாணம்: திருக்கடைக்காப்பு. "தும்ம லிருமலொடர்ந்த போழ்தினும்—வெம்மை நிரயம் விளைந்த போழ்தினு—மிம்மை வினையடர்த் தெய்து போழ்தினு—மம்மையி னுந்துணை யஞ்செழுத்துமே." எ-ம். பெரியாழ்வார். "எடு நிலத்தி லிடுவதன் முன்னம்வந் தெங்கள் குழாம்புகுந்து—கூடு மனமுடை

யீர்கள் வரம்பெ வந் தொல்லை கூ
நன்கறிய நடே ணையவென்று—பாய
ருள் ளீர்வர் ரண்டு கூறுமினே.” ச-ம.
வருவனவர ாண்க.

நிருமலாந்தக்காணத்தின் பொருட்டு மேலுங் கூறுகின்றார.

மந்திர நிட்டையின் றேல்வாயு வாதியாற்
சிந்தைதனாய் தாவதற் குந்தீ பற
செய்யோக மாதிய வுந்தீ பற.

எ - து. இங்ஙனங் கூறிய மந்திரநிஷ்டைகளில் மனசு நில்லாவிடத்து அம்மனசு நிருமலமாய் நிலைகொள்வதன்பொருட்டு வாயுதாரணை முதலியவற்றால் யோகமாதிய தவங்களையாயினும் செய்யக்கடவாய். எ - று.

இதற்குப் பிரமாணம்: திருமந்திரம். “வாயுவிருந்திட வாயுவிருந்திடு—மாயு விருந்திடக் காய மிருந்திடுங்—காய மிருந்தாற் கருத்து மிருந்திடு—மேய வறிவுணர் வுற்றால் வினையின்றே.” எ-ம். சிவதருமோத்தரம். “இந்திய விருத்தி யெல்லாம் பிராணனே யியக்க வேயு—மிந்தியஞ் செயிக்க வெண்ணிற் பிராணனைச் செயிக்க பஞ்ச—விந்தியஞ் செயித்தார் தாமே யெய்துவர் சமாதி தன்னை—யிந்தியஞ் செயிக்க மட்டா ரெய்துவ தேது மின்றே.” எ-ம். ஞானவாசிட்டம். “ஆதலா லுயிராசைவால் வாதனைப்பா லழுத்தத்தால் விரிந்தவற்று ளடங்கு வாயே—லோதுபிறப் பறுமறிவின் விரிவேயுள்ள மூள்ளத்தா லிவ்விந்த வுயிர்கள் வாழ்வாஞ்—சேதனயோ கிகளெல்லாம் பிராணயாமந் தியானமருந் தாகத்திண்டிறங்களாலே--பேதமன மொடுங்குவது பொருட்டா· வன்றோ பிராணவா யுவைநிறுத்திப் பிடிக்கின்றாரே.” எ-ம். பிரபுலிங்கலீலை. “ஓடுமோலை நிறுத்துறி லுள்ளுறக்—கோடு வாய்க்கலி னத்தினைக்·கொள்ளுவார்—நீடு மாமனனிற்க நிறுத்துறி—லோடு வாயுவை யுள்ளுற வீர்ப்பரால்.” அன்றியும், “வாயு நிற்ப மனனின்று மனந்தா னிற்பப் பொறி

நின்று—பாய பொறிக ணிற்பவிடர் படுபுன் புலன்கணின்ற னவா—லாய புலன்க ணின்றமையா னகிலந்தோன்று தள்ள த்தே—தூய பாமா னந்தபாஞ் சோதி தோன்றக் கண்டிருந் தார்." எ-ம். திருவுந்தியார். "காற்றினை மாற்றிக் கருத்தைக் கரு த்தினு—லாற்றுவ தாற்றலென் றுந்தீ பற—அல்லாத தல்லலெ ன்றுந்தீ பற" எ-ம் வரும். மற்றும் வருவனவற்றுங் காண்க.

அத்தன்மையுங் கூடாதார்க்குப் பின்னுங் கூறுகின்றார்.

அயனாதி மூவரு மாங்கவர் தம்ம
திறைதரு வேடமு முந்தீ பற
எல்லாமு மியாமெம து ந்தீ பற.

எ - து. அயனரியாரெனனுந் திரிமூர்த்திகளும் அம்மூர்த் திகளது வேடங்களும் யாமும் எமதுவேடமும் பிறிதன்றெனக் கொள்வாய். எ - று.

எல்லாமும் யாம் எமதென்றமையால் சிருட்டியாதி கிருத்தி யங்களைப் பண்ணு மூர்த்திகளாயும் அம்மூர்த்திகட்கெல்லாம் காரணமாயும் நிற்பது ஒரு சிவமேயென்றதெனக்கொள்க.

இதற்குப் பிரமாணம்: திருக்கடைக்காப்பு. "படைத்தளித் தழிப்பமும் மூர்த்திகளாயினை." எ-ம். தேவாரம். "ஆதி யும்மர னுயயன் மாலுமாய்ப்—பாதி பெண்ணுருவாய பரமனென்— றோதி யுள்குழைந் தேத்தவல் லாரவர்— வாதை தீர்த்திடும் வான் மியூ ரீசனே." எ-ம். திருப்பாட்டு. "வாழ்வர் கண்டீர்நம் மூளை வர் வஞ்சமனத் தீரே—யாவ ராலு மிகழப்பட்டிங் கல்லலில் வீழாதே—மூவராயு மிருவராயு முதல்வ னவனேயாந்—தேவர் கோயி லெதிர்கொள் பாடி யென்ப தடைவோமே." எ-ம். திரு வாசகம். "சுந்தரத்தின்பூங் குயிலே சூழ்சுடர் ஞாயிறு போல— வந்தரத்தே நின்றிழிந்திங் கடியவ ராசை யறுப்பான்—முந்து நடுவு முடிவு மாகிய மூவ ரறியாச்—சிந்துரச் சேவடி யானைச் சேவகனை வரக்கூவாய்." எ-ம். திருவாய்மொழி. "திருமானுன்

முகன் செஞ்சடையாரெனன் றிவர்களெம்—பெருமான் றன்மையா ரறிகிற்பார் பசியென்—ளெருமா முதல்வா ஆழிப் பிரானென்னை யாளுடைக்—கருமாமேனிய னென்பனென் காதல் கலக்கவே." எ-ம். பிரமகீதை. "புருடனென் றுரை செயப்படுவதுபரி பூரண மாகின்ற—சொருப நின்றவா றிற்கவிங் கருளொடு தோன்றவல் லவன்றன்னை—யரனு மன்றுமா லயனுமன்றெவர்க்குமுள் ளாகியே யாவர்க்குந்—தெரிவ ருஞ்சிவ னவனையிங் கொருங்கிய சிந்தையார் தெளிவாரே." எ-ம். வரும் மற்றும் வருவனவற்றாற் காண்க. (அ௩)

இங்ஙனங் கூறிய திரிமூர்த்திகளினும் அவரவர் வேடமாகிய கணங்களினும் வழிபடுமுறைமை மேற்கூறுகின்றார்.

> எத்தேவை நாமென் றிசைந்தா யதைத்தொழு
> சத்திய பத்தியா லுந்தீ பற
> தனுவாதி யைக்கொடுத் துந்தீ பற.

எ - து. இங்ஙனங்கூறிய முத்தேவர்களுள்ளும் அவரவர் வேடங்களுள்ளும் யாதொருவடிவத்தை நீ சிவமென்று துணிந்தாய் அந்தவடிவத்தையே நாடோறும் வழிப்படக் கடவாய்; சத்தியபத்தியால் மனவாக்குக் காயத்தை அர்ப்பணஞ்செய்து.எ-று.

சத்தியபத்தியென்றது உலகர் சான்றொழிந்து தேவதை சான்றாக வழிபடுமிடத்துத் தனுவாதிகளை அர்ப்பித்துத் தலைநிற்றலெனக்கொள்க. தனுவாதி என்றது உடல் பொருளாவியென்பாருமுளர். இது துறவிக்குக் கூறியதாகவின், அது சிறப்பன்றெனக்கொள்க.

இதற்குப்பிரமாணம்: தேவாரம். "உள்ள முள்க லந்தேத்தவல் லார்க்கலாற்—கள்ள முள்ளவ ருக்கருள் வானலன்—வெள்ள முமமர வுமவிர வுஞ்சடை—வள்ள லாகிய வான்மியூரீசனே." எ-ம். திருவாய்மொழி. "உணர்ந் துணர்ந் திழிந்தகன் றுயர்ந்துரு வியந்தவிந் நிலைமை—புணர்ந் துணர்ந் துணரினு மிறைநிலை யுணர்வரி துயிர்கா—ளுணர்ந் துணர்ந் துரைத்

துரைத் தரியயனரனென்னு மிவரை—யுணர்ந் துணர்ந் துரைத் துரைத் திறைஞ்சுமின் மனப்பட்ட தொன்றே." அன்றியும், "மகிழ்கொ டெய்வமும் லோகமுலோக—மகிழ்கொள் சோதிமலர்ந்தவம்மானே—மகிழ்கொள் சிந்தசொற் செய்கைகொண்டென்று—மகிழ்வுற் றுன்னை வணங்க வாராயே." எ-ம். சிவஞானசித்தியார். "மனமது நினைய வாக்கு வழுத்தமந் திரங்கள் சொல்ல—வினமலர் கையிற் கொண்டிங் கிச்சித்த தெய்வம் போற்றிச்—சினமுத லகற்றி வாழுஞ் செயலற மானால் யார்க்கு—முனதொருதெய்வ மெங்குஞ் செயற்கு முன்னிலையா மன்றே." எ-ம். வரும். மற்றும் வருவனவற்றாற் காண்க. (அசு)

யாதொரு போகமோக்ஷம் அன்பினாலன்றி மற்றொன்றால் யாவர்க்கும் அடைதல் கூடாதென்று மேற்கூறுகின்றார்.

நெய்யின்றி யாக முடியுமே வீடுபே
றைவகை யாகமு முந்தீ பற
அன்பின்றி யாகுமென் றுந்தீ பற.

எ - து. யாதாமோரிடத்தாயினும் நெய்யின்றி யாகம் முடியுமாயின், கருமயாகம் தவயாகம் மந்திரயாகம் பாவனையாகம் ஞானயாகம் என்று இங்ஙனங்கூறிய ஐவகையாகமும் அன்பின்றி ஒருவனுக்கு முடியும். எ - று.

இதனால் போகமோக்ஷத்திற் கெல்லாம் ஆதரமே காரணமென்றதாயிற்று. இதற்குப் பிரமாணம்: திருவள்ளுவர். "அன்பிற்கு முண்டோ வடைக்குந்தா ழார்வலர்—புன்கணீர் பூசறரும்." எ-ம். திருமந்திரம். "அன்பு சிவமிரண் டென்ப ரறிவிலா—ரன்பே சிவமாவ தாரு மறிகில—ரன்பே சிவமாவ தாரு மறிந்தபி—னன்பேசிவமா யமர்ந்திருப் பாரே." எ-ம். "என்பே விறகா விறைச்சி யறுத்திட்டுப்—பொன்போ லெரியிற் பொரிய வறுப்பினு—மன்போ டுருகி யகங்குழைந் தார்க்கன்றி—யென் பொன் மணியினை யெய்தவொண் ணாதே." எ-ம். தேவாரம். "நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே—புக்கு நிற்கும் பொன்

ஞர்சடைப் புண்ணியன்—பொக்க மிக்கவர் பூவுநீ ருங்கண்டு—நக்கு நிற்ப னவர் தமை நாணியே." எ-ம். திருப்பாட்டு. "இன் பமுண்டேற் றுன்பமுமுண் டேழைமனை வாழ்க்கை—முன்பு சொன்னேன் மோழைமையான் மொட்ட மனத் தீரே—யன்ப ரல்லா ரணிகொள் கொன்றை யடிகளடி சேரா—ரென்பகோயி லெதிர்கொள் பாடி யென்ப தடைவோமே." எ-ம். திருவாசகம். "பத்திவலையிற் படுவோன் காண்க." அன்றியும், "தேவ தேவன்மெய்ச் சேவகனை றென்பெ ருந்துறை நாயகனை—மூவ ராலுமறி யொணாமுத லாய வானந்த மூர்த்தியான்—யாவ ராயி னுமன்ப ரன்றி யறியொ ணாமலர்ச சோதி யான்—றூய மாமல ர்ச்சேவ டிக்கணஞ் சென்னி மன்னிச சுடருமே" எ-ம் திருவாய்மொழி. "நீர்மையி னூற்றுவர் வீயவன் றைவர்க் கருள்செய்து நின்று—பார்மல்கு சேனை யவித்த பரஞ்சுடரை நினை-ந்தாடி—நீர்மல்கு கண்ணின ராகி நெஞ்சங் குழைந்து நையாதே—யூர்மல்கி மோடு பெருப்பா ருத்தமர்கட் கென்செய் வாரே." எ-ம். "அமரர் தொழப்படு வானை யனைத்துல குக்கும் பிரானை—யமர மனத்தினுள் யோகு புணர்ந்தவன் றன்றோடொன் றுக—வமரத் துணியவல் லார்க ளொழிய வல்லாதவ ரெல்லா—மமர நினைந்தெழுந் தாடி யலர்த்துவ தேகருமம்மே." எ-ம். சிவ தருமோத்தரம். "ஆதரவே பரமான வறமதாகு மாதிநடு வந்த மிவற் றனைத்து மாகு—மாதரவற் றவரீகை யறம தாகா வாத லினு லாதரவே மூலமாகு—மாதரவே பிரகிருதி யான்மாவீச னெனும் பொருளு மறிவிக்கு மமலன் றானு—மாதரவே யடை விக்கு மாத லாலே யனைத்தினுக்கு மாதரவே மூல மாமே." எ-ம். அனுபவசாரம். "அன்பி லாதநல் லறங்களு மைமவகை வேள்வியும் பிணமேயா—மன்பில் வாய்மையுந் தானமு மொழுக்கமும் விரதமும் பிணமேயாம்—துன்பின் ஞானமுந் துகளிலச் சமயமுஞ் சொல்லிடிற் பிணமேயா—மன்பி லாதிய லறம் பொரு ளின்பம்வீ டனைத்திற்கு முயிருண்டோ." எ-ம். சொரு பானந்தநிலயம். "அன்பதொன்றுமற் றருஞ்சிவ மொன்று

மென் றறிபவ ரறிவில்லா—ரன்ப தேசிவ மாயிருந் தமையறிந் தவரிறை யருள்பெற்றார்—றன்ப வன்பவந் தவங்களில் வீடெனச் சொல்லிடு மவையெல்லா—மன்ப தாமழ் றினைமுழுந் திடவுணு வயலவ ருரைதானே." எ-ம். மெய்ஞ்ஞான விளக்கம். "ஆமமது வெங்குளது வங்கனல தாமா—றேமமுற வேயிறைவ ஞருமவர் பாலுந்—தாமமைவி லாதுருகு தன்மைய ருளத்தே—யாமிறைவ ஞரிய தாளுமென வோரே." எ-ம். மெய்ஞ்ஞான நிலயம். முழுதுந் தன்னையே தழுவிட நழுவிடு மூலமா யிறை வந்து—பழுதொன் றின்றிய பத்திநல் வலையினிற் படுமெனு மதுகண்டா லெழுது கல்வியு மிலங்குநற் றவங்களும் யோக ஞானமு மெங்கே—யழிவொன் றின்றிய வன்பினன் பெருமை யையறையவு முடியாதே." எ-ம். திருககளிற்றுப்படியார். "அன் பேயென் னன்பேயென் றன்பாலழு தாற்றி - யன்பே யன்பாக வறிவழிய - வன்பலறித்—தீர்த்தந் தியானஞ் சிவார்ச்சனைகள் செய்யுமது—சாத்தும் பழமன்றே தான்." எ-ம். சிவானந்த மாலை. "சீரார்பதினெண் புராணஞ் செழுமறைநூ—லாராத வாகமங்கற் றாய்ந்தறிந்து - நேராகச்—சங்கரன் றாளிணைக்கீ ழன்பிலனேற் சண்டாள—னங்கையினிற் பாகீரதி." எ-ம். வரும். மற்றும் வருவனவற்றாற் காண்க. (அ௰)

அன்போடுகூடாத நெஞ்சிற்கு உணர்த்துதல் மேற்கூறுகின்றார்.

அஞ்சிவக் கன்புறா தைம்புலக் கோடுமே
னெஞ்சிற் கறிவுறுத் துந்தீ பற
நீதுணை யல்லையென் றுந்தீ பற.

எ - து. எல்லாச் சிறப்பினையுமுடைய சிவத்திற்கு அன்பு செய்யாது குற்றத்தினை வளைப்பதாகிய ஐம்புல விஷயங்களை இச்சித்து உன்னுடைய நெஞ்சம் செல்லுமாயின் அதனைநோக்கி நித்தியானந்தத்தினை நீத்துச் சிறிதாய் அழிதருஞ் சத்தாதி விஷ

யத்தைக் கருதாநிற்கும் நெஞ்சமே நீ யெனக்குத் துணையாகக் கடவாயோ அல்லையென்று வலியுறுத்தி அறிவுறுத்து. எ - று.

இதற்குப் பிரமாணம்: திருவாசகம். "ஆடுகின்றிலை கூத்துடையான்கழற் கன்பிலை யென்புருகிப்—பாடுகின்றிலை பதைப்பதுஞ் செய்கிலை பணிகிலை பாதமலர்—சூடுகின்றிலை சூட்டுகின்றதுமிலை துணையிலி பிணநெஞ்சே—தேடுகின்றிலை தெருவுதோறலறிலை செய்வதொன் றறியேனே." எ-ம். பட்டணத்துப்பிள்ளையார். "பேசு வாழி பேசு வாழி—யாசையொடு மயங்கி மாசுறு மனமே—பேசு வாழி பேசுவாழி—கண்டன மறையு முண்டன மலமாம்—பூசினமாசாம் புணர்ந்தன பிரியு—நிறைந்தன குறையு முயர்ந்தன பணியும்—பிறந்தன விறக்கும் பெரியன சிறுக்கு—மொன்றொன் றொருவழி நில்லா வன்றியுஞ்—செல்வமொடு பிறந்தோர் தேசொடு திகழ்ந்தோர்—கல்வியிற் சிறந்தோர் கடுந்திறன் மிகுந்தோர்—கொடையிற் பொலிந்தோர் படையிற் பயின்றோர்—குலத்தி னுயர்ந்தோர் நலத்தினின் வந்தோ—ரனைய ரெங்குலத்தின ரிறந்தோ ரனையவர்—பேருநின்றில போலுந் தேரி—னீயுமஃ தறிதி யன்றே மாயப்—பேய்த்தேர் போன்று நீப்பரு முறக்கத்துக்—கனவே போன்று நனவு பெயர் பெற்ற—மாய வாழ்க்கையை மதித்துக் காயத்தைக்—கல்லினும் வலிதாக் கருதிப் பொல்லாத்—தன்மைய ரிழிவு சார்ந்தனை நீயு—நன்மையிற் றிரிந்த புன்மையை யாதலி—னழுக்குடைப் புலன்வழி யிழுக்கத்தி னொழுகி—வளைவாய்த் தூண்டிலினுள்ளிரை விழுங்கும்—பனமீன் போலவு—மின்னுபு விளக்கத்து விட்டில் போலவு—மாசை யாம் பரிசத் தியானைபோலவு—மோசையின் விளிந்த புள்ளுப் போலவும்—வீசிய மணத்தின் வண்டு போலவு—முறுவ துணராச செறிவுழிச சேர்ந்தனை—நுண்ணூ னூற்றுத் தன்னகப் படுக்கு—மறிவில் கீடத்து நூற்றுழி போல—வாசைச சங்கிலிப் பாசத் தொடர்ப்பட்—டிடர் கெழு மனத்தினோ டியற்றுவ தறிவுறா—குடர்கெழு சிறையுளைக் குறங்குபு கிடத்தி—கறவை நினைந்த கன்றென விரங்கி—

மறவா மனத்து மாசறு மடியார்க்—கருள்சுரந் தளிக்கு மற்பு
தக் கூத்தனை—மறையவர் தில்லை மன்று ளாடு—மிறையவ
னென்கிலை,யென்னினைந் தனையே" எ-ம். த்த்துவராயர். "மற்
றிலை பற்றென்று வாழ்வித்த நாதன்·மலரடியைப்—பற்றிலை மற்
றொன்றைப் பற்றா தொழிந்திலை பற்றி யொன்றும்—பெற்றிலை
யாயினும் பேய்த்தேரை நீரெனும் பின்றொடர்ச்சி—யற்றிலை
யென்செய்கின் றாய்நெஞ்ச மேயழிந் தற்றனையே." அன்றியும்,
"நின்பெற்றி தன்னை நினைக்கவுண்டோ நெஞ்ச மேநிறையப்—
பொன்பெற்று வைத்தும் பொதிந்து கொளாய்புன் குரம்பை
யிலே—தன்பெற்றி தன்னைத் தருந்தம் பிரான் வந்து சார்ந்திரு
ப்ப—வெஃபெற்ற நீயிந்தி யஞ்சொன்ன வாசெய் தினைக்கின்
றதே." எ-ம். மூலசித்தி. "அன்பிலா நெஞ்ச மரும்பிணி
யுனவு மளவிலாப் பகைநமக் கெனவுந்—துன்பமார் சோக
மோகமே முதலாந் துயரெலாம் விளைநில மெனவு—மின்பவீ
டெய்தா திடற்கிடை யூறா மிருளு மென் றியம்புவர் பெரியோர்—
துன்பிலா விறைவர்க் கன்பிலா நெஞ்சே துணையலை துணையலை
யெனக்கே." எ-ம். அனுபவசாரம். "புலையுறு செயலாற் புலனுறு
போகப் புகலரும் விடத்தையே நுகர்தற்—கலமரு கவலைக் கட
லுளே தலைகீ ழாகவே விழுந்தழி நெஞ்சே —கலைகளி னுணர்வுக்
கரியநற் சொருபன் கழல்களை நினைந்து நைந்துருகி—யெல்லையறு
மன்பா மமுதினை விரும்பா தேதுகொண் டென்செய்தாய் கெடு
வாய்." எ-ம். போதரத்நாகரம். "காயநீர்க் குமிழி யதிலாநமின்
பங் கானலிற் புனலது தனக்கிங்—காயவத் துயர மனலை
யதுநீ யாய்வுறா மையினழிந் தற்றாய்—நீயினிக் கவலை மயங்க
லைத் தவிர்ந்து நெஞ்சமே வந்தெனக் குடன்பட்—டாயவச்
சொருபற் கன்பதே புரியி லரியதே தார்நமக் கெதிரே." எ-ம.
வரும். மற்றும் வருவனவற்றாற் காண்க. (௮௬)

பின்னும் சத்தாதி விடயத்தால் குற்றமேயென்று வலியுறு
த்திக் கூறுகின்றார்.

அசுணநிக் கோரொன்று லம்புல ஞனு
மிசையுமேற் கேடெமக் குந்தீ பற
எங்ஙன முய்துமென் றுந்தீ பற.

எ - து. அசுணப்புள் யானை விட்டில் மீன் வண்டென்
பன ஐந்தும் சத்தாதி விஷயங்களில் வலைவாயித் தூண்டிலினுள்
ளிரை விழுங்கும் பன்மீன்போலவு, மின்னுபு விளக்கத்து விட்
டில்போலவு, மாசையாம் பரிசத்தியானைபோலவு, மோசையின்
விளிந்த புள்ளுப்போலவும், வீசிய மணத்தின் வண்டுபோலவும்,
ஓரொன்றுலே கேடடையாநிற்கும். எமக்கு ஐம்புலனாலும் கேடு
வருமாயின் அவற்றினை நீங்காவிடத்து எங்ஙனம் உய்குவம்
நெஞ்சமே. எ - று.

இதற்குப்பிரமாணம்: ஞானவாசிட்டம். "உரைத்தவ சுண
ங்களிறு விட்டின் மீன்றே னுசையூ றொளியிரத நாற்றமெ
ன்ன—நிரைத்தவற் றோரொன்றன் மாய்ந்துபோகு நிலையழி
க்கு மிவையைந்து நேரே கூடிக்—கரைத்தலுறு பவர்க்கின்ப
மெங்கே யுன்றன் கட்டுக்கு வாதனையே கயிற்றுச் சாலம்—புரை
த்தெழுநெஞ் சேயதுவே போகு மாயிற் பொருவில்சய மஃதுன
க்குப் புகலுங்காலே." எ-ம். அமுதசாரம். "சிந்தா குலமனிதர்
சீசீ செவிமுதலா—மைந்தாலு மீடழிய வல்லரோ - வைந்தி
லொரு—வேட்கை யசுணமிபம் விட்டின் மீன்வண்டு—கேட்கை
முத லோரொன்றன் கேடு." எ-ம். ஒழிவிலொடுக்கம். "நாய
லகை நெய்விரும்பி நக்குவது நஞ்சிட்ட—பாயசமு மெய்ப்பரி
சம் பாவைமிகச் - சாயனீர்—வேட்கை யசுணமிபம் விட்டின்
மீன் வண்டிவையின்—சாக்கியைக்கண் டார்துறவா தார்." எ-ம்.
வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. (அஎ)

வனிதையர் விஷயத்தால் வருங்கேடு மேற்கூறுகின்றார்.

ஆயிழை யார்பாலுண் டைம்புல வேட்கையு
நீவிரும் பிற்கேடென் றுந்தீ பற
நெஞ்சமே சொல்வதென் றுந்தீ பற.

எ - து. வனிதையரிடத்து ஐம்புலநுகர்ச்சியும் உளதாமாதலின் அவரது போகத்தை நீவிரும்பிற் கேடெடன்பதற்கு ஐயம் என்னை நெஞ்சமே எ - று.

இதற்குப் பிரமாணம்: திருவள்ளுவர். "கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனு—மொண்டொடி கண்ணே யுள." அன்றியும், "உள்ளக் களித்தலுங் காண மகிழ்தலுங்—கள்ளுக்கில் காமத்திற் குண்டு." எ-ம். திருவாசகம். "காறுரு கண்ணியரைம்புல ளுற்றங் கரைமரமாய்—வேருறு வேனை விடுதிகண்டாய் விளங்குந் திருவா—ரூருறைவாய் மன்னு முத்தரகோசமங் கைக்கரசே—வாருறு பூண்முலையாள்பங்க வென்னை வளர்ப்பவனே." எ-ம். வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. ()

காமத்தால் வருமின்பமும் இதனுல் வருந்துன்பமும் மேற் கூறுகின்றார்.

சிலந்தி வருடத் திகழும் சுகம்போ
லிலங்கிழை யார்சுக முந்தீ பற
இடராய் விளையுமென் றுந்தீ பற.

எ - து. ஒருவனது உடலின்கண் தோன்றிய சிலந்தியைச் சூழ்ந்து உகிரால் வருட உண்டாகிய சுகம் பின்பு கீறி அறுத்துத் தீர்த்தற்கு இடமாய் விதனஞ் செய்குதல்போலும் ஆபரணுதிகளினது சிறப்பால் மயக்கஞ்செய்யாநிற்கும் மகளிரிடத்து உண்டாகிய சிற்றின்பமும் பின்பு நரகாதிவாதனைக்கு இடஞ்செய்யும். எ - று.

இதற்குப்பிரமாணம்: தேவாரம். "குழலையாழ்மொழி யாரிசை வேட்கையா—யுழலு மாக்கையைப் பூணு முணர்விலாத்—தழலை நீர்மடிக் கொள்ள[illegible]ன் சாற்றினே—மிழலை யானடிச் சாரவின் னுள்வரே." எ-[illegible] [illegible]ருப்பாட்டு. "மாணுவுரு வாகியோர் மண்ணளந்தான் மலர்மேலவனேடியுங் காண்பரியாய்—நீணிண்முடி வானவர் வந்திறைஞ்சு நெல்வாயி லரத்துறை நின்

மலனே—பாணூர்றுத லார்வலைப் பட்டடியேன் பலவின்கனி யீயது போல்வதன்முன்—றேனொடு பெண் ணுமுரு வாகிநின்று யடியேனுயப் போவதோர் சூழல் சொல்லே." எ-ம். திருவாசகம். "செழுகின்ற தீப்புகு விட்டிலிற் சின்மொழி யாரிற்பன்னாள்—விழுகின்ற வென்னை விடுதி கண்டாய்வெறி வாயறுகாலுழுகின்ற பூமுடி யுத்தர கோசமங் கைக்கரசே—வழிநின்று நின்னரு ளாரமு தூட்ட மறுத்தனனே." எ-ம். பட்டணத்துப் பிள்ளையார்பாடல். "இலவிதழார் வீழ்வா ரிகழ்வா ரிவர்தங்—கலவி கடைக்கணித்தும் பாரே - னிலகுமொளி—யாடகஞ் சேரம்பலத்தெம் மானுடையா னின்றூடு—நாட கங்கண் டின்பானநான்." எ-ம். சிவதருமோத்தரம். "குட்டவுடல் கொடுக்குமிதங் கூடினழற் கொடியிடையா—ரிட்டமுமிம் முறைமெயுனுக விளையவர்தம் பருவம்போற் - குட்டமழற் கூடுதலுங் கொழுநனுக்கெரிப் பெனக்கொள்க—தொட்டதுவக் கிந்திரியஞ் சொற்பொருளுந் துணிவாரே." அன்றியும், "புரிந்தவர்க டவினையைப் பொருவரியா னடிக்கன்பு—பிரிந்தவர்கள் வனிதையரைப் பெறற்கரிய பேறென்றே—யிருந்தவர்க ணடந்தவர்க ளிழுக்காய குழிவழிக்கே—யெரிந்தவர்கள் கிடந்தெரிவாய் நிரயத்து மிளைப்புறவே." எ-ம். ஞானவாசிட்டம். "பைந்தொடியா ராசைநோய் கம்பீரமனிதரையும் பதுமந் தன்னை—முந்திரவிக் கதிர்போல மினிர்விக்குங் கனவிடியு முனைக்கூர் வாளும்—வெந்தவிருப் புப்பொறியு மெனக் கொடிய மனவேட்கை மேருவொத்த—சுந்தரஞானியர்தீரர் சூரரையெல் லாமிமைப்பிற் றுரும்பு செய்யும்." அன்றியும், "மேவுதற் கரிதாய்க் கேசம் புகையதாய் விழிக்கு நன்றாய்த்—தீவினைச் சிகைசேர் மாத ரெனுங்கன றிருணம் போல—யாவரைச் சுடாது தூரத் தெரிகின்ற நரகத்திக்குப்—பாவையர் குளிர்ந்த மேனி பசையிலா விறக தாமே." அன்றியும், "மாமடஞ் செறிந்த நெஞ்சின் மனிசராம புட்பி டிக்கக்—காமனும் வேடன் வீசும் வலையொப்பார் கருங்கண் மாதர்—தீமனச் சேரார் சன்மச் சிறுகுழி மீனு மார்தார்க்—கேமவா தனைக்க யிற்றுத்

ஆண்டினுக் கிரையு மொப்பார்." எ-ம். நாலடியார். "அம்புமழலு மவிர்கதிர் ஞாயிறும்—வெம்பிச் சுடினும் புறஞ்சுடும்-வெம்பிக்—கவற்றி மனத்தைச் சுடுதலாற் காம—மவற்றினு மஞ்சப் படும்." அன்றியும், "ஊரு ளெழுந்த வுருகெழு செந்தீக்கு—நீருட் குளித்து முயலாகு-நீருட்—குளிப்பினுங் காமஞ் சுடுமே குன் றேறி—யொளிப்பினும் காமஞ் சுடும்" எ-ம். நீதிசாரம். "ஊரு ரெனும்வனத்தி னுள்வேற்கண் மாதரெனும்—கூரூர் விடமுட் குழாமுண்டே-சீரூர்—விரத்திவை ராக்ய விவேகத் தொடுதோ—லுரத்தணியத் தையாவென் றோது." எ-ம். வரும். மற்றும் வருவனவற்றுங் காண்க. (அகூ)

நல்லுணவாகிய சுவைகள் விழைதல் தீதென்று மேற்கூறுகின்றார்.

ஆன்பாலுங் கூழு மகற்றும் பசியெலாந்
தான்பின் மலமாமென் றுந்தீ பற
சடுரசந் தேடேலென் றுந்தீ பற.

எ - து. ஒருவனது மிகுந்த பசிக்குப் பாலும் சருக்கரையும் முக்கனிகளும் கூட்டி அருந்தினாலும், அஃதன்றி உப்பற்ற நீர்க்கூழும் காடியும் மற்றுள்ள சாகமூல பலாதிகளும் அருந்தினாலும், உதராக்கினி அவியாநிற்கும் யாதொரு புசிப்பேனும் உதரத்தைப் பொருந்தித் தனது தன்மை கெட்டு மலத்தன்மையொன்றே அடையாநிற்கும் ஆதலால், பசிக்கு உதவினதன்றிக் கைத்தல் கார்த்தல் புளித்தல் துவர்த்தல் உவர்த்தல் தித்தித்தல் என்கிற அறுசுவைகளைத்தேடி ஓடேல் நெஞ்சமே எ-று.

இதற்குப் பிரமாணம்: தத்துவராயர். "பண்டைப் படியே நமக்களிக் கின்ற பரஞ்சுடரைக்—கண்டைக் கனியை யமுதைக்கை விட்டுக் கவலை நெஞ்சே—தொண்டைக்கு மேலுறுஞ் சோற்றுச் சுவடுந் துடியிடை யா—கெண்டைத் துணைவிழி யுமுன்னி யென்னைக் கெடு தனையே." எ-ம். சிவானந்தமாலை. 'உப்பகன்ற நீர்க்கூழ முண்டாற் பசிகெடுமோ—லப்பதுண்டு

கூவல்முள மாறதனி - லிப்படியைப்—பார்த்தமையா நெஞ்சே பரந்தெழுந்து சென்றாலும்—பேர்த்துளதின் மேல் வருமோ பேசு." அன்றியும், "நீயா யமையாய் நினைந்தோடிக் கிட்டாமை—யேயா யமைந்தா யிடர்நெஞ்சே - காயோ—கடையானார் காய்பசிக்கே கால்குலைவர் கற்றோ—ரடையாரோ வாங்கமைவின் பால்." எ-ம். வரும் மற்றும் வருவனவற்றாற் காண்க.

மேலமைவு கூறுகின்றார்.

வேண்டாத துன்பமு மேவல்போ லின்பமும்
வேண்டா விடினுமுண் டுந்தீ பற
விதிவழி நெஞ்சேயென் றுந்தீ பற.

எ - து. யாவனொருவனுக்கும் இன்பத் துன்பங்களெல்லாம் ஊழின்வழியே அடைதலால் வெறுக்கப்பட்ட துன்பமும் உனக்கு இயல்பாய் வருதல்போல யாதொருவிஷய சுகமும் நீ விரும்பாவிடினும் அமைத்தபடியே வந்து கூடும் அவற்றினை அவாவுதல் ஒழிவாய் நெஞ்சமே. எ - று.

இதற்குப் பிரமாணம்: திருவள்ளுவர். "வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி—தொகுத்தார்க்குந் துய்த்த லரிது." அன்றியும், "பரியினுமா காவாம் பாலல்ல வுய்த்துச்—சொரியினும் போகா தம." ஔவையார். "ஆழவமுக்கி முகக்கினு மாழ்கடலி—னாழி முகவாது நானாழி - தோழி—நிதியுங் கணவனு நேர்படினுந் தந்தம்—விதியின் பயனே பயன்." அன்றியும், "எழுதிய வாறேகா ணிரங்குமட நெஞ்சே—கருதியவா றாமோ கருமம் - கருதிப்போய்—கற்பகத்தைச் சேர்ந்தோர்க்குக் காஞ்சிரங்கா யீந்ததேன்—முற்பவத்திற் செய்த வினை." குகைநமசிவாயர். "வையமுழுதும் படைத்து வாழு மருணகிரி—யையனமைத்தபடி யல்லாம-னெய்யமன—னாரு யிரம்விதமாய் நொந்தாலு மெள்ளளவு—மேறா ததிற்குறையா தே." சிவானந்தமாலை. "இல்லாத தில்லை யுளதுதவி ராதென்று—நல்லோர் துணிபொருளை நாடெங்கா - லெல்லா—மமைத்தபடி யேவருமா லாங்கசை

வென் னெஞ்சே—சமைத்தபொரு டாமறிவார் தாம்." அன்றியும், "பல்காய நற்கறியும் பானெய்பழத் தோடடிசில்—செல்வாய தேயஞ் செறிந்தாலு - மெல்லவுணா—யூட்டாலு முண்டேனுறுபிணிமற் றியாதொன்றால்—வீட்டாதோ நெஞ்சே விரைந்து." அன்றியும், "இன்பத்துக் கோடி யிளைக்குமது போன்மனமே—துன்பத்துக் கோடிச் சுழலாயே - யின்பமுறீ—யப்படியென் றெண்ணியிளைப் பாறியாட் பேறுபெறு—திப்படிவந் துற்பவிப்ப தென்." அன்றியும், "ஈடுந் தலைகீழ்கான் மேலாகி நின்றாலும்—கூடும் படியன்றிக் கூடாதா - லோடி—வருந்தாம லுள்ளபடி வந்திடக் கண்டாறி—யிருந்தாலோ நெஞ்சே யினி." அன்றியும், "இருந்தவிடத் தேதும் வரக்கண் டிருப்ப தன்றோ—பெருந்தகைமைக் காபரணம் பேதாய் - மருந்தெனவே—வாங்கினியார் நுங்கடையிற் சென்றிடினு மாதரியார் – பாங்கிது காண் பாழ்நெஞ்சே பார்." அன்றியும், "ஆற்றங் கரைப்பசுத்தானக்கரையோ டிக்கரையிற்—றோற்றும் பசும்புற் றொடர்புறுமே - யாற்ற—வதுபோல நெஞ்சே யலைந்தலைப்பட் டோடு—மிதுவே யுனக்கிதனாற் பேறு." மற்றும் வருவனவற்றாற் காண்க.

இங்ஙனங் கூறிய வுபாயங்களனைத்தையும் நெறியாகப்பற்றிச் சென்று உண்மை நிட்டையினையே கூடல்வேண்டுமென்று மேற் கூறுகின்றார்.

சொன்னவிந் நானு வுபாயங் கொடுதொடர்ந்
தன்னமெய்ந் நிட்டைசேர்ந் துந்தீ பற
ஆனந்தம் பெற்றிடென் றுந்தீ பற.

எ - து. இங்ஙனம் பாவனையாதியாகச் சொல்லிப் போந்த நானுவுபாயங்களானும் மனசையொரு வழிப்படுத்திச் சென்று முற்கூறிய பாவனாதீத நிட்டையைப் பொருந்தி நின்று பேரானந்தம் பெறக்கடவாய். எ

பாவனையாதியான நிட்டைகளொவ்வொன்றி லனேகவிதங்களடங்கி நிற்றலானும், பின்னு முபாயங்கள் பலவாக நால்க

னிற் சொல்லப்படுமெதனுனும், நானுவுபாயங்களென்று கூறினு ரெனக்கொள்க.

இதற்குப் பிரமாணம்: தத்துவராயர். "இம்மற் கிறையான வுடம் பையெடுத் திதுகா ரணமாக விரவும் பகலு மெளிவந் தனசெய் திதனு லமையாதே—மம்மர்க் கிடனுய் நடனு டிய பொய் வாழ்வைக் கருதாதே மறையிற் றுறையிற் பொறையிற் றுறவி னிறைவிற் குறைவற்றே—யெம்மைக் குருமக் குறவா மலர்வே றலர்நா மலதென்றே யாதொன் றினும்யா வரொடும் பணியற் றெல்லா வழியானுக்—தம்மைப் பெறுவா னினைவா ருறவே தாலோ தாலேலோ தனிநா யகமே யெனையா ளுடை யாய் தாலோ தாலேலோ." மற்றும் வருவனவற்றுற்காண்க. ()

அவ்வுண்மை நிட்டைசார்ந்து சாதிப்போர்க்கு வாக்குந் தொழிலும் எதுகாறும் அடங்காதோ அதுகாறும் நிலைசேரா தென்று மேற்கூறுகின்றூர்.

நினைவெழின் மெய்ந்நிட்டை நீங்குமேன் மானு
பினையெழி னென்னுமென் றுந்தீ பற
பேச்சுந் தொழிலுமென் றுந்தீ பற.

எ - து. யாவனெருவ னுண்மைநிட்டை சாதிக்குமிடத்து அவனுக்கெல்லா வுபாதிகளுமடங்கி நிஸ்தரங்க சமுத்திரம்போல இவ்விடத்திருக்கின்றதென்று உண்ணினைவு சற்றே உண்டாமா யினும் அது சகசநிட்டை யன்றென்று சுருதியாதிகள் கூறுநிற்கு மாயின், அந்நினைவெழாம லடக்குவதன்றி அது தடித்துப் புற நிலையாய் மனுதிகளோடு கூடி அவத்தையடைந்து ஐம்புலன்களை யுங் கவர்ந்து வாக்குந் தொழிலுமாகிய கன்மேந்திரியங்களும் பிரேரகப்படுமாயின் அந்நிட்டை யாதாய் முடியுமோ மாணுக் கனே. எ - று.

நினைவெழின் மெய்ந்நிட்டை யுருமென்றவதனுன், மனே லயஞ்செய்வோர்க்கு வாக்குந்தொழிலு மசைவற அடங்குதலே நியமமென்றூரெனக்கொள்க.

இதற்குப் பிரமாணம்: திருவாய்மொழி. "உள்ள முறை செய லுள்ளவிம் மூன்றையு—முள்ளிக் கெடுத்திறை—யுள்ளி லொடுங்கே." ஔவையார். "மோன மென்பது ஞான வரம்பு." சிவானந்தமாலை. "ஓடியுழன்றிந்த வுடம்பை யொறுத்தே— பாடி யிடற்றைப்புண் படுத்தாதே-கேடுபிறர்க்—கும்மால் விளையாதே யொன்றுடனுந் தாக்காதே—சும்மாவே காணுஞ் சுகம்." அன்றியும், "ஓடாதே தேடாதே யுன்னாதே யோசையெழப் —பாடாதே சாத்திரங்கள் பன்னாதே—கேடுபிறர்க் - கும்மாலே செய்யாதே யொன்றாதே யொன்றுமறச்—சும்மா விருக்கை சுகம்." மற்றும் வருவனவற்றாற் காண்க. (௯௩)

இச்செய்யுள் தொடங்கி ஞானிகளதாசாரங் கூறுகின்றார்.

ஆனந்த மெய்தினோ ராடினும் பாடினு  
மானந்த லீலையென் றுந்தீ பற  
அவர்செயல் கூறொணா துந்தீ பற.

எ - து. இங்ஙனங்கூறிய உண்மைநிட்டைகள் வந்து பரமானந்தம்பெற்றுள்ள ஞானிகளாயினோர் பின்பு ஓராடல்பாடல்களைச் செய்தார்களாயினும் அத்தொழில்களெல்லா மானந்த லீலையாய் முடியும் அவரது செயற்பாடொருவரானிச்சயித்துக் கூறுதல் கூடாது. எ - று.

ஆடினும் பாடினுமென்ற வும்மையால், அவை நியதமல்ல வென்றதெனக் கொள்க. இதற்குப் பிரமாணம்: அஞ்ஞவதைப் பரணி. "தெளியு முளத்தார் சிலவர் தெளிப்பார் சிலவர் களிப்பார் சிலவர் திகைப்பா—ரளியு முளத்தோ டழுது சிரிப்பா ரவர்கள் செயற்பா டறியவொணாதே." மோகவதைப்பரணி. "அல்ல தங்கவர் பெருமையை யருமறை மொழிய—வல்ல தன்றான் முகுந்தனும் பிரமனு மாட்டார்." மற்றும் வருவனவற்றாற் காண்க. (௯௪)

சோறிட நாடுந் துணிதரக் குப்பையு
மாறினோர்க் குள்ளவா லுந்தீ பற
ஆங்கவைக் கென்றென் றுந்தீ பற.

எ - து. சோறிடுதற்குநாடும் கோவணத்துணி கொடுத்தற்குக் குப்பைமேடு மியல்பாக விருத்தலின், அவற்றினைக் குறித்தொருவரை யனுசரித்தற்கு ஞானிகளாயினோர் மறந்தாயினு நினைப்பதில்லை. எ - று.

அஃதெங்ஙனமெனின், மெய்யுணர்ந்தோரொன்றையு மிப்பிரபஞ்சத்தின்கண் வேண்டார்களாயினும், பிராரப்த தேகமுள்ளளவும் அதனுக்காகாரம் வேண்டுதலின் அது குறித்தாயினு மொருவரை யனுசரிக்க வேண்டுமேயெனில், அது வேண்டுவதில்லை; அறிஞர்க்கு நாடுதோறுமிரந்துண்ட லியல்பாயிருத்தலின். அங்ஙனமாயினும் அபிமானமறைப்பது நிமித்தம் ஒரு கோவணத்தையாயினுங் குறித்து அனுசரிக்கப்படுமேயெனின், அவர்க்கபிமானங் கிஞ்சித்தாயினு மின்மையாற் கோவணமே வேண்டுவதில்லை; அங்ஙனமாயின் ஞாதாக்கள் தரிப்பதேனெனின் ஊர்கடோறுமிரந்துண்பான் செல்லுமமைதியிற் றம்மைநோக்கிச் சிலரிகழ்ந்து கெடாவண்ணமும் மகளிர் நாணுவண்ணமுமாகப் பிறரைக்குறித்துக் கோவணந் தரித்தாரெனக்கொள்க. அங்ஙனமாயினும், கோவணங்குறித் தொருவரை யனுசரிக்கப்படுமேயெனில், அது தேவையில்லை; குப்பைமேடுகடோறுஞ் சதாகாலமும் பழந்துணிகளியல்பாய்க் கிடத்தலினெனக் கொள்க.

இதற்குப் பிரமாணம்: திருமந்திரம். "பரந்த வுலகம் படைத்த பிரானை—யிரந்துணி யென்பர்க ளெற்றுக் கிரக்கு—நிரந்தரமாக நினையு மடியா—ரிரந்துண்டு தன்னடி யெட்டவைத்தானே." பட்டணத்துப்பிள்ளையார் பாடல். "சோறிடு நாடு துணிதருங் குப்பை தொண்டன் பரைக்கண் [12] .றிடுங்கைக ளிழிந்திடுந் தீவினை யெப்பொழுது—நீறிடுமேனியர் சிற்றம்பலவர் நிருத்தங் கண்டா—லூறிடுங் கண்க ளுருகுமென் னுவியு முள்ளமுமே."

அன்றியும், "சின்னற்சீரை துன்னற் கோவண—மறுதற் கீளொ டன் பெழுவது புனைந்து." என்றும் மற்றும் வருவனவற்றாற் காண்க. (கூ௫)

செல்லுழிக் கண்ட சிதைவலோ டுங்கையு
நல்ல கலமவர்க் குந்தீ பற
நாட்டிலேற் றுண்பதற் குந்தீ பற.

எ - து. ஆகாரத்தைக்குறித் தேகுமிடத்தெதிரே கண்ட உடைசலோடாயினும் கைகளாயினும் நாடோறும் பலியேற் றுண்பதற்குப் பாத்திரமாக உளவாகலின், ஞானிகளாயினோ ரேற்றுண்ணு மோட்டினைக் குறித்தாயினு மொருவரை யனுசரி யார். எ - று.

இதற்குப்பிரமாணம்: தேவாரம். "கட்டு வாங்கங் கபாலங் கைக் கொண்டில—ரட்ட மாகங் கிடந்தடி வீழ்ந்திலர்—சிட் டன் சேவடி சென்றெய்திக் காணிய—பட்ட கட்டமுற் றாரங் கிருவரே." திருவாசகம். "ஓடுங் கவந்தியு மேயுற வென்றிட் டுள்கசிந்து." பட்டணத்துப்பிள்ளையார். "விடுங்கோ டுகிலெங்கு ங்கோவண முண்டு வெண்ணீ றெங்குமா—யிடுங்கோள் கரோ டுங் கைக்கொளுங் கோளிடை மாமருதைத்—தொடுங்கோள் சிவசங் கராவென நாளுந் துதிசெயுங்கோ—டடுங்கோள் புலனு றங் குங்கோ ணலம்பலந் தன்னிலுற்றே." அன்றியும், "கையார வேற்று நின்றங்ஙனந் தின்று கரித்துணியைத்—தையா துடுத்து நின் சன்னிதிக் கேவந்து சந்ததமு—மெய்யார நீறணிந் துன்னே யுரோமம் விதிர்விதிர்ப்ப—வையாவென் றோல மிடுவதென் றோகயி லாயத்தனே." அன்றியும், "வீடு நமக்குத் திருவாலங் காடு விமலர்தந்த—வோடு நமக்குண்டு வற்றாத பாத்திர மோங்கு செல்வ—நாடு நமக்குண்டு கேட்டவெல் லாந்தர நன்னெஞ் சமே—யீடு நமக்குச் சொல்லவா வொருவரு மிங்கில்லையே." அன்றியும், "சிதவ லோடெடுத் துதவுழி யெடுத்தாங்—கிடுவோ ருளரெனி னிலையினின் றயின்று—படுதரைப் பாயலிற் பள்ளி

மேவி." நெஞ்சொடுமகிழ்தல். "கைத்துணைப் பாத்திர மானாய் காழுடைக் கோவண மானாய்—பித்தனென னப்பெயர் பெற்றா யுன்பேருணர் வென்னைகொ னெஞ்சே." அஞ்ஞவதைப்பரணி. "அலைபொரு மலொருகா றலையெடா தமைவரே யருள்பொரு மலுருகா வருவிபாய் நயனரே—கலைபொரு மலொருகோ வண வராய் விடுவரே கவலைதீர் பலிகொணீள் கரகபாலியர்களே." அன்றியும், "உரையிறந் துணர்விறந் திடனுணர்ந் திடுவரே யுண வுமங் கையில்வரும் பலியுகந் திடுவரே—திரையிறந் தளவிறந் தளபரங் கடலுளே செறிதரும் படிவருந் திருவகம் படியரே." மற்றும் வருவனவற்றாற்காண்க. (கசு)

> ஏகாந்த மான தலமிலம் பூவணை
> யாகுந் தரையவர்க் குந்தீ பற
> ஆனந்த நித்திரைக் குந்தீ பற.

எ - து. ஞானிகளாயினோர்க்குப் பாழ்ங்கோயில் மலை முழை முதலிய ஏகாந்தத்தலங்களே இல்லமாதலினாலும், அன் னோ ரானந்த நித்திரைசெய்தற்குத் தரையே பூவணையாதலினா லும் அவற்றினைக் குறித்து மொருவரை யனுசரியார். எ - று.

இதற்குப் பிரமாணம்: திருமந்திரம். "இணங்க வேண்டா வினியுல கோருட—னுணங்கு கல்விய நூல்களு மென்செயும்—வணங்க வேண்டா வடிவை யறிந்தபின்—பிணங்க வேண்டா பிதற்றை யொழியுமே." திருக்கடைக்காப்பு. "மேனியிற் சீவரத் தாரும் விரிதரு தட்டுடை யாரும் விரவலாகா—வூனிகளா யுள் ளார்சொற் கொள்ளாது முள்ளுணர்ந் தங்குய்ம்மின் றொண் டர்—ஞானிகளா யுள்ளார்க ளுன்மறையே முழுதுணர்ந் தைம் புலன்கள் செற்று—மோனிகளாய் முனிச்செல்வர் தனித்திரு ந்து தவம்புரிய முதுகுன் றம்மே." ஞானவாசிட்டம். "இல்லவ ளில்ல மாதி பற்றற விட்ட திட்ட புல்லுதல் சற்சிற்பாவம் பொருந்துத றனக்குப் பேத—மல்லவாயவற்ற வற்றின் றோற்ற க்கண் மாய்த லென்று—மல்கலே காங்கு சேர்தன் மானுடத்

திரளை நீத்தல்." அன்றியும், "சங்க மடியாப் பொருளுண்டாஞ்
சங்க மடையா வாபத்தாஞ்—சங்க மடியா வாசைவருஞ் சங்க
மடியாப் பிறப்புண்டாஞ்—சங்க மறுத்தல் வீடென்பர் சங்க
மறுத்தல் பிறப்பறுத்தல்—சங்க மறுத்துப் பொருள்களினீ
தனிசீ வன்முத் தியைப் பெறுவாய்." சிவபோகசாரம். "என்
றுஞ் சனன விடர்க் கடலுளே மூழ்கிப்—பொன்றுமன மேயுன
க்கோர் புத்திகே - ணன்று—தனிச்சங்கஞ் சாராமற் றற்பரஞ்
சேரி—னினிச்சங்கஞ் சேரா திரு." அன்றியும், "அனித்தி
யத்தை நித்தியமென் றுநரிக்கும் பொல்லா—மனித்தருடன்
கூடி மருவார்-தனித்திருந்து—மோனந்த மாஞ்சிவத்துண் மூழ்கி
மலத்தையறுத் —தானந்த மாயமூழ்ந்து வார்." அருட்பிரகாசம்.
"மைக்குழம் பன்ன விருள் வெயிற் காற்று மழையிலைகண்—
பிக்கூறு காலையினும் பலர் வந்து விரவுதலம்—புக்கிதஞ் சொல்
லன்றி பாரோ தனித்தோ ரிடம்பொருந்தித்—துக்கமி லாப்பர
மானந்தத் தோகையைத் தோய்பவரே." அன்றியும், "கிடை
யாத ஞானப்பெண் கிட்டிற் றனியோ ரிடமருவுத லியல்பே."
மற்றும் வருவனவற்றூற் காண்க.

தரைபூவணையா மென்பதற்குப் பிரமாணம்: தேவாரம்.
"அகலிடமே யிடமதா வூர்க டோறு மட்டுண்பா ரிட்டுண்பார்
விலக்கா ரையம்—புகலிடமா மம்பலங்கள் பூமிதேவி யுடன்
கிடந்தாற் புரட்டாள்பொய் யன்று மெய்யே—இகலுடைய
விடையுடையா னென்றுகொண்டா ரியாமார்க்குங் குடியல்
லோ மியாது மஞ்சோம்—துகிலுடுத்துப் பொன்பூண்டு திரிவார்
சொல்லுஞ் சொற்கேட்கக் கடவோமோ துரிசற் றோமே." பட்
டணத்துப்பிள்ளையார். "படுதரைப் பாயலிற் பள்ளிமேவி—
யோவாத்தகவி னரிவையைத் தழீஇ." சிவானந்தமாலை. "காற்
கட்டில் பூமி தலையணைகோள் கையிணையா—மேற்கட்டி விண்
கவரி வீசுகா - லேற்ற—வி[illegible]கிரவி யிந்து மனைத்துறவா மெய்
யே—யுளக்கண் விழித்துற[illegible]வார்க்கு." தத்துவராயர். "விழி
த்திருந்து தூங்குவோர் மெய்யுளத் துள்ளே—முழுத்திருந்த

ஞான முனியே - யொழிப்பற — யாட்டியருள் கூத்தை யாற்று யருளாலே—காட்டியருண் மெய்ஞ்ஞானக் கண்." பாடுதுறை. "படுக்கை தரைதனி லாகவும் பெற்றோம் பாணியிலேயாமி கொள்ளவும் பெற்றோ — முடுக்கையுங் கோவணமாகவும் பெற்றோ மொன்றுங் குறைநமக் கில்லைகாண் பெண்ணே." மற்றும் வருவனவற்றுற் காண்க. (கஎ)

ஒருபர மல்ல தொருவரைக் காணு
தொருதவர்க் குண்டுகொல் லுந்தீ பற
உறவும் பகையுமென் றுந்தீ பற.

எ - து. ஏகமாகிய பரம்பொருளேயயன்றி எக்காலமு மெவ்விடத்தும் அவ்வஸ்து பின்னமாக வோர்பொருளையுங் காணு வொப்பற்ற தவத்தோராகிய ஞானிகட்கு முண்டுகொல்லோ இவ்வுலகத்தின்கண் பெறுதற்குண்டாகியபோலுமுறவும் பகையும். எ - று.

உண்டுகொல்லோவென்ற வதனுலில்லையென்பதே துணிவு. அஃதெங்ஙனமெனின், ஞானிகளாயினேருர்கடோறும் புகுந்தையமேற்றுண்ணுதலான், அங்ஙன மிதாகிதஞ் செய்வோரைக் குறித்துக் கிஞ்சித்தாயினு மொருவரோடும் உறவும் பகையும் கொள்ளாரென்றதெனக் கொள்க.

இதற்குப் பிரமாணம்: திருவாசகம். "பார்பத மண்டமனைத்துமாய்மு ளைத்துப் பரந்ததோர் படரொளிப் பரப்பே— நீருறு தீயே நினைவதே லரிய நின்மலா நின்னருள் வெள்ளச்— சீருறு சிந்தை யெழுந்ததோர் தேனே திருப்பெருந் துறையுறை சிவனே—யாருற வெனக்கிங் காரய லுள்ளா ரானந்த மாக்குமென்சோதீ." திருவாய்மொழி. "நல்குரவுஞ் செல்வ நரகுஞ் சுவர்க்கமுமாய்—வெல்பகையு நட்பும் விடமு மமுதமுமாய்ப்— பல்வகையும் பரந்த பெருமா னெ ன்னை யாள்வானைச்—செல்வ மல்கு குடித்திரு விண்ணகர்க் கண்டேனே." தேவிகாலோத்தரம். "வாதுரை பயனில் சொல்லும் பிறருடன் மகிழ்ந்திருத்

தல்—பேதுறு பிணக்கு நீங்கிப் பெரியவ ரருளினாலே—யோது நூலோதலாவி யுலகிய னன்று தீதென்—றுதியி லுரைத்த வெல்லா மறவிட்டே யமர்ந்தி ருப்பான்." சிவதருமோத்தரம். "விடுத்து வாழ்க்கையை மெய்யுணர்ந் தையமுன்—கொடுக்கு மிற்றொறுங் கொண்டுண்டு கோவண—முடுத்துப் பாரி லுறவு பகையிலை—கெடுத்த கேள்விய ரவ்விடங் கிட்டுவார்." ஞான வாசிட்டம். "இவன் சுற்ற மிவன்பகைஞ னிவனு னென்னுமிவ் வெறும்பொய் யிராமனீ யிறையு மெண்ணேல—லவம்பற்று நோய் யமனத் தவர்க்கிவ் வாறு மறிந்தவர்க்குச சகமுழுது மகலாச சுற்ற—சிவந்துற்ற பலகோடி பாவனைமோ சுத்தானி பகைநீயுற வென்பர் கிமிடந்தோறு—முவந்துற்ற மயக்கிறுவாம் பரமார்த் தத்தி லுலகெல்லாம் பகையாகு முறவு மாகும்" சைவநெறி. "உறவுபகை யாளை வெறுப் புள்ளச் சழக்கு—மறினே பிறவி யறும்." சிவபோகசாரம். "ஆர்பெரிய ரார்சிறிய ரார்பகைஞ ராருறவர்—சீர்பெரிய ரானந்த சிற்சொருபர்-பேர்பெரிய—ரெங்கெங்குந் தானு யிருந்துசட சித்தனைத்து—மங்கங் கியற் றுவ தானால்." மற்றும் வருவனவற்றாற் காண்க. (கஅ)

ஆண்டகை யீசனை யன்றியொன் றின்மையால்
வேண்டிய செய்வாரென் றுந்தீ பற
விதிநிடே தங்களற் றுந்தீ பற.

எ - து. உள்ளன இல்லன செயப்படுவன செய்யப்படாதன உயர்ந்தன தாழ்ந்தன நான் பிறனென்பன ஆதியவனைத்தும் பரமேயாதலால், அவ்வுண்மையறிந்த ஞானிகளாயினோர் இச்சைப்படியே செய்யாநிற்பர், விதிநிடேதங்களொழிந்து. எ-று. விதி நிடேதங்களொழிந்தென்றமையால், அவ்விரண்டினையும் பற்றுதல் விடுதலில்லை யெனக்கொள்க.

இதற்குப்பிரமாணம்: திருவாசகம். "புத்தன் முதலாய புல்லறிவிற் பல்சமயந்—தத்த மதங்களிற் றட்டுளுப்புப் பட்டுநிற்

கச்—சித்தஞ் சிவமாக்கிச் செய்தனவே தவமாக்கு—மத்தன் கருணையினாற் றோன்றுக்க மாடாமோ." பிரமகீதை ஓது மிப் பரம் பெரும்பொரு ளுணர்ந்தவன் செய்வ—தேது மில்லைஞா னமுமில்லை யிரண்டிலா மையினு—னீதி வன்னமாச் சிரமமு நிட்ட தமும் விதியுஞ்—சாது நல்வினை தீவினை சகலமு மிலவே." அன் றியும், "மதிசெய் மாமறை வன்னச் சிரமிகள்—விதிசெ யாவி டில் வெந்நர கென்றது—துதிசெய் தேயதி வன்னச் சிரமிக—ளொதுசெய் தாலது வேதவ மென்றதே." எ-ம். ஒழிவிலொடுக் கம். "நாயேறி வீழ்ந்தென் னடாத்துகிலென் ஞானியர்க்குப்—பேயாஞ் சகம்பழித்தென் பேணுகிலென் - றோயார்—பெருமை சிறுமையில்லை பின்னுமுன்னு மில்லை—வரைவற்று வேண்டியசெய் வார்." அன்றியும், "சாவே பெருநோன்பாச் சந்தற்ற சத்தியர்க் குத்—தேவாரங் காலந் தியானமறம் - பாவம்—விதிவிருத்தம் பேசுகைக்கு வேதாகமங்க—ளதிசயிக்கு மேலுரைப்பா ரார்." மற்றும் வருவனவற்றாற் காண்க. (கக)

ஓங்கரு ளீசனொ டொன்றியே நின்றோரு
மீங்கரு ணீங்காரென் றுந்தீ பற
எல்லா வுயிர்க்குமென் றுந்தீ பற.

எ - து. உயர்ந்த கருணையே வடிவாகவுடைய பரம்பொரு ளுடனே கூடி யிரண்டறக்கலந்துள்ள முத்தரும் இத்தசைக்க ணுண்டாகிய சராசரங்களிடத்தெல்லாம் அருளைநீக்கார். எ-று.

அஃதெங்ஙனமெனின், ஆரிடஞானிகள் விதிநிட்டைதங்கட ந்து வேண்டியசெய்வாராதலின் உயிர்கட்கிதஞ் செய்யவேண்டு மென்னும் விதியினையும் பற்றுதல் விடுதலில்லையென்னில் அது கூடாது; அன்னோருயிர்கட்கிதஞ் செய்தலே இயல்பு. அஃது யாதாலெனில்; இரும்புக்குச் சுடுந்தன்மை யின்மையாயினுங் கனலோடு கூடியவிடத்து அதனுடைய சுடுந்தன்மையைத் தான் பற்றிநின்றதுபோல வஸ்துவுக்குரிய பேரருளே சொரூபமாத லின் அவ்வஸ்துவினோ டிரண்டறக்கலந்து நின்றோரும் இத்

தசைக்க ணெல்லாவுயிர்களிடத்துஞ் செய்பு மிதாகிதங்களெல் லாம் மா ருவத்திற்கே யொழிய நித்தியவிபுவாய ஆன்மாக்க ட்கில்லை முணமையறிந்துளோராயினும், அவ்வுணர்வு பெத்தத்திற் றமக்கில்லைபோலு மற்றையவுயிர்கட்கும் அஃதின் மையால் அவற்றினது வருத்தத்தை நோக்கியருளினை நீங்கா ரென்பதே துணிவு. நின்றோருமென்ற வும்மையான் முத்திபெற முயல்வோர்க்கு அருளே தலையாகவேண்டப்படு மென்பதூஉம் அருளில்லோர் சீவன்முத்த ரன்றென்பதூஉங் காட்டிற்றெனக் கொள்க.

இதற்குப்பிரமாணம்: தேவிகாலோத்தரம். "நடுங்காம லெவ்வுயிரு ...க்காமற் றுரும்ப னைத்தும்—பிடுங்காது முதலெ ம் பிரசபலர் கொய்யாது—விடுங்காலா லூழ்த்துதிர்ந்த விரைமலர்க ளவையேந்தி—யடுங்காலன் றனையட்ட வம்புயத்தா ளருச்சிப்பான்." பட்டணத்துப்பிள்ளையார். "மகவெனப் பல்லு யிரனைத்தும் பார்க்கும்." பகவற்கீதை. "இருவகை யுயிர்க்கு மினியனு யின்ப துன்பமியா னென்னதென் றறியா—தொரு பொருளாலுங் குறைவுபா டின்றி யுள்ளமு மொருவழிப் பாடா ய்ப்—பொருவருந் துணிவுங் கருணையும் புரிந்து புலன்றெரி யுணர்வை யென் பாலே—மருவிநின் றொழுகும் யோகியென் பவ னே மன்னவ மற்றெனக் கினியான்." ஞானவாசிட்டம். "உள் ளுணர்வி னின்புறுவோன் பொறிபுலன்கள் கரணங்க ளுய்ப்போ னுயுந்—தன்னுசுக துக்கவஞ்சஞ் சாராதோ னனவரதஞ் சமாதி யுற்றோ—னுள்ளுகின்ற தனைப்போலெவ் வுயிருமெனப் பிறர் பொருள்க ளொட்டியென்ன—வெள்ளுபயத் தானன்றி யியல் பாலே கண்டானே யெல்லாங் கண்டோன்." தத்துவசரிதை. "ஊனொன்று நசைத்திற மொன்று முணர்ந்தி லானைத்—தீனஞ் செயிராக மயக்கொடு சோகமிலானை—மோனந் தனமொன்று மகி ழ்ந்த மனத்தி னானைத்—தாரணை நிவனைத் துயிரும்பரி தன்மை யானை." திருவள்ளுவர். "நலலாற்றா னாடியருளாள்க பல்லாற்

ரற்—றேரினு மஃதே துணை." அன்றியும், "பொருணீங்கிப் பொச்சாந்தா ரென்ப ரருணீங்கி—யல்லவை செய்தொழுகு வார்." அன்றியும், "அறிவினா னாகுவ துண்டோ பிறிதினோய்—தந்நோய்போற் போற்றாக் கடை." சித்தாந்தகரணம் "ஐயைந் துருவு மருளா னுயிர்க்காய வையை னருளிங் கடைந்தோரும்—வெய்ய—தடையு மழலா ரயம்போன் றருளை—யுடையா ரனைத் துயிர்பா லும்." அருட்பிரகாசம். "உயிர்சித்த னைறிந் தாலு நல்லோர்பல் லுயிர்துற்ற—துயருக் கிரங்கலன்பதுமை கொல் லோ வருட் டோன்றலந்நாட்—செயிருற்ற சிகவர் முறைகேட் டிரங்கித் திருவுளத்து—டயர்வுற் றுருத்தகணை ணீரக்க மாமணி யாயிடினே." ஞானசாரம். "மருளுறு மெமையு நறிமயக்கறத் தெளிந்து ளோர்க்கு—மருளறத் துறக்க லாகா வயலொரு பொருளு மில்லாத்—தெருளுறு முறைமை யானுரு சிவமய ருளமு மன்னு—மருளினை யறித லாவு மவர்தொழி லருள றந் தான்." மற்றும் வருவனவற்றாற் காண்க. ஆனந்தமெய்தினே ரென்னுஞ் செய்யுள் தொடங்கி செய்யுள்காறும் ஞானிகளா சாரங் கூறினரெனக் கொள்க. (௧௦௦)

அவிரோதவுந்தியார்பாடல் - ௧௦௦.

உதாரணப்பாடல் - ௨௫௦.

ஆகப்பாடல் - ௩௫௦.

முற்றுப்பெற்றது.

ஆனந்த மோனம்வரு மாசையறு மெய்ப்பொருளு
மோனந்த நிட்டையென முன்னம்வருந்—தேனந்த
முந்தியார் நூறு முதாரணத்தேடீடபடித்த
புந்தியார்க் கீதே பொருள்.